# வேத மாணவர்கள்
# BIBLE STUDENTS

**COIMBATORE BIBLE STUDENTS**
**205, Chinnasamy Naidu Road, New Siddhapudur,**
**Coimbatore - 641 044, Tamil Nadu, South India.**

# நமது விசுவாசம்
# OUR CREED

தாம் ஒருவராய் சாவாமையுள்ளவரும், ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், ஆதியந்தமில்லாத, ஏகசக்கராதிபதியுமான யேகோவா என்னும் நாமமுள்ள ஒன்றான மெய்த்தேவனையே விசுவாசிக்கிறோம். **1 தீமோத்தேயு 6:15, 16; யாத்திராகமம் 6:3**

அவருடைய ஒரே பேறான குமாரனும், நம்முடைய கர்த்தரும், இரட்சகருமான இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறோம். **யோவான் 3:16**

இவர் அதரிசனமான தேவனுடைய தற்சொரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். தேவன் இவரைக் கொண்டும், இவருக்கென்றும், உலகங்களை எல்லாம் உண்டாக்கி, இவரையே சர்வத்துக்கும் சுதந்திரவாளியாகவும் நியமித்தார். எல்லாம் இவருக்குள் நிலைநிற்கிறதென்றும் விசுவாசிக்கிறோம். **கொலோசெயர் 1:15, 16; எபிரெயர் 1:2**

இவர் தேவகுமாரனாயிருந்தும் தேவனுக்கு சமமாயிருக்க எண்ணாமல், அக்கிரமங்களினால் ஜீவனை இழந்த மனுஷர்பேரில் மனதுருகி, தம்மைத்தாமே வெறுமையாக்கி, மனிதனாகி எல்லாரையும் மீட்கும் பொருளாக தம்முடைய ஜீவனையே கொடுத்து தேவனுக்கும், மனுஷருக்கும் சமாதானத்தை உண்டு பண்ணினாரென்றும் விசுவாசிக்கிறோம். **பிலிப்பியர் 2:6–8**

ஆதலால், தேவன் இவரை மரித்தோரிலிருந்து எழுப்பி தம்மைப்போல் குமாரனும் ஜீவனுடையவராயிருக்க அருள்செய்து எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி தம்முடைய வல்லமையின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கச் செய்தார் என்றும் விசுவாசிக்கிறோம். **அப்போஸ்தலர் 3:15; யோவான் 5:26**

இவரே தேவனுக்கும், மனுஷருக்கும் மத்தியஸ்தராகவும், சபையாகிய சரீரத்துக்குத் தலையாகவும் இருக்கிறார் என்றும் விசுவாசிக்கிறோம். **1 தீமோத்தேயு 2:5; எபேசியர் 1:23**

இவர் பரலோகத்திற்கேறி தாம் வாக்குத்தத்தம்பண்ணின உன்னதத்திலிருந்து வரும் பெலனாகிய பரிசுத்த ஆவியை விசுவாசிகளடங்கிய சபைக்கு அருளி தேவ சித்தத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தி பலியின் ஜீவியத்தில் அவர்களை நடத்தி வருகிறாரென்றும் விசுவாசிக்கிறோம். **லூக்கா 24:49**

பிதா குறித்த காலத்தில், இவர் பலியின் மரணத்துக்குட்பட்டு முதலாம் உயிர்த்தெழுதலடையும் தம்முடைய சபையாகிய சகல பரிசுத்தவான்களோடும், இப்பூமியை நீதியாய் நியாயந்தீர்த்து, சகல துரைத்தனத்தையும், அதிகாரத்தையும், வல்லமையையும் பரிகரித்து என்றும் அழியாத தம்முடைய நீதியுள்ள அரசாட்சியை ஸ்தாபிப்பார் என்றும் விசுவாசிக்கிறோம். மரணமடைந்த மற்றவர்கள் கிறிஸ்துவின் அரசாட்சிக் காலத்தில், அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்பட்டு, அவர் தம்முடைய மரணத்தினால் சம்பாதித்த நித்திய ஜீவனையடைய வழிநடத்தப்பட்டுப் பூரணப்படுவார்கள். ஆனால், மனப்பூர்வமாய் சீர்திருந்தாதவர்கள் இரண்டாம் மரணத்திலே அழிக்கப்படுவார்கள் என்றும் விசுவாசிக்கிறோம். **வெளிப்படுத்தல் 20:5; 1 கொரிந்தியர் 15:23**

எல்லாச் சத்துருக்களையும் தமது பாதபடியாக்குமட்டும் இவர் ஆளுகை செய்து கடைசி சத்துருவாகிய மரணத்தையும் பரிகரித்து, எல்லாவற்றையும் முந்தின சீருக்குக் கொண்டுவந்து பிதாவே சகலத்திலும் சகலமுமாய் இருப்பதற்கு அவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுத்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார் என்றும் விசுவாசிக்கிறோம். **1 கொரிந்தியர் 15:25, 26, 28**

**ஆமென்**

# அட்டவணை

## ஆராதனை மற்றும் விசேஷப் பாடல்கள்


01. அருள்மாரி எங்குமாக – 01
02. அருள் ஏராளமாய்ப் பெய்யும் – 02
03. அஞ்சாதிரு என் நெஞ்சமே – 02
04. அற்புதமாய் நடத்தும் – 03
05. அழைப்பின் குரல் கேட்டேன் – 04
06. அநாதி தேவன் உன் அடைக்கலமே – 05
07. அல்லேலூயா கர்த்தரையே – 06
08. அன்பின் ரூபி திவ்யானந்தம் – 08
09. அன்பு சந்தோஷம் சமாதானம் – 09
10. அன்பின் தேவன் உந்தன் அன்பே நிரந்தரம் – 09
11. அன்பின் தேவனே அன்பின் இயேசுவே – 10
12. அன்பரின் நேசம் யார் சொல்லலாகும் – 11
13. அன்பில் என்னைப் பரிசுத்தனாக்க – 12
14. அன்பு பரலோக தந்தையின் அன்பு – 13
15. அன்புள்ள இயேசுவே ஆறுதல் நாயகனே – 14
16. அன்புள்ள இயேசு நேசர் – 14
17. அன்பே பிரதானம் – 15
18. அடைக்கலமே உமதடிமை நானே – 16
19. அதிகாலையில் உமைத் தேடுவேன் – 17
20. ஆத்துமமே என் முழு உள்ளமே – 18
21. ஆசீர்வாதம் நிறைத்தே அனுப்புவீர் தேவா – 19
22. ஆனந்த துதி ஒலி கேட்கும் – 20
23. ஆனந்தமாய் இன்பக் கானான் ஏகிடுவேன் – 21
24. ஆனந்தமாய் நாமே போற்றிடுவோமே – 22

25. ஆண்டவரின் நாமமதை ஈண்டு - 23
26. ஆயிர வருட அரசாட்சியே - 24
27. ஆராதனை ஆராதனை - 25
28. ஆராதனைத் துதி ஸ்தோத்திரப் பாத்திரரே - 26
29. ஆழமாம் பிரதிஷ்டை செய்துகொண்டு - 29
30. ஆதாரம் நீர் தான் ஐயா, என் துரையே - 28
31. ஆ கர்த்தாவே தாழ்மையாக - 29
32. ஆ, வானம் பூமி யாவையும் - 30
33. ஆதிமுதல் எகோவா தேவன் - 31
34. இயேசுவே உம் நாமத்தினால் - 32
35. இயேசுவை நம்பிப் பற்றிக் கொண்டேன் - 33
36. இயேசுவின் நாமமே திருநாமம் - 34
37. இயேசுவின் சிந்தையை தரிப்போம் - 34
38. இயேசு கற்பித்தார் ஒளி வீசவே - 36
39. இயேசுவே உம்மைப்போல் ஆக - 36
40. இயேசு கிறிஸ்துவின் அன்பு என்றும் - 37
41. இரட்சா பெருமானே பாரும் - 38
42. இரத்தம் இயேசு இரத்தம் - 39
43. இலேசான காரியம் - 40
44. இஸ்ரயேல் என் ஜனமே என்றும் - 41
45. இஸ்ரயேல் தேசிய கீதம்.. - 42
46. இஸ்ரயேலின் தேவனாக வாழும் - 43
47. இதுவரை செய்த செயல்களுக்காக - 44
48. இதோ சகோதரர் ஒருமித்து வாசம் செய்வது - 45
49. இத்தரைமீதினில் வித்தகனா யெழுந்த - 46
50. உம்மையல்லால் வேறே நல்ல - 47
51. உம் அழகான கண்கள் என்னை - 48
52. உம்மைப் பாடாத நாவும் - 48

53. உம் பாதம் பணிந்தேன் - 49
54. உம்மண்டை தேவனே நான் - 50
55. உன்னை சிருஷ்டித்தவர் உன்னை - 50
56. உன்னதமானவரின் உயர் - 51
57. உன்னதத்தில் தேவனுக்கு மகிமை - 52
58. உன்னைக் காக்கிறவர் உறங்கார் - 53
59. உடைந்த பாத்திரம் நான் - 54
60. உந்தன் சித்தம்போல் நடத்தும் - 55
61. என்ன என் ஆனந்தம் - 56
62. என் இதயத்தின் காயத்தை ஆற்றிடும் - 57
63. என் இயேசுவே! உம்மையே நான் - 58
64. என் இன்ப துன்ப நேரம் - 58
65. என் மீட்பர் உயிரோடிருக்கையிலே - 59
66. என் மீட்பர் சென்ற பாதையில் - 60
67. என்னோடிரும், மா நேச கர்த்தரே - 61
68. என்னோடிரும் என் நேச கர்த்தரே - 62
69. என்னை மறவா இயேசு நாதா - 63
70. என்னைப் பரிசுத்தப்படுத்தும் தேவனே - 64
71. என் முன்னே மேய்ப்பர் போகிறார் - 65
72. என் மேய்ப்பராய் இயேசு இருக்கின்ற - 66
73. என் தேவனே என் ஏசுவே - 67
74. என் தேவனே என் ஆத்துமா - 68
75. என் உயிரான உயிரான உயிரான - 69
76. என்ன வந்தாலும் எது வந்தாலும் - 69
77. எந்நாளுமே துதிப்பாய் - 70
78. எந்நாளும் இயேசுவில் வளர்ந்திடவே - 72
79. எகோவாவே என் கன்மலையே - 72
80. என் சித்தமல்ல உம் சித்தம் நாதா - 73

| | | | |
|---|---|---|---|
| 81. | என் கண்கள் கர்த்தர் ஏசுவின் | - | 74 |
| 82. | எண்ணிலடங்கா ஸ்தோத்திரம் | - | 75 |
| 83. | எண்ணி எண்ணி துதி செய்வாய் | - | 76 |
| 84. | என் நேசர் ஏசுவின்மேல் சாய்ந்தே | - | 77 |
| 85. | என் மீட்பர் இரத்தம் சிந்தினார் | - | 78 |
| 86. | என் பாரங்கள் தாங்கிடுவார் | - | 79 |
| 87. | என் பாதை வேண்டாமே | - | 80 |
| 88. | என் நேசர் மார்பிலே | - | 81 |
| 89. | எனக்காய் ஜீவன் விட்டவரே | - | 82 |
| 90. | எனக்கொத்தாசை வருகின்ற | - | 83 |
| 91. | எந்தன் முகம் வாடினால் | - | 83 |
| 92. | எந்தன் ஜீவன் இயேசுவே | - | 84 |
| 93. | எந்தன் ஆத்துமாவே எந்தன் உள்ளமே | - | 85 |
| 94. | எந்தன் ஜெபவேளை உமைத்தேடி | - | 86 |
| 95. | எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும் | - | 87 |
| 96. | எந்நேரமாயும் பாடுவேன் | - | 88 |
| 97. | எப்படி பாடுவேன் நான் – என் | - | 88 |
| 98. | ஏசுவின் இன்ப நாமத்தை | - | 89 |
| 99. | ஏசுவுக்காக நில்லும் சிலுவை வீரர்கள் | - | 90 |
| 100. | ஐயையா நான் வந்தேன் | - | 91 |
| 101. | ஒளிதரும் தீபங்கள் | - | 92 |
| 102. | ஒரு தாய் தேற்றுவது போல் | - | 93 |
| 103. | ஒன்றுமில்லை நான் என்றே | - | 93 |
| 104. | கண்களை ஏறெடுப்பேன் | - | 94 |
| 105. | கல்கள் கூப்பிடும் நீ பேசாவிட்டால் | - | 95 |
| 106. | கலங்கிடாதே நீ | - | 96 |
| 107. | கர்த்தர் என் ஜீவனும் பெலனுமானவர் | - | 97 |
| 108. | கர்த்தாவே இறங்கும் | - | 97 |

| | | | |
|---|---|---|---|
| 109. | கர்த்தரின் சத்திய வேதம் | - | 98 |
| 110. | கர்த்தரின் சத்தம் வல்லமையுள்ளது | - | 99 |
| 111. | கர்த்தரின் திருவிருந்து | - | 100 |
| 112. | கர்த்தரே எம் துணையானீர் | - | 101 |
| 113. | கர்த்தர் நாமம் என் புகலிடமே | - | 102 |
| 114. | கர்த்தரை நம்பியே ஜீவிப்போம் | - | 103 |
| 115. | கதிரவன் தோன்றும் காலையிதே | - | 104 |
| 116. | காது குளிரப்பாடுங்கள்கிருபா சத்தியம் | - | 105 |
| 117. | காலையில் ஸ்தோத்திர கீதம் | - | 106 |
| 118. | காலமே தேவனைத் தேடு | - | 107 |
| 119. | காலம் வேகமாய் ஓடுதே | - | 108 |
| 120. | காலையும் மாலை எவ்வேளையும் | - | 108 |
| 121. | காணாத ஆட்டின் பின்னே – கர்த்தர் | - | 110 |
| 122. | கிறிஸ்தேசுவின் புண்ணியத்தாலே | - | 111 |
| 123. | கிருபையே உன்னை இந்நாள் | - | 112 |
| 124. | கிருபையிதே தேவ கிருபையிதே | - | 113 |
| 125. | குயவனே குயவனே படைப்பின் காரணரே | - | 114 |
| 126. | கூடாதது ஒன்றுமில்லையே | - | 115 |
| 127. | கூடி மீட்பர் நாமத்தில் | - | 116 |
| 128. | கோதுமைமணி மண்ணில் மடிந்து | - | 117 |
| 129. | கோடா கோடி ஸ்தோத்திரம் | - | 118 |
| 130. | சபையின் அஸ்திபாரம் | - | 118 |
| 131. | சபையாரே கூடிப்பாடி | - | 119 |
| 132. | சத்திய வேதம் பக்தரின் கீதம் | - | 120 |
| 133. | சர்வ சிருஷ்டிக்கும் எஜமானன் நீரே | - | 121 |
| 134. | சிங்கார மாளிகையில் | - | 122 |
| 135. | சீர் இயேசு நாமம் அதிசய நாமம் | - | 123 |
| 136. | சீயோனிலே என் திட அஸ்திபாரம் | - | 124 |

| | | | |
|---|---|---|---|
| 137. | ஜீவனுள்ள கர்த்தரே வாரும் | - | 125 |
| 138. | சேனைகளின் கர்த்தர் நல்லவரே | - | 126 |
| 139. | சேனைகளின் தேவன் நம்மோடு | - | 126 |
| 140. | சேனை அதிபன் நமது கர்த்தருக்கே | - | 127 |
| 141. | ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா | - | 128 |
| 142. | ஜெயராஜ கொடி ஏற்றிக்காட்டவே | - | 129 |
| 143. | ஜெயம் கொடுக்கும் தேவனுக்கு | - | 130 |
| 144. | சோர்ந்து போகாதே மனமே | - | 130 |
| 145. | ஸ்தோத்திரம் இயேசு நாதா | - | 131 |
| 146. | ஸ்தோத்திரம் துதி பாத்திரா உம்மை | - | 132 |
| 147. | ஸ்தோத்திர பாத்திரனே தேவா | - | 133 |
| 148. | ஸ்தோத்திரம் செய்வேனே இரட்சகனைத் | - | 134 |
| 149. | தந்தேன் என்னை இயேசுவே | - | 135 |
| 150. | தந்தானை துதிப்போமே | - | 136 |
| 151. | தம் கிருபை பெரிதல்லோ | - | 137 |
| 152. | தனியாய் எங்கும் அலைந்தேனே | - | 138 |
| 153. | தாரும் சுத்த ஆவி தாரும் | - | 139 |
| 154. | திருக்கரத்தால் தாங்கியென்னை | - | 140 |
| 155. | திருப்பாதம் நம்பி வந்தேன் | - | 140 |
| 156. | திவ்ய ஆசீர் பொழிந்தருள்வீர் | - | 141 |
| 157. | திவ்ய அன்பின் சத்தத்தை இரட்சகா | - | 142 |
| 158. | தித்திக்கும் தூதாயிமே | - | 143 |
| 159. | தீயன் ஆயினேன் ஐயா எளியேன் | - | 144 |
| 160. | தீயோர் சொல்வதைக் கேளாமல் | - | 145 |
| 161. | துதிப்போம் துதிப்போம் தேவனை | - | 146 |
| 162. | துதிப்போம் அல்லேலூயா பாடி | - | 147 |
| 163. | துதித்துப் பாடிட பாத்திரமே | - | 148 |
| 164. | துன்பம் உன்னைச் சூழ்ந்தலை | - | 149 |

165. தூயாதி தூயவரே - 150
166. தெய்வத்துவத்தின் பரிபூரணம் - 150
167. தெய்வ கிருபையைத் தேடி பாவி - 151
168. தேவா உம் சாட்சி நான் - 152
169. தேவன் தங்கும் உள்ளம் - 153
170. தேவனை உயர்த்தித் துதியுங்கள் - 154
171. தேவ சாயல் ஆக மாறி - 155
172. தேவ தேவனைத் துதித்திடுவோம் - 156
173. தேவனின் ஆலயமே பரிசுத்த - 157
174. தேவ ஜனமே பாடித் துதிப்போம் - 157
175. தேவ சித்தம் நிறைவேற - 159
176. தேவனே நான் உமதண்டையில் - 159
177. தேவா தேவாதி தேவா - 161
178. தேவப்பிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ - 162
179. தேவகிருபை என்றுமுள்ளது - 163
180. தேவன் அருளிய உபகாரங்களுக்கு - 164
181. தேவாதி தேவனையே தினமும் - 165
182. தேவாதி தேவனே உம் திவ்ய - 166
183. தேவாதி தேவா சர்வலோக எகோவா - 166
184. தேன் இனிமையிலும் ஏசுவின் நாமம் - 168
185. தேனிலும் மதுரம் திவ்ய மா வேதம் - 169
186. தொழுகிறோம் எங்கள் பிதாவே - 170
187. தொல்லை கஷ்டங்கள் சூழ்ந்திடும் - 171
188. நடத்துவார், ஆ இன்பெண்ணம் - 172
189. நடக்கச் சொல்லித் தாரும் - 172
190. நடமாடும் ஆலயம் நாம் - 173
191. நம் தேவனைத் துதித்துப்பாடி - 174
192. நல்மேய்ப்பரே, இக்கூட்டத்தை - 175

193. நல்மீட்பரே, இந்நேரத்தில் - 175
194. நல்லகாலம் ஒன்றைத் தந்தாரே - 176
195. நல்ல தேவனே ஞான தேவனே - 177
196. நான் பிரமித்து நின்று பேரன்பின் - 178
197. நான் உன்னை சிருஷ்டித்த தெய்வம் - 179
198. நான் பாவி தான், ஆனாலும் நீர் - 180
199. நானும் என் வீட்டாருமோவென்றால் - 181
200. நிகரே இல்லாத சர்வேசா - 182
201. நித்தம் முயல் மனமே - 183
202. நீங்காத பாவம் நீங்காததேனோ - 184
203. நீர் மாத்திரம் போதும் எனக்கு - 184
204. நீர் ஜீவ அப்பம் பஞ்சத்தில் - 185
205. பரம அழைப்புக்குப் பாத்திரரே - 187
206. பரலோக பாதை பாக்கியமே - 187
207. பரலோகமே என் சொந்தமே - 188
208. பலிபீடத்திலென்னைப் பரனே - 189
209. பலியும் தாழ்மையும் இரண்டையுமே - 190
210. பரிசுத்தம் ஒன்றையே வாஞ்சிக்கிறேன் - 191
211. பரிசுத்தரே வாரும் பரிசுத்தரே வாரும் - 192
212. பாடல் ஒன்று பாடுவேன் - 193
213. பாடுகள் வழியாய் பரலோகம் - 193
214. பாதம் ஒன்றே வேண்டும் - 194
215. பாடுங்கள் கர்த்தரையே - 195
216. பாரீர் அருணோதயம்போல் - 196
217. பாதை காட்டும் மா எகோவா - 197
218. பாவ சஞ்சலத்தை நீக்க - 198
219. பிளவுண்ட மலையே புகலிடம் தாருமேன் - 199
220. பிஸ்காவின் கொடுமுடிக்கு வாரும் - 200

221. பெலமளித்தெமைப் புது வழிகளில் - 201
222. பெலன் ஒன்றும் இல்லை தேவா - 202
223. போற்றித் துதிப்போம் நம் தேவ தேவனை - 202
224. போற்றுவோம் தேவனை - 203
225. போற்றுவேன் என் மீட்பர் அன்பை - 204
226. போற்றும் போற்றும் புண்ணியநாதரை - 205
227. போதகரே புயல் வீசுதே அலை அடிக்கிறதே - 206
228. மகனே உன் நெஞ்செனக்குத் தாராயோ - 207
229. மகிமை மாட்சிமை நிறைந்தவரே - 207
230. மகிழ்வோம் மகிழ்வோம் தினம் - 208
231. மறவாமல் நினைத்தீரையா - 209
232. மறவார் தேவன் மறவார் - 210
233. மனதில் நன்றியுடன் - 211
234. மான்கள் நீரோடை வாஞ்சிப்பது போல - 212
235. மானானது நீரோடைகளை - 213
236. மீட்பரே நீர் என் முன் செல்ல - 214
237. முற்றிலும் அழகானவர் - 215
238. மெய் ஜோதியாம் என் தேவனே - 216
239. மேலானவைகளை நாடுங்கள் - 217
240. யாருக்காய் வாழ்கின்றாய் நீ - 218
241. யாவே உம் அருளைத் தாருமே - 219
242. யுத்தம் செய்வோம் வாரும் கிறிஸ்து வீரரே - 220
243. யூபிலி ஆண்டு வந்தது - 221
244. யெகோவாயீரே ஆராதனை - 221
245. ராஜாதி ராஜனைப் பாரீரோ - 222
246. ராஜன் வந்த நேரம் நம் பாவம் பறந்தோடும் - 223
247. லவோதிக்கேயா சபைக்கு - 224
248. வருவாய் தருணமிதுவே அழைக்கிறாரே - 225

249. விசுவாசியின் காதில் பட - 226
250. விசுவாச நாட்டை நோக்கி வேகம் - 227
251. விந்தைக் கிறிஸ்தேசு ராஜா - 228
252. விண்ணோர்கள் போற்றும் ஆண்டவா - 229
253. வேத மாணாக்கர்களாக - 230

## ஞானஸ்நானப் பாடல்கள்

254. அர்ப்பணித்தேன் என்னை முற்றிலுமாய் - 231
255. என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன் - 232
256. சிலுவை சுமந்தோனாக - 233
257. நான் ஜீவ ஊற்றினில் மூழ்கி - 234
258. பாவச் சேற்றில் அமிழ்ந்திட்ட எனையும் - 234
259. மீட்பரே உம்மைப் பின் செல்ல - 235

## திருமணப் பாடல்கள்

260. ஆசீர்வதியும் கர்த்தரே ஆனந்தமிகவே - 237
261. ஆதாம் என்னும் ஆதி மனிதனை - 238
262. இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன் - 238
263. ஏதேனில் ஆதிமணம் - 239
264. பயந்து கர்த்தரின் தூய வழியில் - 240
265. பிதாவே ஞானம் அன்பினால் - 241
266. மங்களம் செழிக்க கிருபையருளும் - 242
267. வானம் பூமி ஆழி கடல்களும் - 242

## நித்திரைப் பாடல்கள்

268. உயிர்த்தெழும் காலை தன்னில் - 244
269. கடல் கொந்தளித்துப் பொங்க - 245
270. சீர்கெட்ட லோகமே - 245
271. நெஞ்சமே தள்ளாடி நொந்து - 246

## நினைவுகூருதலின் நாள் பாடல்கள்


| | | |
|---|---|---|
| 272. அந்தோ கல்வாரியில் அருமை இரட்சகரே | - | 248 |
| 273. அன்பே கல்வாரி அன்பே | - | 249 |
| 274. ஆசரிப்போமே இன்று | - | 250 |
| 275. இயேசுவே உந்தன் மாசில்லா இரத்தம் | - | 251 |
| 276. இயேசுவே கல்வாரியில் என்னை | - | 252 |
| 277. என் பாவ பரிகாரியே | - | 252 |
| 278. என் அருள் நாதா ஏசுவே | - | 253 |
| 279. என்ன தியாகம் என் கல்வாரி நாயகா | - | 254 |
| 280. என்னை நேசிக்கின்றாயா | - | 256 |
| 281. ஏறுகின்றார் தள்ளாடி தவழ்ந்து | - | 257 |
| 282. கல்வாரி சிநேகம் கரைத்திடும் என்னை | - | 258 |
| 283. கல்வாரி அன்பை எண்ணிடும் வேளை | - | 258 |
| 284. கல்வாரி அன்பை நான் தியானிக்கையில் | - | 259 |
| 285. கல்வாரி மா மாலையோரம் | - | 260 |
| 286. கல்வாரி சிகரமதில் | - | 261 |
| 287. கல்வாரி நேசரே மீட்பரே இயேசுவே | - | 262 |
| 288. கல்வாரி சிலுவையில் கர்த்தர் ஜீவனை | - | 263 |
| 289. கல்வாரியின் கருணையிதே | - | 264 |
| 290. கல்வாரியில் தொங்குகின்றார் | - | 265 |
| 291. கல்மனம் உருருதையா | - | 266 |
| 292. கர்த்தரின் பந்தியில் வா | - | 267 |
| 293. கிருபாதார பலியாமே | - | 268 |
| 294. குருசினில் தொங்கியே குருதியும் வடிய | - | 269 |
| 295. குருசினில் தொங்கினீர் குருதியும் சிந்தினீர் | - | 270 |
| 296. சிலுவை மீதே தொங்கிய இயேசு | - | 271 |

297. சிலுவை சுமந்த உருவம் - 271
298. சொற்பக்காலம் பிரிந்தாலும் - 272
299. தீர்ப்பினை சுகமாய் ஏற்றீரே - 273
300. பாடுகள் நீர் பட்ட போது - 275
301. பாரீர் கெத்சமனே - 276
302. பாவிக்கு புகலிடம் இயேசு இரட்சகர் - 277

## உயிர்த்தெழுதல் பாடல்கள்

303. உயிரோடு எழுந்தவரே - 278
304. உயிர்தெழுந்தாரே அல்லேலூயா - 279

## வரவேற்புப் பாடல்கள்

305. வாருங்கள் வேதமாணவரே - 280

## ஆங்கிலப் பாடல்கள்

306. God be with you till we meet again - 281
307. He leadeth me, O blessed thought - 282
308. I will sing of my Redeemer - 282
309. MINE eyes can see the glory - 283
310. Onward Christian soldiers Marching - 284
311. SING them over again to me - 286

# ஆராதனை & விசேஷப் பாடல்கள்

## 01.அருள்மாரி எங்குமாக

அருள்மாரி எங்குமாக பெய்ய
அடியேனையும் கர்த்தரே
நீர் நேசமாக சந்தித்தாசீர்வதியும்
என்னையும், என்னையும்
சந்தித்தாசீர்வதியும் – 2

01 என் பிதாவே பாவியேனை
கைவிடாமல் இரங்கும்
திக்கில்லா இவ்வேழையேனை
நோக்கி பார்த்துச் சேர்த்திடும்
என்னையும், என்னையும்
நோக்கி பார்த்து சேர்த்திடும் – 2

02 ஏசுவே, நீர் கைவிடாமல்
எந்தன் பாவம் நீக்கிடும்
இயேசுவின் மாஇரத்தத்தாலே
சுத்தமாக்கியருளும்
என்னையும், என்னையும்
சுத்தமாக்கியருளும் – 2

03 தூய ஆவியால் விடாமல்
என்னில் க்ரியை செய்திடும்
பாதை காட்டிக் கேடில்லாமல்
என்றும் காத்து இரட்சியும்
என்னையும், என்னையும்
என்றும் காத்து இரட்சியும் – 2

## 02. அருள் ஏராளமாய்ப் பெய்யும்

அருள் ஏராளமாய்ப் பெய்யும் உறுதி வாக்கிதுவே
ஆறுதல் தேறுதல் செய்யும் சபையை உயிர்ப்பிக்குமே

அருள் ஏராளம் அருள் அவசியமே
அற்பமாய் சொற்பமாயல்ல திரளாய்ப் பெய்யட்டுமே

01 அருள் ஏராளமாய்ப் பெய்யும் மேக மந்தாரமுண்டாம்
காடான நிலத்திலேயும் செழிப்பும் பூரிப்புமாம்
அருள் ஏராளம்..

02 அருள் ஏராளமாய்ப் பெய்யும் இயேசு வந்தருளுமேன்
இங்குள்ள கூட்டத்திலேயும் க்ரியை செய்தருளுமேன்
அருள் ஏராளம்..

03 அருள் ஏராளமாய்ப் பெய்யும் பொழியும் இச்சணமே
அருளின் மாரியைத் தாரும் ஜீவ தயாபரரே
அருள் ஏராளம்..

## 03. அஞ்சாதிரு என் நெஞ்சமே

அஞ்சாதிரு என் நெஞ்சமே
எகோவா துன்ப நாளிலே
கண் பார்ப்போம் என்கிறார்
இக்கட்டில் திகையா திரு
தகுந்த துணை உனக்கு
தப்பாமல் செய்குவார்

01 தாவீதும் யோபும் யோசேப்பும்
அநேக நீதிமான்களும்
உன்னிலும் வெகுவாய்
கஸ்தி அடைந்தும், பக்தியில்
வேரூன்றி ஏற்ற வேளையில்
வாழ்ந்தார்கள் பூர்த்தியாய்

02 கருத்தாய் தேவ தயவை
எப்போதும் நம்பும் பிள்ளையை
சகாயர் மறவார்
மெய்பக்தி உன்னில் வேர்கொண்டால்
இரக்கமான கரத்தால்
அணைத்து பாலிப்பார்

03 என் நெஞ்சமே மகிழ்ந்திரு
பேய், லோகம், துன்பம் உனக்கு
பொல்லாப்பு செய்யாதே
எகோவா உன் அடைக்கலம்
அவர்மேல் வைத்த நம்பிக்கை
அவமாய் போகாதே

## 04. அற்புதமாய் நடத்தும்

அற்புதமாய் நடத்தும் தற்பரனின் தந்தையே
எகோவா தெய்வமே – அற்புதமாய்

01 கட்டளையே விளக்கு நமக்கு
வேதமே வெளிச்சமாகிடுமே – 2
போதக சிட்சையே ஜீவ வழி
நாடிடுவோம் அதனை – 2

அற்புதமாய் நடத்தும்..

**02** உந்தனின் நீதி நியாயங்களை
கைக்கொண்டு வாழ்ந்திடும் நாளினிலே – 2
துன்பம் வறின் இன்பம் கொள்வோம்
தூயவர் நாமத்திலே – 2

அற்புதமாய் நடத்தும்..

**03** ஜீவ மார்க்கமதில் சென்றிடுவோம்
ஜீவ வசனத்தில் நின்றிடுவோம் – 2
முன் குறித்தீர் முன்னுரைத்தீர்
மூன்றையும் வென்றிடுவோம் – 2

அற்புதமாய் நடத்தும்..

**04** உம் பிள்ளைகள் தம் சொல் கேட்கவே
எம்பிரானின் வழி வந்தடைந்தோம் – 2
எம் குறையை நிறைவாக்கி
ஏற்றருள் புரிவீர் – 2

அற்புதமாய் நடத்தும்..

## 05. அழைப்பின் குரல் கேட்டேன்

அழைப்பின் குரல் கேட்டேன்
என் ஆண்டவர் என உணர்ந்தேன்
அருகினில் தயங்கி நடை பயின்றேன்
பின்னே வா என் முன் சென்றார் – 2

**01** அறிவில் குறைந்தவன் நானன்றோ
அதை தெரிந்தும் அழைத்தது ஏன் என்றேன்
அறிந்தவர் செருக்கினை அகற்றிடவே
பின்னே வா என முன் சென்றார் – 2

அழைப்பின் குரல்..

**02** வலிமை குறைந்தவன் நானன்றோ
அதை தெரிந்தும் அழைத்தது ஏன் என்றேன்
வலியவர் கொடுக்கினை வதைத்திடவே
பின்னே வா என முன் சென்றார் – 2

அழைப்பின் குரல்..

**03** குறைகள் மிகுந்தவன் நானன்றோ
அதை தெரிந்தும் அழைத்தது ஏன் என்றேன் – 2
கருவிலிருந்து உன்னை தெரிந்தவர் நான்
பின்னே வா என முன் சென்றார் – 2

அழைப்பின் குரல்..

## 06. அநாதி தேவன் உன் அடைக்கலமே

அநாதி தேவன் உன் அடைக்கலமே
அவர் நித்திய புயங்கள் உன் ஆதாரமே – 2
இந்த தேவன் என்றென்றும் உள்ள
சதா காலமும் நமது தேவன்
மரண பரியந்தமும் நம்மை நடத்திடுவார்

அநாதி தேவன்..

**01** காருண்யத்தாலே இழுத்துக்கொண்டார்
தூயதேவ அன்பே – 2
இவ் வனாந்தரத்தில் நயம் காட்டி என்னை
இனிதாய் வருந்தி அழைப்பார்

இந்த தேவன்..

**02** கானகப் பாதை காரிருளில்
தூய தேவ ஒளியே – 2
அழுகை நிறைந்த பள்ளத்தாக்குகளில்
அதை நீரூற்றாய் மாற்றினாரே

இந்த தேவன்..

03 இப்புவி யாத்திரை கடந்திடுவாய்
தூய தேவ தயவால் – 2
கடும் கானகத்தில் கர்த்தர் மார்பினிலே
கிடைக்கும் இளைப்பாறுதலே
இந்த தேவன்..

## 07. அல்லேலூயா கர்த்தரையே

அல்லேலூயா கர்த்தரையே ஏகமாய்த் துதியுங்கள்
அவர் நடத்தும் செயல்களெல்லாம் பார்த்தோரை துதியுங்கள்
வல்லமையாய்க் கிரியை செய்யும் வல்லோரைத் துதியுங்கள்
எல்லோரையும் ஏற்றுக்கொள்ளும் இயேசுவைத் துதியுங்கள்

இராஜாதி இராஜனாம் இயேசுராஜன்
பூமியை ஆளுகிறார்
அல்லேலூயா – 2
தேவனைத் துதியுங்கள்

01 தம்புரோடும் வீணையோடும் கர்த்தரைத் துதியுங்கள்
இரத்தத்தினால் பாவங்களைப் போக்கினார் துதியுங்கள்
எக்காளமும் கைத்தாளமும் முழங்கிட துதியுங்கள்
எக்காலமும் மாறாதவர் இயேசுவைத் துதியுங்கள்
இராஜாதி இராஜனாம்..

02 சூரியனே சந்திரனே தேவனைத் துதியுங்கள்
ஒளியதனை எங்கள் உள்ளம் அளித்தோரை துதியுங்கள்
அக்கினியே கல்மழையே படைத்தோரைத் துதியுங்கள்
அக்கினியாய் கல்மனதை உடைப்போரைத் துதியுங்கள்
இராஜாதி இராஜனாம்..

03 பிள்ளைகளே வாலிபரே தேவனைத் துதியுங்கள்
வாழ்வதனை அவர் பணிக்கே கொடுத்து நீர் துதியுங்கள்
பெரியவரே ப்ரபுக்களே தேவனைத் துதியுங்கள்
செல்வங்களை இயேசுவுக்காய் செலுத்தியே துதியுங்கள்
இராஜாதி இராஜனாம்..

## 08. அன்பின் ரூபி திவ்யானந்தம்

அன்பின் ரூபி திவ்யானந்தம்
பாரில் ஈய வந்தீரே
எங்கள் ஏழை நெஞ்சில் வாசம்
பண்ணி மருள் தீர்ப்பீரே
ஏசுவே நீர் பலியாகி
அன்பினை காட்டுகிறீர்
பார துக்கங் கொண்ட உள்ளம்
ஆற்றித் தேற்றல் செய்குவீர்

01 உமது நல் ஆவி தாரும்
எங்கள் நெஞ்சு பூரிப்பாய்
உம்மில் சார நல்லருள் தாரும்
சுத்த நேச வடிவாய்
பாவ ஆசை எல்லாம் நீக்கி
அடியாரை இரட்சியும்
விசுவாசத்தைத் துவக்கி
முடிப்பவராயிரும்

02 சர்வ வல்ல எகோவாவே
நாங்கள் உமதாலயம்
எங்களுக்கு தயை தாரும்

என்றும் விலகாதேயும்
என்றும் உம்மை ஸ்தோத்தரித்து
வானோர் போல சேவிப்போம்
குறைவற்ற அன்பைப் பெற்று
ஒழியாமல் துதிப்போம்

**03** நாங்கள் நித்ய வீட்டில் சேர்ந்து
கறை திறை இன்றியே
உந்தன் சாயல் பெற்று வாழ்ந்து
தேவ அன்பில் மூழ்கியே
எங்கள் க்ரீடம் உந்தன் பாதம்
வைத்துப் போற்றும் வரைக்கும்
தேவா அடியாரை நித்தம்
மறுரூபமாக்கிடும்

## 09. அன்பு சந்தோஷம் சமாதானம்

அன்பு சந்தோஷம் சமாதானம்
நீடிய பொறுமை தயவு
நற்குணம் விசுவாசம்
சாந்தம் இச்சையடக்கம் – 2

**01** ஒருவர்மேல் ஒருவர்
பொறாமை கொள்ள வேண்டாம்
பொறாமையினால் காயீன்
ஆபேலைக் கொன்று போட்டான் – 2
மாம்ச கிரியை வெறுத்து
ஆவியின் கனியை நாடவேண்டும்
ஆவியின் கனியோ

அன்பு சந்தோஷம்

**02** அசுத்தம் காமவிகாரத்திலே
விழுந்தும் ஆவியை கெடுக்காதே
விழுந்த சிம்சோனும் அழிந்து போனானே 2
மாம்ச கிரியை வெறுத்து
ஆவியின் கனியை நாடவேண்டும்
ஆவியின் கனியோ

அன்பு சந்தோஷம்

## 10. அன்பின் தேவன் உந்தன்

அன்பின் தேவன் உந்தன் அன்பே நிரந்தரம்
ஆண்டவர் இயேசுவின் மாறாத அன்பே நிரந்தரம்
இம்மை வாழ்வில் மறுமை இருப்பது நிரந்தரம் – 2
நான் மாண்ட பின்பும் இயேசுவில் உயிர்ப்பது நிரந்தரம்
நிரந்தரம் நிரந்தரம் நீரே நிரந்தரம் – 2
அன்பின் தேவன்..

**01** தாயின் அன்பு சேய்க்கு இல்லையே நிரந்தரம்
தாய்க்கு மேலாய் இயேசுவின் அன்பே நிரந்தரம்
தேயும் வாழ்வில் நம்பிக்கை நீரே நிரந்தரம்
நான் சாயும்போது காப்பவர் நீரே நிரந்தரம் – 2
நிரந்தரம் நிரந்தரம் நீரே நிரந்தரம் – 2

அன்பின் தேவன்..

**02** பிதாவும் குமாரனும் ஒன்றாய் இருப்பது நிரந்தரம்
திருச்சபை உம்மில் ஒன்றாய் இணைவோம் நிரந்தரம்
பூமியின் குடிகள் எல்லோரும் உயிர்ப்பது நிரந்தரம்
உந்தன் ராஜ்யம் என்றும் பூமியில் நிலைப்பது நிரந்தரம்
நாங்கள் உம்முடன் வாழும் ஒவ்வொரு நாளும் நிரந்தரம்
நிரந்தரம் நிரந்தரம் நீரே நிரந்தரம் – 2

அன்பின் தேவன்..

# 11. அன்பின் தேவனே அன்பின் இயேசுவே

அன்பின் தேவனே அன்பின் இயேசுவே
அன்பில் என்னை நடத்திடுவீர்
நல்ல பங்கினை நான் அடைந்தே
பலியாக நல்கி எனதுடலுந் தருவேன் – 2

**01** அன்று இயேசு தம் உயிர் ஆவி
அன்பரே உம் பாதம் ஊற்றினாரே – 2
என் இதயமே தைலக்குப்பியாய்
என்னை முழுதும் ஒப்புவித்தேன் – 2
அன்பின் தேவனே..

**02** தந்தை உம்மை நான் மறவேனே
உந்தனின் மைந்தன் சொந்தமானேன் – 2
என் இரட்சிப்பே என் கன்மலையே
உந்தன் வழியில் என்னை நடத்தும் 2
அன்பின் தேவனே..

**03** உம்மையன்றி ஒருவருமில்லை
உண்மையிதே என்னை ஏற்றிடுவீர் – 2
கைவிடாமல் காப்பீர் தினமே
கனமும் சத்யமும் காத்திடுவீர் – 2
அன்பின் தேவனே..

**04** இந்த வாழ்வில் சிலுவையல்லாமல்
இரட்சிப்பு இல்லை அறிந்தேனே – 2
எந்தன் ஆசை யாவும் அறைந்தேன்
உந்தன் பரிசினில் பங்கடைவேன் – 2
அன்பின் தேவனே..

05 எந்தன் இலக்காம் ஜீவனை நோக்கி
ஏக சிந்தையாய் ஓடுகின்றேன் – 2
இந்த உலகின் ஆஸ்தி குப்பை
எந்தன் கிறிஸ்தென் வாழ்வாகும் – 2

அன்பின் தேவனே..

## 12. அன்பரின் நேசம்

அன்பரின் நேசம் யார் சொல்லலாகும் – அதிசய
அன்பரின் நேசம் யார் சொல்லலாகும்

துன்ப அகோரம் தொடர்ந்திடும் நேரம் – அதிசய

01 இதுவென் சரீரம் இதுவென்றன் இரத்தம்
எனை நினைந்திடும்படி அருந்துமென்றாரே

அதிசய..

02 பிரிந்திடும் வேளை நெருங்கினதாலே
வருந்தின சீஷர்க்காய் மறுகி நின்றாரே

அதிசய..

03 கெத்செமனே ராவினில் வியாகுலத்தோடே
விளம்பின போதகம் மறந்திடலாமோ

அதிசய..

04 செடியும் கொடியும்போல் சேர்ந்து தம்மோடே
முடிவுபரியந்தம் நிலைப்பீரென்றாரே

அதிசய..

05 பக்தர்கட்காகப் பரமனை நோக்கி
மெத்தவும் ஊக்கமாய் வேண்டிக்கொண்டாரே

அதிசய..

## 13. அன்பில் என்னைப் பரிசுத்தனாக்க

அன்பில் என்னைப் பரிசுத்தனாக்க
உம்மைக்கொண்டு சகலத்தையும்
உருவாக்கியே நீர் முதற்பேரானீரோ
தந்தை நோக்கம் அநாதியன்றோ
என் இயேசுவே நேசித்தீரோ
எம்மாத்திரம் மண்ணான நான்
இன்னும் நன்றியுடன் துதிப்பேன் 2

01 மரித்தோரில் முதல் எழுந்ததினால்
புதுசிருஷ்டியின் தலையானீரே 2
சபையாம் உம் சரீரம் சீர்பொருந்திடவே
ஈவாய் அளித்தீர் அப்போஸ்தலரை – 2

என் இயேசுவே..

02 முன்னறிந்தே என்னை அழைத்தீரே
முதற்பேராய் நீர் இருக்க – 2
ஆவியால் அபிஷேகித்தீர் என்னையுமே
உம் சாயலில் நான் வளர – 2

என் இயேசுவே..

03 வருங்காலங்களில் முதற்பேராய்
நீர் இருக்க நாம் சகோதரராய் உம் – 2
கிருபையின் வார்த்தையை வெளிப்படுத்தி
ஆளுவோம் புதுசிருஷ்டியிலே 2

என் இயேசுவே..

04 நன்றியால் என் உள்ளம் நிறைந்திடுதே
நான் இதற்கென்ன பதில் செய்குவேன் – 2
உம்மகா நோக்கம் முற்றுமாய் நிறைவேறிட
என்னைத் தந்தேன் நடத்திடுமே – 2

என் இயேசுவே..

# 14. அன்பு பரலோக தந்தையின் அன்பு

அன்பு பரலோக தந்தையின் அன்பு
நமக்காக தம்மகனை பலி தந்த அன்பு
பாவியை மீட்டிடும் கருணையிண் அன்பு
கல்வாரி சிலுவையின் அன்பு - 2

**01** எனைப் போல பாவியை தேடி இயேசு வந்தீர்
என்மீது ஏன் இந்த அன்பு
எனக்காக உயிர் தந்த என் இயேசு நாதா
உம் பாசம் பெரிதானது 2
அன்பின் உருவம் நீரே
சோர்ந்தவரின் அடைக்கலம் நீர்
என் இயேசு தேவா

அன்பு பரலோக..

**02** உலகத்தின் செல்வங்கள் இன்பங்கள் எல்லாம்
உடைந்திடும் நேரம் இன்று
இச்சேற்றினின்று எனை மீட்டு கொண்ட
இயேசுவின் அன்பே அன்பு - 2
உண்மை செல்வம் நீரே
பரலோகம் கண்டிட நீரே மார்க்கம்

அன்பு பரலோக..

**03** அன்பான அப்பா உமைப்போல நானும்
உம்மீது அன்பாகனும்
முழு உள்ளத்தோடு முழு ஆத்மாவோடு
பிறரிடமும் அன்பாகனும் - 2
அன்பில் திட்டம் செய்தீர்
அன்பாக இதுவரையில் நடத்தி வந்தீர்

அன்பு பரலோக..

## 15. அன்புள்ள இயேசுவே ஆறுதல் நாயகனே

அன்புள்ள இயேசுவே ஆறுதல் நாயகனே
பாடித் தூதித்திடுவேன் – 2
நீரருகில் இருந்தால் பயமே இல்லை
நீரருகில் இருந்தால் சோர்வில்லை – 2

அன்புள்ள..

**01** சோர்ந்திடும் நேரத்தில் பெலனும் நீர் – 2
சோதனை நேரத்தில் துணையும் நீர் – 2
நீரருகில் இருந்தால் பயமே இல்லை
நீரருகில் இருந்தால் சோர்வில்லை – 2

அன்புள்ள..

**02** ஆண்டவரே எந்தன் அடைக்கலமே – 2
அரவணைத் தென்னை காப்பவரே – 2
நீரருகில் இருந்தால் பயமே இல்லை
நீரருகில் இருந்தால் சோர்வில்லை – 2

அன்புள்ள..

## 16. அன்புள்ள இயேசு நேசர்

அன்புள்ள இயேசு நாதர், எனக்கெல்லாம் அவரே
பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்
அவர் பள்ளத்தாக்கின் லீலி, எனக்கெல்லாம் அவரே
என் ஆத்துமத்தின் ஏக நாயகர்
துக்கத்தில் என் ஆறுதல் துன்பத்தில் என் இன்பம்
என் கவலையை யெல்லாம் தாங்குவார்

அவர் பள்ளத்தாக்கின் லீலி
அவர் காலை விடிவெள்ளி
பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்

**01** என் சஞ்சலங்கள் நீங்க என் பாவம் மா அன்பாய்
சுமந்து அவர் ஜீவனை விட்டார்
நான் யாவையும் வெறுத்தேன் என் நேச மீட்பர்க்காய்
அவர் ஒருபோதும் கைவிட மாட்டார்
லோகம் என்னை வெறுத்து சாத்தான் சோதித்தாலும்
மீட்பர் எனக்கு ஜெயம் தருவார்
அவர் பள்ளத்தாக்கின்..

**02** கர்த்தாவின் சித்தத்துக்குக் கீழ்ப்படிவேனானால்
எல்லாத் துன்பத்தையும் ஜெயிப்பேன்
எனக்கு பயமென்ன? அவர் என் பங்கானால்
என் ஆத்துமத்தின் மன்னா இவரே
ஜீவ நதிகள் பாயும் ராஜ்யத்தை சேர்கையில்
அவர் திருமுகத்தை நான் காண்பேன்
அவர் பள்ளத்தாக்கின்..

## 17. அன்பே பிரதானம்

அன்பே பிரதானம் – சகோதர
அன்பே பிரதானம்

**01** பண்புறு ஞானம் பரம நம்பிக்கை
இன்ப விஸ்வாசம் இவைகளி லெல்லாம்
அன்பே பிரதானம்..

**02** பலபல பாஷை படித்தறிந்தாலும்
கலகல வென்னும் கைம்மணியாமே
அன்பே பிரதானம்..

**03** என் பொருள் யாவும் ஈந்தளித்தாலும்
அன்பில்லையானால் அதிற் பயனில்லை
அன்பே பிரதானம்..

04 துணிவுட னுடலைச் சுடக்கொடுத்தாலும்
பணிய அன்பில்லால் பயனதிலில்லை
அன்பே பிரதானம்..

05 சாந்தமும் தயவும் சகல நற்குணமும்
போன்ற சத்தியமும் பொறுமையுமுள்ள
அன்பே பிரதானம்..

06 புகழிறு மாப்பு பொழிவு பொறாமை
பகை அநியாயப் பாவமுஞ்செய்யா
அன்பே பிரதானம்..

07 சினமடையாது தீங்கு முன்னாது
தினமழியாது தீமை செய்யாது
அன்பே பிரதானம்..

08 சகலமுந் தாங்கும் சகலமும் நம்பும்
மிகைபட வென்றும் மேன்மை பெற்றோங்கும்
அன்பே பிரதானம்..

## 18. அடைக்கலமே உமதடிமை நானே

அடைக்கலமே உமதடிமை நானே
ஆர்ப்பரிப்பேனே அகமகிழ்ந்தே
கர்த்தர் நீர் செய்த நன்மைகளையே
நித்தம் நித்தம் நான் நினைப்பேனே
ஆ.. அடைக்கலமே..

01 அளவற்ற அன்பினால் அணைப்பவரே
எண்ணற்ற நன்மையால் நிறைப்பவரே
மாசில்லாத நேசரே மகிமைப் ப்ரதாபா
பாசத்தால் உம் பாதம் பற்றிடுவேனே
ஆ.. அடைக்கலமே..

**02** கர்த்தரே உம் செய்கைகள் பெரியவைகளே
சுத்தரே உம் செயல்கள் மகத்வமானதே
நித்தியரே உம் நியாயங்கள் என்றும் நிற்குமே
பக்தரின் பேரின்ப பாக்கியமிதே
ஆ.. அடைக்கலமே..

**03** என்னை என்றும் போதித்து நடத்துபவரே
கண்ணை வைத்து ஆலோசனை சொல்லுபவரே
நடக்கும் வழிதனைக் காட்டுபவரே
நம்பி வந்தோனை க்ருபை சூழ்ந்துகொள்ளுமே
ஆ.. அடைக்கலமே..

## 19. அதிகாலையில் உமைத் தேடுவேன்

அதிகாலையில் உமைத் தேடுவேன் முழுமனதாலே
தேவாசீர் வாதம் பெற நாடுவேன் ஜெபதபத்தாலே

இதுகாறும் காத்த தந்தை நீரே
இனிமேலும் காத்தருள் செய்வீரே
பதிவாக உம்மிலே நான் நிலைக்கவே
பத்திரமாய் எனை உத்தமனாக்கிடும் தேவே
அதிகாலையில்..

**01** போன ரா முழுவதும் பாதுகாத்தருளின போதா – எப்
போதும் எங்களுடனிருப்பதாய் உரைத்த நல் நாதா
ஈன பாவிக் கேது துணை லோகிலுண்டு பொற்பாதா
எனக்கான ஈசனே வான ராசனே
இந்த நாளிலும் ஒரு பந்தமில்லாமல் காரும் நீதா
அதிகாலையில்..

**02** பல சோதனைகளால் சூழ்ந்துநான் கலங்கிடும்போது – தப்
பாது நின்கிருபை தாங்கிட வேணும் அப்போது
விலகாது என்சமூகம் என்ற வாக்கில் தவறேது
விசுவாசங்கொண்டு மெய்ப் பாசமூண்டிட
விக்கினம் யாவிலும் வெற்றிக் காணுவேன் மலைவேது?
அதிகாலையில்..

**03** நரர் யாவர்க்குமுற்ற நண்பனாய் நடந்திட வையே – தீ
நாவின் பாவமற நன்மைகள் மொழிந்திடச் செய்யே
பரலோக ஆவியைநல் மாரி போலெனிலே பெய்யே
புகழான நாதனே வேத போதனே
பூரணமாய் உனைப் போற்றுவேன், தினந் தினம் மெய்யே
அதிகாலையில்..

## 20. ஆத்துமமே என் முழு உள்ளமே

ஆத்துமமே என் முழு உள்ளமே – உன்
ஆண்டவரைத் தொழுதேத்து – இந்நாள்வரை
அன்பு வைத்தா தரித்த உன்
ஆண்டவரைத் தொழுதேத்து

**01** போற்றிடும் வானோர் பூதலத்துள்ளோர்
சாற்றுதற்கரிய தன்மையுள்ள – 2
ஆத்துமமே என்..

**02** தலைமுறை தலைமுறை தாங்கும் வினோத
உலகமுன் தோன்றி ஒழியாத – 2
ஆத்துமமே என்..

**03** தினம் தினம் உலகில் நீ செய் பலவான
வினை பொறுத்தருளும் மேலான 2
ஆத்துமமே என்..

**04** வாதை நோய் துன்பம் மாற்றி அனந்த
ஓதரும் தயை செய் உயிர் தந்த – 2
ஆத்துமமே என்..

**05** உற்றுனக் கிரங்கி உரிமை பாராட்டும்
முற்றும் கிருபையினால் முடி சூட்டும் – 2
ஆத்துமமே என்..

**06** துதி மிகுந்தேற ஸ்தோத்தரி தினமே
இதயமே உள்ளமே என் மனமே – 2
ஆத்துமமே என்..

## 21. ஆசீர்வாதம் நிறைத்தே

**01** ஆசீர்வாதம் நிறைத்தே
அனுப்புவீர் தேவா
அடியார்க்கு நீ யல்லால்
வேறாருண்டு யோவா
மாசேது மற்ற மன்னா
வழி நடத்துவீர்
மங்கா துன்னிஷ்டம் செய்ய
வல்லமை தருவீர்

**02** கூடியிருந்து தாங்க
உன் தஞ்சமே ஐயா
கோவேயுன் பாதம் எங்கள்

சகலமு மெய்யா
நாடியுன் துதி எங்கும்
நாட்டுவோ முமக்கு
எந்நாளும் கனம் மகிமை
உண்டாகவே ஆமென்

## 22. ஆனந்த துதி ஒலி கேட்கும்

ஆனந்த துதி ஒலி கேட்கும்
ஆடல் பாடல் சத்தமும் தொனிக்கும்
ஆகாய விண்மீனாய் அவர் ஜனம் பெருகும்
ஆண்டவர் வாக்கு பலிக்கும் – ஆ.. ஆ.. – 2

**01** மகிமைப்படுத்து வேனென்றாரே
மகிபனின் பாசம் பெரிதே
மங்காத புகழுடன் வாழ்வோம்
மாட்சி பெற்றுயர்ந்திடுவோமே
குறுகிட மாட்டோம் குன்றிட மாட்டோம்
கறையில்லா தேவனின் வாக்கு – ஆ.. ஆ.. – 2

ஆனந்த துதி..

**02** ஆறாத காயங்கள் ஆறும்
ஆரோக்கியம் வாழ்வினில் மூடும்
ஆற்றியே தேற்றும் நல்நாதர்
போற்றியே பாதம் பணிவோம்
அனாதி தேவனே அடைக்கலம் பாரினில்
அனாதையாவதே இல்லை – ஆ.. ஆ.. – 2

ஆனந்த துதி..

**03** பார்போற்றும் தேவன் நம் தேவன்
பாரினில் வேறில்லை பாக்கியம்
நீர் எந்தன் ஜனங்கள் என்றாரே
வேறென்ன வாழ்வினில் வேண்டும்
பிள்ளைகளும் சபையும்
பிதா முன்னே நிலைக்கும்
பரிசுத்த ராஜ்ஜியம் (எழும்பும்) நிலைக்கும் – ஆ.. ஆ.. – 2
ஆனந்த துதி..

## 23. ஆனந்தமாய் இன்பக் கானான்

ஆனந்தமாய் இன்பக் கானான் ஏகிடுவேன்
தூய பிதாவின் முகம் தரிசிப்பேன் – 2
நாளுக்கு நாள் அற்புதமாய் என்னைத் தாங்கிடும்
நாதன் இயேசு என்னோடிருப்பார் – 2
ஆனந்தமாய்..

**01** சேற்றினின்றென்னைத் தூக்கியெடுத்து
மாற்றி உள்ளம் புதிதாக்கினாரே – 2
கல்லான என் உள்ளம் உருக்கின கல்வாரியை
கண்டு நன்றியுடன் பாடிடுவேன் – 2
ஆனந்தமாய்..

**02** வாலிப நாளில் இயேசுவைக் கண்டேன்
வாஞ்சையுடன் என்னைத் தேடிவந்தார் – 2
எதற்குமே உதவா என்னையும் கண்டெடுத்தார்
இயேசுவின் அன்பை நான் என் சொல்லுவேன் – 2
ஆனந்தமாய்..

**03** தேவன் சித்தம் செய்திட நித்தம்
தத்தம் செய்தே என்னை அர்ப்பணித்தேன் – 2
இயேசு அல்லா ஆசை இப்பூமியில் வேறே இல்லை
என்றும் எனக்கவர் ஆதரவே – 2

ஆனந்தமாய்..

**04** உம்மைப் பின்சென்று ஊழியம் செய்து
உம் பாதம் சேர்ந்திட வாஞ்சிக்கிறேன் – 2
தாரும் தேவா ஏழைக்கு மாறாத உம்கிருபை
கண்பாரும் என்றும் நான் உம் அடிமை – 2

ஆனந்தமாய்..

## 24. ஆனந்தமாய் நாமே போற்றிடுவோமே

ஆனந்தமாய் நாமே போற்றிடுவோமே
அருமையாய் இயேசு நமக்களித்த
அளவில்லாக் கிருபை பெரிதல்லவோ
அனுதின ஜீவியத்தில்

**01** ஆத்துமமே என் முழு உள்ளமே
உன் அற்புத தேவனையே ஸ்தோத்தரி
பொங்கிடுதே என் உள்ளத்திலே
பேரன்பின் பெருவெள்ளமே – அல்லேலூயா

**02** கருணையாய் இதுவரை கைவிடாமலே
கண்மணிபோல் எம்மைக் காத்தாரே
கவலைகள் போக்கி கண்ணீர் துடைத்தார்
கருத்துடன் பாடிடுவோம்

**03** பரிசுத்தவான்களின் பாடுகளெல்லாம்
அதி சீக்கிரத்தில் முடிகிறதே
விழிப்புடன் கூடி தரித்திருப்போம்
விரைந்தவர் அங்கமாகுவோம்

## 25. ஆண்டவரின் நாமமதை

ஆண்டவரின் நாமமதை ஈண்டு போற்றுவேன் அவர்
ஆளுகையின் நீதி அன்பின் வாழி சாற்றுவேன் – 2

**01** உத்தம வழியில் நிதம் புத்தி கொள்ளுவேன் – மன
உண்மையுடன் வாழ்ந்து தீய கன்மம் தள்ளுவேன் – 2

**02** கெட்ட விஷயங்கள் என்னை ஒட்டுவதில்லை – மதி
கேடரின் புரளிகளும் கிட்டுவதில்லை – 2

**03** வஞ்சகங்களை உகக்கும் நெஞ்சை நீக்குவேன் – பொல்லா
மார்க்கங்களிலே நடக்கும் தீர்க்கம் போக்குவேன் – 2

**04** மற்றவனை யேசி வாயால் குற்றங்கள் செய்யும் – துஷ்ட
மாந்தர் மேலே பற்றாமலென் பாந்தவம் நையும் – 2

**05** பொய்யர்களை என்னுடனே உய்ய ஒட்டேனே – மகா
புரளிசெய்யும் எத்தர்களின் திரளில் கிட்டேனே – 2

**06** சீருடையோர் பேரில் அன்பு கூருவேனே – நல்ல
சீரொழுகு சான்றோர் தயை சேருவேனே 2

## 26. ஆயிர வருட அரசாட்சியே

ஆயிர வருட அரசாட்சியே
பரிசுத்தவான்களின் இராஜ்ஜியமே
பரம பிதா வேத வாக்கிதே
பசுமை பொற்காலம் நெருங்கிடுதே

**01** பசுவும் கரடியும் கூடிமேயுமே
புலியும் வெள்ளாடும் படுத்திருக்கும் – 2
ஒருமித்து நடக்கும் காளையும் சிங்கமும்
ஒரு சிறு பையனே நடத்திடுவான் – 2

ஆயிர வருட..

**02** இடுக்கண்கள் தீங்கும் இளைப்பார் இல்லை
இகத்தில் கர்த்தாவின் மகிமை தங்கும் – 2
குழந்தையின் கரங்கள் பாம்பின் மண் புதரில்
களங்கம் பயமின்றி விளையாடுமே – 2

ஆயிர வருட..

**03** வறண்ட நிலங்களும் செழித்தோங்குமே
விருட்சங்கள் இனிய கனி தருமே – 2
அமைதியும் நிலவும் சுக வாழ்வு துளிர்க்கும்
அற்பாயுசுள்ளோர்கள் அதில் இல்லையே – 2

ஆயிர வருட..

**04** கிறிஸ்தேசு ராஜா புவி ஆள்கிறார்
கிடைக்கும் நல் நீதி எளியவர்க்கே – 2
பரிபூர்ணமடைந்த மெய் தூய பக்தர்கள்
பரனோடு நீடுழி அரசாளவே – 2

ஆயிர வருட..

# 27. ஆராதனை ஆராதனை

ஆராதனை – 4
ஆராதனை துதி ஆராதனை – 4
துதிக்கின்றோம் தூயவரே
துதிக்கின்றோம் துணையாளரே
தோத்திரங்கள் உமக்குக் கோடி கோடிகள்
உம்மை நாங்கள் துதிக்கின்ற வானம்பாடிகள் – 2

ஆராதனை..

**01** குளமாக நானும் தேங்கிக் கிடந்தேனே
நதியாக என்னை நடக்க வைத்தீரே
விறகாக நானும் காய்ந்து கிடந்தேனே
வீணையாக என்னை இசைத்து விட்டீரே
கல்வாரி இரத்தம் எனக்காக சிந்திக்
கழுவி எடுத்தவரே – என்
காயங்கள் துடைத்தவரே

துதிக்கின்றோம்..

**02** உளையான சேற்றில் உழன்று கிடந்தேனே
உயிரோடு என்னை உருவி எடுத்தீரே
திரியாக நானும் கருகி கிடந்தேனே
ஒளியேற்றி என்னை உருமாற்றினீரே
பாவங்கள் நீக்கி சாபங்கள் போக்கி
பரிசுத்தம் தந்தவரே – என்னை
பாசத்தால் வென்றவரே

துதிக்கின்றோம்..

# 28. ஆராதனைத் துதி ஸ்தோத்திரப்

ஆராதனைத் துதி ஸ்தோத்திரப் பாத்திரரே
ஆதியந்தம் இல்லாத் தூயவரே 2
உந்தன் சந்நிதியில்
அர்ப்பணிக்கும் எந்தன் காணிக்கை – 2
அன்றாடம் நாங்கள் செய்யும்
ஆராதனை ஆராதனை தேவா ஆராதனை
ஆராதனை ஆராதனை நாதா ஆராதனை

**01** கர்த்தரின் உருவினில் கண்டேனே நான்
தேவனே உம் அன்பின் ஆழம் – 2
எனை ஜீவ பலியாக படைத்தேனே நான்
இப் பலிபீடத்தில் என்றும் – 2
ஆண்டவர் மூலம் நான் செய்யும்
ஆராதனை ஆராதனை தேவா ஆராதனை
ஆராதனை ஆராதனை நாதா ஆராதனை

**02** இந்நிமிடம் உமக்களித்திடவே
கையில் ஒன்றும் இல்லை தேவா – 2
பாவங்களும் என் குற்றங்களும்
உம்மண்டை வைக்கின்றேன் தேவா – 2
ஆண்டவர் மூலம் நான் செய்யும்
ஆராதனை ஆராதனை தேவா ஆராதனை
ஆராதனை ஆராதனை புத்தியுள்ள ஆராதனை
ஆராதனை..

## 29. ஆழமாம் பிரதிஷ்டை

ஆழமாம் பிரதிஷ்டை செய்துகொண்டு
தோழராம் இயேசுவை சார்ந்துகொண்டு
பாழான லோகத்தை விட்டுவிட்டு
வாழவே செய்கின்றேன் பரமவீட்டில்
ப்ரதிஷ்டையை யான் புதுப்பிக்கிறேன்
கிறிஸ்தேசுவில் தினம் ஜீவிக்கவே
ப்ரதிஷ்டையின் ஆழம் சிலுவைதானே
இயேசுவை பின்செல்லுவேன்

**01** கீலோக இன்பங்கள் ஒன்றும்வேண்டாம்
மேலோக இன்பமே என் வாஞ்சையாம்
கீழ்லோகில் என்காலம் பறந்திடவே
மேலோகில் பொற்காலம் வாழ்ந்திடவே
ப்ரதிஷ்டையை யான்..

**02** பாவங்கள் யாதொன்றும் செய்யாமலே
பரிசுத்தமாய் எந்தன் பாதை செல்வேன்
கறைகள் என் ஆத்மாவில் ஒட்டவிடீர்
குறைகளை ஒழித்தே நீர் முன்னால் செல்வீர்
ப்ரதிஷ்டையை யான்..

**03** மூடரின் நெஞ்சில் எழும்பும் கோபம்
ஏழையென் நெஞ்சில் எழும்பாமலே
மூடரை போலவே கோபம் கொள்ளேன்
நாடுவேன் இயேசுவின் சாந்தமதை
ப்ரதிஷ்டையை யான்..

**04** கொள்ளேனே பொறாமையால் ஒருவர்மேலும்
நினைப்பேன் என் உள்ளத்தை அன்பினாலே

விரும்புவேன் பிறர் வாழ்வை சந்தோஷமாய்
இயேசு என் நேசரின் மகிமைக்காக
ப்ரதிஷ்டையை யான்..

**05** விரோதங்கள் மனதிலும் கொள்ளாமலே
தீமையை சகிப்பேனே திருவருளால்
சகோதரர் என்னதான் செய்திட்டாலும்
உள்ளத்தில் அவர்களை நேசிக்கவே
ப்ரதிஷ்டையை யான்..

**06** உத்தமர் என் இயேசு ஜீவித்தார் போல்
அத்தனை ஜீவிக்க வாஞ்சிக்கிறேன்
கர்த்தரே கருணைசெய் கிருபைகூர்ந்து
ஸ்தோத்திரம் பாடுவேன் இன்றும் என்றும்
ப்ரதிஷ்டையை யான்..

## 30. ஆதாரம் நீர் தான் ஐயா

ஆதாரம் நீர் தான் ஐயா, என் துரையே
ஆதாரம் நீர் தான் ஐயா – 2
சூதாம் உலகில் நான் தீதால் மயங்கையில் – 2
ஆதாரம் நீர்..

**01** மாதா பிதாவெனைத் தீதாய் மதிக்கையில் – 2
மற்றோர்க்கு பற்றேதையா எளியன் மேல்
மற்றோர்க்கு பற்றேதையா எளியனுக்கு
ஆதாரம் நீர்..

**02** நாம் நாம் துணையென நயந்துரை சொன்னவர் – 2
நட்டாற்றில் விட்டாரையா தனியனை
நட்டாற்றில் விட்டாரையா தனியனுக்கு
ஆதாரம் நீர்..

**03** சோதனை யடர்ந்து வேதனை தொடர்ந்து – 2
துக்கம் மிகுவேளையில் என் சுகிர்தமே
துக்கம் மிகுவேளையில் உன் தாசனுக்கு
ஆதாரம் நீர்..

## 31. ஆ கர்த்தாவே தாழ்மையாக

ஆ கர்த்தாவே தாழ்மையாக
திருப்பாதத் தண்டையே
தெண்டனிட ஆவலாக
வந்தேன் நல்ல இயேசுவே

உம்மை நாடி உம்மைத் தேடி
தரிசிக்கவே வந்தேன் – 2

**01** பாவந் தீர்க்கும் பலியான
சுத்த ஆட்டுக்குட்டியே
நீரே திருச்சபைக்கான
ஞான மணவாளனே
உம்மை நாடி..

**02** என் பிரார்த்தனையைக் கேளும்
அந்தியந்தம் பணிந்தே
கெஞ்சும் என்னை ஏற்றுக்கொள்ளும்
நான் உம் சொந்தம் ஆவேனே
உம்மை நாடி..

**03** பாவமுள்ள என்னை நோக்கும்
பாவமில்லா மைந்தனே
உம் சரீர அங்கமாக்கி
மணவாட்டியாகவே

உம்மை நாடி..

## 32. ஆ, வானம் பூமி யாவையும்

ஆ, வானம் பூமி யாவையும்
உண்டாக்கி ஆளும், எகோவே
உம் மேன்மை ஞானம் சத்தியம்
எல்லைக்கு அடங்காததே

**01** இவ்வீட்டில் நாங்கள் வசித்து
இடைவிடாமல் ஜெபிப்போம்
உம் திவ்ய நாமம் துதித்து
கொண்டாடித் தாழ்ந்து சேவிப்போம்

**02** இங்கே இருக்கும் நாள் மட்டும்
உற்சாகத்தோடு உமக்கே
அடங்கி நாங்கள் நடக்கும்
குணத்தைத் தாரும் தேவனே

**03** இகத்திலும் பரத்திலும்
செங்கோல் செலுத்தும் பரனே
உமக்குச் சதா காலமும்
துதி உண்டாவதாகவே

# 33. ஆதிமுதல் எகோவா தேவன்

ஆதிமுதல் எகோவா தேவன் தமது திட்டங்களையே
மறைபொருளாக வைத்து வைத்தார்
இந்நாளில் வெளிப்படவே
முன்னோர்கள் உவமையில் கூறினாலும் – 2
கருத்தினை அறிந்திடரே – 2

**01** திருமறை மூலம் மறைபொருளை
ஆவியினால் தெளிவாக்கினார் – 2
அவர் வழி வந்தோர் அறியும்படியாய்
குமாரன் மூலம் தெளிவாக்கினார் – 2
ஆதிமுதல் எகோவா..

**02** மகிமை அடைந்தார் இயேசுகிறிஸ்து
என்பதே அந்த இரகசியமாம் – 2
அவர் வழி வந்த சிறு மந்தையும்
மகிமை அடைவதும் இரகசியமாம் – 2
ஆதிமுதல் எகோவா..

**03** கிறிஸ்து சபைக்கு தலை என்பதே
தேவனின் மாபெரும் இரகசியமே – 2
எகோவா தேவன் இவ்விருவருக்கும்
தலையாய் இருப்பதும் இரகசியமே – 2
ஆதிமுதல் எகோவா..

## 34. இயேசுவே உம் நாமத்தினால்

இயேசுவே உம் நாமத்தினால்
இன்பமுண்டு யாவருக்கும்
நன்றியுள்ள இதயத்துடன்
கூடினோம் இந்நன்னாளிலே
எங்கள் தேவனே எங்கள் ராஜனே
என்றும் உம்மையே சேவிப்போம்
நன்றியுள்ள சாட்சியாக
உமக்கென்றும் ஜீவிப்போம்

**01** நிலையில்லா இவ்வுலகில்
நெறி தவறி நாம் அலைந்தோம்
நின்னொளி பிரகாசித்திட
நித்திய ஜீவன் கண்டடைவோம்
எங்கள் தேவனே..

**02** பொன்னை நாடி மண்ணையடைந்தோம்
புகழ் தேடி ஏமாற்றங் கொண்டோம்
விண்ணை நோக்கி ஜெயம் பெற்றோம்
இயேசுவின் தரிசனத்தால்
எங்கள் தேவனே..

**03** இயேசுவை நாம் பின் செல்லுவோம்
உலகை என்றும் வெறுப்போம்
துன்ப பாதை சென்றிடுவோம்
என்றும் அவரின் பெலத்தால்
எங்கள் தேவனே..

**04** **உன்னைக் கண்டழைக்கும் சத்தத்தை**
**கேட்டாயோ ஓ! பாவியே**
**இன்றும் இயேசுவண்டை வாராயோ**
**நித்திய ஜீவன் பெற்றிடவே**
**எங்கள் தேவனே..**

## 35. இயேசுவை நம்பிப் பற்றிக்

இயேசுவை நம்பிப் பற்றிக் கொண்டேன்
மாட்சிமையான மீட்பைப் பெற்றேன்
தேவகுமாரன் இரட்சை செய்தார்
பாவியாம் என்னை ஏற்றுக் கொண்டார்

இயேசுவைப் பாடிப் போற்றுகிறேன்
நேசரைப் பார்த்துப் பூரிக்கிறேன்
மீட்பரை நம்பி நேசிக்கிறேன்
நீடுழி காலம் ஸ்தோத்தரிப்பேன்

**01** அன்பு பாராட்டிக் காப்பவராய்
எந்தனைத் தாங்கி பூரணமாய்
இன்பமும் நித்தம் ஊட்டுகிறார்
இன்னும் நீங்காமல் பாதுகாப்பார்
இயேசுவைப் பாடிப்..

**02** மெய் சமாதானம் ரம்மியமும்
தூய தேவாவி வல்லமையும்
புண்ணிய நாதர் தந்துவிட்டார்
விண்ணிலும் சேர்ந்து வாழச் செய்வார்
இயேசுவைப் பாடிப்..

## 36. இயேசுவின் நாமமே திருநாமம்

இயேசுவின் நாமமே திருநாமம் – முழு
இருதயத்தால் தொழுவோம் நாமும்
இயேசுவின் நாமமே திருநாமம் – முழு
இருதயத்தால் தொழுவோம் நாமும்

**01** இத்தரையில் மெத்தவதிசய நாமம் – அதை
நித்தமுந் தொழுபவர்க்கு ஜெய நாமம் – 2
இயேசுவின் நாமமே..

**02** உத்தம மகிமைப் பிரசித்த நாமம் – இது
சத்திய விதேய மனமொத்த நாமம் – 2
இயேசுவின் நாமமே..

**03** விண்ணவரும் பண்ணுடன் கொண்டாடும் நாமம் – நம்மை
அண்டிடும் பேய் பயந்தோடும் தேவ நாமம் – 2
இயேசுவின் நாமமே..

## 37. இயேசுவின் சிந்தையை தரிப்போம்

இயேசுவின் சிந்தையை தரிப்போம்
நேசமோடவர் அன்பில் களிப்போம்
இயேசுவின் சிந்தையை தரிப்போம்

**01** சுத்த இதயத்தை சுதந்தரமாக்கி
நித்திய வாழ்வதை நினைவதில் ஆக்கி
சத்திய வேதம் சர்வாயுத மாக்கி
கர்த்தரை பார்த்து நடப்போம்
இயேசுவின் சிந்தையை..

**02** கஷ்டங்கள் எல்லாம் கர்த்தருக்காக
நஷ்டம் என்றே உணராதவராக
கனம் மகிமை உண்டு பண்ணுதற்காக
மனம் மடிவின்றி நடப்போம்

இயேசுவின் சிந்தையை..

**03** பொறுமை இல்லாதவர் முறுமுறுத்தாலும்
உரிமை இல்லையென வெறுத்துவிட்டாலும்
சிலுவையின் பாடுகள் சகித்தவர்போல
சினமடையாது நடப்போம்

இயேசுவின் சிந்தையை..

**04** கள்ள சகோதரர் கலக்கிடும்போதும்
சொல்லாதவைகளை சுமத்திடும் போதும்
அல்லலின்மேல் அல்லல் அடுக்கிடும் போதும்
சொல் தவறாமல் நடப்போம்

இயேசுவின் சிந்தையை..

**05** பதிலுக்கு பதில் செய்யாமல் இருந்து
நிந்திப்பவர்க்காய் தினமும் ஜெபித்து
சபித்திடும் சத்ருக்களை ஆசீர்வதித்து
பிதாவை போல் ஆகக்கடவோம்

இயேசுவின் சிந்தையை..

**06** மூல உபதேசங்களை கடந்து
உலகத்தின் வேஷத்தை மனமுவந் தறுத்து
நலமென காண்பதை நாள்தோறும்
உணர்ந்து பூரணராகக்கடவோம்

இயேசுவின் சிந்தையை..

## 38. இயேசு கற்பித்தார் ஒளி வீசவே

இயேசு கற்பித்தார் ஒளி வீசவே
சிறு தீபம் போல இருள் நீங்கவே
அந்தகார லோகில் ஒளிவீசுவோம்
அங்கும் இங்கும் எங்கும் ப்ரகாசிப்போம்

**01** முதல் அவர்க்காய் ஒளி வீசுவோம்
ஒளி மங்கிடாமல் காத்துக்கொள்ளுவோம்
ஏசு நோக்கிப் பார்க்க ஒளிவீசுவோம்
அங்கும் இங்கும் எங்கும் ப்ரகாசிப்போம்

**02** பிறர் நன்மைக்காய் ஒளி வீசுவோம்
உலகின் மாஇருள் நீக்க முயல்வோம்
பாவம் சாபம் யாவும் பறந்தோடிப்போம்
அங்கும் இங்கும் எங்கும் ப்ரகாசிப்போம்

**03** சிறு மந்தையாய் ஒளி வீசுவோம்
தேவ சுதன்போல சாயலடைவோம்
தேவ தயவாலே ஜெயங்கொள்ளுவோம்
அங்கும் இங்கும் எங்கும் ப்ரகாசிப்போம்

## 39. இயேசுவே உம்மைப்போல் ஆக

இயேசுவே உம்மைப்போலாக
வாஞ்சிக்குதே என் உள்ளம் – 2
என்னை ஜீவபலியாக முற்றும் படைத்துவிட்டேன்
என்னை ஏற்றுக்கொள்ளும் நாதனே – 2

01 பாவம் அறியாது பாவமே செய்யாது
பாரினில் ஜீவித்தீரே 2
பரிசுத்தர் உம்மைப்போல் ஜீவிக்கவே
பெலமதைத் தாரும் ஐயா – உந்தன்
பெலமதைத் தாரும் ஐயா – 2

இயேசுவே உம்மை..

02 உபத்திரவமுண்டு உலகினிலே – என்று
உலகத்தை வென்றேன் என்றீர் – 2
உம்மைப்போல உலகினை ஜெயித்திடவே
பெலமதைத் தாரும் ஐயா – உந்தன்
பெலமதைத் தாரும் ஐயா

இயேசுவே உம்மை..

03 தலை சாய்க்க ஸ்தலமில்லை தரணியில் உறவில்லை
நிலையில்லா பூவில் – என்றீர் – 2
நானும் உம்மைப்போல தியாகம் செய்ய
பெலமதைத் தாரும் ஐயா – உந்தன்
பெலமதைத் தாரும் ஐயா

இயேசுவே உம்மை..

## 40. இயேசுகிறிஸ்துவின் அன்பு

இயேசு கிறிஸ்துவின் அன்பு என்றும் மாறாதது
இயேசு கிறிஸ்துவின் மாறாக் கிருபை
என்றும் குறையாதது – 2
இயேசு கிறிஸ்துவின் அன்பு

**01** பாவி என்றுன்னை அவர் தள்ளவே மாட்டார்
ஆவலாய் உன்னை இயேசு அழைக்கின்றாரே
தயங்கிடாதே தாவி ஓடிவா
தயாளன் இயேசுவின் சொந்தம் கொள்ளவா – 2
இயேசு கிறிஸ்துவின்..

**02** உன் மீறுதலுக்காய் இயேசு காயங்கள் பட்டார்
உன் அக்கிரமங்கட்காய் அவர் நொறுக்கப்பட்டார்
உனக்காகவே அவர் அடிகள் பட்டார்
உன்னை உயர்த்த தன்னைத் தாழ்த்தினார் – 2
இயேசு கிறிஸ்துவின்..

**03** கள்ளர் மத்தியில் ஒரு கள்ளனைப்போல
குற்ற மற்ற கிறிஸ்தேசு தொங்கினாரே – 2
பார் உனக்காய் அவர் கரங்கள்
பாரச் சிலுவை சுமந்தேறுதே – 2
இயேசு கிறிஸ்துவின்..

## 41. இரட்சா பெருமானே பாரும்

இரட்சா பெருமானே பாரும்
புண்ணிய பாதம் அண்டினோம்
சுத்தமாக்கிச் சீரைத் தாரும்
தேடி வந்து நிற்கிறோம்
ஏசுநாதா ஏசுநாதா உந்தன் சொந்தமாயினோம் – 2

**01** மேய்ப்பன் போல முந்திச் சென்றும்
பாதுகாத்தும் வருவீர்
ஜீவத் தண்ணீரண்டை என்றும்
இளைப்பாறச் செய்கிறீர்
ஏசுநாதா ஏசுநாதா நித்தம் போஷிப்பிக்கிறீர் – 2

**02** நீதி பாதை தவறாமல்
நேசமாய் நடத்துவீர்
மோசம் பயமுமில்லாமல்
தங்கச்செய்து தாங்குவீர்
ஏசுநாதா ஏசுநாதா ஒருபோதும் கைவிடீர் – 2

**03** ஜீவ கால பரியந்தம்
மேய்த்தும் காத்தும் வருவீர்
பின்பு திவ்ய பேரானந்தம்
தந்து வாழச் செய்குவீர்
ஏசுநாதா ஏசுநாதா ஊழி காலம் வாழ்விப்பீர் – 2

## 42. இரத்தம் இயேசு இரத்தம்

இரத்தம் இயேசு இரத்தம்
எல்லா பாவ அழுக்கையும் கழுவுமே
இரத்தம் இயேசு இரத்தம்
சபை அவையங்களை பரிசுத்தம் செய்யும்

**01** ஆதிகாலத்து வியாதி யாவும்
அற்புதமாய் சொஸ்தப்படுத்தியவர்
ஆத்தும வியாதியை நீக்குமையா
ஆத்ம நாயகா இயேசைய்யா – 2

இரத்தம் இயேசு..

**02** வியாதி நேரத்தில் பரிகாரி நீரே
பரம ஔஷதம் நீர்தானய்யா – 2
பாவத்தின் பிடியில் விடுதலை உண்டு
மாறாத உம் இரத்தம் வல்லமைய்யா – 2

இரத்தம் இயேசு..

**03** ஐந்து காயங்கள் ஆறாக ஓட
இரத்த வெள்ளம் சொரிந்தீரைய்யா – 2
பாவியாம் என்னை மன்னியும் என்று
கெஞ்சும் இந்த வேளையிலே – 2

இரத்தம் இயேசு..

**04** வெள்ளி அல்ல பொன்னும் அல்ல
விலையாக சிலுவையில் உம்மைக் கொடுத்தீர் – 2
விலையேறிய இரத்தம் எனக்காய் ஈந்து
சொந்தமாக என்னை கொண்டீர் – 2

இரத்தம் இயேசு..

## 43. இலேசான காரியம்

இலேசான காரியம் – எதுவும்
இலேசான காரியம் – 2
பெலமுள்ளவன் பெலனற்றவன்
பெலமுள்ளவன் பெலனில்லாதவன்

யாராயிருந்தாலும் உதவிகள் செய்வது
இலேசான காரியம் உமக்கது இலேசான காரியம்

**01** மண்ணைப் பிசைந்து மனிதனை படைப்பது
இலேசான காரியம் – 2
மண்ணான மனிதர்க்கு மன்னாவை தருவதும்
இலேசான காரியம் – 2

உமக்கது இலேசான காரியம்

**02** பெருமழை பெய்தும் பேழையை காப்பது
இலேசான காரியம் – 2

பெருங்கடல் பிளந்து பாதையை வகுப்பதும்
இலேசான காரியம் – 2
உமக்கது இலேசான காரியம்

**03** கூழாங்கல்லாலே கோலியாத் வீழ்ந்தது
இலேசான காரியம் – 2
ஆழ்கடல் மீன் அதில் வரிப்பணம் பெறுவதும்
இலேசான காரியம் – 2
உமக்கது இலேசான காரியம்

**04** கற்பாறை போலே கடல்மேல் நடப்பதும்
இலேசான காரியம் – 2
கற்சாடி நீரை கனிரசமாக்குதல்
இலேசான காரியம் 2
இயேசுவுக்கு இலேசான காரியம்

## 44. இஸ்ரயேல் என் ஜனமே என்றும்

இஸ்ரயேல் என் ஜனமே என்றும்
இடறிட வேண்டாம்
யேகோவா உன் தெய்வமானார்
ஏதும் பயம் வேண்டாம் – 2

**01** ஓங்கும் புயமும் பலத்த கரமும்
உன் பக்கமேயுண்டு – 2
தாங்கும் கிருபை தயவு இரக்கம்
தாராளமாயுண்டு – 2
இஸ்ரயேல் என்..

**02** பார்வோன் கைக்கு விலக்கி மீட்ட
பஸ்கா ஆட்டுக்குட்டி – 2
ஆரோன் மோசே என்னும்
நல்ல ஆசாரியர் உண்டு – 2

இஸ்ரயேல் என்..

**03** செங்கடலில் வழி திறந்த
சீயோன் நாயகனே – 2
பங்கமின்றி பாலைவனத்தில்
பராமரித்தாரே – 2

இஸ்ரயேல் என்..

**04** சத்துருக்களை சிதறடித்த
சர்வவல்ல தேவன் – 2
யுத்தத்தில் உன் முன்னே
நின்று ஜெயமளித்தாரே – 2

இஸ்ரயேல் என்..

**05** பயப்படாதே சிறு மந்தையே
பார் நான் உன் மேய்ப்பன் – 2
திகையாதே மனம் கலங்காதே
உன் தேவன் தினம் காப்பேன் – 2

இஸ்ரயேல் என்..

## 45. இஸ்ரயேல் தேசிய கீதம்

யூதனின் இதயத்தின் ஆழத்தில்
அவன் ஆத்தும ஏக்கம் சீயோனுக்கே
அவன் கண்கள் தூர கிழக்கினிலே
சீயோனை நோக்கியே இருக்கும்

**01** எங்கள் நம்பிக்கை மரித்திடவில்லை
எங்கள் மண்ணில் சுதந்திரதேசமடைவோம்
ஈராயிரம் ஆண்டு கால நம்பிக்கை
ஒருநாள் மீண்டும் திரும்பிடுவோம்
சீயோன் தேசம் எருசலேமிற்கு
ஒருநாள் மீண்டும் திரும்பிடுவோம்
யூதனின் இதயத்தின்..

## 46. இஸ்ரயேலின் தேவனாக

இஸ்ரயேலின் தேவனாக வாழும் யாவே தெய்வம்
நித்தியமாக வாழும் ஜீவ தெய்வம்
மத்தியனாக மைந்தனைக் கொடுத்த அன்பு தெய்வம்
நித்ய ஜீவன் தந்திடும் ஓர் தெய்வம் அப்பா பிதாவே தெய்வமே
உமது இராஜ்ஜியம் வந்ததே
உமது திருச்சித்தம் பூமியில்
எங்கெங்கும் நிறைவேற வேண்டுமே

**01** செங்கடலில் நீர் அன்று பாதை வகுத்தீர்
வழியில் மாந்தர்க்கு மன்னா பொழிந்தீர்
எரி வெயிலில் மேகம் நிழலானீர்
இரவில் அக்கினி ஸ்தம்பமாய்
சீனாய் மாமலை முகட்டில் நீர்
நியாயப் பிரமாணங்கள் பகிர்ந்தளித்தீர் – 2
அப்பா பிதாவே..

**02** மனிதர்க்காய்ப் பூமியில் மகனைத் தந்தீர்
மகிமையின் வாய்ப்பு சபைக்குத் தந்தீர்
சிலுவையில் அவர்தந்த ஜீவனால்
பாவமும் சாபமும் நீங்கிடவே

வழியை ஆயத்தம் செய்தவரே
வாழ்த்திடுவோம் உம்மை என்றென்றுமே – 2
அப்பா பிதாவே..

**03** மனிதர்கள் பூமியில் உயிர்த்தெழுவார்
மகிமையின் ராஜ்ஜியம் நிலைத்திடுமே
கிருபையும் சத்யமும் வெளிப்படுமே
இழந்திட்ட யாவும் கிடைத்திடுமே
சமுத்திரம் ஜலத்தினால் நிறைவது போல்
பூமியும் தேவனை அறிந்திடுமே – 2
அப்பா பிதாவே..

## 47. இதுவரை செய்த செயல்களுக்காக

இதுவரை செய்த செயல்களுக்காக
தேவனே உமக்கு ஸ்தோத்திரம்
இயேசுவின் மூலமே ஸ்தோத்திரம் – 2

**01** உவர் நிலமாக இருந்த என்னை
விளை நிலமாக மாற்றிய உம்மை – 2
அலைகடல் அலைந்து ஆ.. ஆ.. ஆ..
ஓய்கின்ற வரையில்
நாவினால் புகழ்ந்து பாடுவேன் நன்றி – 2
இதுவரை செய்த..

**02** தனிமரமாக இருந்த என்னை
கனிமரமாக மாற்றிய உம்மை – 2
திசைகளும் கோள்களும் ஆ.. ஆ.. ஆ..
அசைகின்ற வரையில்
இன்னிசை முழங்கியே பாடுவேன் நன்றி – 2
இதுவரை செய்த..

**03** உம்சித்தம் செய்திட அழைத்தவர் நீரே
சொந்தமாய் என்னையே ஏற்றுக் கொள்வீரே – 2
சோர்விலும் தாழ்விலும் ஆ.. ஆ.. ஆ..
சோதனை யாவிலும்
தாங்கினீர் தயவாய் பாடுவேன் நன்றி – 2
இதுவரை செய்த..

## 48. இதோ சகோதரர் ஒருமித்து வாசம்

இதோ சகோதரர் ஒருமித்து வாசம் செய்வது
நம் வாழ்வினில் சிறப்பானது – 2
நன்மையானது இன்பமானது
சபை வாழ்வினில் பேரழகு – 2

**01** அது ஆரோனின் தலை மீது பொழிந்து
அவனது தாடியில் வழிந்து – 2
அங்கியில் குலைந்து தொங்கலில் இழைந்து – 2
கீழ் வடிந்திடும் பரிமளம் போன்றது
இதோ சகோதரர்..

**02** அது எர்மோன் மலையதன் மேலும்,
சீயோனின் சிகரங்கள் மீதும் – 2
மெல்லெனக் கவிழ்ந்து சில்லெனக் குவிந்து – 2
தினம் படர்ந்திடும் பனியினைப்போன்றது
இதோ சகோதரர்..

**03** இன்று இனம் மொழிபொருள் நிலை கொண்டு
எத்தனை பிரிவுகள் உண்டு – 2
அன்பினில் பகிர்ந்து இன்பமாய் இணைந்து – 2
ஒன்றாய் இணைந்து வாழ்வதே இறையரசு
இதோ சகோதரர்..

# 49. இத்தரைமீதினில் வித்தகனா யெழுந்த

இத்தரைமீதினில் வித்தகனா யெழுந்த
உத்தமனே ஸ்தோத்ரம்

01 நித்தமென் னிருதயம் சுத்தமாக விளங்கச்
சித்தங்கொள்வாயென் மீது தத்தஞ் செய்தேனிப்போது
இத்தரைமீதினில்..

வானாசனத்திருந்து மனுக்குலத்தை நினைந்து
தானாமனமுவந்து தாரணியில் பிறந்து
கோனாய் விளங்கா நிற்கும் குருவேசு நாதனை நான் – 2
ஏனோ மறந்து இங்கே வீணே தவிப்பது காண்
இத்தரைமீதினில்..

02 செஞ்சோதிபோன்ற அவன் சீர்பாதத்தை எந்நாளும்
நெஞ்சாசனத்தில் வைத்து நீடுழிவாழ்த்தல் வேணும்
பஞ்சாய்ப் பறந்திடுமென் பஞ்சபாதகம் யாவும் – 2
அஞ்சேன் அஞ்சேனே தேவதஞ்சம் கண்டதே போதும்
இத்தரைமீதினில்..

03 தேனே, கனியே, என்றுந் திகட்டாத அமிர்தமே
தீயனென் மனப்புண்கள் ஆற்றிடும் அவிழ்தமே
வானே யிருந்துபுவி வந்த பெரும் பதமே – 2
மறவாது திருப்புகழ் வரைவேன் நிதம் நிதமே
இத்தரைமீதினில்..

04 கண்ணே மணியே உன்னைக் கண்டபின் விடுவேனோ
காதலாய்ப் பாவத்தில் வீண் காலம் பின் விடுவேனோ
விண்ணே உனைமறந்து வேறொன்றைத் தொடுவேனோ – 2
வேஷ மார்க்கம் நடந்து வேதனைப்படுவேனோ
இத்தரைமீதினில்..

# 50. உம்மையல்லால் வேறே நல்ல

உம்மையல்லால் வேறே நல்ல
துணை உலகில் இல்லை நாதா
யாக்கோபின் தேவன் எந்தன்
துணையதால் கலங்கிடேன் நான்!

**01** கொடும் காற்று அடித்தபோது
கடல் கொந்தளித்ததால்
தடுமாறும் சீடன் என்னை
கரம் பிடித்து தூக்கும் நாதா!! – 2

உம்மையல்லால்..

**02** பெலவீன நேரத்தில் உம்
முழுபெலனால் நிறைத்திடும்! மம்ம்...!
பலவீனனான என்னை
உம் தோளில் சுமக்கும் நாதா !! – 2

உம்மையல்லால்..

**03** ஆயிரம் பதினா யிரம் பேர் என்னை
சூழ்ந்தாலும் அஞ்சிடேன்! ஏஏன்...
என் நேசர் எந்தன் துணையே
நீர் போதும் எனக்கு நாதா!! – 2

உம்மையல்லால்..

**04** விலகாது முன்னே செல்லும்
நீர்கூடே உள்ளதால்...!
தடை யாவும் தகர்த்து ஜெயமாய்
நடத்திடுவீர் சிலுவை நாதா!! – 2

உம்மையல்லால்..

## 51. உம் அழகான கண்கள் என்னைக்

உம் அழகான கண்கள் என்னைக் கண்டதாலே
முடிந்த தென்று நினைத்த நான் உயிர் வாழ்கின்றேன் – 3

**01** யாரும் அறியாத என்னை
நன்றாய் அறிந்து
தேடி வந்த நல்ல நேசரே – 2

உம் அழகான..

**02**
தூக்கி எறியப்பட்ட என்னை
வேண்டுமென்று சொல்லி
சேர்த்துக் கொண்ட நல்ல நேசரே – 2

உம் அழகான..

**03**
ஒன்றுமில்லாத என்னை
தம் காருண்யத்தாலே
உயர்த்தி வைத்த நல்ல நேசரே – 2

உம் அழகான..

## 52. உம்மைப் பாடாத நாவும்

உம்மைப் பாடாத நாவும்
கேளாத செவியும் மகிமை இழந்ததே
பாரில் மகிமை இழந்ததே – 2
உந்தன் சித்தம் செய்ய நித்தம்
இயேசுவே நீர் என்னை ஆட்கொள்ளுமே – 2

**01** எந்தன் பாவத்தைப் போக்க பாரினில் வந்த
பரனைப் போற்றிடுவேன் – தேவ
பரனைப் போற்றிடுவேன் – 2

உந்தன் சித்தம்..

**02** இயேசு சிந்தின இரத்தம் உந்தனுக்காக
சிலுவையண்டை நீ வா – அவர்
சிலுவையண்டை நீ வா – 2

உந்தன் சித்தம்..

## 53. உம் பாதம் பணிந்தேன்

உம் பாதம் பணிந்தேன் எந்நாளும் துதியே
உம்மையன்றி யாரைப் பாடுவேன் – பிதாவே
உந்தன் அன்பு உள்ளம் பொங்குதே – 2

**01** புது எண்ணெயால் புது பெலத்தால்
புதிய கிருபை புதுக் கவியால் – 2
நிரப்பி நிதம் நடத்துகின்றீர் – 2
நூதன சாலேமில் சேர்த்திடுவீர் – 2

உம் பாதம்..

**02** நெருக்கத்திலே உம்மை அழைத்தேன்
நெருங்கி உதவி எனக்களித்தீர் – 2
திசை கெட்டெங்கும் அலைந்திடாமல் – 2
தீவிரம் வந்தென்னைத் தாங்குகின்றீர் – 2

உம் பாதம்..

**03** என் முன் செல்லும் உம் சமூகம்
எனக்கு அளிக்கும் இளைப்பாறுதல் – 2
உமது கோலும் உம் தடியும் – 2
உண்மையாய் என்னையும் தேற்றிடுமே – 2

உம் பாதம்..

## 54. உம்மண்டை தேவனே

உம்மண்டை தேவனே நான் சேரட்டும்
சிலுவை சுமந்து நடப்பேனோ
என் ஆவல் என்றுமே
உம்மண்டை தேவனே– 2 –நான் சேர்வதே

**01** தாசன் யாக்கோபைப்போல்
இராக்காலத்தில் திக்கற்று கல்லின் மேல்
தூங்குகையில் எந்தன் கனாவிலே
உம்மண்டை தேவனே – 2 –இருப்பேனே

**02** நீர் என்னை நடத்தும் பாதையெல்லாம்
விண் எட்டும் ஏணிபோல் விளங்குமாம்
தூதர்களைப் பாரேன்
உம்மண்டை தேவனே – 2 –நான் சேரவே

**03** விழித்து உம்மையே நான் துதிப்பேன்
என் துயர் கல்லை உம் வீடாக்குவேன்
என் துன்பத்தாலுமே உம்மண்டை
தேவனே– 2 –நான் சேர்வேனே

## 55. உன்னை சிருஷ்டித்தவர் உன்னை

உன்னை சிருஷ்டித்தவர் உன்னை மறப்பாரோ
உன்னை உண்டாக்கினவர் உன்னை விடுவாரோ
கலங்கிடும் மாந்தரே
கண்ணீரைத் துடைத்திடு – 2
கவலையை விட்டு விட்டுவா
இயேசுவைப் பின்பற்றி வா – 2

சிருஷ்டித்தவர் உன்னை..

01 பாவத்திலிருந்து ஜெயம் தருவார்
ஆவி பொழிந்து அணைத்திடுவார் – 2
அன்பே அவரின் வழியாகும்
இருளைப் போக்கும் ஒளியாகும் – 2

கலங்கிடும்..

02 அதிசயக் கல்வாரி சிலுவையிலே
சாபமாம் வியாதியை சுமந்து விட்டார் – 2
தழும்புகளால் நீயும் குணமாவாய்
தயவினால் வாழ்வில் சுகம் பெறுவாய் – 2

கலங்கிடும்..

03 சிலுவை சுமந்தது உனக்காக
சிந்திய இரத்தம் உனக்காக – 2
ஜீவனைக் கொடுத்ததும் உனக்காக
அத்தனையும் அது நமக்காக – 2

கலங்கிடும்..

## 56. உன்னதமானவரின்

உன்னதமானவரின் உயர் மறைவிலிருக்கிறவன்
சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்
இது பரம சிலாக்கியமே – 2

அவர் செட்டையின் கீழ் அடைக்கலம் புகவே
தம் சிறகுகளால் மூடுவார் – 2

01 தேவன் என் அடைக்கலமே
என் கோட்டையும் அரணுமவர்
அவர் சத்தியம் பரிசையும் கேடகமாம்
என் நம்பிக்கையும் அவரே – 2

அவர் செட்டையின்..

**02** இரவின் பயங்கரத்திற்கும்
பகலில் பறக்கும் அம்புக்கும்
இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும்
நான் பயப்படவே மாட்டேன் – 2
அவர் செட்டையின்..

**03** ஆயிரம் பதினாயிரம்
பேர் உன்பக்கம் விழுந்தாலும்
அது ஒரு காலத்தும்உன்னை அணுகிடாதே
நம் தேவன் உன் தாபரமே – 2
அவர் செட்டையின்..

**04** தேவன் உன் அடைக்கலமே
ஒரு பொல்லாப்பும் உன்னை சேருமோ
ஒரு வாதையும் உன் கூடாரத்தையே
அணுகாமலே காத்திடுவார் – 2
அவர் செட்டையின்..

## 57. உன்னதத்தில் தேவனுக்கு மகிமை

உன்னதத்தில் தேவனுக்கு மகிமை
உலகத்தில் எங்கும் சந்தோஷமே
சமாதானமும் சுவிசேஷமும்
இரட்சிப்பு என்னும் நல்ல செய்தியும்

**01** உந்தனின் தேவன் மகிமையோடு ஆளுகின்றாரே
எந்நாளும் களிகூர்ந்து நித்திய வாழ்வை பெற்றிடு என்று
சீயோனை நோக்கி கூறுகின்ற நற்செய்தியாளர்களின் பாதங்கள்
மலைகள் மேலே எவ்வளவாய் அழகாய் தோன்றுகின்றன
சமாதானமும்..

**02** ஆழத்தின் தண்ணீரை வற்றிபோகச் செய்து மீட்டு வந்த தேவனே
கடலின் பள்ளத்தில் கடக்க செய்தது உந்தனின் கரம் அன்றோ
கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் ஆனந்த களிப்புடன் பாடி
சீயோனுக்குத் திரும்புவார்கள் நித்திய மகிழ்ச்சி தங்கிடுமே
சமாதானமும்..

**03** மனிதர் மத்தியில் தேவன் இருப்பிடம் உண்டாகும் நாளினிலே
அவரே அவர்கள் தேவனாய் விளங்க மகிழ்ச்சி நிலவுமே
கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்
துக்கம் அலறுதல் மாற்றிடுவார்
மரணம் முற்றிலும் நீக்கிடுவார் யாவையும் புதுமை ஆக்கிடுவார்
சமாதானமும்..

## 58. உன்னைக் காக்கிறவர் உறங்கார்

உன்னைக் காக்கிறவர் உறங்கார்
உந்தன் காலைத் தள்ளாட வொட்டார்
கவலைகள் தீர்ப்பார் கண்ணீரைத் துடைப்பார்
கடைசி மட்டும் கைவிடாதிருப்பார்
உன்னை காக்கிறவர்..

**01** பாவமும் சாபமும் சூழ்ந்தபோது
பாவத்துக்காய் மனம் திரும்பும்போது – 2
பாவத்தை மீண்டும் நினையேன் என்றதால்
நெஞ்சே நீ கலங்காதே
உன்னை காக்கிறவர்..

**02** மலை போன்ற துன்பம் தினம் வந்தாலும்
ஆழிபோல் சோதனை பெருகினாலும் – 2
கோட்டையும் அரணுமாய் கர்த்தர் இருப்பதால்
நெஞ்சே நீ கலங்காதே
உன்னை காக்கிறவர்..

**03** சிங்கக் குட்டிகள் தாழ்ச்சியடைந்து
பட்டினியாக இருக்கும்போது – 2
கர்த்தரை தேடுவோர்க் குறைவில்லை என்பதால்
நெஞ்சே நீ கலங்காதே
உன்னை காக்கிறவர்..

## 59. உடைந்த பாத்திரம் நான்

உடைந்த பாத்திரம் நான்
எதற்கும் உதவாதவன்
உருகுலைந்த பாத்திரம் நான்
எவரும் விரும்பாதவன் – 2

குயவன் கையில் பிசையும் களிமண்போல – 2
என் சித்தமல்ல உம்சித்தம் போலாக்கும் – 2
உடைந்த பாத்திரம்..

**01** இந்த உலக இன்பம் எல்லாம் மாயையே
உங்க விருப்பப்படி என்னை மாற்றுமே 2
என் பெலவீன காலங்களில்
உம் பெலத்தாலே பாதுகாக்கின்றீர் – 2
குயவன் கையில்..

**02** என்னை அறிந்த மனிதர் மறந்து போகலாம்
உங்கக் கிருபை என்மேல் என்றும் இருக்குமே – 2
என் அக்ரமங்களை சிலுவையில் சுமந்தீர்
என் பாவங்களை மூடி மறைத்திட்டீர் – 2

குயவன் கையில்..

**03** உன்னத பாத்திரமாய்
உம் கரத்தில் உருவாகணும்
தேவ அழகின் பாத்திரமாய்
உலகிற்கு ஒளியாகனும் – 2

குயவன் கையில்..

## 60. உந்தன் சித்தம்போல் நடத்தும்

உந்தன் சித்தம்போல் நடத்தும்
கர்த்தாவே நீர் நித்தம் என்னை – 2
எந்தன் சித்தம்போல் வேண்டாம்
என் பிதாவே என் தேவனே – 3

**01** இன்பமான வாழ்க்கை வேண்டேன்
இனிய செல்வம் சீரும் வேண்டேன் – 2
துன்பமற்ற சுகமும் வேண்டேன்
நின் தொண்டு செய்யும் அடியேன் – 3

உந்தன் சித்தம்..

**02** நேர் சமனாம் நின் வழியோ
சிறு தூரமோ மாதொலைவோ – 2
எவ்விதத் துயர்கடலோ
ஏழையின் வாழ்வு எதிலும் – 3

உந்தன் சித்தம்..

**03** அக்னி ஸ்தம்பம் மேக ஸ்தம்பம்
ஆம் இவற்றால் நீர் நடத்தும் – 2
அனுதினம் என்னோடிருப்பீர்
நான் உம்பாதம் தஞ்சமே – 3

உந்தன் சித்தம்..

## 61. என்ன என் ஆனந்தம்

என்ன என் ஆனந்தம்
என்ன என் ஆனந்தம் சொல்லக்கூடாதே – 2
மன்னன் கிறிஸ்து என் பாவத்தை எல்லாம்
மன்னித்து விட்டாரே 2

**01** கூடுவோம் யாவரும் பாடுவோம்
நன்றாய் மகிழ்கொண்டாடுவோம் – 2
நாடியே நம்மைத் தேடியே வந்த
நாதனைப் போற்றிடுவோம் – 2

என்ன என் ஆனந்தம்

**02** பாவங்கள் சாபங்கள் கோபங்கள்
எல்லாம் பரிகரித்தாரே – 2
தியாகபலி தந்தென் உள்ளத்தில் வந்து
தேற்றியே விட்டாரே – 2

என்ன என் ஆனந்தம்

**03** அட்சயன் பட்சமாய் இரட்சிப்பை
எங்களுக் கருளினதாலே – 2
நிச்சயம் சுவாமியைப் பற்றியே சாட்சி
பகர வேண்டியதே – 2

என்ன என் ஆனந்தம்

**04** வெண்ணங்கி பொன்முடிவாத்தியம்
மேல்வீட்டில் ஜெயக்கொடியுடனே 2
மண்ணுலகில் வந்து விண்ணுலகம் சென்ற
மன்னனை ஸ்தோத்தரிப்போம் – 2

என்ன என் ஆனந்தம்

## 62. என் இதயத்தின் காயத்தை ஆற்றிடும்

என் இதயத்தின் காயத்தை ஆற்றிடும்
எந்தன் இயேசய்யா – 2
கரை காணா படகைப்போல
தடுமாறும் வாழ்க்கையையா – 2

என் இதயத்தின்..

**01** யோவானைப் போல உம் மார்பிலே
இளைப்பார வேண்டுமைய்யா – 2
மனபாரம் துயரம் நீக்கி
சமாதானம் தருபவரே – 2

என் இதயத்தின்..

**02** பெலவீனமான என்னையும்
உம் பெலத்தால் இடை கட்டுவீர் – 2
தடுமாறும் நேரமெல்லாம்
கரம் கொண்டு தாங்கினீரே – 2

என் இதயத்தின்..

**03** காணாமல் போன ஆடு நான்
அன்போடு தேடினீரே – 2
தோலின் மீது சுமந்து கொண்டு
என்னைத் தாங்கி நடப்பவரே – 2

என் இதயத்தின்..

## 63. என் இயேசுவே! உம்மையே நான்

என் இயேசுவே! உம்மையே நான் நேசிக்கிறேன்
வேறெந்த வீண்வாழ்வையும் நாடாதிருப்பேன்
உம்மாலே மாநன்மையை நான் கண்டடைந்தேன்
என் நாதா! மேன்மேலும் உம்மை நேசிக்கிறேன்

**01** இப்பாவியின் பேரில் முந்தி நேசம் வைத்தீர்
நீர் ப்ராணத் தியாகம் செய்து மீட்டுக்கொண்டீர்
முட்க்ரீடமும் ஐங்காயமும் தியானிக்கிறேன்
என் நாதா! மேன்மேலும் உம்மை நேசிக்கிறேன்

**02** பேரன்பின் சொரூபி! உம்மைப் போற்றுகிறேன்
எப்போதும் உம்மண்டை தங்க வாஞ்சிக்கிறேன்
என் ஜீவன் போனாலுங்கூட நீங்கமாட்டேன்
என் நாதா! மேன்மேலும் உம்மை நேசிக்கிறேன்

**03** பேரின்ப மேலோகத்தில் ஆனந்தங்கொள்வேன்
நீடூழி உம்முகம் கண்டு ஸ்தோத்திரிப்பேன்
எப்பாவமில்லாமலும் நான் வாழ்த்தல் செய்வேன்
என் நாதா! மேன்மேலும் உம்மை நேசிக்கிறேன்

## 64. என் இன்ப துன்ப நேரம்

என் இன்ப துன்ப நேரம்
நான் உம்மைச் சேருவேன் – 2
நான் நம்பிடுவேன்
பாரில் உம்மைச் சார்ந்திடுவேன்

என் இன்ப..

**01** நான் நம்பிடும் நேசர் இயேசுவே
நான் என்றென்றும் நம்பிடுவேன் – 2
தேவனே! ராஜனே!
தேற்றி என்னைத் தாங்கிடுவார் – 2

என் இன்ப..

**02** இவரே நல்ல நேசர் இயேசுவே
என்றும் தாங்கி நடத்துவார் – 2
தீமைகள் சேதங்கள்
நேரா என்னைக் காத்திடுவார் – 2

என் இன்ப..

**03** பார்போற்றும் ராஜன் புவியில்
நான் வென்றிடச் செய்திடுவார் – 2
பாடுகள் தாங்கியே
அவரைப்போல மாறிடுவேன் – 2

என் இன்ப..

## 65. என் மீட்பர் உயிரோடிருக்கையிலே

என் மீட்பர் உயிரோடிருக்கையிலே
எனக்கென்ன குறையுண்டு, நீ சொல் மனமே – 2

**01** என்னுயிர் மீட்கவே தன்னுயிர் கொடுத்தோர்
என்னோடிருக்கவே எழுந்திருந்தோர் – 2
விண்ணுலக குயர்ந்தோர், உன்னதஞ் சிறந்தோர்
மித்திரனே சுகபத்திர மருளும்

என் மீட்பர்..

**02** ஆசி செய்திடுவார் அருள்மிக வளிப்பார்
அம்பரந் தனிலெனக்காய் ஜெபிப்பார் 2
மோசமே மறைப்பார், முன்னமே நடப்பார்
ஜீவ வழி சத்யம் வாசல் உயிரெனும்

என் மீட்பர்..

**03** கவலைகள் தீர்ப்பார் கண்ணீர் துடைப்பார்
கடைசிமட்டுங் கைவிடா திருப்பார் – 2
பாவமன்னிப்பளிப்பார் பாக்கியங் கொடுப்பார்
பரம பதவியை எந்தனுக்களிப்பார்

என் மீட்பர்..

**04** போனது போகட்டும் புவிவசை பேசட்டும்
பொல்லான் அம்புகளெய்திடட்டும் – 2
ஆனது ஆகட்டும் அருள்மழைபெய்திடும்
அன்புமிகும் பேரின்ப மெனக்கருள்

என் மீட்பர்..

## 66. என் மீட்பர் சென்ற பாதையில்

என் மீட்பர் சென்ற பாதையில்
போக ஆயத்தமா?
கொல்கதா மலை வாதையில்
பங்கைப் பெறுவாயா?

சிலுவையை நான் விடேன் – 6

**01** ஊரார் இனத்தார் மத்தியில்
துன்பம் சகிப்பாயா?
மூர்க்கர் கோபிகள் நடுவில்
திடனாய் நிற்பாயா?

சிலுவையை..

**02** தாகத்தாலும் பசியாலும்
தோய்ந்தாலும் நிற்பாயா?
அவமானங்கள் வந்தாலும்
சிலுவை சுமப்பாயா?

சிலுவையை..

**03** பாவாத்மாக்கள் குணப்பட
நீ தத்தம் செய்வாயா?
கோழை நெஞ்சர் திடப்பட
மெய் யுத்தம் செய்வாயா?

சிலுவையை..

**04** லோகத்தார் மாண்டு போகிறார்
மெய்வீரர் இல்லாமல்
தூயர் இயேசு உனக்காய்
தொங்கி சிலுவையில்

சிலுவையை..

**05** வாழ்நாள் எல்லாம்
நிலை நின்று
சிலுவை சுமப்பேன்
தேவ அருளினால் வென்று
மா பாக்யம் சேருவேன்

சிலுவையை..

## 67. என்னோடிரும் மா நேச கர்த்தரே

என்னோடிரும், மா நேச கர்த்தரே
வெளிச்சம் மங்கி இருட்டாயிற்றே
மற்றோர் சகாயம் அற்றபோதிலும்
நீங்கா ஒத்தாசை நீர், என்னோடிரும்

**01** நீர்மேல் குமிழிபோல் என் ஆயிளும்
இம்மையின் இன்ப வாழ்வும் நீங்கிடும்
கண் கண்ட யாவும் மாறி வாடிடும்
மாறாத கர்த்தர் நீர், என்னோடிரும்

**02** நீர் ஆசீர்வதித்தால் கண்ணீர் விடேன்
நீரே என்னோடிருந்தால் அஞ்சிடேன்
சாவே, எங்கே உன் கூரும் ஜெயமும்
நான் உம்மால் வெல்ல நீர் என்னோடிரும்

**03** நான் சாகும் அந்தகார நேரத்தில்
உம் சிலுவையைக் காட்டும் சாகையில்
விண் ஜோதி வீசி இருள் நீக்கிடும்
வாழ்நாள் சாங்காலிலும் என்னோடிரும்

## 68. என்னோடிரும் என் நேச கர்த்தரே

என்னோடிரும் என் நேச கர்த்தரே
வெளிச்சம் மங்கி இருட்டாயிற்றே
மற்றோர் ஒத்தாசை அற்றுப்போயினும்
நீர் மெய்ச் சகாயரே, என்னோடிரும்

**01** நீர்மேல் குமிழ் போல் என் ஆயுசும்
இம்மையின் இன்ப வாழ்வும் நீங்கிடும்
கண் கண்ட யாவும் மாறிப்போயினும்
மாறாத கர்த்தரே என்னோடிரும்

**02** நீர் கூடநின்று தாங்கி வாருமேன்
அப்போது தீமைக்கு நான் தப்புவேன்
நீர் என் துணை என் பாதை காட்டியும்
என் இன்ப துன்பத்தில் என்னோடிரும்

**03** நான் அஞ்சிடேன் நீர் கூடத் தங்கினால்
என் திகில் மாறும் உம் ப்ரசன்னத்தால்
சாவே எங்கே உன் கூரும் ஜெயமும்?
என்றாரவாரிப்பேன், என்னோடிரும்

## 69. என்னை மறவா இயேசு நாதா

என்னை மறவா இயேசு நாதா
உந்தன் தயவால் என்னை நடத்தும் 2

**01** வல்ல ஜீவ வாக்குத்தத்தங்கள்
வரைந்தெனக்காய் ஈந்ததாலே ஸ்தோத்திரம் – 2
ஆபத்திலே அரும் துணையே
பாதைக்கு நல்ல தீபமிதே

என்னை..

**02** பயப்படாதே வலக்கரத்தாலே
பாதுகாப்பேன் என்றதாலே ஸ்தோத்திரம் – 2
பாசம் என்மேல் நீர் வைத்ததினால்
பறிக்க இயலா தெவருமென்னை

என்னை..

**03** தாய் தன் சேயை மறந்துவிட்டாலும்
மறவேன் உன்னை என்றதாலே ஸ்தோத்திரம் – 2
வரைந்தீரன்றோ உம் உள்ளங்கையில்
வல்லவா எந்தன் புகலிடமே

என்னை..

**04** திக்கற்றோராய் கைவிடேனே
கலங்கிடீரே என்றதாலே ஸ்தோத்திரம் – 2
நீர் அறியாததும் நேரிடா என்
தலைமுடியும் எண்ணினீரே

என்னை..

**05** உன்னைத் தொடுவோன் என்
கண்மணியைத் தொடுவதாக – 2
உரைத்ததாலே ஸ்தோத்திரம்
அக்கினியின் மதிலாக
அன்பரே என்னைக் காத்திடுமே

**என்னை..**

**06** உனக்கெதிராய் எழும்பும் ஆயுதம்
வாய்த்திடாதே என்றதாலே ஸ்தோத்திரம் – 2
பறந்திடுமே உம் நாமத்திலே
பரனே எனக்காய் ஜெயக் கொடியே

**என்னை..**

## 70. என்னைப் பரிசுத்தப் படுத்தும் தேவனே

என்னைப் பரிசுத்தப்படுத்தும் தேவனே
உம் திருவடி பணிந்து கெஞ்சுகிறேன்

**01** மாமிச சிந்தை மரணமே
ஆவியின் சிந்தையோ ஜீவன் தரும்
மாமிச சிந்தைகள் அகலவே
ஆண்டவர் பெலன் தாருமே

**02** இதயத்தை வெண்மையாய் மாற்றிடும்
இயேசுவே உம் இரத்தத்தால் கழுவிடும்
இதயத்தை உம் அன்பால் நிறைத்திடும்
இயேசுவே வந்தாளுமே

**03** மாய்ந்திரும் உலகக் கண்ணிகளில்
மயங்கிடா வண்ணம் நீர் காத்திடுமே
மாளா உம் கிருபையைப் பொழிந்திடும்
மன்னவா என்றென்றுமே

**04** நடை பாதை தவறும் நேரங்களில்
நலமான வழிகளில் திருப்பிடும்
நல்லாலோசனை என்றும் தந்திடும்
நாதனே நீர் நடத்தும்

## 71. என் முன்னே மேய்ப்பர் போகிறார்

என் முன்னே மேய்ப்பர் போகிறார்
நல்மேய்ப்பராகக் காக்கிறார்
ஓர்க்காலும் என்னைக் கைவிடார்
நேர்ப் பாதைக் காட்டிப் போகிறார்

முன் செல்கின்றார் முன் செல்கின்றார்
என் முன்னே சென்று போகிறார்
நல் மேய்ப்பர் சத்தம் அறிவேன்
அன்போடு பின்சென்றேகுவேன்

**01** கார் மேகம் வந்து மூடினும்
சீர் ஜோதி தோன்றி வீசினும்
என் வாழ்வு தாழ்வில் நீங்கிடார்
என்றைக்கும் முன்னே போகிறார்

முன் செல்கின்றார்..

**02** மெய்ப் பாதைகாட்டி பின் செல்வேன்
தெய்வீக கையால் தாங்குமேன்
எவ்விக்கினம் வந்தாலும் நீர்
இவ்வேளை முன்னே போகிறீர்

முன் செல்கின்றார்..

## 72. என் மேய்ப்பராய் இயேசு

என் மேய்ப்பராய் இயேசு இருக்கின்றபோது
என் வாழ்விலே குறைகள் என்பது ஏது – 2

**01** என்னை அவர் பசும்புல் பூமியிலே
எந்நேரமும் நடத்திடும் போதினிலே
என்றும் இன்பம் ஆ ஆ என்றும் இன்பம்
ஆ ஆ என்றென்றும் இன்பமல்லவா – 2

**02** என்னோடவர் நடந்திடும் போதினிலே
அங்கே இருள் சூழ்ந்திடும் பாதையிலே
எங்கும் ஒளி ஆ ஆ எங்கும் ஒளி
ஆ ஆ எங்கெங்கும் ஒளியல்லவா – 2

**03** என்னை அவர் அன்பால் நிரப்பியதால்
எல்லோருக்கும் நண்பனாய் ஆக்கியதால்
என்னுள்ளமே ஆ ஆ என் தேவனை
ஆ ஆ எந்நாளும் புகழ்ந்திடுமே – 2

## 73. என் தேவனே என் ஏசுவே

என் தேவனே என் ஏசுவே
இருவருக்கும் நன்றி நன்றி – 2
வானமும் பூமியும் அழிந்தே போகும்
ஆனாலும் உம் இராஜ்யம் வந்தே தீரும் – 2

**01** மண்ணான ஆதாமை நேசித்தீரே
ஆனாலும் அவரோ தூரம் போனார் 2
அவரை விடுவிக்க ஏசுவை அனுப்பி
உம் அன்பை காட்டினீரே
நன்றி தேவா நன்றி தேவா –2

என் தேவனே..

**02** என் நீதி நியாயங்கள் அழுக்கான கந்தை
என் ஞானம் செல்வம் குப்பை அன்றோ – 2
ஆனாலும் நீர் என்னை அன்பு செய்தீரே
உம் அன்புக்கு என்றும்
விலையே இல்ல முடிவே இல்ல – 2

என் தேவனே..

**03** மீட்பாக மகனை கொடுத்தீரைய்யா – அந்த
மீட்பாலே உலகம் மகிழுதய்யா – 2
ஓராயிரம் ஆண்டு அவராளும்போது
உம் அன்பை இவ்வுலகம்
அறியும் ஐயா புரியும் ஐயா –2

என் தேவனே..

# 74. என் தேவனே என் ஆத்துமா

என் தேவனே என் ஆத்துமா
நீர் தந்த நன்மையை
சிந்தித்துப் பார்க்கையில்
மகா வியப்பாய்த் தோன்றுமே

**01** உற்பத்திக் காலம் முதலாய்
என்னை நடத்தினீர்
என் ஆவி தேகம் தயவாய்
இம்மட்டும் தாங்கினீர்

**02** சீர்கேடு நீங்க நெஞ்சத்தை
செம்மைப்படுத்தினீர்
அநேக ஆறுதல்களை
எனக்கருளினீர்

**03** என் ஜீவகாலம் எல்லாம் நீர்
அன்பாய் விசாரித்தீர்
இம்மட்டும் என்னை தேவரீர்
பராமரிக்கிறீர்

**04** எகோவா உம்மைப் போற்றுவேன்
இடைவிடாமலே
எப்போதும் உம்மைப் பற்றுவேன்
உற்சாகமாகவே

## 75. என் உயிரான இயேசு

என் உயிரான உயிரான உயிரான இயேசு – 2
என் உயிரான இயேசு,
என் உயிரோடு கலந்து
என் உயிரே நான் உம்மை துதிப்பேன் 2

**01** உலகமெல்லாம் மறக்குதய்யா
உணர்வு எல்லாம் இனிக்குதையா – 2
உம் நாமம் துதிக்கையிலே – இயேசையா (ராஜா)
உம் அன்பை ருசிக்கையிலே – 2
என் உயிரான..

**02** உம் வசனம் எனக்கு உணவாகும்
மனதுக்கெல்லாம் மருந்தாகும் – 2
இரவும் பகலுமையா
உந்தன் வசனம் தியானிக்கிறேன் – 2
என் உயிரான..

## 76. என்ன வந்தாலும் எது வந்தாலும்

என்ன வந்தாலும் எது வந்தாலும்
என் தேவனை என்றும் ஸ்தோத்தரிப்பேன்
இன்பம் வந்தாலும் துன்பம் வந்தாலும்
என் இயேசுவை என்றும் ஸ்தோத்தரிப்பேன்

ஒவ்வொரு நொடிப்பொழுதும் உம்மை ஸ்தோத்தரிப்பேன்
ராப்பகல் எந்த நேரமும் உம்மை ஸ்தோத்தரிப்பேன்
இதயம் முழுவதுமே தந்து ஸ்தோத்தரிப்பேன் – 2

01 யார் நேசித்தாலும் யார் வெறுத்தாலும்
ஸ்தோத்தரிப்பேன் என்றும் ஸ்தோத்தரிப்பேன்
யார் பேசினாலும் யார் தூஷித்தாலும்
ஸ்தோத்தரிப்பேன் என்றும் ஸ்தோத்தரிப்பேன்
கர்த்தரில் மகிழ்ந்தே நானும் பாடி ஸ்தோத்தரிப்பேன்
கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்க ஸ்தோத்தரிப்பேன்
மனதை கொடுத்தே உம்மை ஸ்தோத்தரிப்பேன் 2

02 சுகமேயானாலும் இல்லாமல் போயினாலும்
ஸ்தோத்தரிப்பேன் என்றும் ஸ்தோத்தரிப்பேன்
வாழ்ந்திருந்தாலும் வீழ்ந்து போனாலும்
ஸ்தோத்தரிப்பேன் என்றும் ஸ்தோத்தரிப்பேன்
மேய்ப்பரின் அன்புமுகம் நோக்கி தினமும் ஸ்தோத்தரிப்பேன்
மெய்யான விசுவாசத்தோடு உம்மை ஸ்தோத்தரிப்பேன்
நீரே போதும் போதும் என்று ஸ்தோத்தரிப்பேன் – 2

## 77. எந்நாளுமே துதிப்பாய்

எந்நாளுமே துதிப்பாய் – என் ஆத்துமாவே நீ
எந்நாளுமே துதிப்பாய்
இந்நாள்வரையிலே உன்னதனார் செய்த
எண்ணில்லா நன்மைகள் யாவும் மறவாது

01 பாவங்கள் எத்தனையோ – நினையாதிருந்தா ருன்
பாவங்கள் எத்தனையோ
பாழான நோயை அகற்றிக் குணமாக்கிப்
பாரினில் வைத்த மா தயவை நினைத்து

எந்நாளுமே..

**02** எத்தனையோ கிருபை – உன்னுயிர்க்கும் செய்தாரே
எத்தனையோ கிருபை
நித்தமுனை முடி சூட்டினதுமன்றி
செத்திடாதபடி ஜீவனை மீட்டதால்
எந்நாளுமே..

**03** நன்மையாலுன் வாயை – நிறைத்தாரே பூர்த்தியாய்
நன்மையாலுன் வாயை
உன் வயது கழுகைப்போல் பலங்கொண்டு
இன்னும் இளமை போலாகவே செய்ததால்
எந்நாளுமே..

**04** பூமிக்கும் வானத்துக்கும் – உள்ள தூரம் போலவே
பூமிக்கும் வானத்துக்கும்
சாமி பயமுள்ளவர் மேல் அவர் அருள்
சாலவும் தங்குமே சத்தியமேயிது
எந்நாளுமே..

**05** மன்னிப்பு மாட்சிமையாம் – மா தேவனருளும்
மன்னிப்பு மாமட்சிமையாம்
எண்ணுவாயோ கிழக்கும் மேற்கும் தூரமே
மண்ணிலே உன் பாவம் அகன்றத் தூரமே
எந்நாளுமே..

**06** தந்தை தன் பிள்ளைகட்கு – தயவோ டிரங்கானோ
தந்தை தன் பிள்ளைகட்கு
எந்த வேளையும் அவரோடு தங்கினால்
சொந்தம் பாராட்டியே தூக்கிச் சுமப்பாரே
எந்நாளுமே..

## 78. எந்நாளும் இயேசுவில்

எந்நாளும் இயேசுவில் வளர்ந்திடவே
தேவாசீர் தரவேண்டுமே–2
என்னால் ஒன்றும் கூடாதய்யா
எல்லாம் உம்மால் கூடும் –2

**01** என் ஞானம் கல்வி செல்வம் எல்லாம்
ஒன்றுமில்லை குப்பை என்றெண்ணுகிறேன் – 2
என் நீதி நியாயங்கள் அழுக்கான கந்தை
என்றே உணர்ந்தேன் என் தேவனே – 2
எந்நாளும் இயேசுவில்..

**02** அழைத்தவரே உம்மில் பிழைத்திடவே
அவனியில் உமக்காய் உழைத்திடவே – 2
அர்ப்பணிக்கின்றேன் என்னை இன்றே
ஏற்றுக்கொள்ளும் என் தேவனே – 2
எந்நாளும் இயேசுவில்..

## 79. எகோவாவே என் கன்மலையே

(ராகம்: யாவே உம் அருளைத் தாருமே)

எகோவாவே என் கன்மலையே
எந்நாளும் சாய்ந்திளைப்பாறுவேன்
எகோவாவே என் ஆறுதலே
அந்நாளும் இந்நாளும் எந்நாளுமே

**01** சிங்கத்தின் வாய்க்கும் தப்புவித்தார்
சிறையின் கதவை தகர்த்திட்டார் – 2
சின்னவன் என்னையும் மீட்டுக்கொண்டார்
சிரசிலே முடி சூட்டுகின்றார் – 2

**02** புதிய வாழ்வு பிறந்தது
வாழ்வில் ஒளியும் மலர்ந்தது – 2
பறந்து மகிழ்ந்து பாடிடுவேன்
பரம சீயோனில் வாழ்ந்திடுவேன் – 2

**03** விடிவெள்ளி என்னில் உதித்தது
விடுதலை இன்று கிடைத்தது – 2
விடியற் காலத்தின் பனிக்கொப்பாய்
யௌவன ஜனமாய் மாறிடுவேன் – 2

எகோவாவே என்..

## 80. என் சித்தமல்ல உம் சித்தம் நாதா

என் சித்தமல்ல உம் சித்தம் நாதா
என்னாலே அல்ல உம்மாலே ஆகும் – 2

**01** அடிமை நானே எஜமான் நீரே என்நாதா – 2
பெலவான் நீரே பெலவீனன் நானே என்நாதா – 2

என் சித்தமல்ல..

**02** கடலெனும் வாழ்வில் படகோட்டி நீரே என் நாதா – 2
அலைவந்து மோதியும் அழியாமல் சேர்த்தீரே நாதா – 2

என் சித்தமல்ல..

## 81. என் கண்கள் கர்த்தர் ஏசுவின்

என் கண்கள் கர்த்தர் ஏசுவின்
பிரசன்னம் காணுமே
தன் காலின் கீழ்
ஆலைத் திராட்சை
மிதித்துப் போடுவார்
மின்னலாய் பட்டயம்
கீழ் இறங்கக் காணுமே
என் ராஜா முன் செல்கிறார்

தூயர் தூயர் அல்லேலூயா
தூயர் தூயர் அல்லேலூயா
தூயர் தூயர் அல்லேலூயா
என் ராஜா பின் செல்வேன்

**01** அண்டஞ்சுற்றும் நீதித் தீர்ப்பு
தொடங்கக் காணுமே
துன்பங்களாலே நித்ய
புத்ர பாக்ய முண்டாமே
இன் திசையும் ராஜ்யந் தன்னில்
நீதி நடக்குமே
என் ராஜா முன் செல்கின்றார்

தூயர் தூயர்..

**02** புற ஜாதியாரின் காலமும்
ராஜாக்கள் ராஜ்யமும்
அவர்களோடு பாவம் துன்பம்
அழிந்து போகுமே
யூத ராஜ சிங்கம் இப்போ
ஆளவந்தாரே
என் ராஜா முன் செல்கின்றார்

தூயர் தூயர்..

**03** ஏழாம் எக்காளத் தொனியில்
வெற்றி வேந்தர் வந்திட்டார்
என் கால்களே எழுந்திரு
அவரைக் காணவே
பூமி உந்தன் நியாயத் தீர்ப்பால்
மனமும் மகிழுமே
என் ராஜா முன் செல்கின்றார்

தூயர் தூயர்..

## 82. எண்ணிலடங்கா ஸ்தோத்திரம்

எண்ணிலடங்கா ஸ்தோத்திரம்
தேவா என்றென்றும் நான் பாடுவேன் ஆஹா
இந்நாள் வரை என் வாழ்விலே
நீர் செய்த நன்மைக்கே – 2

**01** வானாதி வானங்கள் யாவும்
அதின் கீழுள்ள ஆகாயமும் – 2
பூமியில் காண்கின்ற யாவும்
கர்த்தா உமை போற்றுமே – 2

ஆஹா எண்ணிலடங்கா..

**02** நீரினில் வாழ்கின்ற யாவும்
இந்நிலத்தின் ஜீவராசியும் – 2
பாரினில் பறக்கின்ற யாவும்
பரனே உமை போற்றுமே – 2

ஆஹா எண்ணிலடங்கா..

**03** வால வயதுள்ளனோரும்
மிகும் வயதால் முதிர்ந்தோர்களும் – 2
பாலகர் தம் வாயினாலும்
பரனே உமைப் போற்றுவாரே – 2

ஆஹா எண்ணிலடங்கா..

## 83. எண்ணி எண்ணி துதி செய்வாய்

எண்ணி எண்ணி துதி செய்வாய்
எண்ணிலடங்காத கிருபைகட்காய்
என்றும் தாங்கும் தம் புயமே
இன்ப இயேசுவின் நாமமே
எண்ணி எண்ணி..

**01** யோர்தான் புரண்டு வரும்போல்
எண்ணற்ற பாரங்களோ – 2
எலியாவின் தேவன் எங்கே
உந்தன் விசுவாச சோதனையில் – 2

எண்ணி எண்ணி..

**02** உனக்கெதிராகவே ஆயுதம் வாய்க்காதே – 2
உன்னை அழைத்தவர் உண்மை தேவன்
அவர் தாசருக்கு நீதியவர் – 2

எண்ணி எண்ணி..

**03** உன்னை நோக்கும் எதிரியின்
கண்ணின் முன்னில் பதறாதே – 2
கண்மணி போல் காக்கும் கரங்களில்
உன்னை மூடி மறைத்தாரே – 2

எண்ணி எண்ணி..

## 84. என் நேசர் ஏசுவின்மேல்

என் நேசர் ஏசுவின்மேல் சாய்ந்தே
துன்ப வனாந்திரத்தில் நடந்திட
இன்ப நல் வாழ்வடைந்தேன் – 2

**01** லீலி புஷ்பம் சாரோனின் ரோஜா
பாலிலும் வெண்மை தூயவராம் – 2
பூரண ரூப சௌந்தர்யமே
பேர் சிறந்த தேவா – 2

என் நேசர்..

**02** கன்னியர்கள் நேசிக்கும் தேவா
கர்த்தரின் நாமம் பரிமளமே – 2
ஏசுவின் பின்னே ஓடி வந்தேன்
என்னையும் இழுத்துக் கொண்டார் – 2

என் நேசர்..

**03** நேசக் கொடிமேல் பறந்தோங்க
நேசர் பிரசன்னம் வந்திறங்க – 2
கிச்சிலி மரத்தின் கீழ் அடைந்தேன்
கர்த்தரின் ஆறுதலே – 2

என் நேசர்..

**04** நித்திரையே செய்திடும் இராவில்
நித்தம் என் ஆத்துமா நல் விழிப்பே – 2
என் கதவருகே நின்றழைத்த
ஏசுவை நேசிக்கின்றேன் – 2

என் நேசர்..

**05** தென்றலே வா வாடையே எழும்பு
தூதாயீம் நற்கனி தூயருக்கே – 2
வேலி அடைத்த தோட்டமிதே
வந்திங்கு உலாவுகின்றார் – 2

என் நேசர்..

**06** நாட்டினிலே பூங்கனி காலம்
காட்டுப்புறாவின் பாட்டொலிக்கும் – 2
கன்மலை சிகரம் என் மறைவே
இந்நேரமே அழைத்தார் – 2

என் நேசர்..

## 85. என் மீட்பர் இரத்தம் சிந்தினார்

என் மீட்பர் இரத்தம் சிந்தினார்
மா நீதியும் சம்பாதித்தார்
என் சொந்த நீதி வெறுத்தேன்
இயேசுவின் நாமம் நம்புவேன்

நான் நிற்கும் பாறை கிறிஸ்து தான்
வேறஸ்திபாரம் மணல்தான் – 2

**01** கார் மேகம் எந்தன் முகத்தை
மறைக்கும் காலம், அவரை
எப்போதும்போல நம்புவேன்
மாறாதவர் என்றறிவேன்

நான் நிற்கும்..

**02** மரண வெள்ளம் பொங்கினும்
என் மாம்சம் சோர்ந்து போயினும்
உம் வாக்குத்தத்தம் ஆணையும்
என் நெஞ்சை ஆற்றித் தேற்றிடும்

நான் நிற்கும்..

**03** நியாயத்தீர்ப்புக் காலத்தில்
எக்காள சத்தம் கேட்கையில்
அஞ்சேன் என் மீட்பர் நீதியே
அநீதன் என்னை மூடுமே

நான் நிற்கும்..

## 86. என் பாரங்கள் தாங்கிடுவார்

என் பாரங்கள் தாங்கிடுவார்
நாதா நீரல்லால் யாருமில்லை – 2
என் ஜீவியம் உம் கையிலே – 2
உம்பாண்டமாய் என்னை மாற்றிடுமே நாதா

**01** உலத்தின் போக்கினிலே
ஓடி அலைந்து நான் தவிக்கையிலே – 2
நாதா உந்தனின் கிருபை தந்து – 2
எந்தன் பாதையை மாற்றினீரே

நாதா..

**02** வீணான ஆசைகளை
நீக்கிவிடும் என் நெஞ்சினிலே – 2
அழியாத ஜீவனை நோக்கியே நான் –2
அனுதினம் சென்றிடவே

நாதா..

**03** காலமும் கடந்திடுதே
ஜீவியம் முடிவினை நெருங்கிடுதே – 2
நாதா உம்மையை பின் செல்லவே – 2
கிருபை வரம் தாருமே

நாதா..

**04** பலி பீடத்தில் படைத்தேன்
ஏற்றுக் கொள்ளும் என் பலிதனையே –2
மாம்சத்தின் சிந்தனை அனைத்தையுமே – 2
எரித்திடும் முற்றிலுமே

நாதா..

## 87. என் பாதை வேண்டாமே

என் பாதை வேண்டாமே
உம் பாதை காட்டிடும்
தேவா உம் கரத்தால்
நீர் என்னை நடத்தும்

**01** நீர் காட்டும் பாதையே
எவ்வாறும் உத்தமம்
நேர் சுற்று ஆயினும்
நடத்தும் விண் ஸ்தலம்

**02** என் சித்தம் ஆபத்தாம்
உம் சித்தம் நாடுவேன்
நான் செல்லும் பாதையை
நீர் காட்டக் கெஞ்சுவேன்

**03** நான் தேடும் ராஜியம்
உம் சொந்த மானதே
அங்கென்னைச் சேர்த்திடும்
பாதையும் உம்மதே

**04** உம் சித்தப்படியே
என் பாத்திரம் எடுத்தும்
சந்தோஷஞ் சஞ்சலம்
ஏதானும் நிரப்பும்

**05** வறுமை செல்வமும்
சுகம் துக்கமும், நீர்
என் பங்கு ஆகவே
தெரிந்து கொள்ளுவீர்

**06** என் இஷ்டம் எதிலும்
வேண்டாம், என் தேவனே
என் வழிகாட்டியாம்
நீர் சர்வ ஞானமே

## 88. என் நேசர் மார்பிலே

என் நேசர் மார்பிலே
நான் சாய்ந்து உறங்குவேன் – 2
என்ன ஆனந்தம்
எனக்கென்ன ஆனந்தம் – 2

என் நேசர்..

**01** என்னண்டை வருபவன்
என்றும் பசியடையான் – 2
ஜீவ அப்பம் நானே
என்றவர் என் இயேசுவே – 2

என் நேசர்..

**02** தடுமாறும் நெஞ்சங்களே
இயேசுவண்டை வாரீர் – 2
காப்பவர் கண்ணுறங்கார்
என் நேசர் அழைக்கிறார் – 2

என் நேசர்..

**03** பாடுகளின் பாத்திரம்
இப்போது பருகுவோம்
நவமான பாத்திரம்
மகிமையில் பருகுவோம்
குறைவான பாடுகளால்
நிறைவான மகிமையாம் – 2

என் நேசர்..

## 89. எனக்காய் ஜீவன் விட்டவரே

எனக்காய் ஜீவன் விட்டவரே
என்னோடிருக்க எழுந்தவரே – 2
என்னை என்றும் வழி நடத்துவாரே
என்னை சந்திக்க வந்துவிட்டாரே – 2

இயேசு போதுமே இயேசு போதுமே எந்த நாளிலுமே
எந்நிலையிலுமே எந்தன் வாழ்வினிலே
இருவரும் போதுமே

**01** பிசாசின் சோதனை பெருகிட்டாலும்
சோர்ந்து போகாமல் முன் செல்லவே – 2
உலகமும் மாமிசமும் மயக்கிட்டாலும்
மயங்கிடாமல் முன்னேறவே – 2
இயேசு போதுமே..

**02** புல்லுள்ள இடங்களில் மேய்த்திடுவார்
அமர்ந்த தண்ணீரண்டை நடத்திடுவார் – 2
ஆத்துமாவைத் தினம் தேற்றிடுவார்
மரண பள்ளத்தாக்கில் காத்திடுவார் – 2
இயேசு போதுமே..

**03** மனிதர் என்னைக் கைவிட்டாலும்
மாமிசம் அழுகி நாறிட்டாலும் – 2
ஐசுவரியம் யாவும் அழிந்திட்டாலும்
ஆகாதவன் என்று தள்ளிவிட்டாலும் – 2
இயேசு போதுமே..

## 90. எனக்கொத்தாசை வருகின்ற

எனக்கொத்தாசை வருகின்ற
பர்வதங்களை நோக்கியே
என் கண்களை ஏறெடுப்பேன்
அவர் காலடியில் நடப்பேன்

**01** வானத்தையும் பூமியையும்
உண்டாக்கினவரினிடத்திலே
எனக்கொத்தாசை வரும்போது
யாருக்கும் அஞ்சிடேன்
அவர் வார்த்தை நெஞ்சிலே

**02** எகோவாவே உன்னை காக்கிறவர்
உன் வலது பக்கத்தின் நிழலாமே
பகலின் வெயிலும், இரவின் நிழலும்
சேதப்படுத்தாதே
உன்னை சோகத்தில் ஆழ்த்தாதே

## 91. எந்தன் முகம் வாடினால்

எந்தன் முகம் வாடினால்
இயேசுவின் முகம் வாடும்
என் விழிகள் ஈரமடைந்தால்
இயேசுவன் விழி நிறையும் – 2

**01** நான் பாவம் செய்திடும் போதிலும்
இயேசுவின் மனம் துடிக்கும் – 2
நான் மீறுதல் செய்திடும் போதும்
இயேசுவின் உள்ளம் நொறுங்கும் – 2

எந்தன் முகம்..

**02** நான் நன்மை செய்திடும் போதிலும்
இயேசுவின் மனம் மகிழும் –2
நான் கீழ்ப்படிதல் காட்டும் போதும்
இயேசுவின் உள்ளம் நெகிழும் – 2

எந்தன் முகம்..

**03** நான் துன்பத்தால் தவிக்கும் போதும்
இயேசுவின் மனம் தவிக்கும் – 2
நான் தடுமாறி விழும் போதிலும்
இயேசுவின் கரம் அணைக்கும் – 2

எந்தன் முகம்..

## 92. எந்தன் ஜீவன் இயேசுவே

எந்தன் ஜீவன் இயேசுவே
சொந்தமாக ஆளுமே
எந்தன் காலம் நேரமும்
நீர் கையாடியருளும்

**01** எந்தன் கை பேரன்பினால்
ஏவப்படும் எந்தன் கால்
சேவை செய்ய விரையும்
அழகாக விளங்கும்

**02** எந்தன் நாவு இன்பமாய்
உமைப்பாடவும் என் வாய்
மீட்பின் செய்தி கூறவும்
ஏதுவாக்கியருளும்

**03** எந்தன் ஆஸ்தி தேவரீர்
முற்றும் அங்கீகரிப்பீர்
புத்தி கல்வி யாவையும்
சித்தம்போல் பிரயோகியும்

**04** எந்தன் சித்தம் இயேசுவே
ஒப்புவித்து விட்டேனே
எந்தன் நெஞ்சில் தங்குவீர்
அதை நித்தம் ஆளுவீர்

**05** திருப்பாதம் பற்றினேன்
எந்தன் நேசம் ஊற்றினேன்
என்னையே சமூலமாய்
சுத்தம் செய்தேன் நித்தமாய்

## 93. எந்தன் ஆத்துமாவே

எந்தன் ஆத்துமாவே எந்தன் உள்ளமே
எகோவாவை நீ துதிப்பாயே
நீ பெற்ற நன்மை யாவும் நினைத்து
கிறிஸ்துவின் மூலம் துதிப்பாயே – 2

**01** உனது பாவம் யாவும் மன்னித்து
உனது நோயை நீக்குவாரே
உனது ஜீவன் அழிவுக்கு நீக்கி
நன்மை க்ருபையால் முடி சூட்டுவார் – 2
எந்தன் ஆத்துமாவே..

**02** நன்மையினாலே உனது வாயை
திருப்தியாக ஆக்கிடுவார்
கழுகுக்கு ஈடாய் உனது ஆயுள்
வாலிபமாக புதுப்பிப்பாரே – 2
எந்தன் ஆத்துமாவே..

**03** ஒடுங்கும் யார்க்கும் எகோவா தேவன்
நீதிநியாயங்கள் செய்திடுவார்
இரக்கம் க்ருபை உள்ள தேவனாம்
என்றும் கோபம் கொள்ளாதவராம் – 2

எந்தன் ஆத்துமாவே..

## 94. எந்தன் ஜெபவேளை உமைத்தேடி

எந்தன் ஜெபவேளை உமைத்தேடி வந்தேன்
தேவா அருள்தாருமே – 2
எந்தன் கோட்டை எந்தன் தஞ்சம் நீரே
உம்மை நான் நாடி வந்தேன் – 2

**01** சோராது ஜெபித்திட
ஜெபஆவி வரம் தாருமே
தடையாவும் அகற்றிடுமே
தயை தேடி உம் பாதம் வந்தேன்

எந்தன் ஜெபவேளை..

**02** உம்மோடு எந்நாளும்
உறவாட அருள் செய்யுமே
கர்த்தாவே உம் வார்த்தையை
கேட்டிடக் காத்திருப்பேனே

எந்தன் ஜெபவேளை..

## 95.எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும்

எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும்
நன்றியால் உம்மை நான் துதிப்பேன்
இயேசுவே உம்மை நான் துதிப்பேன் துதிப்பேன்
எந்த வேளையிலும் துதிப்பேன் – 2

**01** ஆதியும் நீரே அந்தமும் நீரே
ஜோதியும் நீரே என் சொந்தமும் நீரே – 2
எந்தக் காலத்திலும்..

**02** துன்ப நேரத்தில் இன்பமே அவர்
இன்னல் வேளையில் என் மாறிடா நேசர் – 2
எந்தக் காலத்திலும்..

**03** தேவனும் நீரே என் ஜீவனும் நீரே
ராஜ ராஜனும் என் சர்வமும் நீரே – 2
எந்தக் காலத்திலும்..

**04** வாழ்விலும் நீரே தாழ்விலும் நீரே
வாதையில் நீரே என் பாதையில் நீரே
எந்தக் காலத்திலும்..

**05** ஞானமும் நீரே நீதியும் நீரே
பரிசுத்தம் நீரே என் மீட்பரும் நீரே
எந்தக் காலத்திலும்..

## 96. எந்நேரமாயும் பாடுவேன்

எந்நேரமாயும் பாடுவேன்
விசாரம் நீங்கிற்றே
இம்மானுயேலைப் போற்றுவேன்
சந்தோஷமாயிற்றே

சங்கீதம், கீதம், கீதம் பாடுவேன்,
கீதம், கீதம், சங்கீதம், பாடுவேன்

**01** என் பாவபலி ஏசுவை
கல்வாரியிற் கண்டேன்
அத்தாலுண்டான துக்கத்தை
விட்டாறித்தேறினேன்

**02** பொல்லாத சோதனை உண்டாம்
என்றாலும் வெல்லுவேன்
இயேசு என் சகாயர்! ஆம்
நான் நித்தம் பாடுவேன்

## 97. எப்படி பாடுவேன் நான்

எப்படி பாடுவேன் நான் – என்
இயேசு எனக்குச் செய்ததை
ஆயுள் முழுவதும் என் கர்த்தருக்காய்
ஆத்தும ஆதாயம் செய்வேன் – 2

**01** ஒரு வழி அடையும்போது
புது வழி திறந்த தேவா – 2
திறந்த வாசலை என் வாழ்க்கையில் – 2
அடைக்காத ஆண்டவரல்லோ 2

எப்படி பாடுவேன்..

**02** எப்பக்கம் நெருக்கப்பட்டும்
ஒடுங்கி நான் போவதில்லை – 2
அண்ணலின் மார்பினில் சாய்ந்தென்றுமே – 2
எப்போதும் பாடிடுவேன் – 2
எப்படி பாடுவேன்..

**03** கடந்து வந்த பாதையில்
கண்மணிபோல் காத்திட்டீர் – 2
கடுகளவும் குறைவைக்காமலே – 2
அதிகமாய் ஆசீர்வதித்தீர் – 2
எப்படி பாடுவேன்..

## 98. இயேசுவின் இன்ப நாமத்தை

இயேசுவின் இன்ப நாமத்தை
எல்லாரும் போற்றுங்கள்
விண்ணோர்கள் போல அவரை
நீர் வாழ்க, வாழ்க, வாழ்க,
வாழ்க எண்ணுங்கள்

**01** பிசாசினின்று மாந்தரை
மீட்டோரைப் போற்றுங்கள்
ஒப்பற்ற நேசர் அவரை
நீர் வாழ்க, வாழ்க, வாழ்க,
வாழ்க எண்ணுங்கள்

**02** எல்லோரும் அருள் நாதரை
மகிழ்ந்து போற்றுங்கள்
ஜீவாதிபதி அவரை
நீர் வாழ்க, வாழ்க, வாழ்க,
வாழ்க எண்ணுங்கள்

**03** அவரைப் பார்க்கும் பொழுது
ஓயாமல் போற்றுவோம்
நம் மீட்பர் பாதம் பணிந்து
நீர் வாழ்க, வாழ்க, வாழ்க,
வாழ்க எண்ணுங்கள்

## 99. இயேசுவுக்காக நில்லும்

இயேசுவுக்காக நில்லும் சிலுவை வீரர்கள்
துகிற்கொடி விரித்து போராட்டம் பண்ணுங்கள்
எல்லாருக்கும் முன்பாக ஏசுதாமே போவார்
யுத்தத்தில் ஜெயம் பெற நம்மை நடத்துவார்

**01** ஏசுவுக்காக நில்லும்
அவர் இல்லாமலே
போர்க்களத்தில் வீணாக
முயற்சி செய்யோமே
திவ்விய ஆயுதத்தை
தரித்துக்கொள்ளுங்கள்
அவர் போகுமிடத்தில்
எங்கும் பின் செல்லுங்கள்

**02** ஏசுவுக்காக நில்லும்
அவர் சொல் கேளுங்கள்
எதைக் கற்பிக்கிறாரோ
அதையே செய்யுங்கள்
பகைஞருக்குப் பலன்
பெரிது என்றாலும்
தைரியம் விடாதேயுங்கள்
ஜெயம் பெறுவீரே

**03** ஏசுவுக்காக நில்லும்
யுத்தம் சுருக்கந்தான்
இன்றைக்கு ஆரவாரம்
நாளைக்கு வெற்றி தான்
வென்றோனுக்குக் கிரீடம்
கர்த்தர் கொடுப்பாரே
சொல்லடங்கா ஆனந்தம்
அவரால் ஆகுமே

## 100. ஐயையா நான் வந்தேன்

ஐயையா நான் வந்தேன்
தேவ ஆட்டுக்குட்டி வந்தேன்
தேவ ஆட்டுக்குட்டி வந்தேன்
ஐயையா நான் வந்தேன் – 2

**01** துய்யன் நீர் சோரி பாவி எனக்காய் சிந்தி
துஷ்டன் எனை அழைத்தீர் தயை
செய்வோம் என்றே இதை
அல்லாது போக்கில்லை
தேவாட்டுக்குட்டி வந்தேன் – 2

ஐயையா நான்..

**02** உள்ள கறைகளில் ஒன்றேனும் தானாய்
ஒழிந்தால் வருவேன் என்று நில்லேன்
தெள்ளும் உதிரம் கறை யாவும் தீர்த்திடும்
தேவ ஆட்டுக்குட்டி வந்தேன் – 2

ஐயையா நான்..

**03** எண்ணம் வெளியே போராட்டங்கள் உட்பயம்
எத்தனை எத்தனையோ இவை
திண்ணம் அகற்றி எளியேனை இரட்சியும்
தேவ ஆட்டுக்குட்டி வந்தேன் – 2

ஐயையா நான்..

## 101. ஒளிதரும் தீபங்கள்

ஒளிதரும் தீபங்கள்
சுடர் வீசும் தீபம் நாம்
கலங்கரை விளக்கைப்போல்
இயேசுவில் ஒளி தருவோம் – 2

**01** மலைமேல் ஜொலித்திடும் மாநகர் போலவே
மண்ணகம் காணவே ஒளியினை வீசுவோம்
ஆண்டவர் இயேசுவின் உறவினில் எரிந்திட
அணையாத ஜோதியாய் சுடரை வீசுவோம் – 2

ஒளிதரும்..

**02** இருளை நீக்கிட ஒளியாய் வந்தவர்
அருள்நிறை ஒளியினை மேதினில் வீசுவோம்
வார்த்தையைப் பிடித்துமே சுடர்களைப் போலவே
எழும்பிப் பாரினில் சுடரை வீசுவோம் – 2

ஒளிதரும்..

**03** ஒளியினில் வாழ்ந்திடும் பரிசுத்தவான்களின்
மகிமையில் சேர்ந்திட வெளிச்சம் வீசுவோம்
இயேசுவின் ஒளியினை பாரினில் வீசியே
ஒளியின் பிள்ளைப்போல் சீராய் வாழுவோம்
பகலின் பிள்ளைப்போல் சீராய் வாழுவோம் – 2

ஒளிதரும்..

## 102. ஒரு தாய் தேற்றுவது போல்

ஒரு தாய் தேற்றுவது போல்
என் நேசர் தேற்றுவார் – அல்லேலூயா – 4

**01** மார்போடு அணைப்பாரே
மனக் கவலை தீர்ப்பாரே

**02** கரம் பிடித்து நடத்துவார்
கன்மலைமேல் நிறுத்துவார்

**03** ஒருபோதும் கைவிடார்
ஒருநாளும் விலகிடார்

## 103. ஒன்றுமில்லை நான் என்றே

ஒன்றுமில்லை நான் என்றே – உணர்ந்திடும்
உண்மை மனம் வேணும் – 2

**01** ஒன்றுமில்லா வெறும் பாத்திரமாய் என்னை
ஒப்புவிக்க வேணும் – ஏசு – 2
என்றனை ஆவியால் முற்றும் நிரப்புவார்
குன்றாதென் ஊழியமே – 2
ஒன்றுமில்லை நான்..

**02** ஏசுவின் ஜீவனே என்றனுள்ளத்தினுள்
இடையூறின்றிப் பாய்ந்திட – என்றன் – 2
மாசுகளான தடைகள் உடையட்டும்
வந்தேன் அவர் பாதமே – 2
ஒன்றுமில்லை நான்..

**03** ஏசுவின் கைகளே என்னை நடத்தட்டும்
யாதொன்றுமில்லையே நான் – அவர் – 2
வாசலில் தூதனாய் காத்திருப்பேன் நிதம்
மகிழ்ந்து பணிசெய்திட – 2

ஒன்றுமில்லை நான்..

**04** தேவன் திருப்புகழ் சொல்லும் கருவியாய்
ஆவதே என் விருப்பம் – நான் – 2
சேவகம் செய்ய உதவாவிடினும்,
அவர் சேவடி கீழிருப்பேன் – 2

ஒன்றுமில்லை நான்..

**05** யாதொன்று மில்லையெனத் தாழ்த்தல்
மனதுக்கு வேதனை தந்திடினும் – என்றும் – 2
எப்போதும் ஏசுவைப் பூலோகம் பார்த்திடப்
புழுதியில் நான் கிடப்பேன் – 2

ஒன்றுமில்லை நான்..

## 104. கண்களை ஏறெடுப்பேன்

கண்களை ஏறெடுப்பேன்
மாமேரு நேராய் என் கண்களை ஏறெடுப்பேன்
விண்மண் உண்டாக்கிய வித்தகனிடமிருந்து – 2
எண்ணிலா வொத்தாசை என்றனுக்கே வரும்

கண்களை..

**01** காலைத் தள்ளாட வொட்டார்
உறங்காது காப்பவர் காலைத் தள்ளாட வொட்டார்
வேலையில் நின் றிஸ்ரயேலரைக் காப்பவர் – 2
காலையும் மாலையும் கண்ணுறங்காரவர்

கண்களை..

**02** பக்தர் நிழல் அவரே என்னை ஆதரித்திடும்
பக்தர் நிழல் அவரே
எக்கால நிலைமையும் என்னைச் சேதப்படுத்தாது – 2
அக்கோலம் கொண்டோனை அக்காவல் புரியவே

கண்களை..

**03** எல்லாத் தீமைகட்கும் என்னை விலக்கிக் காத்தீரே
எல்லாத் தீமைகட்கும்
பொல்லா உலகினில் போக்குவரத்தையும் – 2
நல்லாத்துமாவையும் நாடோறும் காப்பவர்

கண்களை..

## 105. கல்கள் கூப்பிடும்

கல்கள் கூப்பிடும் நீ பேசாவிட்டால் – இந்த
கல்கள் கூப்பிடும் நீ பாடாவிட்டால் 2
ஆபிரகாமின் புத்திரர் என்போர்,
ஆண்டவரை மறந்துவிட்டால் – 2
கல்களால் தன், பிள்ளைகளாக்க
வல்லவர் உண்டு தெரியுமா? – 2

**01** வேதம் கற்று போதிப்போரும்
சத்தியத்தை மறுதலித்தால் – 2
ஆயக்கார பாவிகளும்
பரலோகில் இடம் பெறுவாரே – 2

கல்கள் கூப்பிடும்..

**02** ராஜ்ஜியத்தின் புத்திரர் என்போர்
அழைப்பை அசட்டை பண்ணிவிட்டால் – 2
வேலி அருகே உள்ள மனிதர்
கலியாண சாலை நிரப்புவார் – 2

கல்கள் கூப்பிடும்..

# 106.கலங்கிடாதே நீ

கலங்கிடாதே நீ
திகைத்திடாதே நான்
காக்கும் தேவன் என்றாரே – 2

**01** மனிதர்கள் அன்பு மறைந்து போனாலும்
மாநிலத்தோர் உன்னை மறந்து போனாலும் – 2
மலைகள் விலகி அகன்று போனாலும்
மாறிடாதோர் உந்தன் ஆதாரம் நானே – 2
அலைகள் மோதி படகு அசைந்தால்
அமைதி தரவே வந்திடுவேன் – 2
கலங்கிடாதே நீ..

**02** கவலையால் உள்ளம் கலங்கி போனாலும்
கண்ணீர் உந்தன் உணவானாலும் 2
கஷ்டங்கள் உன்னை சூழ்ந்து கொண்டாலும்
கரம் பிடித்தே உன்னை நடத்திடுவேனே – 2
அலைகள் மோதி படகு அசைந்தால்
அமைதி தரவே வந்திடுவேன் – 2
கலங்கிடாதே நீ..

**03** உந்தனின் கண்ணீர் துருத்தியில் கண்டேன்
உனக்காகவே மனம் உருகியே நின்றேன் – 2
உந்தனை எந்தன் கரமதில் வரைந்தேன்
உனக்காக யாவையும் செய்து முடிப்பேன் – 2
அலைகள் மோதி படகு அசைந்தால்
அமைதி தரவே வந்திடுவேன் – 2
கலங்கிடாதே நீ..

## 107. கர்த்தர் என் ஜீவனும்

கர்த்தர் என் ஜீவனும் பெலனுமானவர்
யாருக்கு அஞ்சிடுவேன்
கர்த்தர் என் கோட்டையும் அரணுமானவர்
நான் யாருக்கு அஞ்சிடுவேன் – 2

**01** கண்மணியைப் போல என்னை காத்த ஆண்டவர்
காலம் காலமாக என்னை காத்து நடத்துவார் – 2
கண்ணீர் கவலை யாவும் வந்து சேர்ந்தபோதும்
கரம் பிடித்து கர்த்தர் என்னைக் காத்து நடத்துவார் – 2
கர்த்தர் என்..

**02** கர்த்தரே என் நம்பிக்கையும் துருகமானவர்
காக்கும் கரம் கொண்டு என்னை அணைத்துக் கொள்ளுவார் – 2
துன்பத்திற்கு நான் பயந்து போவதில்லை
காந்திருந்து பெலனடைந்து சாட்சி பகருவேன் – 2
கர்த்தர் என்..

**03** காத்தரே என் வெளிச்சமும் நீதியானவர்
தீமை என்னை அணுகாமல் காத்துக்கொள்வார் – 2
உள்ளங்கையில் என்னை வரைந்து வைத்துக் கொள்வார்
வல்லகரம் கொண்டு என்னை நடத்துவார் – 2
கர்த்தர் என்..

## 108. கர்த்தாவே இறங்கும்

கர்த்தாவே இறங்கும்
ப்ரசன்னமாகுமேன்
மெய் பக்தர் நெஞ்சில் இப்போதும்
வந்தனல் மூட்டுமேன்

**01** கர்த்தாவே இறங்கும்
நற்சீரைத் தாருமேன்
மா வல்ல க்ரியை காட்டவும்
இந்நேரம் வாருமேன்

**02** கர்த்தாவே இறங்கும்
நம் மீட்பர் நாமமும்
மா சுடர்போல் ப்ரகாசிக்க
பேரன்பைக் காட்டவும்

**03** கர்த்தாவே இறங்கும்
இவ்வருள் வேதத்தை
கேட்போரின் நெஞ்சில் பொழியும்
தேவாசீர்வாதத்தை

**04** கர்த்தாவே இறங்கும்
முன் மாரிபெய்யுமே
விண்மாரி பெற்ற மேன்மையும்
உண்டாகும் உமக்கே

## 109. கர்த்தரின் சத்திய வேதம்

கர்த்தரின் சத்திய வேதம்
நித்தியமான கீதம்
ஜீவனைத் தந்திடும் ஊற்றாம்
நித்தமும் அதனை ஏற்போம் – 2

**01** பேதையை ஞானியாக்கும்
கறைகள் யாவும் நீக்கும்
கடிந்து கொண்டு காக்கும்
கனப்படுத்தி நிற்கும் – 2

**02** பசுமையான பொன்னிலும்
விரும்பத்தக்க வேதமே
தேனிலும் தெளி தேனிலும்
சுவை மிகுந்த வேதமே – 2

**03** கால்களுக்கு தீபமாய்
வழிகளுக்கு ஒளியுமாய் திகழுகின்ற
சத்தியமே – என்றும்
மாறா நித்தியமே – 2

## 110. கர்த்தரின் சத்தம் வல்லமையுள்ளது

கர்த்தரின் சத்தம் வல்லமையுள்ளது
கர்த்தரின் சத்தம் மகத்வம் உள்ளது
திரண்ட தண்ணீர்மேல் ஜலப்ரவாகம் மேல்
தற்பரன் முழங்குகின்றார் – அல்லேலூயா

**01** பலவான்களின் புத்திரரே பரிசுத்த அலங்காரமாய்
கனம் வல்லமை மகிமை கர்த்தருக்கே செலுத்துங்கள்
பிதா குமாரன் இவர்கள் ஆவியின்
புது ஆசீர்வாதம் பெருக

கர்த்தரின் சத்தம்..

**02** கேதுரு மரங்களையும் லீபனோனின் மரங்களையும்
கர்த்தரின் வலிய சத்தம் கோரமாக முறிக்கின்றது
சேனை அதிபன் நமது முன்னிலை
ஜெய வீரராக செல்கிறார்

கர்த்தரின் சத்தம்..

**03** அக்கினி ஜுவாலைகளை அவர் சத்தம் பிளக்கின்றது
காதேஸ் வனாந்திரத்தை கர்த்தர் சத்தம் அதிரப் பண்ணும்
இராஜாவாகவே கர்த்தர் வீற்றிருப்பார்
ராஜரீகமெங்கும் ஜொலிக்கும்

கர்த்தரின் சத்தம்..

**04** பெண் மான்கள் ஈனும்படி பெலத்த கிரியை செய்திடும்
காட்டையும் வெளியாக்கும் கர்த்தரின் வலிய சத்தம்
பெலன் கொடுத்து சமாதானமீந்து
பரன் நம்மை ஆசீர்வதிப்பார்

கர்த்தரின் சத்தம்..

## 111. கர்த்தரின் திருவிருந்து

கர்த்தரின் திருவிருந்து பக்தியோடதை அருந்து – 2
ஆயத்த தோடின்று அதில் சேர்வதே நன்று – 2

**01** சுத்த நல்மனசாட்சி இரத்தத்தால் தெளிக்கப்பட்ட – 2
உத்தம இருதயம் மெத்தவும் அவசியம் 2

கர்த்தரின் திருவிருந்து..

**02** தன்னைத்தான் சோதித்து தன்னையே நிதானித்து – 2
இன்றுநீர் பங்குபெறின் அன்று நியாயம் தீர்க்கப்படீர் – 2

கர்த்தரின் திருவிருந்து..

**03** பொல்லாப்பு துர்க்குணம் இல்லாமல் அகற்றுவீர் – 2
துப்புரவு உண்மையுடன் இப்போ தாசரித்திடுவீர் – 2

கர்த்தரின் திருவிருந்து..

**04** அப்பம் என் சரீரமே இப்பாத்திரம் என் இரத்தமே – 2
தப்பாது பங்கெடுப்பீர் என்றேசு மொழிந்தனரே – 2

கர்த்தரின் திருவிருந்து..

**05** மெய்யாய் நம் நோய்களை மெய்தனில் சுமந்த அப்பம் – 2
வாங்கி நீர் புசித்து நீங்குவீர் வியாதியினின்றும் – 2
கர்த்தரின் திருவிருந்து..

**06** ஜீவனின் இரத்தத்தால் பாவமன் னிப்புண்டாம் – 2
சுத்தமும் ஜீவன்பெற இரத்தத்தை பானம்செய்வீர் – 2
கர்த்தரின் திருவிருந்து..

**07** நமது பஸ்கா இயேசுகிறிஸ்து நமக்காக அடிக்கப்பட்டார் – 2
அதை நினைவுகூறும்படி இதைசெய்வீர் அவர் வந்தபின்னும் – 2
கர்த்தரின் திருவிருந்து..

## 112. கர்த்தரே எம் துணையானீர்

கர்த்தரே எம் துணையானீர்
நித்தமும் என் நிழலானீர்
கர்த்தரே என் துணையானீர்

**01** எத்தனை இடர் வந்து சேர்ந்தாலும்
கர்த்தரே அடைக்கல மாயினார்– 2
மனுமக்களில் இவர் போலுண்டோ
விண்ணுலகிலும் இவர் சிறந்தவர்
கர்த்தரே..

**02** பாவி என்றென்னைப் பலர் தள்ளினார்
ஆவி இல்லை என்றிகழ்ந்தும் விட்டார் – 2
ராஜா உம் அன்பு எனைக் கண்டது
உம்மைப்போல் நான் எங்கும் கண்டதில்லை
கர்த்தரே..

**03** சுற்றத்தாரும் காலத்தில் கைவிட்டார்
நம்பினோரும் எதிராக வந்திட்டார் – 2
கொள்கை கூறியே பலர் பிரிந்திட்டார்
ஐயா, உம்மைப்போல் நான் எங்கும் கண்டதில்லை
கர்த்தரே..

**04** ஆயிரம் நாவுகள் நீர் தந்தாலும்
ராஜனே உமைப் பாடக்கூடுமோ – 2
ஜீவனை உமக்களிக்கின்றேனே
உம்மைப்போல் நான் எங்கும் கண்டதில்லை
கர்த்தரே..

## 113. கர்த்தர் நாமம் என் புகலிடமே

கர்த்தர் நாமம் என் புகலிடமே
கருத்தோடு துதித்திடுவேன் – 2

**01** யேகோவாயீரே எல்லாமே பார்த்துக் கொள்வீர் – 2
கலங்கலப்பா நாங்க கலங்கலப்பா – 2
கர்த்தர் நாமம்..

**02** யேகோவா நிசியே எந்நாளும் வெற்றி தருவீர் – 2
ஸ்தோத்திரமே அப்பா ஸ்தோத்திரமே – 2
கர்த்தர் நாமம்..

**03** யேகோவா ராஃப்பா சுகம்தரும் தெய்வமே – 2
கலங்கலப்பா நாங்க கலங்கலப்பா 2
கர்த்தர் நாமம்..

**04** யேகோவா ரூவா எங்கள் நல்லமேய்ப்பரே – 2
ஸ்தோத்திரமே அப்பா ஸ்தோத்திரமே – 2
கர்த்தர் நாமம்..

# 114. கர்த்தரை நம்பியே ஜீவிப்போம்

கர்த்தரை நம்பியே ஜீவிப்போம்
கவலை கஷ்டங்கள் தீர்ந்திடும்
கைவிடாக் காத்திடும் பரமனின்
கரங்களை நாம் பற்றிக்கொள்வோம்

**01** ஜீவ தேவன் பின் செல்லுவோம்
ஜீவ ஒளிதனைக் கண்டடைவோம் – 2
மனதின் காரிருள் நீங்கிடவே
மா சமாதானம் தங்கும் – 2

கர்த்தரை நம்பியே..

**02** நீதிமானின் சிரசினில்
நித்திய ஆசீர் வந்திறங்குமே – 2
கிருபை நன்மைகள் தொடருமே
கேட்பது கிடைக்குமே 2

கர்த்தரை நம்பியே..

**03** அன்புமிகும் அண்ணலிவர்
அருமை இயேசுவை நெருங்குவோம் – 2
தம்மண்டை வந்தோரை தள்ளிடாரே
தாங்கி அரவணைப்பார் – 2

கர்த்தரை நம்பியே..

**04** உள்ளமதின் பாரமதை
ஊக்கமாய் கர்த்தரிடம் சொல்லுவோம் – 2
இக்கட்டு நேரத்தில் கூப்பிடுவோம்
இயேசு வந்தாதரிப்பார் –2

கர்த்தரை நம்பியே..

**05** இம்மைக்கேற்ற இன்பங்களை
நம்மை விட்டே முற்றும் அகற்றுவோம் – 2
மாறாத சந்தோஷம் தேடிடுவோம்
மறுமை ராஜ்ஜியத்தில் –2

கர்த்தரை நம்பியே..

# 115. கதிரவன் தோன்றும் காலையிதே

கதிரவன் தோன்றும் காலையிதே
புதிய கிருபை பொழிந்திடுதே – நல்
துதி செலுத்திடுவோம் இயேசுவுக்கே

**01** வான சுடர்கள் கானக ஜீவன்
வார்த்திடவே பரன் மாட்சிமையை
காற்று பறவை ஊற்று, நீரோடை
கர்த்தருக்கே கவி பாடிடுதே

கதிரவன்..

**02** காட்டில் கதறி கானக ஓடை
கண்டடையும் வெளிமான்களைப்போல்
தாகம் தீர்க்கும் ஜீவத் தண்ணீராம்
தற்பரன் இயேசுவைத் தேடிடுவோம்

கதிரவன்..

**03** கர்த்தர் கிருபை என்றென்றும் ஓங்க
கர்த்தரே நல்லவர் என்றுரைப்போம்
கேரூபீன்கள் மத்தியில் வாழும்
கர்த்தர் இக்காலையில் எழுந்தருள்வார்

கதிரவன்..

**04** எந்தன் உதடும் உந்தனைப் போற்றும்
என் கரங்கள் குவிந்தே வணங்கும்
பாக்கியம் நான் கண்டடைந்தேனே
யாக்கோபின் தேவனே என் துணையே

கதிரவன்..

**05** காலை விழிப்பே கர்த்தரின் சாயல்
கண்களும் செவியும் காத்திருக்கும்
பாதம் அமர்ந்து வேதமே ருசித்து
கீதங்கள் பாடியே மகிழ்ந்திடுவேன்

கதிரவன்..

**06** வானம் பூமி யாவும் படைத்தீர்
வானம் திறந்தே தோன்றிடுவீர்
ஆவல் அடங்க என்னையும் அழைக்க
ஆத்தும நேசரே வந்திடுவீர்

கதிரவன்..

## 116. காது குருளிரப் பாடுங்கள்

காது குளிரப்பாடுங்கள் கிருபா சத்தியம்
புத்தி தெளியக் காட்டுங்கள் திவ்ய வசனம்
வெல்க சத்திய வேதம் வாழ்க நித்திய வேதம்
அமிர்தமே அற்புதமே திவ்ய சத்தியம் – 2

**01** நல்ல செய்தியைக் கூறுமே கிருபா சத்தியம்
பாவ நாசத்தைக் காட்டுமே திவ்ய வசனம்
வான வருஷமாரி ஞானப் பொக்கிசவாரி

அமிர்தமே..

**02** வேத நாயகர் பொழியும் கிருபா சத்தியம்
ஜீவ மங்கள மொழியும் திவ்ய வசனம்
தேவா எந்தனைப் பாரும்
நித்தம் எந்தனைக் காரும்

அமிர்தமே..

**03** தேவ சாயலில் மாற்றுமே கிருபா சத்தியம்
தேவையற்றதை நீக்குமே திவ்ய வசனம்
தேவ தேவனைப்பாடும்
தேவ ராஜ்ஜியம் சேர்க்கும்

அமிர்தமே..

## 117. காலையில் ஸ்தோத்திர கீதம்

காலையில் ஸ்தோத்திர கீதம்
இந்த வேளையில் வேதத்தின் தியானம் – 2
மாலையில் சங்கீத ராகம்
மாலையில் சங்கீத ராகம் எங்கள்
மகிமையின் தேவனைப் பாடும்
எங்கள் மன்னவன்
இயேசுவின் மூலம் பாடும் பாடும் –2

**01** வாழ்நாளில் ஒன்றைக் கூட்டித் தந்து
வாழ்நாளில் ஒன்றைக் கூட்டித் தந்து – 2
என்னை வாழ வைத்தீரே ஸ்தோத்திரம்
காலையில்..

**02** வேடனின் கண்ணுக்கு தப்புவித்து
வேடனின் கண்ணுக்கு தப்புவித்து – 2
என்னை சிறகால் மூடிக் காத்தீர் ஸ்தோத்திரம்
காலையில்..

**03** ஊன் உடை தந்து ஆதரித்து
ஊன் உடை தந்து ஆதரித்து – 2
எனக்கு உதவி செய்தீரே ஸ்தோத்திரம்
காலையில்..

**04** பலவித நன்மைகள் தந்து
பலவித நன்மைகள் தந்து – 2
என்னை பலவானாக்கினீர் ஸ்தோத்திரம்
காலையில்..

# 118. காலமே தேவனைத் தேடு

காலமே தேவனைத் தேடு – ஜீவ
காருண்யர் பாதம் பணிந்து மன்றாடு
சீலமுடன் பதம் பாடிக்கொண்டாடு
சீரான நித்திய ஜீவனை நாடு

**01** மன்னுயிர்க்காய் மரித்தாரே – மனு
மைந்தனென நாமம் வைத்திருந்தாரே
உன் சிருஷ்டிகரை நீ உதயத்திலெண்ணு
உள்ளங்கனிந்து தனி ஜெபம் பண்ணு
காலமே தேவனை..

**02** பாவச் சோதனைகளை வெல்லு – கெட்ட
பாருடல் பேயுடன் போருக்கு நில்லு
ஜீவ கிரீடஞ் சிரத்திலணிய
சிந்தனை செய், மனுயேலனைப் பணிய
காலமே தேவனை..

**03** சிறுவர்கள் என்னிடஞ்சேரத் – தடை
செய்யா திருங்களென்றார் மனதார
பரலோக செல்வம் அவர்க்குப் பலிக்கும்
பாக்கியமெல்லாம் பரந்து ஜொலிக்கும்
காலமே தேவனை..

**04** வேலையுனக்குக் கைகூட – சத்ய
வேதம் கிருபை வரத்தை மன்றாட
காலை தேடுவோர் எனைக் கண்டடைவாரே
கண்விழித்து ஜெபஞ் செய்யுமென்றாரே
காலமே தேவனை..

## 119. காலம் வேகமாய் ஓடுதே

காலம் வேகமாய் ஓடுதே
கருத்தில்லாமல் வாழ்கின்றேன்
கண்ணும் கருத்துமாய் வாழ்ந்திட
உதவி செய்யும் தேவா – எனக்கு
உணர்வு தாரும் தேவா

**01** உள்ளத்தில் மாற்றம் தேவை – எனக்கு
வெளி வேஷம் என்றும் வேண்டாம்
மறுரூப வாழ்வைத் தந்து என்னை
குணவானாய் மாற்றிவிடும்

**02** கல்வாரிக் காட்சி கண்டேன் – அந்த
காயங்கள் என்னால் என்றேன்
அன்பின் ஆழம் கண்டு – அந்த
அன்புக்கு அடிமை என்றேன்

**03** கண்ணீருடன் ஜெபிக்க எனக்கு
ஜெபத்தின் ஆவி தாரும்
கிருபையின் காலம் இப்போதும்
இயேசுவே அருள்கூர்ந்து எம்மை எழுப்பும்

## 120. காலையும் மாலை எவ்வேளையும்

காலையும் மாலை எவ்வேளையும்
கர்த்தரைக் கருத்துடன் பாடிடுவேன்
பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் எனத் தூதர்
பாடிடும் தொனி கேட்குதே – 2

**01** கர்த்தர் என் வெளிச்சம் ஜீவனின் பெலனும்
கிருபையாய் இரட்சிப்புமானார் – 2
அஞ்சிடாமல் கலங்காமல் பயமின்றி திகிலின்றி
அனுதினம் வாழ்ந்திடுவேன் – 2
காலையும் மாலை..

**02** எனக்கெதிராய் ஓர் பாளையமிறங்கி
என்மேல் ஓர் யுத்தம் வந்தாலும் – 2
பயப்படேன் எதிராளி நிமித்தமாய்
செவ்வையான பாதையில் நடத்திடுவார் – 2
காலையும் மாலை..

**03** ஒன்றை நான் கேட்டேன் அதையே நாடுவேன்
என்றும் தம் மகிமையைக் காண – 2
ஜீவனுள்ள நாளெல்லாம் தம்
ஆலயத்தில் தங்குவதை வாஞ்சித்து நாடிடுவேன் – 2
காலையும் மாலை..

**04** தகப்பனும் தாயும் கைவிட்டாலும் – என்
கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்வார் – 2
எந்தன் உள்ளம் ஸ்திரமாக திடமாக
கர்த்தருக்கே என்றென்றும் காத்திருக்கும் – 2
காலையும் மாலை..

**05** எனக்காக யாவும் செய்து முடிப்பார்
என் கர்த்தர் வாக்கு மாறிடார் – 2
தமக்கென்றும் பயந்திடும் பக்தர் யாவர் விருப்பமும்
தவறாமல் நிறைவேற்றுவார் – 2
காலையும் மாலை..

## 121. காணாத ஆட்டின் பின்னே

காணாத ஆட்டின் பின்னே – கர்த்தர்
கண்ணீருடன் அலைந்தார்
அன்போடு உன்னை அழைக்கின்றாரே
இன்றே திரும்பி நீ வா

**01** முள்ளும் புதரும் காடும் மலையும்
உள்ளம் உடைந்தேசு தேடுகின்றார்
சிற்றின்ப வலையில் சிக்கினதால்
சாத்தான் வலையில் நீ சிறையாகினாய்
காணாத ஆட்டின்..

**02** சுத்த இதயம் வேண்டாம் என்றெண்ணி
கர்த்தரின் அன்பை நீ சந்தேகித்தாய்
யோனாவைப் போல நீ போனாயல்லோ
ஏசுபரன் வாக்கு வெறுத்தாயல்லோ
காணாத ஆட்டின்..

**03** என்னென்ன துன்பம் தொல்லைகள் வந்தும்
இயேசுவின் பாதை நீ விட்டோடாதே
நீதி நிறைந்த தம் கரங்களை
நீட்டி உன்னை தாங்கி பயம் நீக்குவார்
காணாத ஆட்டின்..

**04** துன்மார்க்கரெல்லாம் சன்மார்க்கரோடே
தேவ கோபாக்கினையால் மாள்வாரே
கர்த்தரின் பந்தியில் நீ பங்கடைய
கண்ணீருடன் நீயோ அருள் வேண்டுவாய்
காணாத ஆட்டின்..

**05** எத்தனை நேரம் உன்னை அழைத்தார்
இத்தனை காலம் நீ தள்ளலாமோ
கர்த்தரின் சித்தம் உன் வேளையிதே
கண்டு உணர்ந்து விரைந்தே நீ வா

காணாத ஆட்டின்..

## 122. கிறிஸ்தேசுவின் புண்ணியத்தாலே

கிறிஸ்தேசுவின் புண்ணியத்தாலே
நீதியின் சால்வை அணிந்தோம்
தேவகிருபையின் நன்மையாலே
பணிவுடன் வந்து நிற்கிறோம்
ஆராதிக்க வந்தோம், அன்புகூர வந்தோம்
யேகோவா தேவனையே
துதித்திட வந்தோம் தொழுதிட வந்தோம்
தூயவர் இயேசுவையே

**01** நாமத்தில் கூடுவதே மகிழ்ச்சியைத் தந்திடுதே
உம் நாமத்தில் கூடுவதே அது மகிழ்ச்சியைத் தங்திடுதே
முழுமனதுடனே உம்மைத் துதித்திடவே
கிருபையும் கிடைத்திட்டதே

ஆராதிக்க வந்தோம்..

**02** பலிகளை செலுத்திடவே ஜீவபலியாக மாறிடவே
தூய இருதயத்தை நீர் தந்தீரே
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே

ஆராதிக்க வந்தோம்..

**03** நன்மைகள் செய்தவர்க்கே
நாம் நன்றியை செலுத்துவோமே
எங்களையே, உம் கரங்களிலே
மனப் பூர்வமாய் தருகிறோமே

ஆராதிக்க வந்தோம்..

**04** துதி கனம் மகிமையுமே – நம்
தேவனுக்கு செலுத்துவோமே
இயேசுவின் மாபெரும் பலியினாலே
அவர் சரீரத்தில் இணைவோமே
ஆராதிக்க வந்தோம்.. (3 முறை)

## 123. கிருபையே உன்னை இந்நாள் வரை

கிருபையே உன்னை இந்நாள் வரையும் காத்தது
என் கிருபையே

**01** பாதையில் கஷ்டம் அணுகிடும்போது
பங்கம் வராது நான் உன்னைத் தாங்கினேன்
பெலன் ஈந்தேன் கரத்தால் தூக்கினேன் உன்னை நான்
எந்தன் அன்பினால் உன்னை நிறுத்த
கிருபையே..

**02** சோதனையாலே சோர்ந்திடும்போது
சொந்தமென நான் உன்னைச் சந்தித்தேன்
ஜோதியை உன் முன்னில் ஜொலித்திடச் செய்திட்டேன்
ஜெயகீதங்கள் பாடவைத்திட்டேன்
கிருபையே..

**03** ஏகனாய் நீயும் சஞ்சலத்தாலே
ஏங்கும்போது உன் அண்டை வந்திட்டேன்
ஏற்ற நல்துணையை ஈந்திட்டேன் அல்லோ நான்
என்றும் உன்னை என் சொந்தமாக்கினேன்
கிருபையே..

**04** ஜெயமான பாதை சென்றிடச் செய்தேன்
செப்பமாக உன் கரம் பிடித்தேன்
ஜெய ஜெயகீதங்கள் தொனித்திடச் செய்தேனே
சேவை செய்யவும் கிருபை தந்தேனே

கிருபையே..

**05** என்றென்றுமாக என் கிருபை காட்ட
கொண்டேன் உன்னை இம்மண்ணில் பிரித்து
என் அரும் மகனே காப்பேனே உன்னை நான்
உன் தந்தை நான் உன்னை விடேனே

கிருபையே..

## 124. கிருபையிதே தேவ கிருபையிதே

கிருபையிதே தேவ கிருபையிதே – 2
தாங்கி நடத்தியதே
இயேசுவிலே பொன் நேசரிலே
அகமகிழ்ந்தே நாம் ஆனந்திப்போம்

**01** ஆருயிர் அன்பராய் எங்களுடனே
ஜீவிய பாதையிலே இயேசுபரன்
ஆருயிர் அன்பராய் எங்களுடனே
ஜீவிய பாதையிலே
அனுதினமும் வழி நடந்தே
அவரது நாமத்தில் காத்தனரே

கிருபையிதே..

**02** நல்ல போராட்டம் போராடி ஜெயித்தே
நித்திய ஜீவனை நாம் பெற்றிடவே
நல்ல போராட்டம் போராடி ஜெயித்தே
நித்திய ஜீவனை நாம்....
விசுவாசத்தில் நிலைத்திடுவோம்
அசையாது அழைப்பினை காத்துக்கொள்வோம்

கிருபையிதே..

## 125. குயவரே குயவரே

குயவரே குயவரே படைப்பின் காரணரே
களிமண்ணான என்னையுமே
கண்ணோக்கிப் பார்த்திடுமே – 2

01 வெறுமையான பாத்திரம் நான் வெறுத்து தள்ளாமலே
நிரம்பி வழியும் பாத்திரமாய் விளங்கச் செய்திடுமே – 2
வேதத்தில் காணும் பாத்ரமெல்லாம்
இயேசுவை போற்றிடுமே
என்னையும் அவ்வித பாத்திரமாய்
வனைந்து கொள்ளுமே – 2

குயவரே குயவரே..

02 மண்ணாசையில் நான் மயங்கியே நேர்வழி விட்டகன்றி
கண்போன போக்கை பின்பற்றினேன்
கண்டேன் இல்லை இன்பமே 2
காணாமல் போன பாத்ரம் என்னை
தேடி வந்த தெய்வமே
வாழ்நாளெல்லாம் உம் பாதம் செல்லும்
பாதையில் நடத்திடுமே 2

குயவரே குயவரே..

03 விலை போகாத பாத்திரம் நான் விரும்புவாரில்லையே
விலையில்லா உம் கிருபையால் உகந்த தாக்கிடுமே – 2
தடைகள் யாவும் நீக்கி என்னை
தம்மைப் போல் மாற்றிடுமே
உடைத்து என்னை உந்தனுக்கே
உடைமை ஆக்கிடுமே – 2

குயவரே குயவரே..

# 126. கூடாதது ஒன்றுமில்லையே

கூடாதது ஒன்றுமில்லையே கூடாதது ஒன்றுமில்லையே
என் தேவனால் கூடாதது கூடாதது ஒன்றுமில்லையே – 2
மனுஷரால் கூடாதது தேவனால் கூடுமே – 2
கூடாதது ஒன்றுமில்லையே கூடாதது ஒன்றுமில்லையே

**01** ஒரே ஒரு வார்த்தை சொன்னாரே
வேலைக்காரன் சொஸ்தமானானே 2
சுத்தமாகு என்று சொன்னாரே
குஷ்டரோகி சுத்தமானானே – 2
மனுஷரால் கூடாதது..

**02** லாசருவே வா என்றாரே
மரித்தவன் பிழைத்தானே – 2
எழுந்திரு என்று சொன்னாரே
யவீரு மகள் பிழைத்தாளே – 2
மனுஷரால் கூடாதது..

**03** வஸ்திரத்தை தொட்டாளே,
வல்லமை புறப்பட்டதே 2
எப்பத்தா என்று சொன்னாரே
செவிட்டு ஊமையன் பேசினானே – 2
மனுஷரால் கூடாதது..

**04** கடலின்மேல் நடந்தாரே,
கடும்புயல் அகற்றினாரே – 2
பாடையைத் தொட்டாரே
வாலிபன் பிழைத்தானே – 2
மனுஷரால் கூடாதது..

**05** நீ விசுவாசித்தாலே
தேவ மகிமை காண்பாயே – 2
பெலப்படுத்தும் கிறிஸ்துவாலே
பெரிய காரியம் செய்வாயே 2

மனுஷரால் கூடாதது..

## 127. கூடி மீட்பர் நாமத்தில்

கூடி மீட்பர் நாமத்தில்
அவர் பாதம் பணிவோம்
இயேசுவை இந் நேரத்தில்
கண்டானந்தம் அடைவோம்
ஆ! இன்ப, இன்ப ஆலயம்!
நல் மீட்பர் கிருபாசனம்!
கண்டடைவோம் தரிசனம்
இன்ப இன்ப ஆலயம்!

**01** இரண்டு மூன்று பேர் ஒன்றாய்
கெஞ்சும்போது வருவார்
வாக்குப்போல தயவாய்
ஆசீர்வாதம் தருவார்

ஆ! இன்ப..

**02** சொற்பப் பேராய்க் கூடினும்
கேட்பதெல்லாம் தருவார்
வாக்குப்படி என்றைக்கும்
இயேசு நம்மோடிருப்பார்

ஆ! இன்ப..

# 128. கோதுமை மணி மண்ணில் மடிந்து

கோதுமைமணி மண்ணில் மடிந்து மறுபடியும் எழுவதைப்போல
தேவப் பிள்ளைகள் மரித்துப்போனாலும்
கிறிஸ்துவுக்குள் எழுந்திருப்பார்கள் – 2
நான் கிறிஸ்துவுக்கென்று விதைக்கப்பட்டேன்
நான் கிறிஸ்துவுக்குள்ளாய் பழைத்திருப்போன்
ஒன்றுக்கு நூறாக பலன் தருவேன்
நான் ஒன்றுக்கு நூறாக பலன் தருவேன்
லாலா லலலா லாலலா லாலல்லா – 2

**01** என் நாசியில் சுவாசம் உள்ளவரை
இயேசுவுக்காய் சாட்சிக் கொடுப்பேன்
ஜீவனையே நான் இழக்க நேர்ந்தாலும்
மகிழ்வோடு கையளிப்பேன் – 2
நான் கன்மலையாம் கிறிஸ்துவை
என்கண்முன் கொண்டுள்ளேன் – 2
கவலைகளைத் தள்ளி விட்டு முன்னே நடப்பேன் – உலக – 2
லாலா லலலா லாலலாலாலா லாலலா – 2

**02** தாய் தந்தையின் அன்பை இழந்தாலும்
உறவுகளின் பந்தம் அறுந்தாலும்
என் நேசரின் அன்பில் இருந்து
எதுவும் என்னைப் பிரிக்க மாட்டாதே – 2
நான்விசுவாசப் பந்தயத்தில் ஓடுகிறேன் – 2
எனக்குரிய கிரீடத்தைப் பெற்றிடுவேன் (நான்) – 2
லாலா லலலா லாலலா லாலலா – 2

**03** இயேசுவுக்காக உலகத்தையே குப்பையெனக் கருதி விட்டேன்
இறைவார்த்தையைக் கடைப்படித்து அதன்வழி நடந்திடுவேன் – 2
நான் விசுவாசிப்பவர் இன்னா ரென்று அறிந்திருக்கின்றேன் – 2
ஒப்புக்கொடுத்ததைக் காக்கவல்லவர் நிச்சமாய் சொல்வேன் (நான்) – 2
லாலா லலலா லாலலா லாலலா – 2

## 129. கோடா கோடி ஸ்தோத்திரம்

கோடா கோடி ஸ்தோத்திரம் ஏறெடுப்போம்
இராஜாதி ராஜன் தேவாதி தேவன்
இயேசு கிறிஸ்துவுக்கே மகிமை – 2

**01** பரிசுத்தவான்கள் சபை நடுவே
தரிசிக்கும் தேவ சமூகத்திலே – 2
அல்லேலூயா அல்லேலூயா
ஆவியில் பாடி மகிழுவோம்
ஆண்டவர் இயேசுவை கொண்டாடுவோம் – 2
கோடா கோடி..

**02** கவலைப்படாதீர்கள் என்றுரைத்தீர்
காட்டுப் புஷ்பத்தை உடுத்துவித்தீர் – 2
அல்லேலூயா அல்லேலூயா
ஆடை ஆகாரம் தேவை எல்லாம்
அன்றன்று தந்தெம்மை ஆதரிப்பீர் – 2
கோடா கோடி..

## 130. சபையின் அஸ்திபாரம்

சபையின் அஸ்திபாரம்
நம் மீட்பர் கிறிஸ்துவே
சபையின் அஸ்திபாரம்
அவரின் வார்த்தையே
தம் மணவாட்டியாக
வந்ததைத் தேடினார்
தமக்குச் சொந்தமாக
மரித்ததைக் கொண்டார்

01 எத்தேசத்தார் சேர்ந்தாலும்
சபை ஒன்றே ஒன்றாம்
ஒரே விசுவாசத்தாலும்
ஒரே இரட்சிப்புண்டாம்
ஒரே தெய்வீக நாமம்
சபையை இணைக்கும்
ஓர் திவ்ய ஞானாகாரம்
பக்தரைப் போஷிக்கும்

02 என்றாலும் கர்த்தாவோடு
சபைக்கு ஐக்கியமும்
இளைப்பாறுவோரோடு
இன்ப இணக்கமும்
இப்பாக்ய தூயோரோடு
கர்த்தாவே நாங்களும்
விண்லோகத்தில் உம்மோடு
தங்கக் கடாட்சியும்

## 131. சபையாரே கூடிப்பாடி

சபையாரே கூடிப்பாடி
கர்த்தரை நாம் போற்றுவோம்
பூரிப்பாய் மகிழ் கொண்டாடி
களிகூரக் கடவோம்
ஏசுகிறிஸ்து ஏசுகிறிஸ்து
சாவை வென்று எழுந்தார் - 2

01 சிலுவையில் ஜீவன் விட்டு
பின்பு கல்லறையிலே
தாழ்மையாக வைக்கப்பட்டு
மூன்றாம் நாள் எழுந்தாரே
லோகமீட்பர் லோக மீட்பர்
வெற்றி வேந்தர் ஆனாரே - 2

**02** மீட்பரே நீர் மாட்சியாக
ஜீவனோடெழுந்ததால்
நாங்கள் நீதிமான்களாக
கர்த்தர் முன்னே நிற்பதால்
என்றென்றைக்கும் என்றென்றைக்கும்
உமக்கு மா ஸ்தோத்திரம் – 2

**03** சாவின் ஜெயம் ஜெயமல்ல
தேகம் மண்ணாய் போயினும்
எல்லாம் கீழ்ப்படுத்த வல்ல
கர்த்தர் அதை மீளவும்
ஜீவன் தந்து ஜீவன் தந்து
மறுரூபமாக்குவார் – 2

## 132. சத்திய வேதம் பக்தரின் கீதம்

சத்திய வேதம் பக்தரின் கீதம்
சுத்தர்கள் போகும் பாதையின் தீபம்
உத்தம மார்க்கம் காட்டும்
எத்தனை துன்பம் துயரம் வந்தும்
பக்தனைத் தேற்றிடும் ஔஷதம் – 2

**01** நித்தம் விரும்பும் கர்த்தர் வசனம்
சுத்த பசும் பொன் தெளித்திடும் தேன் – 2
இதயம் மகிழும் கண்கள் தெளியும்
இருண்ட ஆத்மா உயிரடையும் – 2

சத்திய வேதம்..

**02** பேதைகளிடம் ஞானம் அருளும்
வேத புத்தகம் மேன்மை தரும் – 2
இரவும் பகலும் இதனின் தியானம்
இனிமை தங்கும் தனிமையிலும் – 2

சத்திய வேதம்..

**03** வேதப் பிரியர் தேவப் புதல்வர்
சேதமடையா நடந்திடுவார் – 2
இலைகள் உதிரா மரங்கள் போல
இவர்கள் நல்ல கனி தருவார் – 2

சத்திய வேதம்..

**04** உள்ளம் உருக்கும் உறுதி அளிக்கும்
கள்ளங் கபடெல்லாம் அகற்றும் – 2
கடிந்துகொள்ளும் கறைகள் போக்கும்
கனமடைய வழி நடத்தும் – 2

சத்திய வேதம்..

**05** கர்த்தர் வசனம் வல்ல சம்மட்டி
கன்மலையையும் நொறுக்கிடுமே – 2
இதய நினைவை வகையாய் அறுக்கும்
இருபுறமும் கருக்குள்ளதே – 2

சத்திய வேதம்..

**06** வானம் அகலும் பூமி அழியும்
வேத வசனம் நிலைத்திருக்கும் – 2
பரமன் வேதம் எனது செல்வம்
பரவசம் நிதம் அருளும் – 2

சத்திய வேதம்..

## 133. சர்வ சிருஷ்டிக்கும் எஜமானர் நீரே

சர்வ சிருஷ்டிக்கும் எஜமானர் நீரே
சர்வ சிருஷ்டியைக் காப்பவர் நீரே
எங்கள் இதயத்தில் உம்மைப் போற்றிடுவோம்
என்றென்றும் பணிந்து தொழுவோம் – 2
தேவாதி தேவனுக்கே, துதி கனம் மகிமை
கிறிஸ்துவின் மூலமாக என்றென்றும் உண்டாகவே
ஆ ஆ ஆ அல்லேலூயா – 3 ஆமென்

தேவாதி தேவனுக்கே..

**01** வானம் பூமி ஒழிந்துபோனாலும்
உம் வார்த்தைகள் என்றும் மாறாதே
இவ்வாழ்க்கை அழிந்து மறைந்துபோம்
விசுவாசி என்றென்றும் நிலைப்பான் – 2
தேவாதி தேவனுக்கே..

**02** கர்த்தர் கரத்தின் கிரியைகள் நாங்கள்
கிருபை எங்கள் மேல் ஊற்றுவீரே
எங்கள் ஜீவ ஆத்மா உம் சொந்தமே
அதை சாத்தான் தொடாமல் காப்பீரே – 2
தேவாதி தேவனுக்கே..

**03** எல்லா மனிதர்க்கும் ஆண்டவர் நீரே
எல்லா ஆசீர்வாதத்திற்கும் ஊற்றே
எங்கள் இதயத்தை உம்மிடம் படைக்கின்றோம்
ஏங்குகின்றோம் உம் ஆசீர்பெறவே – 2
தேவாதி தேவனுக்கே..

## 134. சிங்கார மாளிகையில்

சிங்கார மாளிகையில்
ஜெய கீதங்கள் பாடிடுவோம்
சீயோன் மணவாளனுடன் – 2

**01** ஆனந்தம் பாடி அன்பரைச் சேர்ந்து
ஆறுதலடைந்திடுவோம் அங்கே
அலங்கார மகிமையின் கிரீடங்கள் சூடி
அன்பரில் மகிழ்ந்திடுவோம் – 2
சிங்கார மாளிகையில்..

**02** துயரப்பட்டவர்கள் துதித்துப்பாடுவார்
துதியின் உடையுடனே அங்கே
உயரமாம் சீயோன் உன்னதரோடு
களித்து கவி பாடுவோம் – 2

சிங்கார மாளிகையில்..

**03** பூமியின் அரசைப் புதுப்பாட்டாய் பாடி
புன்னகை பூத்திடுவோம் புது
எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்பட்டோராய்
மண்ணாசை ஒழித்திடுவோம் – 2

சிங்கார மாளிகையில்..

## 135. சீர் இயேசு நாமம் அதிசய நாமம்

சீர் இயேசு நாமம் அதிசய நாமம்
பாவியெனக்கின்ப நாமம் – 2
எல்லா நாமத்திலும் மேலான நாமம்
பக்தர் தினம் போற்றும் நாமம் – 2
எல்லா முழங்காலும் முடங்கிடச் செய்யும்
வல்லவராம் இயேசு நாமம் – 2

சீர் இயேசு..

**01** பாவ பரிகாரம் பாதகர்க்கு நல்க
பாரிடத்தில் வந்த நாமம் – 2
பாவமற்ற ஜீவியத்தை மாதிரியாய் காட்டித்தந்த
பாவம் தீர்க்கும் புண்ணிய நாமம் – 2

சீர் இயேசு..

**02** நேற்றும் இன்றும் என்றும் மாறாத நாமம்
சாற்றும் துதி ஏற்றும் நாமம் – 2
போற்றும் பக்தர் சபையில் அவயமானோரை
பரிசுத்தம் செய்யும் நாமம் – 2

சீர் இயேசு..

**03** ஏகமனதோடு கூடுமிடமெங்கும்
வந்து ஆசீர் தரும் நாமம் – 2
ஜீவ வார்த்தை தந்து ஜீவித்திட கிருபை
அளித்திட்ட அன்பர் நாமம் – 2

சீர் இயேசு..

## 136. சீயோனிலே என் திட அஸ்திபாரம்

சீயோனிலே என் திட அஸ்திபாரம் கிறிஸ்துவே
அவர் நான் என்றும் நம்பும் கன்மலை – 2

**01** கலங்கிடுவேனோ பதறிடுவேனோ
கர்த்தரில் விசுவாசம் இருக்கையிலே – 2
அசையா என் நம்பிக்கை நங்கூரமே
இயேசுவில் மாத்திரமே – 2

சீயோனிலே என்..

**02** மா பரிசுத்த விசுவாசத்தாலே
மா பரிசுத்த ஸ்தலம் ஏகிடவே – 2
திரை வழியாம் தன் சரீரத்தினால்
திறந்தாரே தூய வழி – 2

சீயோனிலே என்..

**03** நான் விசுவாசிப்போர் இன்னாரென்றறிவேன்
என்னையே படைத்திட்டேன் அவர் கரத்தில் – 2
முடிவுவரை என்னை நடத்திடுவார்
முற்றுமாய் இரட்சிப்பாரே 2

சீயோனிலே என்..

# 137. ஜீவனுள்ள கர்த்தரே வாரும்

ஜீவனுள்ள கர்த்தரே வாரும்
ஜீவப்பாதையிலே நடத்தும்
ஜீவ தண்ணீர் ஊறும் ஊற்றிலே
ஜீவன் பெற என்னை நடத்தும்
தேவனே நீர் பெரியவர் தேவனே நீர் பரிசுத்தர்
இயேசுவே நீர் நல்லவர் கிறிஸ்துவே நீர் வல்லவர் – 2

**01** பாவிகள் துரோகிகள் ஐயா
பாவ ஆதாம் மக்களே தூயா
பாதகர் என் பாவம் போக்கவே
பாதகன்போல் தொங்கினீரல்லோ

இயேசுவே நீர்..

**02** ஐந்து கண்ட மக்களுக்காக
ஐந்து காயமேற்ற நேசரே
நொந்துருகி வந்த மக்கள் மேல்
நேச ஆவி வீசச் செய்குவீர்

இயேசுவே நீர்..

**03** வாக்குத் தத்தம் செய்த கர்த்தரே
வாக்கு மாறா உண்மை நாதனே
வாக்கை நம்பி வந்து நிற்கிறோம்
ஆவியின் நிறைவைத் தாருமே

இயேசுவே நீர்..

**04** நியாயத்தீர்ப்பின் நாளும் வந்ததே
நேசர் வந்த காலமிதுவே
மாயலோகை நம்பி மாண்டிடும்
மானிடரை மீட்க வந்தீரே

இயேசுவே நீர்..

## 138. சேனைகளின் கர்த்தர் நல்லவரே

சேனைகளின் கர்த்தர் நல்லவரே
சேதமின்றி நம்மை காப்பவரே
சோர்ந்திடும் நேரங்கள் தேற்றிடும் வாக்குகள்
சோதனை வென்றிடத் தந்தருள்வார்

எக்காலத்தும் நம்பிடுவோம்
திக்கற்ற மக்களின் மறைவிடம்
பக்க பலம் பாதுகாப்பும்
இக்கட்டில் இயேசுவே அடைக்கலம் – 2

**01** வெள்ளங்கள் புரண்டு மோதினாலும்
உள்ளத்தின் உறுதி அசையாதே
ஏழு மடங்கு நெருப்பு நடுவிலும்
இயேசு நம்மோடங்கு நடக்கின்றார்

எக்காலத்தும்..

**02** ஆழத்தினின்று நாம் கூப்பிடுவோம்
ஆத்திரமாய் வந்து தப்புவிப்பார்
கப்பலின் பின்னணி நித்திரை செய்திடும்
கர்த்தர் நம்மோடங்கு கவலையேன்

எக்காலத்தும்..

## 139. சேனைகளின் தேவன்

சேனைகளின் தேவன் நம்மோடு இருக்கின்றார்
நல்லவர் அவர் வல்லவர் அடைக்கலமானவர்

**01** எரிக்கோ போன்ற சோதனைகள்
எதிரிட்டு வந்தாலும்
தகர்த்திடுவார் நொறுக்கிடுவார்
ஜெயத்தைத் தந்திடுவார்

**02** சேனைகளின் கர்த்தரை நம்பிடுவோம்
பாக்கியம் அடைந்திடுவோம்
உயர்த்திடுவார் தாங்கிடுவார்
நன்மையால் நிரப்பிடுவார்

## 140. சேனை அதிபன் நமது கர்த்தருக்கே

சேனை அதிபன் நமது கர்த்தருக்கே
செலுத்துவோம் கனமும் மகிமையுமே
அற்புதமே தம் அன்பெமக்கு – அதை
அறிந்தே அகமகிழ்வோம்;
ஜெயகிறிஸ்து முன் செல்லுகிறார்
ஜெயமாக நடத்திடுவார்
ஜெயக் கீதங்கள் நாம் பாடியே
ஜெயக் கொடியும் ஏற்றிடுவோம்
ஜெயம் அல்லேலூயா அவர் நாமத்திற்கே

**01** தாய் மறந்தாலும் நான் மறவேன்
திக்கற்றோராய் விட்டுவிடேன்
என்றுரைத்தெம்மைத் தேற்றுகிறார்
என்றும் வாக்கு மாறிடாரே

**02** மேய்ப்பனில்லாத ஆடுகட்கே
நானே நல்ல மேய்ப்பன் என்றார்
இன்ப சத்தம் பின் சென்றிடுவோம்
இன்பப் பாதை காட்டிவார்

**03** சத்துருவின் கோட்டை தகர்ந் தொழிய
சத்தியம் நித்தியம் நிலைத்தோங்க
சாத்தானின் சேனை நடுங்கிடவே – துதி
சாற்றி ஆர்ப்பரிப்போம்

**04** கறைதிரை முற்றும் நீங்கிடவே
கர்த்தர் நம்மைக் கழுவிடுவார்
வருகையில் எம்மைச் சேர்க்கும் வரை
வழுவாமல் காத்துக் கொள்வார்

## 141. ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா

ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா
ஜெபத்தின் வாஞ்சை தந்தருளும்
ஜெபத்திலே தரித்திருந்து
ஜெபத்தின் மேன்மை காணச் செய்வீர்

ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கு இதுவே சட்டம் – 2

**01** ஊக்கத்துடனே ஓர் மனமாய்
வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கொண்டு
நோக்கத்தை யெல்லாம் நேர்மையாக்கி
கேட்கும்படி கிருபை செய்யும்

ஜெபமே ஜீவன்..

**02** ஆகாத நோக்கம் சிந்தனையை
அகற்றும் எங்கள் நெஞ்சைவிட்டு
வாகானதாக்கும் மனமெல்லாம்
கருத்துடனே வேண்டிக்கொள்வோம்

ஜெபமே ஜீவன்..

**03** இடைவிடாமல் ஜெபம் செய்ய
இடையூரெல்லாம் நீக்கி விடும்
சடைப்பில்லாமல் உம்தன் பாதம்
கடைசி மட்டும் காத்திருப்போம்

ஜெபமே ஜீவன்..

## 142. ஜெயராஜ கொடி ஏற்றிக்காட்டவே

ஜெயராஜ கொடி ஏற்றிக்காட்டவே
அமராடச் செல்லுவோம்
வெற்றிமாலை சூடி ஜெயம்பெறவே
பூரிப்போடு பாடுவோம்
செல்லுவோம் – வெல்லுவோம் இயேசுநாதர் மூலமாய்
வெற்றி சிறப்பார் – ஆளுவார் பூமி எங்கும் ஜோதியாய்

**01** எதிர்சேனை சீறிப் பாய்ந்தோடியும்
ராஜகொடி காட்டுவோம்
திரளான கூட்டம் தடுத்திரைந்தும்
வெற்றி சிறந்தேறுவோம்

செல்லுவோம்..

**02** எந்த தேச ஜாதி பாஷைக்காரரும்
சுவிசேஷம் கேட்கையில்
ஏசுநாதர் ஜெயகோலம் வரவும்
என்று சொல்வார்களாக

செல்லுவோம்..

**03** அந்த நல்ல காலம் பிறந்தாயிற்றே
ராஜரீகம் செய்கிறார்
அவபக்தி யாவும் ஒழிந்திடவே
நீதி முறை நாட்டுவார்

செல்லுவோம்..

## 143. ஜெயம் கொடுக்கும் தேவனுக்கு

ஜெயம் கொடுக்கும் தேவனுக்கு
கோடி கோடி ஸ்தோத்திரம்
வாழ்வளிக்கும் இயேசு ராஜாவுக்கு
வாழ்நாளெல்லாம் ஸ்தோத்திரம் – 2
அல்லேலூயா அல்லேலூயா பாடுவேன்
ஆனந்த தொனியால் உயர்த்துவேன் – 2
ஜெயம் கொடுக்கும்..

**01** நீதியின் கரத்தினால் தாங்கியே நடத்துவார் – 2
கர்த்தரே என் பெலன் எதற்குமே அஞ்சிடேன் – 2
ஜெயம் கொடுக்கும்..

**02** அற்புதம் செய்பவர் அகிலம் படைத்தவர் – 2
யுத்தத்தில் வல்லவர் மீட்பர் ஜெயிக்கிறார் – 2
ஜெயம் கொடுக்கும்..

**03** நம்பிக்கை தேவனே நன்மைகள் அளிப்பவர் – 2
வார்த்தையை அனுப்பியே மகிமைப்படுத்துவார் – 2
ஜெயம் கொடுக்கும்..

## 144. சோர்ந்து போகாதே மனமே

சோர்ந்து போகாதே மனமே
சோர்ந்து போகாதே போராட
கண்டுனை அழைத்த தேவன்
கைவிடுவாரோ

**01** வாக்களித்த தேவனை நீ பாடிக்கொண்டாடு
ஊக்கமான ஆவி உன்னைத் தாங்க மன்றாடு

**02** துன்பங்கள் தொல்லைகள் உன்னை சூழ்ந்து கொண்டாலும்
அன்பர் உன்னைத் தேற்றும் நேரம்
ஆனந்தமல்லோ

**03** சோதனைகளை ஜெயிப்போன் பாக்கியவானல்லோ
ஜீவ கிரீடம் சூடும் நேரம் என்ன பேரின்பம்

## 145. ஸ்தோத்திரம் இயேசு நாதா

ஸ்தோத்திரம் இயேசு நாதா
உமக்கென்றும் ஸ்தோத்திரம் இயேசு நாதா
ஸ்தோத்திரம் செய்கின்றோம் நின்னடியார்
திருநாமத்தின் ஆதரவில் – 2

**01** வானதூதர் சேனைகள் மனோகர கீதங்களால் எப்போதும்
ஓய்வின்றிப் பாடி துதிக்கவே பெறும் மன்னவரே உமக்கு – 2
ஸ்தோத்திரம் இயேசு..

**02** எத்தனை மகத்துவமுள்ள பதவி
இவ்வேழைகள் எங்களுக்கு – 2
எத்தனை மாதயவு நின் கிருபை எத்தனை ஆச்சரியம் – 2
ஸ்தோத்திரம் இயேசு..

**03** நின் உதிரமதினால் திறந்த நின் ஜீவ புதுவழியாம் – 2
நின் அடியார்க்கு பிதாவின் சந்நிதி சேரவுமே சந்ததம் – 2
ஸ்தோத்திரம் இயேசு..

**04** இன்றைத் தினமதிலும் ஒருமித்து கூட உம் நாமத்தினால் – 2
தந்த நின் கிருபைக்காய் உமக்கென்றும்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே! – 2
ஸ்தோத்திரம் இயேசு..

**05** நீரல்லால் எங்களுக்குப் பரலோகில் யாருண்டு ஜீவநாதா – 2
நீரேயன்றி இகத்தில் வேறேயொரு தேற்றமில்லை பரனே! – 2
ஸ்தோத்திரம் இயேசு..

## 146. ஸ்தோத்திரம் துதி பாத்திரா உம்மை

ஸ்தோத்திரம் துதி பாத்திரா உம்மை
இன்றும் என்றும் துதித்திடுவேன்
காத்தீரே எம்மைக் கருத்தாக
வழுவாமல் எம்மை உமக்காக
கொடுத்தீர் மைந்தனை எமக்காக
எடுத்தீர் எம்மையும் உமக்காக

**01** சர்வ வல்ல என் தேவா ஸ்தோத்திரம்
துதியே துதியே துதித்திடுவோம்
எல்லாக் குறையும் தீர்த்தீரே
தொல்லை யாவும் தொலைத்தீரே – 2
அல்லல் யாவும் அறுத்தீரே – 2
அலைந்த எம்மையும் மீட்டீரே
ஸ்தோத்திரம் துதி..

**02** நம்பினோரைக் காக்கும் தேவா
துதியே துதியே துதித்திடுவோம்
அம்புவி யாவும் படைத்தீரே
அம்பரா உந்தன் வாக்காலே – 2
எம்பரா எல்லாம் ஈந்தீரே 2
நம்பினோர்குந்தன் தயவாலே
ஸ்தோத்திரம் துதி..

**03** அன்பின் தேவா ஸ்தோத்திரமே
துதியே துதியே துதித்திடுவோம்
அகில சிருஷ்டிகளும் துதிக்க
அடிமைகள் துதியாதிருப்பேமோ – 2
அல்லும் பகலும் நித்தியமாய் – 2
அன்பே உம்மையே துதித்திடுவோம்
ஸ்தோத்திரம் துதி..

## 147. ஸ்தோத்திர பாத்திரனே தேவா

ஸ்தோத்திர பாத்திரனே தேவா
ஸ்தோத்திரம் துதியுமக்கே
நேத்திரம் போல் முழு ராத்திரியுங் காத்தோய்
ஸ்தோத்திரம் துதியுமக்கே

**01** சத்துரு பயங்களின்றி – நல்ல
நித்திரை செய்யவெமை
பத்திரமாய்ச் சீராட்டியுறக்கியே
சுற்றிலும் கோட்டையானாய்

**02** விடிந்திருள் ஏகும்வரை – கண்ணின்
விழைகளை மூடாமல்
துடிதாய் தந்தை போல் படிமிசை எமது
துணை எனக் காத்தவனே

**03** காரிருள் அகன்றிடவே நல்ல
கதிரொளி திகழிடவே
பாரிதைப் புரட்டி உருளச்செய்தே கன
பாங்கு சீராக்கி வைத்தாய்

**04** இன்றைய தினமிதிலும் – செய்கைகள்
எந்தெந்த வகைகளிலும்
உம்திரு மறைப்படி ஒழுகிட எமக்கருள்
ஊன்றியே காத்துக்கொள்வாய்

## 148. ஸ்தோத்திரம் செய்வேனே

ஸ்தோத்திரம் செய்வேனே இரட்சகனைத்
ஸ்தோத்திரம் செய்வேனே – 3
பாத்திரமாக இம்மாத்ரம் கருணைவைத்த
பார்த்திபனை, யூதக் கோத்திரனை, என்றும்
ஸ்தோத்திரம்..

**01** அன்னை மரி சுதனை
புல் மீது அமிழ்ந்துக் கழுதவனை – 3
முன்னணை மீதுற்ற சின்னக் குமாரனை – 2
முன்னுரை நூற்படி இந்நிலத் துற்றோனை
ஸ்தோத்திரம்..

**02** கந்தை பொதிந்தவனை
வானோர்களும் வந்தடி பணிபவனை – 3
மந்தையர்க் கானந்த மாட்சியளித்தோனை – 2
வானபரன் என்னும் ஞான குணவானை
ஸ்தோத்திரம்..

**03** செம்பொன் னுருவானைத்
தேசிகர்கள் தேடும் குருவானை – 3
அம்பர மேவிய உம்பர் கணத்தோடு – 2
அன்பு பெற நின்று பைம் பொன் மலர் தூவி
ஸ்தோத்திரம்..

## 149. தந்தேன் என்னை இயேசுவே

தந்தேன் என்னை இயேசுவே
இந்த நேரமே உமக்கே – 2
உந்தனுக்கே ஊழியஞ்செய்யத்
தந்தேன் என்னைத் தாங்கியருளும் – 2

தந்தேன் என்னை..

**01** ஜீவகாலம் முழுவதும்
தேவபணி செய்திடுவேன் – 2
பூவில் கடும் போர் புரிகையில்
காவும் உந்தங் கரத்தினில் வைத்து – 2

தந்தேன் என்னை..

**02** உலகோர் என்னை நெருங்கிப்
பலமாய் யுத்தம் செய்திடினும் – 2
நலமாய்ச் சர்வ ஆயுதம் பூண்டு
நானிலத்தினில் நாதா வெல்லுவேன் – 2

தந்தேன் என்னை..

**03** உந்தன் சித்தமே செய்வேன்
என்றன் சித்தம் ஒழித்திடுவேன் – 2
எந்த இடம் எனக்குக் காட்டினும்
இயேசுவே, அங்கே இதோ போகிறேன் – 2

தந்தேன் என்னை..

**04** கஷ்டம் நஷ்டம் வந்தாலும்
துஷ்டர் கூடிச் சூழ்ந்திட்டாலும் – 2
அண்டசராசரம் ஆளும் தேவனே
அடியேன் உம்மில் அமரச் செய்திடும் – 2

தந்தேன் என்னை..

**05** ஒன்றுமில்லை நான் ஐயா
உம்மாலன்றி ஒன்றும் செய்யேன் – 2
அன்று சீஷர்க்களித்த ஆவியால்
இன்றே அடியேனை நிரப்பும் – 2

தந்தேன் என்னை..

## 150. தந்தானை துதிப்போமே

தந்தானை துதிப்போமே
திருச்சபையாரே, கவி – பாடிப்பாடி
தந்தானை துதிப்போமே
விந்தையாய் நமக்கனந் தனந்தமான
விள்ளற்கரியதோர் நன்மை மிகமிகத்
தந்தானை துதிப்போமே

**01** ஒய்யாரத்துச் சீயோனே – நீயும்
மெய்யாகக் களிகூர்ந்து நேர்ந்து
ஐயனேசுக்குநின் கையைக் கூப்பித் துதி
செய்குவையே, மகிழ்கொள்ளுவையே – நாமும்

தந்தானை..

**02** கண்ணாரக் களித்தாயே – நன்மைக்
காட்சியைக் கண்டு ருசித்துப் புசித்து
எண்ணுக் கடங்காத எத்தனையோ நன்மை
இன்னுமுன்மேற் சோனாமாரி போற் பெய்துமே

தந்தானை..

**03** சுத்தாங்கத்து நற்சபையே – உனை
முற்றாய்க் கொள்ளவே அலைந்து திரிந்து
சத்துக் குலைந்துனைச் சத்தியாக்கத் தம்மின்
ரத்தத்தைச் சிந்தி எடுத்தே உயிர் வரம்

தந்தானை..

**04** தூரம் திரிந்த சீயோனே – உனைத்
தூக்கியெடுத்துக் கரத்தினிலேந்தி
ஆரங்கள் பூட்டி அலங்கரித்து நினை
அத்தன் மணவாட்டி யாக்கினது என்ன

தந்தானை..

**05** சிங்காரக் கன்னிமாரே – உம்
அலங்காரக் கும்மி அடித்துப் படித்து
மங்காத உன் மணவாளன் யேசுதனை என்றும்
வாழ்த்தி வாழ்த்தி ஏத்திப் பணிந்திடும்

தந்தானை..

## 151. தம் கிருபை பெரிதல்லோ

தம் கிருபை பெரிதல்லோ
எம் ஜீவனிலும் அதே
இம்மட்டும் காத்ததுவே
இன்னும் தேவை கிருபை தாருமே – 2

**01** தாழ்மையுள்ளவரிடம் தங்கிடுதே கிருபை – 2
வாழ் நாளெல்லாம் அது போதுமே
சுகமுடன் தம் பெலமுடன்
சேவை செய்ய கிருபை தாருமே – 2

தம் கிருபை..

**02** நிர்மூலமாகாததும் நிற்பதுமோ கிருபை – 2
நீசன் என் பாவம் நீங்கினதே
அழியா ஜீவன் பெற்றிடவே
காத்துக் கொள்ள கிருபை தாருமே – 2

தம் கிருபை..

**03** தினம் அதிகாலையில் தேடும் புது கிருபை – 2
மனம் தளர்ந்த நேரத்திலும்
பெலவீன சரீரத்திலும்
போதுமே உம் கிருபை தாருமே – 2

தம் கிருபை..

**04** ஸ்தோத்திர ஜெபத்தினால் பெருகுதே கிருபை – 2
ஆத்தும பாரம் கண்ணீரோடே
சோர்வின்றி நானும் வேண்டிடவே
ஜெபவரம் கிருபை தாருமே – 2

தம் கிருபை..

## 152. தனியாய் எங்கும் அலைந்தேனே

தனியாய் எங்கும் அலைந்தேனே
உறவுகள் இல்லை ஏங்கி நின்றேன்
குப்பை என்று கருதப்பட்டேன்
கர்த்தர் என்னை கரம் பிடித்தார் – 2

தனியாய் எங்கும்..

**01** நான் ஒரு தனிமரமாகவே இருந்தேன்
சொந்தமாய் என்னிடம் ஒன்றுமில்லை – 2
கனியற்ற மரமாய் சோர்வடைந்தேன்
பயனுள்ள மரமாய் தழைக்கச் செய்தார் – 2

தனியாய் எங்கும்..

**02** பரிசுத்தமாய் நான் வாழ்ந்திடுவேனே
இயேசுவின் பாதத்தில் அமர்ந்திடுவேன் – 2
அறுபதும் நூறுமாய் பலன் தருவேன்
அவருக்காய் செழிப்பாய் வளர்ந்திடுவேன் – 2

தனியாய் எங்கும்..

## 153. தாரும் சுத்த ஆவி தாரும்

தாரும் சுத்த ஆவி தாரும்
எங்கள் ஆத்துமத்திலே
எங்களுக்குயிரைத் தாரும்
பரிசுத்த தந்தையே
ஞான தீபம் – 3
தேவனே நீர் ஏற்றுமே – 2

**01** எங்கள் நெஞ்சில் நல்ல புத்தி
தேவ பக்தி தோன்றவே
அதை நீர் குணப்படுத்தி
தப்பு சிந்தையானதை
மாற்றத் தாரும் – 3
நல்ல தேவ ஆவியை – 2

**02** நீதி மார்க்கத்தில் எதிர்த்து
நிற்கும் எவ்விரோதமும்
நீங்க எங்களைக் காப்பாற்றி
நல்லோராக்கியருளும்
கால் தள்ளாடி – 3
போகில் நீரே இரட்சியும் 2

**03** நெஞ்சு என்னிலே கலங்கி
தேவனே நீர் இரட்சியும்
என்று கெஞ்சும் போதிறங்கி
என்னைத் தேற்றிக் கொண்டிரும்
துன்பம் நீங்க – 3
நீர் சகாயராய் இரும் – 2

## 154. திருக்கரத்தால் தாங்கியென்னை

திருக்கரத்தால் தாங்கியென்னை
திரு சித்தம்போல் நடத்திடுமே
குயவன் கையில் களிமண் நான்
அனுதினம் நீர் வனைந்திடுமே – 2

**01** உம் வசனம் தியானிக்கையில்
இதயமதில் ஆறுதலே
காரிருளில் நடக்கையிலே
தீபமாக வழிநடத்தும் – 2

**02** ஆழ்கடலில் அலைகளினால்
அசையும்போது என் படகில்
ஆத்ம நண்பர் இயேசு உண்டு
சேர்ந்திடுவேன் அவர் சமூகம் – 2

**03** அவர் நமக்காய் ஜீவன் தந்து
அளித்தனரே இந்த மீட்பு
கண்களினால் காண்கிறேனே
இன்ப கானான் தேசமதை – 2

## 155. திருப்பாதம் நம்பி வந்தேன்

திருப்பாதம் நம்பி வந்தேன்
கிருபை நிறை இயேசுவே
தமதன்பைக் கண்டடைந்தேன்
தேவ சமூகத்திலே

01 இளைப்பாறுதல் தரும் தேவா
களைத்தோரைத் தேற்றிடுமே
சிலுவை நிழல் எந்தன் தஞ்சம்
சுகமாய் அங்கு தங்கிடுவேன்

திருப்பாதம்..

02 என்னை நோக்கிக் கூப்பிடு என்றீர்
இன்னல் துன்ப நேரத்திலும்
கருத்தாய் விசாரித்து என்றும்
கனிவோடெம்மை நோக்கிடுமே

திருப்பாதம்..

03 மனம் மாற மாந்தன் நீர் அல்ல
மன வேண்டுதல் கேட்டிடும்
எனதுள்ளம் ஊற்றி ஜெபித்தே
இயேசுவே உம்மை அண்டிடுவேன்

திருப்பாதம்..

04 என்னைக் கைவிடாதிரும் நாதா
என்ன நிந்தை நேரிடினும்
உமக்காக யாவும் சகிப்பேன்
உமது பெலன் ஈந்திடுமே

திருப்பாதம்..

## 156. திவ்ய ஆசீர் பொழிந்தருள்வீர்

(ராகம்: எந்தன் நாவில் புதுப்பாட்டு..)

திவ்ய ஆசீர் பொழிந்தருள்வீர்
தெய்வ தந்தாய் எகோவாவே – 2
ஆஹா! ஆனந்த பாக்யமே மறைவழி செல்வது
ஆவலுள்ள யாவருக்கும் அல்லேலூயா ...

ஆனந்த பாக்யமே..

**01** வாசம் வீசும் நேசமுள்ள பூக்களாக்குவீர்
நேசர் இயேசு ராஜன் மூலம் தாசராக்குவீர் – 2
ஆனந்த பாக்யமே..

**02** சிந்தை நோயும் நிந்தை யாவும் விலகி ஓடவே
தந்தை நீரே உந்தன் சொந்தப் பிள்ளை ஆயினோம் – 2
ஆனந்த பாக்யமே..

**03** முற்றும் உம்மைப் பற்றும் நேசப் பாத்ரமாக்குவீர்
கற்று வேதம் காட்டும் பாதை நிற்கச் செய்குவீர் – 2
ஆனந்த பாக்யமே..

**04** நேற்றும் இன்றும் எம்மைக் காக்கும் அன்பின் தந்தையே
சாற்றும் சத்ய பாதை தன்னில் நடத்திடுவீர் – 2
ஆனந்த பாக்யமே..

## 157. திவ்ய அன்பின் சத்தத்தை

திவ்ய அன்பின் சத்தத்தை இரட்சகா
கேட்டு உம்மை அண்டினேன்
இன்னும் கிட்டிச் சேர என் ஆண்டவா
ஆவல் கொண்டிதோ வந்தேன்
இன்னும் கிட்ட சேர்த்துக் கொள்ளுமேன்
பாடுபட்ட நாயகா
ஜீவன் தந்த இரட்சகா

**01** என்னை முற்றுமே இந்த நேரத்தில்
சொந்தமாக்கிக் கொள்ளுமேன்
உம்மை வாஞ்சையோடெந்தன் உள்ளத்தில்
நாடித் தேடச் செய்யுமேன்

**02** திருப்பாதத்தில் தங்கும் போதெல்லாம்
பேரானந்தம் காண்கிறேன்
உம்மை நோக்கி வேண்டுதல் செய்கையில்
மெய் சந்தோஷமாகிறேன்

**03** இன்னும் கண்டிராத பேரின்பத்தை
விண்ணில் பெற்று வாழுவேன்
திவ்ய அன்பின் ஆழமும் நீளமும்
அங்கே கண்டானந்திப்பேன்

## 158. தித்திக்கும் தூதாயிமே

தித்திக்கும் தூதாயிமே
தேவ தேவ குமாரனவர்
பள்ளத்தாக்கின் லீலி சாரோனின் ரோஜா
உன்னை அழைக்கின்றாரே

**01** வீணான ஆசைகள் விட்டோடவே
வீடும் உலகும் வெறுத்திடு – 2
பாவ சாயலில் வந்தவரே
பலியாகவே வந்தாரே 2

தித்திக்கும்..

**02** சகோதரர் யாவரும் ஒன்றாகவே
வாசம் செய்வது இனிமையே – 2
ஆரோனின் தைலமே பனிமழை
பலி ஜீவ உடன்பாடே – 2

தித்திக்கும்..

**03** ஜீவன் வழியெல்லாம் அன்பாம் வழி
தேவாதி தேவ சுதன் வழி – 2
இயேசு பின்னாலே இணைவோமே நாம்
இரட்சண்யம் பெற்றிடவே – 2

தித்திக்கும்..

04 யாதும் எடுத்திங்கே வந்தோமில்லை
யாதும் எடுத்தேகுவதில்லை – 2
பாவ ஜீவனை விட்டு விட்டு
ஜீவநதி சேர்வோமே – 2

தித்திக்கும்..

## 159. தீயன் ஆயினேன் ஐயா

தீயன் ஆயினேன் ஐயா எளியேன்
தீவினை அனைத்தும் தீரும்
தேவரீர் மேலே என் பாரம்
தீயன் ஆயினேன்

மாயவலை வீசுவலை பேயின் வினைதீர
நேயமுடனே உறுசகாயனாய் எமக்கென்றிங்கு
நிச்சயித்தெழுந்த எங்கள்
அச்சயா, திருக்குமாரா

தீயன் ஆயினேன்..

01 நன்மை செய்யவே நான் நினைத்தாலும், என்
தன்மை வேறதாய்ப் பின்னம் ஆகுமே
என்ன என்தன் நீதி கந்தை அன்ன அருவருப்பாமே
எத்தனை ஆனாலும் உந்தன் சித்தம் வைத்து அனுக்கிரகிப்பீர்

தீயன் ஆயினேன்..

02 பாவமீறி என் ஆவி தள்ளாடி நற்
ஜீவ பாதையைத் தாவி ஓடியே
ஆவலாய் அழி வுறும் துர்ச்சாவின் வழியே தொடர்ந்து
அக்கிரமச் செய்கைகளில் சிக்கினேன் ஐயா, உம் தஞ்சம்

தீயன் ஆயினேன்..

**03** தீது செய்பவன் தேவன் முன்னே உத்ர
வாதியாய் உறு நீதம் உண்டென
போதம் உற வேத நெறி ஓதிய இயேசு நாதா, உன்
புண்ணியத்தால் என்னை உய்யப் பண்ணிடக் கிருபை செய்வாய்
தீயன் ஆயினேன்..

## 160. தீயோர் சொல்வதைக் கேளாமல்

(ராகம்: பாவ சஞ்சலத்தை நீக்க..)

தீயோர் சொல்வதைக் கேளாமல்
பாவத்துக்கு விலகி
பரிகாசரைத் சேராமல்
நல்லாரோடு பழகி
தேவன் தந்த வேதம் நம்பி
வாஞ்சை வைத்து அதைத்தான்
ராப்பகலும் ஓதும் ஞானி
என்றும் வாழும் பாக்கியவான்

**01** நதி ஓரத்தில் வாடாமல்
நடப்பட்டு வளர்ந்து
கனி தந்து உதிராமல்
இலை என்றும் பசந்து
அசைவின்றிக் காற்றைத் தாங்கும்
மரம்போலவே நிற்பான்
அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்
ஆசீர்வாதம் பெறுவான்

**02** தீயோர் பதர்போல் நில்லாமல்
தீர்ப்பு நாளில் ஒழிவார்
நல்லோர் சபையில் சேராமல்

வெட்கி நைந்து அழிவார்
இங்கே பாவி செழித்தாலும்
பாவப்பலம் நாசந்தான்
இங்கே நல்லோன் துக்கித்தாலும்
நித்ய வீட்டில் மகிழ்வான்

## 161. துதிப்போம் துதிப்போம் தேவனை

துதிப்போம் துதிப்போம் தேவனை
துதிகள் மத்தியில் வசிப்பபோரை – 2
அதிசயமானவரை அதிலும் மேலானவரை – 2

துதிப்போம்..

**01** கடந்த துன்பத்தின் காலங்களில்
அடைந்த ஆறா துயரங்களில் – 2
ஆறுதல் தேறுதல் அளித்திட்ட
மாறாத தேவனே ஸ்தோத்திரம் – 2

துதிப்போம்..

**02** ஆனந்தமே பரமானந்தமே
தேவனை அண்டினோர்கானந்தமே – 2
நன்றி தேவா நன்றி நன்றி தேவா
எந்நாளும் உமக்கே நன்றி தேவா – 2

துதிப்போம்..

**03** இன்றைதினம் வரை காத்தீரே
எல்லோரையும் கூட்டிச் சேர்த்தீரே 2
நின் கிருபையால் கடந்து வந்தோம்
அன்பே ஆருயிரே ஸ்தோத்திரம் – 2

துதிப்போம்..

**04** பரிசுத்த தேவனே ஸ்தோத்திரம்
பரலோக தேவனே ஸ்தோத்திரம் – 2
இயேசுவின் தந்தையே ஸ்தோத்திரம்
எங்களின் தந்தையே ஸ்தோத்திரம் – 2

துதிப்போம்..

## 162. துதிப்போம் அல்லேலூயா பாடி

துதிப்போம் அல்லேலூயா பாடி
மகிழ்வோம் மகிபனைப் போற்றி
மகிமை தேவ மகிமை தேவ
தேவனுக்கே மகிமை – 2 அல்லேலூயா

**01** தேவன் எந்தன் அடைக்கலமாமே
ஒருபோதும் பொல்லாப்பு வராதே – 2
சர்வ வல்ல தேவன் தாபரமாய் நின்றே
விடுவித்துக் காத்திடுவார் – 2

துதிப்போம்..

**02** அஞ்சிடேனே இருளிலே என்றும்
நடமாடும் கொள்ளை நோயைக் கண்டும் – 2
பயங்கரத்திற்கும் பறக்கும் அம்பிற்கும்
பயந்திடேன் ஜெயித்திடுவேன் – 2

துதிப்போம்..

**03** பாதம் கல்லில் என்றும் இடறாமல்
கரங்களில் தாங்கிடுவார் தூதர் 2
ஒரு போதும் வாதை என் கூடாரத்தை
அணுகாமல் காத்திடுவார் – 2

துதிப்போம்..

# 163. துதித்துப் பாடிட பாத்திரமே

துதித்துப் பாடிட பாத்திரமே
துங்கவன் இயேசுவின் நாமமதே
துதிகளின் மத்தியில் வாசம் செய்யும்
தூயரை நேயமாய் ஸ்தோத்தரிப்போமே

ஆ அற்புதமே அவர் நடத்துதலே
ஆனந்தமே பரமானந்தமே
நன்றியால் உள்ளமே மிகப் பொங்கிடுதே
நாம் அல்லேலூயா துதி சாற்றிடுவோம் – 2
ஆ அற்புதமே..

**01** கடந்த நாட்களில் கண்மணிபோல்
கருத்துடன் நம்மைக் காத்தாரே – 2
கர்த்தரையே நம்பி ஜீவித்திட
கிருபையும் ஈந்ததால் ஸ்தோத்தரிப்போமே
ஆ அற்புதமே..

**02** அக்கினி ஊடாய் நடந்தாலும்
ஆழியின் தண்ணீரைக் கடந்தாலும் – 2
சோதனையோ மிகப் பெருகினாலும்
ஜெயம் நமக்கீந்ததால் ஸ்தோத்தரிப்போமே
ஆ அற்புதமே..

**03** இந்த வனாந்திர யாத்திரையில்
இன்பராம் இயேசு நம்மோடிருப்பார் – 2
போகையிலும் நம் வருகையிலும்
புகலிடமானதால் ஸ்தோத்தரிப்போமே
ஆ அற்புதமே..

## 164. துன்பம் உன்னைச் சூழ்ந்தலைக்கழித்தாலும்

துன்பம் உன்னைச் சூழ்ந்தலைக்கழித்தாலும்
இன்பம் இழந்தேன் என்றெண்ணிச் சோர்ந்தாலும்
எண்ணிப்பார் நீ பெற்ற நல்லாசீர்களும்
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்

எண்ணிப்பார் நீ பெற்ற பாக்கியங்கள்
கர்த்தர் செய்த நன்மைகள் யாவும்
ஆசீர்வாதம் எண்ணு ஒவ்வொன்றாய்
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்

**01** கவலைச் சுமை நீ சுமக்கும் போதும்
சிலுவை உனக்குப் பளுவாகும் போதும்
எண்ணிப்பார் நீ பெற்ற பேராசீர்களை
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்
எண்ணிப்பார்..

**02** நிலம் பொன்னுள்ளோரை நீ பார்க்கும்போது
நினை கிறிஸ்துவின் ஐஸ்வர்யம் உண்டுனக்கு
பணங் கொள்ளா பேராசீர்வாதத்தைப் பார்
பரலோக பொக்கிஷமும் வீடும் பார்
எண்ணிப்பார்..

**03** அநேக துன்பங்கள் உன்னைச் சூழ்ந்தாலும்
கவலைப்படாதே கர்த்தர் உன் பக்கம்
அநேகமாம் நீ பெற்ற சிலாக்கியங்கள்
அன்பர் உன்னைத் தேற்றுவார் பிரயாணத்தில்
எண்ணிப்பார்..

## 165. தூயாதி தூயவரே

தூயாதி தூயவரே
உமது புகழை நான் பாடுவேன் – 2
பாரில் எனக்கு வேறென்ன வேண்டும்
உயிருள்ளவரை நின் புகழ் பாட வேண்டும்
தூயாதி தூயவரே..

**01** சீடரின் கால்களைக் கழுவினவர்
செந்நீரால் என்னுள்ளம் கழுவிடுமே – 2
தூயாதி தூயவரே..

**02** பாரோரின் நோய்களை நீக்கினவர்
பாவி என் பாவ நோய் நீக்கினீரே – 2
தூயாதி தூயவரே..

**03** துயரங்கள் பாரினில் அடைந்தவரே
துன்பங்கள் தாங்கிட பெலன் தாருமே – 2
தூயாதி தூயவரே..

## 166. தெய்வத்துவத்தின் பரிபூரணம் எல்லாம்

தெய்வத்துவத்தின் பரிபூரணம் எல்லாம்
இயேசுவில் இருக்கக்கண்டோம்
அவருக்குள் அன்பு ஞானம் நீதி
பொக்கிஷ வைப்பாய் கண்டோம் – 2

**01** விசுவாசத்தில் மெத்த உறுதிப்படுவோம்
இயேசுவின் சாயலை அணிந்திடுவோம் – 2
அவரோடு மரித்துயிர்த்தெழுந்து
மகிமையில் மலர்ந்திடுவோம் – 2

மேலானவைகளை நாடுவோம்
மேலோகவாசிகளாய் இருப்போம் – 2
அவரோடு மரித்துயிர்த்தெழுந்து
மகிமையில் மலர்ந்திடுவோம் – 2

**02** இயேசுவை எந்நாளும் சேவிப்போம்
வேதத்தின் முன்னே நடுங்கி நிற்போம் – 2
சொல் செயலாலே அனுதின வாழ்வில்
கர்த்தரை ஸ்தோத்தரிப்போம் – 2
மேலானவைகளை..

**03** உலகமெங்கும் தேவதூது சொல்வோம்
ஞானமாய் காலத்தை செலவழிப்போம் – 2
ஜெபதூப ஸ்தோத்திரத்தோடே
ஜெயமாக வாழ்ந்திடுவோம் – 2
மேலானவைகளை..

## 167. தெய்வ கிருபையைத் தேடி

தெய்வ கிருபையைத் தேடி பாவி மனந்திரும்பு
மீட்பர் தரும் ஈவை நாடி தூக்கம் விட்டெழுந்திரு

**01** வாசலானதோ இடுக்கம்
தாழ்மையாகி உட்படு
ஜீவ வழியோ நெருக்கம்
லோக நேசத்தை விடு

**02** மாம்சம் லோகம் ஆசாபாசம்
பாவம் யாவும் அகற்றி
ரட்சிப்பில் மெய் விசுவாசம்
வைத்து உன்னை ஒப்புவி

**03** தேவன் உன்னைத் தயவாக
ஏற்றுக்கொண்டபிறகு
ஜெபத்தோடு விழிப்பாக
அவரில் நிலைத்திரு

**04** ஜீவனுள்ள நாள் மட்டாக
மோசங்கள் இருப்பினும்
தேவ கரம் பெலமாக
உன்னைக் காத்து நடத்தும்

## 168. தேவா உம் சாட்சி நான்

தேவா உம் சாட்சி நான் – தினம்
தேவை உம் ஆசிதான்
தேவா உம் சாட்சி நான்

**01** நித்தியமான ஜீவனைத் தந்தீர்
சத்தியத்தில் என்னை நடத்துகிறீர் – 2
ஆவியின் பெலனை அனுபவித்தே
வாழவைத்தீர் என்றும் மாதிரியாய்
தேவா உம் சாட்சி நான்..

**02** விரும்பிய பாவம் விலக்கிய பின்னும்
வீரியம் கொண்டே மயக்குகையில் – 2
நிலைத்திடும் தேவனின் அரசாட்சி
ஈந்திடும் வாழ்வில் தினம் வெற்றி
தேவா உம் சாட்சி நான்..

**03** எனக்கெதிராக யார்தான் உண்டு?
என்மேல் குற்றம் சுமத்துவதார்? – 2
எல்லாமே எனக்கு இயேசுவில் உண்டு
என் வாழ்வில் அவரே நீங்காத சொத்து
தேவா உம் சாட்சி நான்..

# 169. தேவன் தங்கும் உள்ளம்

தேவன் தங்கும் உள்ளம்
அது தேவாலயம்
அது தேவாலயம் 2

**01** அசுத்தம் இல்லா உள்ளம் அது தேவாலயம்
அதில் ஆணவம் இல்லா உள்ளம் அது தேவாலயம்
கறைகள் இல்லா உள்ளம் அது தேவாலயம்
வீண் பெருமைகள் இல்லா உள்ளம்
அதுவே தேவாலயம்

தேவன் தங்கும்..

**02** துதிகள் உள்ள உள்ளம் அது தேவாலயம்
இயேசு துங்கவர் மகிழும் உள்ளம் அது தேவாலயம்
இன்முகம் காட்டும் உள்ளம் அது தேவாலயம்
இயேசு என்றும் வாழும் உள்ளம் அது தேவாலயம்

தேவன் தங்கும்..

**03** அன்பு நிறைந்த உள்ளம் அது தேவாலயம்
அதில் அமைதி வாழும் உள்ளம் அது தேவாலயம்
அடக்கம் மிகுந்த இதயம் அது தேவாலயம்
இவை அனைத்தும் நிறைந்த மனிதன்
அவன் தேவாலயம்

தேவன் தங்கும்..

## 170. தேவனை உயர்த்தித் துதியுங்கள்

தேவனை உயர்த்தித் துதியுங்கள்
அவர் நாமத்தைப் போற்றியே
தேவனை உயர்த்தி துதியுங்கள்
தேவனின் செயல் அதிசயமென்று
அதிசயமென்று சொல்லி – நம்

**01** கொடியவரின் சீறல் கடுமையாய் வரினும்
திட பெலனும் ஏழைக்கடைக்கலமுமானார்
படும் பலவந்தர் ஆரவாரம் என்றும்
ஆரவாரம் என்றுமே

**02** இவரே நம் தேவன் இவர் நம்மை இரட்சித்தார்
இவரின் இரட்சிப்பினால் களிகூர்ந்திடுவோம்
இவர் பகைவரை வென்று கீழ்ப்படுத்தி
வென்று கீழ்படுத்தினார்

**03** கர்த்தரையே நம்பி சத்தியம் கைக்கொண்ட
உத்தம ஜாதியே உட்பிரவேசியுங்கள்
பக்தருக்கென்று பலத்த நகரம்
பலத்த நகரம் உண்டு

**04** அன்னியர் ஆள்வதில்லை இந்நிலம்
தன்னில் நம்மை மன்னாதி
மன்னனே நம் மகிபனாயிருப்பார்
மன்னரும் தேவ சமாதானம் தங்கும்
சமாதானம் தங்கிடுமே

**05** சிறந்த விருந்தொன்று சீயோன் மலையின் மீது
அருந்த யாவர்க்கும் ஆயத்தமாக்குவார்
நிந்தையை நீக்கிக் கண்ணீரைத் துடைத்துக்
கண்ணீரைத் துடைத்திடுவார்

# 171. தேவ சாயல் ஆக மாறி

(ராகம்: வேத மாணக்கர்களாக)

தேவ சாயல் ஆக மாறி
தேவனோடிருப்பேன்
நானும் தேவனோடிருப்பேன் – 2

**01** அந்த நாளும் நெருங்கிடுதே
அதி விரைவாய் நிறைவேறுதே – 2
மண்ணின் சாயலை நான் களைந்தே என்
விண்ணவர் சாயல் அடைவேன் – 2

தேவ சாயல் ஆக..

**02** பூமியின் கூடாரம் என்றும்
பெலவீனமே அழிந்திடுமே – 2
கை வேலையில்லாத பொன்வீடு
கண்டடைந்து வாழ்ந்திடுவேன் – 2

தேவ சாயல் ஆக..

**03** சோரும் உள்ளான மனிதன்
சோதனையில் பெலமடைய – 2
ஆற்றித் தேற்றிடும் தேற்றரவாளன்
ஆண்டவர் என்னோடிருப்பார் – 2

தேவ சாயல் ஆக..

**04** ஆவியின் அச்சாரம் தந்தார்
ஆயத்தமாய் சேர்ந்திடவே 2
ஜீவனே எனது கிறிஸ்தேசு
சாவு எந்தன் ஆதாயமே – 2

தேவ சாயல் ஆக..

**05** காத்திருந்து ஜெபிப்பதினால்
கழுகுபோல பறந்தெழும்பி – 2
ஜீவயாத்திரை ஓடி முடித்து
ஜீவகிரீடம் பெற்றிடுவேன் – 2

தேவ சாயல் ஆக..

**06** உன்னத சீயோன் மலைமேல்
என் அருமை இயேசுவுடன் – 2
ஜெப வீட்டினிலே மகிழ்ந்தே நான்
ஜீவிப்பேனே நீடுழியாய் – 2

தேவ சாயல் ஆக..

## 172. தேவ தேவனைத் துதித்திடுவோம்

தேவ தேவனைத் துதித்திடுவோம்
சபையில் தேவன் எழுந்தருள
ஒருமனதோடு அவர் நாமத்தை
துதிகள் செலுத்தி போற்றிடுவோம்

அல்லேலூயா தேவனுக்கே
அல்லேலூயா கர்த்தருக்கே
அல்லேலூயா பரிசுத்தருக்கே
அல்லேலூயா ராஜனுக்கே

**01** எங்கள் காலடி வழுவிடாமல்
எங்கள் நடைகளை ஸ்திரப்படுத்தும்
கண்மணி போல காத்தருளும்
கிருபையால் நிதம் வழிநடத்தும்

அல்லேலூயா..

**02** சபையில் உம்மை துதித்திடுவோம்
சகாயம் பெற்று வாழ்ந்திடுவோம்
பாவத்தினை என்றும் ஜெயித்திடுவோம்
சாகும் வரையில் உழைத்திடுவோம்

அல்லேலூயா..

## 173. தேவனின் ஆலயமே பரிசுத்த

தேவனின் ஆலயமே பரிசுத்த ஆலயமே
மகிமையின் ஆலயமே நாமே அவ்வாலயமே – 2

**01** இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டோம்
அவருக்காய் கிரயமாய் கொள்ளப்பட்டோம் – 2
தேவனின் ஆவியால் நிரப்பப்பட்டோம்
என்றும் தேவ பிள்ளைகளானோம்
அவர் சொந்த ஜனமானோம் – 2

தேவனின்..

**02** நாம் இனி நம்முடையவர்களல்ல
அவரே நம் சரீரத்தின் சொந்தமானவர் – 2
வஞ்சிக்கப்படாமல் தீட்டுப்படுத்தாமல்
பரிசுத்தம் காத்துக்கொள்வோம்
பரிசுத்த ஜாதியாக – 2

தேவனின்..

**03** கர்த்தருக்குள் என்றும் இசைந்திருப்போம்
அவருடன் ஒரே ஆவியாயிருப்போம் – 2
ஆவியினாலும் சரீரத்தினாலும்
மகிமை செலுத்திடுவோம்
கர்த்தருக்கே என்றும் – 2

தேவனின்..

## 174. தேவ ஜனமே பாடித் துதிப்போம்

தேவ ஜனமே பாடித் துதிப்போம்
தேவ தேவனை போற்றுவோம்
துதிகள் என்றும் ஏற்றியே
அவரில் களித்திடுவோம் – 2

**01** சென்ற நாளில் கண்ணின் மணி போல்
காத்த தேவனை துதித்திடுவோம் – 2
நீதி தயவு கிருபை நல்கும்
ஜீவ தேவனை துதித்திடுவோம் – 2

தேவ ஜனமே..

**02** வானம் பூமி ஆளும் தேவன்
வாக்கை என்றுமே காத்திடுவார் – 2
அவரின் உண்மை என்றும் நிலைக்கும்
மகிமை தேவனை துதித்திடுவோம் – 2

தேவ ஜனமே..

**03** கர்த்தர் நாமம் ஓங்கி படர
தேவ மகிமை விளங்கிடவே – 2
தேவ சுதனாய் சேவை செய்யும்
தேவ குமாரனை வாழ்த்திடுவோம் – 2

தேவ ஜனமே..

**04** தம்மை நோக்கி வேண்டும்போது
தாங்கி என்றுமே ஆதரித்தார் – 2
மறந்திடாமல் உறங்கிடாமல்
நினைத்த தேவனை துதித்திடுவோம் – 2

தேவ ஜனமே..

**05** நமது போரை தாமே முடித்து
ஜெயமே என்றும் அளித்திடுவார் – 2
சேனை அதிபர் நமது தேவன்
அவரை என்றும் போற்றிடுவோம் – 2

தேவ ஜனமே..

## 175. தேவ சித்தம் நிறைவேற

(ராகம்: பாவச்சேற்றில்)

தேவ சித்தம் நிறைவேற
எனையும் ஒப்படைக்கிறேன்
தேவ சத்தம் என்னுள்ளில்
பலமாகத் தொனிக்குதே

**01** முட்களுக்குள் மலர்கின்றதோர்
மக்களைக் கவரும் லீலி புஷ்பம் போல்
என்னையுமே தம் சாயலாய்
என்றென்றும் உருவாக்குவார்

தேவ சித்தம்..

**02** பொன்னைப் போல புடமிட்டாலும்
பொன்னாக விளங்குவேனென்றென்றுமே
திராணிக்கு மேல் சோதித்திடார்
தாங்கிட பெலனளிப்பார்

தேவ சித்தம்..

**03** நீதிமானை அனுதினமும்
சோதிக்க பல்வேறு துன்பம் வந்தும்
கர்த்தர் அன்பை விட்டு நீங்கா
சுத்தனாய் நிலைத்திருப்பேன்

தேவ சித்தம்..

## 176. தேவனே நான் உமதண்டையில்

தேவனே நான் உமதண்டையில் – இன்னும் நெருங்கிச்
சேர்வதே என் ஆவல் பூமியில் – 2
மாவலிய கோரமாக வன் சிலுவை மீதினில் நான் – 2
கோவேதொங்க நேரிடினும் ஆவலாய்
உம்மண்டை சேர்வேன்

தேவனே நான்..

**01** யாக்கோபைப்போல் போகும் பாதையில்
பொழுது பட்டு இராவில் இருள் வந்து மூடிட – 2
தூக்கத்தால் நான் கல்லில் சாய்ந்து
தூங்கினாலும் என் கனவில் – 2
நோக்கியும்மைக் கிட்டிச் சேர்வேன், வாக்கடங்கா நல்ல நாதா
தேவனே நான்..

**02** பரத்துக்கேறும் படிகள் போலவே – என்
பாதை தோன்றப் பண்ணும் ஐயா, என்றன் தேவனே – 2
கிருபையாக நீர் எனக்குத் தருவதெல்லாம் உமதண்டை – 2
அருமையாய் என்னையழைக்கும்
அன்பின் தூதராகச் செய்யும்
தேவனே நான்..

**03** நித்திரையின்று விழித்துக் காலை எழுந்து
கர்த்தாவே, நான் உம்மைப் போற்றுவேன் – 2
இத்தரையில் உந்தன் வீடாய் என் துயர்க்கல் நாட்டுவேனே – 2
என்றன் துன்பத்தின் வழியாய்
இன்னும் உம்மைக் கிட்டிச் சேர்வேன்
தேவனே நான்..

**04** ஆனந்தமாம் செட்டை விரித்துப் – பரவசமாய்
ஆகாயத்தில் ஏறிப் போயினும் – 2
வான மண்டலங்கடந்து பறந்து மேலே சென்றிடினும் – 2
மகிழ்வுறு காலத்திலும் நான் மருவியும்மைக் கிட்டிச் சேர்வேன்
தேவனே நான்..

# 177. தேவா தேவாதி தேவா

தேவா தேவாதி தேவா
உம்மைத் தொழுகின்றோம்
உம் நாமம் துதிக்கின்றோம் – 2

01 ஆறுதல் தருகின்றீர்
அன்பை பொழிகின்றீர் – 2
ஆசீர் தருகின்றீர்
அணைத்துக்காக்கின்றீர் – 2

தேவா தேவாதி..

02 காயங்கள் ஆற்றுகிறீர்
கண்ணீர் துடைக்கின்றீர் – 2
கால்கள் வழுவாமல்
கரம் பிடித்து நடத்துகின்றீர் – 2

தேவா தேவாதி..

03 வாடிடும் நேரங்களில்
வார்த்தையால் தேற்றுகிறீர் – 2
வாவென்றழைப்பவரே
வழுவாமல் காப்பவரே – 2

தேவா தேவாதி..

04 இதுவரை காத்தவரே
இனியும் காப்பவரே – 2
இன்னாளும் துதிக்கின்றோம்
எந்நாளும் துதித்திடுவோம் – 2

தேவா தேவாதி..

## 178. தேவப்பிதா எந்தன் மேய்ப்பன்

தேவப்பிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ
சிறுமை தாழ்ச்சி அடைகிலேனே
ஆவலதாய் எனைப் பசும்புல்மேல்
அவர் மேய்த்தமர் நீர் அருளுகின்றார்

தேவப்பிதா..

**01** ஆத்துமந் தன்னைக் குளிரப்பண்ணி
அடியேன் கால்களை நீதி என்னும்
நேர்த்தியாம் பாதையில் அவர் நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார்

தேவப்பிதா..

**02** சாநிழல் பள்ளத் திறங்கிடினும்
சற்றும் தீங்கு கண்டஞ்சேனே
வானபரன் என்னோடிருப்பார்
வளை தடியும் கோலுமே தேற்றும்

தேவப்பிதா..

**03** பகைவர்க்கெதிரே ஒரு பந்தி
பாங்காய் எனக்கென் றேற்படுத்தி
சுகதைலம் கொண்டென் தலையை
சுகமாய் அபிஷேகம் செய்குவார்

தேவப்பிதா..

**04** ஆயுள் முழுவதும் என் பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரம்பும்
நேயன் வீட்டினில் சிறப்போடே
நெடுநாள் குடியாய் நிலைத்திருப்பேன்

தேவப்பிதா..

# 179. தேவகிருபை என்றுமுள்ளது

தேவகிருபை என்றுமுள்ளது
அவர் கிருபை என்றுமுள்ளது
அவரைப் போற்றித் துதித்துப் பாடி
அல்லேலூயா என்றார்ப் பரிப்போம் – 2

**01** நெருக்கப்பட்டும் மடிந்திடாமல்
கர்த்தர் தாம் நம்மைக் காத்ததாலே – 2
அவர் நல்லவர் அவர் வல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளது – 2

தேவகிருபை..

**02** சத்துரு சேனை தொடர்ந்து சூழ்கையில்
பக்தர் தாம் தாவீதின் தேவன் நமக்காய் – 2
முன் சென்றாரே அவர் வல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளது – 2

தேவகிருபை..

**03** அக்கினி சோதனை பட்சிக்க வந்தும்
முட்செடி தன்னில் தோன்றிய தேவன் – 2
பாதுகாத்தாரே அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளது – 2

தேவகிருபை..

**04** காரிருள் போன்ற கஷ்டங்கள் வந்தும்
பாரினில் அவர் என் பாதையில் ஒளியாய் – 2
என்னை நடத்தினார், அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளது – 2

தேவகிருபை..

**05** வெள்ளம் போல் நிந்தை மேற்கொள்ள வந்தும்
வீரன் நெகேமியா ஆவியை அளித்தே –2
திட நம்பிக்கை தைர்யம் ஈந்தாரே
அவர் கிருபை என்றுமுள்ளது – 2

தேவகிருபை..

**06** நித்திய தேவனும் சத்திய பரன்தான்
நித்தமும் நம்முடன் இருப்பதாலே – 2
அவர் நல்லவர் என்றும் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது – 2

தேவகிருபை..

## 180. தேவன் அருளிய உபகாரங்களுக்கு

தேவன் அருளிய உபகாரங்களுக்கு
எதை ஈந்து ஈடாக்குவேன் – 2
பல நூறு ஆடுகளா
பலியாகக் காளைகளா – 2

தேவன் அருளிய..

**01** பாய்ந்தோடும் நதி நீரை
சுகந்த தைலமாய்
படைத்தாலும் ஈடாகுமோ – 2
கர்ப்பக் கனியான என் சேஷ்ட புத்ரனை
ஈன்றாலும் இணையாகுமோ – 2

பலநூறு ஆடு..
தேவன் அருளிய..

**02** மரணப்பாத்திரன் எனக்காக சிலுவையில்
மரித்தீரே என் இயேசையா – 2
தயவாய் என்னை உம் ஜீவ பாதையில்
எந்நாளும் நடத்திடுமே – 2

பலநூறு ஆடு..
தேவன் அருளிய..

## 181. தேவாதி தேவனையே தினமும்

தேவாதி தேவனையே தினமும்
துதித்திடுவோம் – 2
அன்பிலே தாய் அருளின் வாய்
அன்னையின் பால் அமுதந் தேன் – 2
தேவாதி தேவனையே..

**01** இயேசுவே எந்தன் நல் மேய்ப்பரே
நானோ தாழ்ச்சியென்றும் அடையேனே – 2
புல்லுள்ள இடத்தில் மேய்த்திடுவார்
அமர்ந்த நீரண்டை சேர்த்திடுவார் – 2
தேவாதி தேவனையே..

**02** உம் வசனம் எங்கள் கால்களுக்கு
அணையா விளக்கு என்றென்றுமே – 2
பாதையில் வெளிச்சம் காட்டிடுமே
நீதியில் அணைத்துச் சென்றிடுமே – 2
தேவாதி தேவனையே..

**03** புண்ணிய இரட்சகர் இயேசுவல்லால்
புவியில் நமக்கு யார் துணையே – 2
பாவத்தின் பாரத்தை நீக்கிடவே
தேவ குமாரனையே தந்தவர் – 2
தேவாதி தேவனையே..

**04** நீதியின் சூரியன் இயேசுவையே
ஜாதிகள் யாவும் வணங்கிடுமே – 2
ஆயிர வருஷம் ஆனந்தமாய்
ஆனந்தம் என்றென்றும் ஆனந்தமே – 2
தேவாதி தேவனையே..

## 182. தேவாதி தேவனே உம் திவ்ய

தேவாதி தேவனே உம் திவ்ய அருமை என் பாடலாகும்
வானிலிருந்து பேரிட்டு அழைத்தீர் வரைந்தீர்
என்னையும் உள்ளங்கை மீதிலே – 2

**01** உடலினைப் பிட்க பிறந்த ஏசின்
உறுதியில் நானும் ஓடிடுவேன் – 2

வானிலிருந்து..

**02** குருதியை விலையாய்த் தந்தவரே
குரு உந்தன் இலக்கினில் வந்திடுவேன் – 2

வானிலிருந்து..

**03** இரக்கத்தை முந்திக் காட்டினவர்
இரங்கியே எம் பாவம் ஓட்டினவர் – 2

வானிலிருந்து..

**04** வருந்திடும் யாவரும் வருகவென்றீர்
திருந்திய புது வாழ்வுதனைத் தாருமே – 2

வானிலிருந்து..

## 183. தேவாதி தேவா சர்வலோக

(ராகம்: எல்லாம் இயேசுவே)

தேவாதி தேவா சர்வலோக எகோவா
ஸ்தோத்ரம் துதி செய்கிறோம் எம் ஏசு
மூலமே

தேவாதி தேவா..

**01** எகோவாவின் நாமத்தை
ஏகமாகப் பாடுவோம்
ஏக சக்ராதிபதி அவரை
நாம் புகழுவோம்

தேவாதி தேவா..

**02** பாத்ரமாக இம்மாத்திரம்
கிருபை செய்த பார்த்திபர்
சாகாமை சமத்துவர்
சேரா ஒளியின் வாசகர்

தேவாதி தேவா..

**03** இருப்பவராய் இருப்பவர்
மாறா நித்ய மகத்துவர்
ஆவியுண்மையோடுமே
ஆராதிப்போம் அன்பர் நாமே

தேவாதி தேவா..

**04** எகோவாவின் நாமத்தை
ஏகமாகப் போற்றுவோம்
ஏக சுதன் ஏசுவையே
தந்து நம்மை காத்தோரை

தேவாதி தேவா..

**05** ஒருவராய்ப் பெரியவர்
அதிசயங்கள் செய்பவர்
மாறா தன்மையுள்ளவரை
மகிழ்ந்து போற்றி பாடுவோம்

தேவாதி தேவா..

# 184. தேன் இனிமையிலும் ஏசுவின் நாமம்

தேன் இனிமையிலும் ஏசுவின் நாமம்
திவ்ய மதுரமாமே – அதைத்
தேடியே நாடி ஓடியே தரித்தீர்
திருச்சபையானோரே

01 காசினிதனிலே நேசமதாகக்
கஷ்டத்தை உத்தரித்தே – பாவக்
கசடதை அறுத்துச் சாபத்தைத் தொலைத்தார்
கண்டுணர் நீ மனமே

தேன் இனிமையிலும்..

02 பாவியை மீட்கத் தாவியே உயிரைத்
தாமே ஈந்தவராம்
பின்னும் நேமியாம் கருணை
நிலைவரமுண்டு நிதம் துதி என் மனமே

தேன் இனிமையிலும்..

03 காலையில் பனிபோல் மாயமாய் உலகம்
உபாயமாய் நீங்கிவிடும்
என்றும் கர்த்தரின் பாதம் நிச்சயம் நம்பு
கருத்தாய் நீ மனமே

தேன் இனிமையிலும்..

04 துன்பத்தில் இன்பம் தொல்லையில் நல்ல
துணைவராம் நேசரிடம் – நீ
அன்பதாய்ச் சேர்ந்தால் அணைத்துணைக் காப்பார்
ஆசை கொள் நீ மனமே

தேன் இனிமையிலும்..

**05** பூலோகத்தாரும் மேலோகத்தாரும்
புகழ்ந்து போற்றும் நாமம் – அதைப்
பிடித்துக் கொண்டால்தான் பேரின்ப வாழ்வைப்
பெறுவாய் நீ மனமே

தேன் இனிமையிலும்..

## 185. தேனிலும் மதுரம் திவ்ய மா வேதம்

தேனிலும் மதுரம் திவ்ய மா வேதம்
தெய்வீகத் திருப் புகழ்பாடும்
உம் திரு மறையில் ஒழுகிடும் எவர்க்கும்
உமதருள் ஈந்திடுவீர்

**01** கதிரவன் வரவால் காரிருள் அகலும்
கர்த்தர் இயேசுவின் பிரசன்னம் காண்கின்ற கண்கள்
களிப்பினை அடையும் கவலைகள் நீங்கிடுமே

**02** தாக முள்ளவரே ஜீவத் தண்ணீரை
நித்தமும் பருகிடுவீரே நித்திய வாழ்வின்
வழி தன்னில் நடந்து சத்திய நெறி காப்பீர்

**03** நீர் எந்தன் கன்மலை உம் கிரியை உத்தமம்
நீதியும் செம்மையுமான தேவனே
ஜோதிப் பிதாவே ஜெகத்து இரட்சகரே
ஜெயம் பெற அருள்புரிவீர்

## 186. தொழுகிறோம் எங்கள் பிதாவே

தொழுகிறோம் எங்கள் பிதாவே
பொழுதெல்லாம் ஆவி உண்மையுடனே – 2
பரிசுத்த அலங்காரத்துடனே
தரிசிப்பதினால் சரணம் சரணம் – 2

**01** மனுஷர் ஒருவரும் கண்டிராதவர்
இனிமேலும் காணக்கூடாதவர் – 2
இம்மை வாழ்வில் கிருபை தருபவர்
தந்தையே இதோ சரணம் சரணம் – 2

தொழுகிறோம்..

**02** கேருபீன்கள் சேராபீன்கள்
சேர்ந்தும் கோடாகோடி தூதர்கள் – 2
பரிசுத்தர் பரிசுத்தர் எனவே
பாடிப்போற்றுவர் சரணம் சரணம் – 2

தொழுகிறோம்..

**03** என்றென்றும் நல்ஆட்சி செய்பவர்
என்றென்றுமே நீதியானவர் – 2
என்றும் அன்பே உருவானவர்
என்றென்றுமே சரணம் சரணம் – 2

தொழுகிறோம்..

**04** மண்ணின் சாயல் மாறி யானும்
மகிமை யேறி மாசற்றோனாய் – 2
மன்னனோடு கூட இணைந்து
ஆர்ப்பரிப்போம் சரணம் சரணம் – 2

தொழுகிறோம்..

## 187. தொல்லை கஷ்டங்கள் சூழ்ந்திடும்

தொல்லை கஷ்டங்கள் சூழ்ந்திடும்
துன்பம் துக்கம் வரும்
இன்பத்தில் துன்பம் நேரிடும்
இருளாய்த் தோன்றும் எங்கும்
சோதனை வரும் வேளையில்
சொல் கேட்கும் செவியிலே
பட்டயத்தால் ஜெயம் வரும்
பரன் உன்னைக் காக்க வல்லோர்
காக்கும் வல்ல மீட்பர் உண்டெனக்கு – 3
காக்கும் வல்ல மீட்பர் உண்டெனக்கு
காத்திடுவார் என்றுமே

**01** ஐய மிகுந்ததோர் காலத்தில் ஆவி குறைவால் தான்
மீட்பர் உதிர பலத்தால் சத்துருவை வென்றேன்
என் பயம் யாவும் நீங்கிற்று ஏசு கை தூக்கினார்
முற்றாய் என்னுள்ளம் மாறிற்று
இயேசென்னைக் காக்க வல்லோர்

**02** என்ன வந்தாலும் நம்புவேன் என் நேச மீட்பரை
யார் கைவிட்டாலும் பின் செல்வேன் எனது இயேசுவை
அகலம் ஆழம் உயரமாய் எவ்வளவன்பு கூர்ந்தார்
என்ன துன்பங்கள் வந்தாலும்
அவர் என்னைக் கைவிடமாட்டார்

## 188. நடத்துவார், ஆ இன்பெண்ணம்

நடத்துவார், ஆ இன்பெண்ணம்
மா ஆறுதல் சாரும் வண்ணம்
நான் எவ்விடத்திருக்கினும்
தேவனின் கையே நடத்தும்

நடத்துவார் நடத்துவார்
தம் கையாலே நடத்துவார்
அவரை நேராய்ப் பின் செல்வேன்
தம் கையாலே நடத்துவார்

**01** ஓர் வேளை இருள் பாதையில்
ஓர் வேளை ஏதேன் பூங்காவில்
அலைகடல் அமைவிலும்
அவர் நேசக் கை நடத்தும்

**02** கர்த்தா நான் உம் கைப்பிடிப்பேன்
திருப்தியால் குறை பேசேன்
எந்த நிலையும் பூரணம்
நீரே எனக்குத் தாரணம்

## 189. நடக்கச் சொல்லித் தாரும்

நடக்கச் சொல்லித் தாரும்
இயேசுவே இயேசுவே
நடக்கச் சொல்லித் தாரும்
இயேசுவே இயேசுவே
தனித்து செல்ல முடியவில்லை
தவித்து நிற்கும் பாவிநான் – 2

**01** இருள் நிறைந்த உலகமிது
துன்பம் என்னை நெருக்குதே – 2
அருள் பெருகும் ஒளியாகி
அன்பு தந்த நாதனே – 2

**02** அடம் பிடித்து விலகிவிடுவேன்
கருணையோடு மன்னியும் – 2
கரம் பிடித்து உம்முடனே
அழைத்துச் செல்லும் இயேசுவே – 2

## 190. நடமாடும் ஆலயம் நாம்

நடமாடும் ஆலயம் நாம்
பரிசுத்தர் வசித்திடும் பாக்கிய வீடாக
நடமாடும் ஆலயம் நாம்

**01** ஜனத்தின் மத்தியில் வசிக்க அன்று
கூடாரம் ஒன்றை மோசே செய்தான்
நிரந்தர வாசம் செய்திட பாளையம்
பரிசுத்தமாக இருந்திடல்வேண்டும்
நடமாடும் ஆலயம்..

**02** கேருபீன் சேராபீன்
மத்தியில் வசித்த தேவன் இன்று
மண்பாண்டம் என்னை மகிமைப்படுத்த
இம்மானுயேலன் என்னுள் வந்தாரே
நடமாடும் ஆலயம்..

**03** எக்காளம் பூரிகை ஏகமாய் தொனிக்க
உம்ஜனம் ஒருமித்து உம்புகழ் பாட
ஆலயம் மேகத்தால் நிரம்பிய வண்ணம்
இம்மண்வீட்டை மகிமையால் நிறைத்திடல்வேண்டும்
நடமாடும் ஆலயம்..

04 நரிக்குக் குழி பறவைக்குக் கூடு
தேவ குமாரன் தெரிந்ததென் இதயம்
ஆவியும் மணவாட்டியும் வாயென்னும் வேளை
அவரோடுகூட நான் பறந்திடுவேனே

நடமாடும் ஆலயம்..

## 191. நம் தேவனைத் துதித்துப்பாடி

நம் தேவனைத் துதித்துப்பாடி
அவர் நாமம் போற்றுவோம் – 2
களிகூர்ந்திடுவோம் அகமகிழ்ந்திடுவோம்
துதி சாற்றிடுவோம் புகழ் பாடிடுவோம்
அவர் நாமம் போற்றுவோம்

நம் தேவனை..

01 நம் பாவம் யாவும் நீக்கி மீட்டார்
அவர் நாமம் போற்றுவோம்
துன் மார்க்க வாழ்க்கை முற்றும் நீக்கி
அவர் நாமம் போற்றுவோம்

நம் தேவனை..

02 மெய் ஜீவ பாதை தன்னில் சென்று
அவர் நாமம் போற்றுவோம்
நல் ஆவியின் கனிகள் ஈந்து
அவர் நாமம் போற்றுவோம்

நம் தேவனை..

03 மேலோக தூதர் கீதம் பாடி
அவர் நாமம் போற்றுவோம்
பேரின்ப நாடு தன்னில் வாழ
அவர் நாமம் போற்றுவோம்

நம் தேவனை..

## 192. நல்மேய்ப்பரே, இக்கூட்டத்தை

நல்மேய்ப்பரே, இக்கூட்டத்தைக்
கண்ணோக்கி ஆசீர்வதியும்
தாசர் செய்யும் ஆராதனை
அன்பாக அங்கீகரியும்

**01** உம் சித்தத்துக்கு ஏற்றதாய்
ஜெபிக்கக் கட்டளையிடும்
தேவன்பைக் காட்டி பக்தியாய்
துதிக்க ஏவியருளும்

**02** இச்சமயத்தில் பணிவாய்
ஆராதிப்போர் அனைவரும்
உண்மையும் தூய்மை அன்புமாய்
தொழுதுகொள்ள எழுப்பும்

**03** இங்கும்முடைய ஆவியால்
ஜனங்களுக்கு உணர்வும்
நற்சிந்தையும் நீர் ஈவதால்
உம் நாமம் மாட்சிமைப்படும்

## 193. நல்மீட்பரே, இந்நேரத்தில்

நல்மீட்பரே, இந்நேரத்தில்
வந்தாசீர்வாதம் கூறுமேன்
உம் வார்த்தை கேட்டோர் மனதில்
பேரன்பின் அனல் மூட்டுமேன்
எங்கள் வாழ்நாட்கள் முழுவதும்
ஆ ஏசுவே ப்ரகாசியும்

**01** இன்றெங்கள் செய்கை யாவையும்
தயாபரா நீர் நோக்கினீர்
எல்லாரின் பாவம் தவறும்
மா அற்பச் சீரும் அறிந்தீர்
எங்கள் வாழ்நாட்கள் முழுவதும்
ஆ ஏசுவே ப்ரகாசியும்

**02** எப்பாவத் தீங்கிலிருந்தும்
விமோசனத்தைத் தாருமேன்
உள்ளான சமாதானமும்
சுத்தாங்கமும் உண்டாக்குமேன்
எங்கள் வாழ்நாட்கள் முழுவதும்
ஆ ஏசுவே ப்ரகாசியும்

**03** சந்தோஷம் பயபக்தியும்
நீர் நிறைவாக ஈயுமேன்
உமக்கொப்பாக ஆசிக்கும்
தூயதான உள்ளம் தாருமேன்
எங்கள் வாழ்நாட்கள் முழுவதும்
ஆ ஏசுவே ப்ரகாசியும்

## 194. நல்லகாலம் ஒன்றைத் தந்தாரே

நல்லகாலம் ஒன்றைத் தந்தாரே
நாள் கிட்டிச் சேர்வதைக் காண்கிறோம்
மீட்பர் வாசல் திறத் தீந்தாரே
மேன்மை காட்டி நாம் விளம்புவோம்

இன்பமார்ந்தோன் முன்னே
ஒன்றித்துச் சிந்தித்துச் சந்திப்போம்
இன்பமார்ந்தோன் முன்னே
நின்றென்றும் ஒன்றென் றென்றாகுவோம்

**01** ஜீவநாதன் தான் தீமை நீக்கும்
ஜீவனுள்ளோர்க்கு சுகம் தந்து
மாண்டாரெல்லாரை உயிர்ப்பிக்கும்
வல்லவன்றன் நாளிந்தோ வந்து

இன்பமார்ந்தோன்..

**02** சுத்தராஜ பாதை காணுமே
கற்கரடுகளும் நீங்குமே
சத்தியம் பேதைக்கும் தோணுமே
சத்துருவில்லை எங்கெங்குமே

இன்பமார்ந்தோன்..

**03** தீங்கு செய்வாரங்கே யில்லையே
தேவராஜியமே தேடுவீர்
பாவிசீராகு மிதெல்லையே
பக்தர் ஆனந்தங் கொண்டாடுவீர்

இன்பமார்ந்தோன்..

**04** கண்ணீர் யாவும் துடைபடுமே
கர்த்தர் கரமிது தாங்குமே
பேர் வெளிச்சம் வந்து மூடுமே
பேரானந்த ஜீவன் ஓங்குமே

இன்பமார்ந்தோன்..

## 195. நல்ல தேவனே ஞான தேவனே

நல்ல தேவனே ஞான தேவனே
வல்ல உமது கருணை தன்னை
வாழ்த்திப் போற்றுவேன்

**01** போன ராவிலே பொல்லாங்கின்றியே
ஆன நல்ல அருளினாலே
அன்பாய்க் காத்தீரே

**02** காலையைக் கண்டேன் கர்த்தா உம்மையே
சாலவும் துதித்துப் போற்றிச்
சார்ந்து கொள்ளுவேன்

**03** சென்ற ராவதின் இருளைப்போலவே
என்றன் பாவ இருளைப்போக்கி
இலங்கப் பண்ணுமே

**04** இன்று நானுமே இன்பமாகவே
உன்றன் வழியில் நடக்கக் கருணை
உதவ வேணுமே

**05** ஒளியின் பிள்ளையாய் ஊக்கமாகவே
எளியன் இன்றும் நடக்க ஆவி
ஈந்தருளுமே

## 196. நான் பிரமித்து நின்று

நான் பிரமித்து நின்று பேரன்பின்
ப்ரவாகத்தை நோக்கிப் பார்த்தேன்
என் உள்ளத்தில் மெய்ச் சமாதானம்
சம்பூரணமாய் அடைந்தேன்

மாதூய உதிரத்தால்
என் பாவம் நீங்கக் கண்டேன்
மீட்பரின் இரட்சிப்பினால்
நான் ஆறுதல் கண்டடைந்தேன்

**01** முன்னாளில் இவ்வாறுதல் காண
ஓயாமல் ப்ரயாசப்பட்டேன்
வீண் முயற்சி நீக்கினபோதோ
என் மீட்பரால் அருள் பெற்றேன்

மாதூய உதிரத்தால்..

**02** நான் அவரை தியானிக்கும் தியானம்
இனிமையாய் இருந்திடும்
பரிசுத்த நாமத்தைத் தேடும்
இருதயம் மகிழ்ந்திடும்

மாதூய உதிரத்தால்..

**03** எந்நேரமும் புண்ணிய நாதர்
என் பக்கத்தில் விளங்குவார்
தம் முகத்தின் அருள் பிரகாசம்
என் பேரிலே வீசச் செய்வார்

மாதூய உதிரத்தால்..

## 197. நான் உனை சிருஷ்டித்த தெய்வம்

நான் உன்னை சிருஷ்டித்த தெய்வம்
நான் உன்னை இரட்சிக்கும் தெய்வம்
நான் உந்தன் பாதையில் என்றும்
வெளிச்சமாய் உன்னை தொடர்கின்ற தெய்வம் – 2

**01** பயப்படாதே மகனே மகளே
நான் உந்தன் தெய்வம் அல்லோ
கலங்கிடாதே இனி என் கண்மணியே
நான் உந்தன் கூட உண்டு

**02** நான் உன்னை நேசிக்கும் தெய்வம்
கண்வைத்துக் காத்திடும் தெய்வம் – 2
நான் உந்தன் இருதய காயங்கள் ஆற்றி
இளைப்பாறச் செய்கின்ற தெய்வம்

பயப்படாதே..

**03** நான் உன்னைக் காண்கின்ற தெய்வம்
கண்ணீர் துடைக்கின்ற தெய்வம் – 2
நான் உந்தன் துன்பங்கள் துயரங்கள் நீக்கி
கரை கொண்டு சேர்க்கின்ற தெய்வம் – 2

பயப்படாதே..

## 198. நான் பாவி தான், ஆனாலும் நீர்

நான் பாவி தான், ஆனாலும் நீர்
மாசற்ற ரத்தஞ் சிந்தினீர்
வா என்று என்னைக் கூப்பிட்டீர்
என் மீட்பரே வந்தேன், வந்தேன்

**01** நான் பாவி தான், என் நெஞ்சிலே
கறை பிடித்திருக்குதே
என் கறை நீங்க இப்போதே
என் மீட்பரே வந்தேன், வந்தேன்

**02** நான் பாவி தான், பயத்திலே
அலைந்து பாவ பாரத்தால்
அமிழ்ந்து மாண்டு போவதால்
என் மீட்பரே வந்தேன், வந்தேன்

**03** நான் பாவி தான் மெய்யாயினும்
சீர் நேர்மை செல்வம் மோட்சம்
அடைவதற்கு உம்மிடம்
என் மீட்பரே வந்தேன், வந்தேன்

**04** நான் பாவி தான், இரங்குவீர்
அணைத்து காத்து, ரட்சிப்பீர்
அருளாம் செல்வம் அளிப்பீர்
என் மீட்பரே வந்தேன், வந்தேன்

**05** நான் பாவி தான், அன்பாக நீர்
நீங்காத் தடைகள் நீக்கினீர்
உமக்குச் சொந்தம் ஆக்கினீர்
என் மீட்பரே வந்தேன் வந்தேன்

## 199. நானும் என் வீட்டாருமோவென்றால்

நானும் என் வீட்டாருமோவென்றால்
கர்த்தரையே சேவிப்போம்
நீயும் சேவிப்பாயா – நீயும் சேவிப்பாயா – 2

**01** கர்த்தரையே சேவிப்பது
ஆகாத தென்று கண்டால் – 2
யாரை நீ சேவிப்பா யென்பதை
இன்றே தீர்மானம் செய்வாய் – 2

நானும் என்..

**02** அடிமையான நம்மையுமே
தேவாதி தேவன் மீட்டார் – 2
மாபெரும் அடையாளங்கள் செய்திட்ட
கர்த்தரை சேவிப்பாயா – 2

நானும் என்..

**03** நம் பாதையில் காப்பாற்றியே
கர்த்தர் நடத்தினாரே – 2
கர்த்தர் தந்த ஆசீர் யாவும் கண்டு
நன்றியாய் சேவிப்பாயா – 2

நானும் என்..

**04** நன்மையான ஈவுகளை
தேவாதி தேவன் தந்தார் – 2
கீழ்ப்படிந்தே அவர் சத்தம் கேட்டு
சாட்சியாய் ஜீவிப்பாயா 2

நானும் என்..

## 200. நிகரே இல்லாத சர்வேசா

நிகரே இல்லாத சர்வேசா
திகழும் ஒளி பிரகாசா
துதிபாடிட இயேசு நாதா
பதினாயிரம் நாவுகள் போதா
நிகரே இல்லாத சர்வேசா
திகழும் ஒளி பிரகாசா

**01** துங்கன் இயேசு மெய் பரிசுத்தரே
எங்கள் தேவனைத் தரிசிக்கவே
துதிகளுடன் கவிகளுடன்
தூயர் தூயனை நெருங்கிடுவோம்
நிகரே இல்லாத..

**02** தேவ மைந்தனாய் அவதரித்தார்
பாவ சோதனை முறியடித்தார்
மனிதனுக்காய் உயிர் கொடுத்தார்
மாளும் மாந்தரை மீட்டெடுத்தார்
நிகரே இல்லாத..

**03** கல்லும் மண்ணும் என் கடவுளல்ல
கையின் சித்திரம் தெய்வமல்ல
ஆவியோடும் உண்மையோடும்
ஆதி தேவனை வணங்கிடுவோம்
நிகரே இல்லாத..

## 201. நித்தம் முயல் மனமே

நித்தம் முயல் மனமே
பரிசுத்த ஜீவியத்தில் மெத்த வளர நீ
நித்தம் முயல் மனமே

**01** அத்தன் ஏசுவினில் பக்தியாயமர்ந்து – 2
சத்திய வேதத்தால் நித்தம் உன்னைப்போஷி
நித்தம் முயல்..

**02** அல்பகல் ஏசுவோ டதிக நேரத்தை – 2
ஆசையாய்க் கழி நீ, அவரைப் போலாவாய்
நித்தம் முயல்..

**03** தேவனின் பிள்ளைகள் யாவரையும் நேசி – 2
ஆவலாய் எளியோர்க் கன்பாலுதவி செய்
நித்தம் முயல்..

**04** ஏசுவே உன்றனை என்றும் நடத்துவார் – 2
இன்ப துன்பத்திலும் அன்பாய் நீ பின் செல்லு
நித்தம் முயல்..

**05** எந்த எண்ணத்தையும் ஏசுவின் கீழாக்கி – 2
உந்தன் உள்ளத்திலமர்ந்திரு சாந்தமாய்
நித்தம் முயல்..

**06** மேவும் அன்புக்குள் தேவாவி நடத்திட – 2
மிக்கமேல் வாழ்வுக்குத் தக்கவனாகுவாய்
நித்தம் முயல்..

## 202. நீங்காத பாவம்

நீங்காத பாவம் நீங்காததேனோ
நீங்கிடும் நாள் தான் இதோ – 2
பாவியை ஒரு போதும் தள்ளாத நேசர்
வா வென்று அழைக்கிறார் – 2

**01** எகோவாவின் அன்பின் ஆழம்
இயேசு உலகில் வந்தார் – 2
பாசமாய் அவரைப் பற்றிய பேர்க்கு
பாவ மன்னிப்பு ஈவார் – 2

நீங்காத பாவம்..

**02** மோசே முதலிய முற்பிதாக்களை
முன்னின்று நடத்தினார் – 2
முன்னோடியாக திகழும் சபையை
முன்னின்றும் நடத்துவார் – 2

நீங்காத பாவம்..

**03** ஆயிர வருட அரசாட்சியில்
அன்புடன் உன்னை ஆளுகை செய்யும் – 2
ஆசீர்வாதத்தை இழந்து போகாமல்
அண்டிக் கொள்வோம் அவரை – 2

நீங்காத பாவம்..

## 203. நீர் மாத்திரம் போதும் எனக்கு

யேகோவா யீரே தந்தையாம் தெய்வம்
நீர் மாத்ரம் போதும் எனக்கு
யேகோவா ராஃபா சுகம் தரும் தெய்வம்
உம் வார்த்தையால் சுகமாக்கினீர்
யெகோவா ஷம்மா என் கூட இருப்பீர்
என் தேவையெல்லாம் சந்திப்பீர்

நீர் மாத்திரம் போதும் நீர் மாத்திரம் போதும்
நீர் மாத்திரம் போதும் எனக்கு – 2

**01** யேகோவா ஏலோகிம் சிருஷ்டிப்பின் தேவனே
உம் வார்த்தையால் உருவாக்கினீர்
யேகோவா பரிசுத்தர் உன்னதர் நீரே
உம்மைப்போல் வேறு தேவன் இல்லை
யேகோவா ஷாலோம் உம் சமாதானம்
தந்தீர் என் உள்ளத்திலே

**02** இயேசுவே நீரே என் ஆத்ம நேசர்
என்னில் எவ்வளவன்பு கூர்ந்தீர்
என்னையே மீட்க உம்மையே தந்தீர்
உம் அன்பிற்கு இணையில்லையே
என் வாழ்நாள் முழுதும்
உமக்காக வாழ்வேன்
நீரே என்றென்றும் போதும்

நீர் மாத்திரம்..

## 204. நீர் ஜீவ அப்பம்

நீர் ஜீவ அப்பம் பஞ்சத்தில்
உம்மால் என் பசி ஆறும்
நான் போம் வனாந்தரங்களில்
என் உள்ளம் உம்மை நாடும்
பிதாவின் ஈவாம் மன்னாவே
நீர் என்னைப் பாவ இச்சைக்கே
விலக்கிக் காத்துக்கொள்ளும்

**01** நீர் ஜீவ ஊற்று உம் மாலே
என் ஆத்ம தாகம் தீரும்

நீர் தரும் ஈவு நித்தமே
சுரக்கும் தண்ணீராகும்
நீரூற்றாய் என்னில் ஊறுமேன்
நிறைவாய் நித்தம் தாருமேன்
ஆரோக்கியமும் சீரும்

**02** நீர் என்னை ஜோடிக்கும் உடை
நீர் என் அலங்கரிப்பு
நான் உம்முடைய நீதியை
அணிவதென் விருப்பு
பூலோகத்தின் சிங்காரமாம்
விநோத சம்பிரமம் எல்லாம்
என் ஆவிக்கு வெறுப்பு

**03** என் மேய்ப்பராய் இருக்கிறீர்
என் மேய்ச்சலும் நீர் தாமே
காணாமல் போன என்னை நீர்
அன்பாக மீட்போராமே
இவ்வேழை ஆட்டை
என்றைக்கும்
நீர் பாதுகாத்துப் போஷியும்
நான் உம்முடையோனாமே

**04** நீரே நான் என்றும்
வாஞ்சிக்கும்
மா நேசமுள்ள நாதர்
நீரே என் ஆசரியரும்
பலியுமான கர்த்தர்
நீர் என்னை ஆளும் ராஜாவும்
உம்மாலே எந்தப் போரிலும்
ஜெயிப்பேன் மா சமர்த்தர்

## 205. பரம அழைப்புக்குப் பாத்திரரே

பரம அழைப்புக்குப் பாத்திரரே
பரிசுத்தமான பிள்ளைகளே
பரமனின் ஈவைப் பெற்றிடவே
உறுதியும் உண்மையாய்த் தொழுதிடுவோம்
பரம அழைப்புக்கு..

**01** நீதியும் செம்மையுமானவராய்
நியாயக் கேடில்லாத தேவனவர்
சத்தியம் அவரது வழிகளெல்லாம்
நித்தமும் நன்மை சமூலமுமே
பரம அழைப்புக்கு..

**02** உபத்திரவங்களின் மத்தியிலும்
உழன்றிடும் மாந்தரின் துயர் துடைத்து
உண்மையாய் அவர் வழி நடப்பவர்க்கே
உயர்வுண்டு தேவ சமூகத்திலே
பரம அழைப்புக்கு..

**03** சீயோனில் எக்காளம் ஊதிடுவோம்
சீர்கெட்ட மாந்தரும் திருந்திடவே
சேனைகளின் கர்த்தர் நல்லவராம்
சேர்ந்திடுவோம் அவர் வல்லமையால்
பரம அழைப்புக்கு..

## 206. பரலோக பாதை பாக்கியமே

பரலோக பாதை பாக்கியமே
பாதையோ இடுக்கம், நெருக்கமுமே
பூமியில் எங்கும் அலைந்திடினும்
விட்டுவிடேன் மெய் விசுவாசத்தை

**01** மலைபல மயங்கக் கடந்தாலும்
நிலை குலையாமல் நோக்கம் விடேன்
வழி நடத்தும் வள்ளல் இயேசுவினால்
வழுவாது என்றும் வெற்றியினை

பரலோக பாதை..

**02** உலக வனாந்தரப் பயணத்திலே
இருள் பல சூழ்ந்திடும் போதினிலே
வசனத்தின் வெளிச்சம் பிரசித்தமாய்
வானுயர் இயேசுவின் மகிமை காண்போம்

பரலோக பாதை..

**03** சீயோனில் எக்காளம் ஊதிடுவோம்
சீர் கெட்ட மாந்தரும் திருந்திடவே
சேனைகளின் கர்த்தர் நல்லவராம்
சேர்ந்திடுவோம் அவர் வல்லமையில்

பரலோக பாதை..

## 207. பரலோகமே என் சொந்தமே

பரலோகமே என் சொந்தமே
என்று காண்பேனோ
என் இன்ப இயேசுவை
என்று காண்பேனோ

**01** வருத்தம் பசி தாகம்
மனதுயரம் அங்கேயில்லை
விண்கிரீடம் வாஞ்சிப்பேன்
விண்ணவர் பாதம் சேர்வேன்

பரலோகமே என்..

**02** சிலுவையில் அறையுண்டேன்
இனி நானல்ல இயேசுவே
அவரின் மகிமையே
எனது இலட்சியமே

பரலோகமே என்..

**03** இயேசு என் நம்பிக்கையாம்
இந்தப் பூமி என் சொந்தமல்ல
பரிசுத்த சிந்தையுடன்
இயேசுவைப் பின்பற்றுவேன்

பரலோகமே என்..

**04** ஓட்டத்தை ஜெயமுடன்
நானும் ஓடிட அருள் செய்வீர்
விசுவாச பாதையில்
சோராது ஓடிடுவேன்

பரலோகமே என்..

## 208. பலிபீடத்திலென்னைப் பரனே

பலிபீடத்திலென்னைப் பரனே
படைக்கின்றேனே இந்த வேளை
அடியேனை திருச்சித்தம் போல
ஆண்டு நடத்திடுவீர் – 2

கல்வாரியின் அன்பினையே
கண்டு விரைந்தோடி வந்தேன் – 2
கழுவும் உம் திரு இரத்தத்தாலே
கறை நீங்க இதயத்தை – 2

**01** நீரன்றி என்னாலே பாரில்
ஏதும் நான் செய்திட இயலேனே
சேர்ப்பீரே வழுவாது என்னை
காத்துமக்காய் நிறுத்தி – 2

கல்வாரியின்..

**02** சுயமென்னில் சாம்பலாய் மாற
சுத்தாவியே அனல்மூட்டும்
ஜெயம்பெற்று மாமிசம் மாய
தேவா அருள் செய்குவீர் –

கல்வாரியின்..

## 209. பலியும் தாழ்மையும் பலியும்

பலியும் தாழ்மையும் இரண்டையுமே
தேவன் விரும்புகிறார் – 2
பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதல்
மிகவும் அவசியமே – 2

**01** எங்கள் சரீரங்களையே பரிசுத்த பலியாக
ஜீவிய காலம் முழுதும் அர்ப்பணம் செய்திடுவோம்
மாம்சத்தின் விருப்பங்களை
சிலுவையில் அறைந்திடுவோம்
மரணம் வரை நிலைத்திருந்து
மறுரூபமாகிடுவோம் – 2

பலியும் தாழ்மையும்..

**02** உலகத்தின் பாதையை வெறுத்து ஊழியம் செய்திடுவோம்
தேவனின் இராஜ்ஜியம் தேடி நீதியில்நிலைத்திடுவோம்
பாடுகள் துன்பங்களை அன்புடன் சகித்திடுவோம்
கீழ்ப்படிதல் கற்றுக்கொண்டு கிறிஸ்து போலாகிடுவோம் – 2

பலியும் தாழ்மையும்..

**03** இலாபத்தின் நோக்கத்தை வெறுத்து
நஷ்டத்தை விரும்பிடுவோம்
கர்த்தரை அறிகிற அறிவே பெரிதெனக் கருதிடுவோம்
மயக்கிடும் மாயங்களை அடியுடன் வெறுத்திடுவோம்
பரிசுத்தரை தரிசித்திட பரிசுத்தமாகிடுவோம் – 2
பலியும் தாழ்மையும்..

## 210. பரிசுத்தம் ஒன்றையே

பரிசுத்தம் ஒன்றையே வாஞ்சிக்கிறேன்
ஆனால் பலமுறை ஏனோ தவறுகிறேன் – 2
உம்மாலன்றி என்னால் இயலாதையா
பரிசுத்தம் காத்திட பெலன் தந்திடும் – 2

**01** மறைவான பாவங்கள் அறிக்கை செய்ய
உள்ளம் நொறுங்கிட தூயாவி
உணர்வைத் தாரும் – 2
அறிவின் பெருமைகள் மனமேட்டிமைகள்
ஆத்மீக கர்வங்கள் நீங்கச் செய்யும் – 2
பரிசுத்தம் ஒன்றையே..

**02** பரிசுத்தம் காத்திடும் ஊழியனாய்
என்னை முற்றிலும் உமக்கே பயன்படுத்தும் – 2
அறுவடை நாயகன் களஞ்சியத்தில்
மணிகளைச் சேர்த்திட பயன்படுத்தும் – 2
பரிசுத்தம் ஒன்றையே..

**03** பரிசுத்த பாதையில் நான் நடக்க
உந்தன் பரிசுத்த ஆவியை என்னில் தாரும் – 2
வெளிச்சத்தின் பிள்ளைகள் என உணர்ந்து
உலகிற்கு ஒளியாய் வாழ்ந்திடனும் – 2
பரிசுத்தம் ஒன்றையே..

**04** பரிசுத்த தேவனைத் தொழுது கொள்ள
உந்தன் பரிசுத்த ஆவியை என்னில் தாரும் – 2
பரலோக தந்தையின் சித்தம் செய்ய
பரிசுத்தர் இயேசுவின் சிந்தை தாரும் – 2
பரிசுத்தம் ஒன்றையே..

## 211. பரிசுத்தரே வாரும்

பரிசுத்தரே வாரும் பரிசுத்தரே வாரும்
பரிசுத்தரே வாரும் பரிசுத்தரே வாரும் வாரும்
பரிசுத்தமாக்கும் ஐயா எனை பரிசுத்தமாக்கும் ஐயா – 2
பரிசுத்தமின்றி தரிசிப்பார் உண்டோ
பரிசுத்தரே மகா பரிசுத்தரே – 2
பரிசுத்தமாக்கும் ஐயா..

**01** பரிசுத்தமாயிருக்க எனை அழைத்தீரே பரிசுத்தரே – 2
கர்த்தர் நீர் விரும்பும் பரிசுத்தம் காண
படைக்கிறேனே முற்றும் படைக்கிறேனே – 2
பரிசுத்தமாக்கும் ஐயா..

**02** பாவத்தில் விடுதலையை நான் நீதிக்கு அடிமையே – 2
பரிசுத்தமாகுதல் கிடைக்கும் பலனே
நற்பலனே அது பெரும்பலனே – 2
பரிசுத்தமாக்கும் ஐயா..

**03** வசனத்தில் பரிசுத்தமே உம் இரத்தத்தில் பரிசுத்தமே – 2
சத்திய ஆவியால் பரிசுத்தம் பலியினால் பரிசுத்தம்
வேண்டும் ஐயா இப்போ வேண்டுமய்யா – 2
பரிசுத்தமாக்கும் ஐயா..

## 212. பாடல் ஒன்று பாடுவேன்

பாடல் ஒன்று பாடுவேன்
எகோவா தேவனுக்காக
தினந்தோறும் தவறாமல்
புதுப்பாடல் ஒன்று பாடிப்பாடி

**01** இன்பம் வந்தாலும்
உமதன்பைப் பாடுவேன்
துன்பம் வந்தாலும்
உமதருளைப் போற்றுவேன்
எனது வாழ்வின் வழியும் நீரே – 2
எனது வாழ்வின் ஒளியும் நீரே

**02** எந்த நேரமும் உமதன்பை நாடியே
தேடி நின்றிடும் இந்த ஏழை பாவியே
எந்தன் பாவ இருளை நீக்க – 2
அன்பு மைந்தனைத் தந்த தேவனே

## 213. பாடுகள் வழியாய் பரலோகம்

பாடுகள் வழியாய் பரலோகம் செல்வேன்
நீடூழியாய் நித்ய காலம் நான் வாழ்வேன் – 2
இயேசுவை நான் காண்பேன்
என் மீட்பரின் பாதம் சேர்வேன் – 2

பாடுகள் வழியாய்..

**01** சிலுவை இல்லாமல் மீட்பு இல்லை
செங்கடல் இல்லாமல் கானான் இல்லை – 2
சோதனை இல்லாமல் சாதனை இல்லை – 2
வேதனை இல்லாமல் வெற்றி இல்லை வெற்றி இல்லை

பாடுகள் வழியாய்..

**02** அடிக்கப்பட்டாலும் அசைவதில்லை
நெருக்கப்பட்டாலும் ஒடுங்கவில்லை – 2
விபத்துக்குட்பட்டாலும் மாளவில்லை – 2
ஜெபத்துக்குட்பட்டதினால் சோரவில்லை
சோரவில்லை

பாடுகள் வழியாய்..

**03** தாங்கிடும் தேவன் ஏந்திடுவார்
தப்புவிக்கும் தேவன் சுமந்திடுவார் – 2
ஜீவிக்கும் இயேசு நம்மோடிருப்பார் – 2
ஜீவிக்கும்வரை அவர் புகழ் பாடுவேன்
புகழ் பாடுவேன்

பாடுகள் வழியாய்..

## 214. பாதம் ஒன்றே வேண்டும்

(ராகம்: நித்தம் முயல் மனமே)

பாதம் ஒன்றே வேண்டும் – இந்தப்
பாரில் எனக்கு மற்றேதும் வேண்டாம் – உம்

**01** நாதனே துங்க மெய் – தேவனே பொங்குநற்
காதலுடன் துய்ய – தூதர் தொழுஞ் செய்ய

பாதம் ஒன்றே..

**02** சீறும் புயலினால் – வாரிதி பொங்கிடப்
பாரில் நடந்தாற்போல் – நீர்மேல் நடந்த உம்

பாதம் ஒன்றே..

**03** வீசும் கமழ்கொண்ட – வாசனைத் தைலத்தை
ஆசையுடன் – மரி பூசிப் பணிந்த பொற்

பாதம் ஒன்றே..

**04** போக்கிட மற்ற எம் ஆக்கினை யாவையும்
நீக்கிடவே மரந் – தூக்கி நடந்த நற்
பாதம் ஒன்றே..

**05** நானிலத்தோர் உயர் – வான் நிலத் தேறவல்
ஆணி துளைத்திடத் தானே கொடுத்த உம்
பாதம் ஒன்றே..

**06** பாதம் அடைந்தவர்க் – காதரவாய் பிர
சாதம் அருள்ஏசு – நாதனே என்றும் உம்
பாதம் ஒன்றே..

## 215. பாடுங்கள் கர்த்தரையே

பாடுங்கள் கர்த்தரையே
தேவ தேவனின் தூய திருமறை நூலில்
பாடுவோம் பரவசமாய் – பாடுங்கள்

**01** அறுபத்தி ஆறு முத்தும் மணி
ஆரமாம் அழியாச் சொத்தே – 2
அந்தக் கடல் முதல் இந்தக் கடல்
ஆர்ப்பரித்தே அரசாண்டிடுவார் – 2
பாடுங்கள்..

**02** ஆதியிலே தெரிந்தெடுத்தார் – நல்ல
ஆவியிலே வழி நடத்தி – 2
ஆரோனும் மோசே தூதர் போல
ஆண்டிடும் என்றும் ஆவியிலே – 2
பாடுங்கள்..

**03** ஆபிரகாம் ஈசாக் பெற்ற – நல்
ஆவிகளை இன்றும் ஊற்றி – 2
ஆவலாய் ஜெபித்திடும் எம்மையுமே
ஆசீர்வதித்திட வேண்டுகிறோம் – 2

பாடுங்கள்..

**04** ஏழைக்கு நீதியைச் செய்வார் – அன்பின்
ஏழையின் சிறுமையை போக்கி – 2
ஏழை விரோதியை ஒழித்திடுவார்
ஏழைக்கு விடுதலை தந்திடுவார் – 2

பாடுங்கள்..

**05** பத்மோஸ் தீவில் காட்சி – நற்
பாதை செல்வோர்க்கு சாட்சி – 2
பால் நிலவோய் பலவீனர்களின்
பாதைக்குத் தீபமுமாகிடுவாய் – 2

பாடுங்கள்..

## 216. பார் அருணோதயம்போல்

பாரீர் அருணோதயம்போல்
உதித்து வரும் இவர் யாரோ
முகம் சூரியன் போல் பிரகாசம்
சத்தம் பெரு வெள்ள இரைச்சல்போல

இயேசுவே ஆத்ம நேசரே
சாரோனின் ரோஜாவே லீலி புஷ்பமும்
பதினாயிரங்களில் சிறந்தோர் ஆ..

**01** காட்டு மரங்களில் கிச்சிலிபோல்
எந்தன் நேசர் அதோ நிற்கிறார்
நாமம் ஊற்றுண்ட பரிமளமே
இன்பம் ரசத்திலும் அதி மதுரம்

இயேசுவே ஆத்ம..

**02** என் பிரியமே ரூபவதி
என அழைத்திடும் இன்ப சத்தம்
கேட்டு அவர் பின்னே ஓடிடுவேன்
அவர் சமூகத்தில் மகிழ்ந்திடுவேன்

இயேசுவே ஆத்ம..

**03** என் நேசர் என்னுடையவரே
அவர் மார்பினில் சாய்ந்திடுவேன்
மணவாட்டியே வா என்பாரே
நானும் செல்வேன் அந்நேரமே

இயேசுவே ஆத்ம..

## 217. பாதை காட்டும் மா எகோவா

பாதை காட்டும் மா எகோவா
பரதேசியான நான்
பெலவீனன் அறிவீனன்
இவ்வுலகம் காடுதான்
வானாகாரம் – 3
தந்து என்னை போஷியும் – 2

**01** ஜீவத் தண்ணீர் ஊறும் ஊற்றை
நீர் திறந்து தாருமேன்
தீபமேக ஸ்தம்பம் காட்டும்
வழியில் நடத்துமேன்
வல்ல மீட்பர் – 3
என்னைத் தாங்கும் ஏசுவே – 2

**02** சாவின் சக்தி ஓங்கி வந்து
நான் அழிந்து போகிலும்
சாவின் மேலும் வெற்றி தந்து
என்னைச் சேர்க்கும் காலத்தில்
கீத வாழ்த்தல் – 3
உமக்கென்றும் பாடுவேன் – 2

**03** தாரும் சுத்த ஆவி தாரும்
எங்கள் ஆத்துமத்திலே
எங்களுக்கு உயிர் தாரும்
பரிசுத்த தந்தையே
ஞானதீபம் – 3
தேவனே நீர் ஏற்றுமே – 2

## 218. பாவ சஞ்சலத்தை நீக்க

பாவ சஞ்சலத்தை நீக்க
ப்ராண சிநேகனுண்டே
பாவ சுமை தீர்த்துப்போட
ஏசுவின் நற்பாதமே
சோருவோமே திகைப்போமே
சால துக்க துன்பத்தால்
புத்தியீனம் மாறிப்போகும்
ஜெபதபம் செய்வதால்

**01** கஷ்ட நஷ்ட முண்டானாலும் ஏசுவண்டை சேருவோம்
மோச நாசம் நேரிட்டாலும் ஜெபதூபம் காட்டுவோம்
நோக்குவார் உன் நெஞ்சின் நோவை பெலவீனம் தாங்குவார்
நீக்குவார் உன் மனச்சோர்வை தீய குணம் மாற்றுவார்.

**02** பெலவீனமானபோதும் கிருபாசனமுண்டே
ஈனநாசம் நேரிட்டாலும் புகலிடம் இதுவே
ஒப்பில்லாத ப்ராணநேசா உம்மை நம்பி நேசிப்போம்
அளவற்ற அருள்நாதா உம்மை நோக்கிக் கெஞ்சுவோம்

## 219. பிளவுண்ட மலையே

பிளவுண்ட மலையே புகலிடம் தாருமேன்
பக்கம் பட்ட காயமும்
பாய்ந்த செந்நீர் வெள்ளமும்
பாவ தோஷம் யாவையும்
நீக்கும்படி அருளும்

**01** கண்ணீர் நித்தம் சொரிந்தும்
தொய்யாத் தவம் புரிந்தும்
பாவம் நீங்க மாட்டாதே
நீரே மீட்பர் ஏசுவே
உம்மை நித்தம் அடியேன்
தஞ்சமென்று சாருவேன்

**02** நிழல் போன்ற வாழ்விலே
களிப்பேது பரனே
ராஜ்ஜியம் வருகையில்
உயிர்த்தெழுந்த தினத்தில்
பிளவுண்ட மலையே
புகலிடம் தாருமேன்

# 220. பிஸ்காவின் கொடுமுடிக்கு வாரும்

பிஸ்காவின் கொடுமுடிக்கு வாரும்
திவ்ய ராஜ்ய தோற்றம் காணவே
துங்கவான் இயேசுவின் ஆட்சி தோன்றும்
தொடர்ந் தென்றும் அங்கு பாடி மகிழ்வோம்
மகிமையான வெண்சிங் காசனத்தைக் காணீர்
மணவாட்டி அணியும் மகுடம் காணீர்
இன்ப இயேசுவின் வருகையினைக் காண்போர்
இணையற்ற பாக்யத்தால் மகிழுவர்

**01** ஓ தேவ ராஜ்யம் தன்னில் காணும் தோற்றம்
மிகுந்த பர வசமாகுதே
துரிதமாக ஓடி, அறுவடை முடித்து
தூய களஞ்சியத்தில் சேர்த்திடுவீரே
வாக்களித்த வானகத்தின் தூய வாழ்வில்
அன்பின் ஆட்சியே மலர்ந்து காணுமே

**02** ஜீவ ஊற்று என்றென்றும் சுரந்திடும்
பார்க்கும் இடம் பசுமையாய்க் காணும்
அழகின் காட்சி கண்முன்னே அரும்பிடுதே
மன்னனும், மணவாட்டியும் ஆள்கையில்
நமது துன்ப துயரம் அனைத்துமே நீங்கிடும்
இனிமேலும் சோதனைகள் தோன்றாதே
அந்த வெற்றி பெற்ற ராஜியத்தின் நாளில்
அனைத்து உலகமும் ஆசீர்தனைப் பெறும்

**03** அரியணையில் பெருக்கெடுக்கும் ஜீவ நதி
அனைவர் தாகம் தீர்க்கச் செய்யுமே
கர்த்தராலே மீட்கப்பட்ட மாந்தர்
ஆனந்தக் கீதங்களைப் பாடுவர்
சஞ்சலம், தவிப்பு மில்லா தூய வாழ்வைப்

பெற்று, நித்ய மகிழ்ச்சி என்றும் காண்பாரே
தேவ, தூய பர்வதங்கள் தன்னிலே
நீதி எங்கும் நிலைத்து வாழச்செய்யுமே

## 221. பெலமளித்தெமைப் புது வழிகளில்

பெலமளித்தெமைப் புது வழிகளில் நடத்திட
தாரகம் நீரல்லவோ – 3

தாரணியில் எமக்குத் தயை புரிந்திடும்
இயேசு நாயகன் நீரல்லவோ

**01** இருவரொருமித்தெம்மை வரவழைத்திடல்
திரு சமுகமளிப்பேன் என்றீரே – 3
நீரன்றி எமக்கேது வீரமுலகிலுண்டு
விரைந்து எழுந்திடுவீரே

**02** அதிசயமானவர் என்பதுமது பெயர்
அதிசயம் விளங்கச் செய்யுமே – 3
இது சமயம் உமது இதயம் விரும்புவதை
இயேசுவே விளங்கச் செய்யுமே

**03** பாவிகளுமதண்டை சேரும் உணர்வடைந்து
தாகமுடன் அண்டிட – 3
நாவின் அறிக்கையினால் நவீன இதயம் பெற்று
நாதனைப் பின் சென்றிட

## 222. பெலன் ஒன்றும் இல்லை தேவா

பெலன் ஒன்றும் இல்லை தேவா
ஆவியால் பெலப்படுத்தும்
சத்துவம் இல்லாத எனக்கு
சத்துவம் தந்தருளும் – 2

பெலன் ஒன்றும்

**01** சாத்தானை எதிர்க்க பெலன் தாரும்
சோதனை ஜெயிக்க பெலன் தாரும் – 2
மாய உலகினை வெறுக்க
என்னையும் பெலப்படுத்தும் – 2

பெலன் ஒன்றும்

**02** மானின் கால்களைப்போல
என் கால்களை பெலப்படுத்தும் – 2
நூனின் குமாரனைப் போல
என்னையும் பெலப்படுத்தும் – 2

பெலன் ஒன்றும்

## 223. போற்றித் துதிப்போம் நம் தேவ

போற்றித் துதிப்போம் நம் தேவ தேவனனை
புதிய கிருபையுடனே
நேற்றும் இன்றும் என்றும் மாறா இயேசுவை
நாம் என்றும் பாடித் துதிப்போம்

இயேசு என்னும் நாமமே நம் ஆத்துமாவின் கீதமே
நம் நேசரேசுவை நாம் என்றும் ஏற்றி மகிழ்ந்திடுவோம் – 2

**01** கோரப் பயங்கரமான புயலில்
கொடிய அலையின் மத்தியில் – 2
காக்கும் கரம் கொண்டு மார்பில் சேர்த்தணைத்த
அன்பை என்றும் பாடுவோம் – 2

இயேசு என்னும்..

**02** யோர்தான் நதி போன்ற சோதனையிலும்
சோர்ந் தமிழ்ந்து மாளாதே – 2
ஆர்ப்பின் ஜெய தொனியுடனே பாதுகாத்த
அன்பை என்றும் பாடுவோம் – 2

இயேசு என்னும்..

**03** தாய் தன் பாலகனையே மறப்பினும்
நான் மறவேன் என்று சொன்னதால் – 2
தாழ்த்தி நம்மையவர் கையில் ஈந்து
ஜீவ பாதை என்றும் ஓடுவோம் – 2

இயேசு என்னும்..

## 224. போற்றுவோம் தேவனை

போற்றுவோம் தேவனை
இன்றும் என்றுமாய் – 2
ஆவியுடன் உண்மையுடன்
ஆராதிப்போம் தேவனை – 2

போற்றுவோம்..

**01** சென்ற நாளிலே சுகமுடன்
காத்த தேவனை ஸ்தோத்திரிப்போம் – 2
தந்தேன் எந்தனை வந்தேன் பாதமே
என்றும் சொந்தமாய்

போற்றுவோம்..

**02** தேவ கிருபை தங்கிடவே
தேவ தேவனை ஆராதிப்போம் – 2
உள்ளம் நொறுங்கியே உண்மை மனதுடன்
என்றும் தொழுவோம்

போற்றுவோம்..

**03** தேவ ஆலயம் இதயமே
தேவன் தங்கிட ஆராதிப்போம் – 2
நன்றி மனதுடன் போற்றிப் புகழ்ந்துமே
சாற்றி ஆராதிப்போம்

போற்றுவோம்..

## 225. போற்றுவேன் என் மீட்பர் அன்பை

போற்றுவேன் என் மீட்பர் அன்பை
ப்ராணன் தந்து ரட்சித்தார்
பாடுபட்டு இரத்தம் சிந்தி
பாவம் சாபம் நீக்கினார்

போற்றும் போற்றும் அல்லேலூயா
பூர்ண மீட்புண்டாக்கினார்
தூய வல்ல ரத்தம் சிந்தி
தீய பாவம் நீக்கினார்

**01** நீசப் பாவியாம் எந்தன்பேரில்
நேசம் வைத்துக் காட்டினார்
மீட்கும் பொருளாகத் தம்மை
முற்றும் தந்தீடேற்றினார்

போற்றும் போற்றும்..

**02** போற்றுவேன் சம்பூர்ண மீட்பை
ப்ராணநாதர் காக்கிறார்
வாழ்நாள் எல்லாம் பாவப்போரில்
வெற்றிகாணச் செய்கிறார்

போற்றும் போற்றும்..

**03** போற்றுவேன் ஆனந்தமாக
பாடி நன்றி சொல்லுவேன்
என்னை மீட்ட இயேசுவோடே
என்றும் தங்கி சேவிப்பேன்

போற்றும் போற்றும்..

## 226. போற்றும் போற்றும் புண்ணியநாதரை

போற்றும் போற்றும் புண்ணியநாதரைப் போற்றும்
வானோர் கூடிப்பாடவும் இன்பமாய்
பாரிலேயும் நாமசங்கீர்த்தனம் செய்ய
மாந்தர் யாரும் வாரும் ஆனந்தமாய்
நேச மேய்ப்பன் கரத்தில் ஏந்துமாறு
ஏசு நாதர் நம்மையும் தாங்குவார்
போற்றும் போற்றும் தேவகுமாரனைப் போற்றும்
பாதுகாத்து நித்தமும் போஷிப்பார்

**01** போற்றும் போற்றும் புண்ணியநாதரைப் போற்றும்
பாவம் நீக்கி உய்விக்கச் செய்கிறார்
பாடுபட்டு ப்ராணத் தியாகமுமாகி
வான ராஜ்ய வாசலைத் திறந்தார்
மா கர்த்தாவே ஸ்தோத்திரம் இன்றும் என்றும்
வாழ்க வாழ்க ஜெகத்து ரட்சகா
அருள் நாதா மாசணுகா பரஞ்சோதி
வல்ல நாதா கருணை நாயகா

02 போற்றும் போற்றும் புண்ணியநாதரைப் போற்றும்
விண்ணும் மண்ணும் இசைந்து பாடவும்
போற்றும் போற்றும் ஏக மகத்துவமாக
ஆட்சி செய்வார் நித்திய காலமும்
ஏக ராஜா மாட்சிமையோடு வந்தார்
ஏக ஸ்வாமி புமியில் ஆள்கிறார்
லோகம் எங்கும் நீதியின் க்ரீடத்தைச்சூடி
ஜோதியாகப் பாலனம் பண்ணுமேன்

## 227. போதகரே புயல் வீசுதே

போதகரே புயல் வீசுதே அலை அடிக்கிறதே
வானங்கள் இருண்டு போகுதே தங்கும் இடமோ இல்லை
நாங்கள் உயிர்விடும் போது பார்த்துக் கொண்டிருப்பீரோ
ஒவ்வொரு கனப் பொழுதிலும் ஆழ் கடல் கல்லறையே

காற்று அலையும் கீழ்ப்படிந்திடும் அமைதி நிலவவே
கொந்தளிக்கும் கடல் கோபமோ

01 புயலால் புரண் டோடுகின்ற கடலோ
பேய்களோ, மனிதரோ யாராயினும்
எந்த நீரும் கப்பலை மூழ்கடிக்காதே
அவையாவும் உமக்குப் பணிந்திடும்
அமைதியே அமைதியே – 2

காற்று அலையும்..

02 போதகரே கடும் காற்றும் புயலும் நின்றதுவே
வானம் பூமி கடல் யாவும் அமைதி கொண்டதுவே
ஓ பாக்ய மீட்பரே வாரும் காரும் தனிமையினில்
ஆனந்தமாய் கரை சேர்வேன் அங்கு
அமைதி கொள்வேன் – 2

காற்று அலையும்..

## 228. மகனே உன் நெஞ்செனக்குத் தாராயோ

மகனே உன் நெஞ்செனக்குத் தாராயோ – திவ்ய
வாழ்வைத் தருவேன் இது பாராயோ

01 அகத்தின் அசுத்தமெல்லாம் துடைப்பேனே – பாவ
அழுக்கை நீக்கி அருள் கொடுப்பேனே
மகனே உன்..

02 உந்தன் பாவம் முற்றும் பரிகரிப்பேனே – அதை
உண்மையாய் அகற்ற யான் மரித்தேனே
மகனே உன்..

03 பாவம் அனைத்துமே விட்டோடாயோ – நித்ய
பரகதி வாழ்வை இன்றே தேடாயோ
மகனே உன்..

04 உலக வாழ்வினை விட்டகல்வாயே – மகா
உவப்பாய் கதி ஈவேன் மகிழ்வாயே
மகனே உன்..

05 உந்தன் ஆத்துமத்தை நீ படைப்பாயே – அதில்
ஊக்கமாய் வசிக்க இடம் கொடுப்பாயே
மகனே உன்..

## 229. மகிமை மாட்சிமை நிறைந்தவரே

மகிமை மாட்சிமை நிறைந்தவரே
மகிழ்வுடன் தொழுதிடுவோம் – 2
பரிசுத்த இயேசுவின் தேவனை
பணிந்தே தொழுகுவோம் – 2

01 உன்னத தேவன் நீரே
ஞானம் நிறைந்தவரே – 2

முழங்கால் யாவுமே
பாரினில் மடங்கிடுதே
உயர்ந்தவரே சிறந்தவரே
என்றென்றும் தொழுதிடுவோம் – 2

மகிமை மாட்சிமை..

**02** ஒருவரும் சேரா ஒளியில்
வாசம் செய்பவரே – 2
ஒளியினைத் தந்துமே
இதயத்தில் வாசம் செய்யும்
ஒளி நிறைவே அருள் நிறைவே
என்றென்றும் தொழுதிடுவோம் – 2

மகிமை மாட்சிமை..

**03** பரிசுத்த தேவன் நீரே
பாதம் பணிந்திடுவோம் – 2
கழுவியே நிறுத்தினீரே
சத்திய தேவன் நீரே
கனம் மகிமை செலுத்தியே நாம்
என்றென்றும் தொழுதிடுவோம் – 2

மகிமை மாட்சிமை..

## 230. மகிழ்வோம் மகிழ்வோம்

மகிழ்வோம் மகிழ்வோம் தினம் அகமகிழ்வோம்
இயேசு ராஜன் நம் சொந்தமாயினார்
இந்த பார்தலத்தின் சொந்தக்காரர் அவர்
எந்தன் உள்ளத்தின் சொந்தமானார்

ஆ.. ஆ.. ஆனந்தமே பரமானந்தமே
இது மாபெரும் பாக்கியமே
இந்த பார்தலத்தின் சொந்தக்காரர் அவர்
எந்தன் உள்ளத்தின் சொந்தமானார்

**01** சின்னஞ் சிறு வயதில் என்னைக் குறித்து விட்டார்
தூரம் போயினும் கண்டு கொண்டார்
தமது ஜீவனை எனக்கும் அளித்து
ஜீவன் பெற்றுக்கொள் என்றுரைத்தார்
ஆ.. ஆ.. ஆனந்தமே..

**02** எந்தச் சூழ்நிலையும் அவர் அன்பினின்று
என்னைப் பிரிக்காது காத்துக்கொள்வார்
என்னை நம்பி அவர் தந்த பொறுப்பதனை
ஜீவ காலம் வரை காத்துக் கொள்வேன்
ஆ.. ஆ.. ஆனந்தமே..

**03** அவர் பிரசன்னம் நாளில் என்னைக் கரம் அசைத்து
அன்பாய் கூப்பிட்டு சேர்த்துக் கொள்வார்
அவர் சமூகமதில் அங்கே அவருடனே
நாம் ஆளுகை செய்திடுவோம்
ஆ.. ஆ.. ஆனந்தமே..

## 231. மறவாமல் நினைத்தீரையா

மறவாமல் நினைத்தீரையா
மனதார நன்றி சொல்வேன் – 2
இரவும் பகலும் எனை நினைத்து
இதுவரை நடத்தினீரே – 2

நன்றி நன்றி ஐயா ஆ ஆ
கோடி கோடி நன்றி ஐயா – 2
மறவாமல்..

**01** எபினேசர் நீர்தானையா
இதுவரை உதவினீரே – 2
எல்ரோயீ எல்ரோயீ என்னையும் கண்டீரே
எப்படி நான் நன்றி சொல்வேன் –2
நன்றி நன்றி..

**02** பெலவீன நேரங்களில் பெலன் தந்தீரையா – 2
சுகமானேன் சுகமானேன்
தழும்புகளால் சுகமானேன்
என் குடும்ப மருத்துவர் நீரே – 2
நன்றி நன்றி..

**03** தடைகளை உடைத்தீரையா
தள்ளாடவிடவில்லையே – 2
சோர்ந்துபோன நேரமெல்லாம்
தூக்கி என்னை சுமந்து
வாக்கு தந்து தேற்றினீரே – 2
நன்றி நன்றி..

## 232. மறவார் தேவன் மறவார்

மறவார் தேவன் மறவார் – உன்னை
ஒரு இமைப் பொழுதிலும்
மறவார் இயேசு மறவார் – உன்னை
உருவாக்கிய இயேசு மறவார் – 2

**01** அழைத்தவர் உன்னை மறவார்
ஆதரித்து நடத்திட மறவார் – 2
மனிதரின் அன்பு நிலை மாறினாலும்
மகிமையின் தேவன் உன்னை மறவார் – 2
மறவார் தேவன்..

**02** தகப்பனாம் தேவன் உன்னை மறவார்
தாங்கியே நடத்திட மறவார் – 2
எப்பக்கம் நெருக்கங்கள்
உன்னை சூழ்ந்திட்டாலும்
எதினாலும் தேவன் உன்னை மறவார் – 2
மறவார் தேவன்..

**03** வாக்குத்தத்தம் தந்தவர் மறவார்
வழிகாட்டி நடத்திட மறவார் – 2
வானமும் பூமியும் நிலை மாறினாலும்
தம் வார்த்தையை நிறைவேற்ற மறவார் – 2
மறவார் தேவன்..

## 233. மனதில் நன்றியுடன் மகிழ்ந்து

மனதில் நன்றியுடன்
மகிழ்ந்து துதித்திடுவோம்
மகிமை தேவனையே
தினமும் துதித்திடுவோம்
மகிபன் இயேசுவையும்
தினமும் துதித்திடுவோம்

**01** பாவியாக வாழ்ந்த நம்மை
நீதிமானாய் மாற்றினார்
தேவ மைந்தன் இரத்தம் சிந்தி
பாவ சாபம் நீக்கினார் – 2
மனதில் நன்றியுடன்..

**02** தேவ ராஜ்யம் தேடி வந்தால்
தேவ நன்மைகள் தங்கிடும்
தேவ சித்தம் செய்து வந்தால்
தேவ ஆசீர் நிலைத்திடும் – 2
மனதில் நன்றியுடன்..

**03** சென்ற நாளில் நன்மை செய்த
மன்னன் இயேசுவின் தேவனே
பாதுகாத்தார் துணை நின்றார்
நன்றியோடு பாடுவோம் – 2
மனதில் நன்றியுடன்..

## 234. மான்கள் நீரோடை வாஞ்சிப்பது

மான்கள் நீரோடை வாஞ்சிப்பது போல
என் ஆத்மா வாஞ்சிக்குதே
நீர் மாத்திரம் எந்தன் ஆத்ம நேசர்
உம்மை ஆராதிக்கிறேன்

நீர் என் பெலனும் என் கேடகமாம்
என்னாவி என்றும் உமக்கடிபணியும்
நீர் மாத்திரம் எந்தன் ஆத்ம நேசர்
உம்மை ஆராதிக்கிறேன்

**01** As the deer panteth for the water
So my soul longs after you
You alone are my heart's desire
And I long to worship you
You alone are my Strength, my Shield
To You alone may my spirit yield
You alone are my heart's desire
And I long to worship you

**02** I want You more than gold or silver
Only You can satisfy
You alone are the real joy-giver
And the apple of my eye
You alone are my Strength, my Shield
To You alone may my spirit yield
You alone are my heart's desire
And I long to worship Thee

# 235. மானானது நீரோடைகளை

மானானது நீரோடைகளை
வாஞ்சித்து கதறுமா போல
தேவனே என் ஆத்துமா உம்மேலே
தாகமாயிருக்கிறதே

01 உன் தேவன் எங்கே என்று
என் சத்துருக்கள் சொல்வதினால் – என்
கண்ணீரெனக்கு உணவாயிற்று

மானானது..

02 என் ஆத்துமாவே நீ ஏன்
எனக்குள் கலங்குகிறாய் – உன்
இரட்சிப்பின் தேவன் இருக்கையிலே

மானானது..

03 பகற்காலத்திலே உம் கிருபையை
பொழிவதினால்
இராக்காலத்தில் நான் பாடுகிறேன்

மானானது..

## 236. மீட்பரே நீர் என் முன் செல்ல

(ராகம்: மீட்பரே உம்மைப் பின் செல்ல)

மீட்பரே நீர் என் முன் செல்ல
உந்தன் பாதை செல்லுவேன்
நேசரே இரக்கம் காட்டி
நேர்பாதை நடத்திடும்
பேர் சமாதானங்கள் சுகம்
பெற்று நம்பிக்கை யோடும்
என்ன வந்தாலும் என் னகம்
எல்லாம் நன்மை கேயாமே

**01** மீட்பரே என் வழிகாட்டி
மிஞ்சாத சந்தோஷமே
கிருபையால் முடி சூட்டி
கிட்டும் ஜீவ மன்னாவே
கால் சோர்ந்து மிகத் தள்ளாடி
அதி தாகம் வந்தாலே
நீ ரூறும் கன்மலை சேர்ந்து
மாறா சந்தோஷங் கொள்வேன்

**02** மீட்பரே வழி காட்டியாம்
மேன்மை யானவர் நேசம்
உன்னதப் பிதாவின் வீட்டில்
ஓங்குமே விசு வாசம்
ஆவி சரீரமே ஐக்ய
ஆற்றலாகவே மீட்டி
நித்தியம் சங்கீதம் பாடி
மீட்பரே வழி காட்டி

# 237. முற்றிலும் அழகானவர்

முற்றிலும் அழகானவர்
எல்லாரிலும் மா சிறந்தோர்
தேவாதி தேவனானவர்
நேசக் கல்வாரி நாயகா

**01** கல்வாரி நாயகா
என் உள்ளம் ஆட்கொண்டீர்
என்னை மீட்க மரித்தீர்
கல்வாரி நாயகா

**02** காயப்பட்டு நொறுங்குண்டு
பாவம் துக்கம் சுமந்தோராய்
நீசச் சிலுவையில் மாண்டார்
துக்கக் கல்வாரி நாயகா

**03** ஜீவன் சமாதானம் ஈய
சிறையுற்றோரின் மீட்புக்காய்
இரத்தமாம் ஊற்றைத் திறந்தார்
இரக்கக் கல்வாரி நாயகா

**04** நமக்காய்ப் பெற்ற வரங்கள்
சுத்தாங்கம் யாவும் நல்கிட
அன்பதாம் வெள்ளம் ஊற்றினார்
தயாளக் கல்வாரி நாயகா

**05** உம்மை மகிமை மயமாய்க்
கண்டு களிப்பேன் என்பதே
இவ்வுலகில் என் ஆறுதல்
ஒப்பற்ற கல்வாரி நாயகா

## 238. மெய் ஜோதியாம் என் தேவனே

மெய் ஜோதியாம் என் தேவனே
நீர் தங்கினால் ராவில்லையே
என் நெஞ்சக்கவலை மறைக்கும்
மேகம் வராமல் காத்திடும்

01 உம் வசனத்தை என்றுமே
நான் பற்றி வாழ்தல் இன்பமே
என்றெந்தன் படுக்கையிலும்
சிந்திக்க ஏவியருளும்

02 என்னோடு தங்கும் பகலில்
சகியேன் நீர் இல்லாவிடில்
என்னோடு தங்கும் ராவிலும்
நீர் தங்கின் அஞ்சேன் சாவிலும்

03 இன்றைக்குத் திவ்ய அழைப்பை
அசட்டை செய்த பாவியை
நீர் கைவிடாமல் இப்போதே
இழுத்துக்கொள்ளும் தேவனே

04 நோயுற்றோரைக் கண்ணோக்கிடும்
வறியோரை விசாரியும்
துக்கிப்போர் சிகப்போலவே
அமர்ந்து தூங்கச் செய்யுமே

05 விழிக்கும் போதென்னருகில்
நீர் வந்து எந்தன் வேலையில்
உம் அருள் தந்து காத்திடும்
என் ஆயுள் காலம் முழுதும்

# 239. மேலானவைகளை நாடுங்கள்

மேலானவைகளை நாடுங்கள்
தேவாதி தேவனின் பிள்ளைகள் நீங்கள்

01 உள்ளத்திலும் எண்ணத்திலும்
தீமையை வெறுத்திடுங்கள்
பளுவான பாவப் பாரங்கள் யாவும்
பதர் என்றே தள்ளிடுங்கள்
அநித்தியமான அற்ப சுகங்கள்
அருவருத்திடுங்கள்
விசுவாசப் பயணம் இயேசுவைக் கொண்டு
ஓடியே முடித்திடுங்கள்

02 பூமியிலே அந்நியர் என்று
அறிக்கை செய்திடுங்கள்
இனிமேல்வரும் பலன்மேல்
மனம் ஊன்றியே வாழ்ந்திடுங்கள்
இயேசுவின் சொல்லுக்கு
எல்லாவற்றிலும் கீழ்ப்படிந்திடுங்கள்
முதல் அன்பிலே குறையாமலே
இயேசுவைப் பின்பற்றுங்கள்

03 யுத்தத்திலே வல்லவராய் சத்துருப்போர் புரிந்தே
எதிராளியின் திரள்சேனைகளை
இயேசுவில் முறியடித்தே
இயேசுவுக்காகப் பாடுகள் ஏற்க
கொஞ்சமும் அஞ்சாமலே
மெய்யான உயிர்த்தெழுதலையே
எண்ணியே சுகித்திருங்கள்

# 240. யாருக்காய் வாழ்கின்றாய் நீ

யாருக்காய் வாழ்கின்றாய் நீ
இந்த வையகந்தனிலே நீ
வாழ்ந்திடும் நாட்களெல்லாம்
யாருக்காய் வாழ்கின்றாய் நீ – 2

**01** மாம்ச இச்சையில் சிக்கலுண்டு
இந்தப் புவியினிலே இந்தப் புவியினிலே
சிற்றின்பப் பிரியராய்வாழ்வாருண்டு
இந்தப் புவியினிலே இந்தப் புவியினிலே
இவர் நாளெல்லாம் தீழ்ப்பான நோக்கங் கொண்டோர் – 2
இவர் வாழ்வெல்லாம் பாவமும் சாபமுமே – 2
நீ யாருக்காய்..

**02** பணம் பணம் என்றிடும் பலருமுண்டு
இந்தப் புவியினிலே இந்தப் புவியினிலே
மனமெல்லாம் செல்வத்தைச் சேர்த்திடவே
இந்தப் புவியினிலே இந்தப் புவியினிலே
இவர் மூச்செல்லாம் ஆஸ்திக்காய் அலறி நிற்கும் – 2
ஆனால் வாழ்வெல்லாம் வறட்சியும் தாழ்ச்சியுமே – 2
நீ யாருக்காய்..

**03** உடைபட்ட அப்பமாய் திகழ்வாருண்டு
இந்தப் புவியினிலே இந்தப் புவியினிலே
கரைந்திடும் உப்பாக நிற்பாருண்டு
இந்தப் புவியினிலே இந்தப் புவியினிலே
இவர் நாளெல்லாம் இயேசுவுக்காய் மறைந்து நிற்பார் – 2
வெறும் கூப்பிடும் சத்தமாய் பணிபுரிவார் – 2
நீ யாருக்காய்..

## 241. யாவே உம் அருளைத் தாருமே

யாவே உம் அருளைத் தாருமே
ஏழை கண்ணீரைத் துடைப்பீரே – 2
தேவனே உம் தூய பர்வதத்தில்
தேடியே நான் பாடி வந்தேனே

**01** வானம் எனது கண்ணோக்கமே
வாழ்வு தருவாய் நித்தியமும் – 2
வானமும் பூமியும் படைத்தவர்
வளமும் வாழ்வும் அளிப்பாரே

யாவே..

**02** இஸ்ரயேல் காக்கும் இனியவர்
இமையார் என்றும் உறங்காரே – 2
இந்நிழல் வலது பக்கத்திலே
இரங்கி என்றும் காப்பாரே

யாவே..

**03** தீங்குகள் எல்லாம் விலக்குவார்
தீவிரித்தே உதவுவார் – 2
பகலும் இரவும் காத்திடுவார்
பாங்குடன் இன்றும் என்றுமே

யாவே..

**04** சாரோனின் ரோஜா லீலி புஷ்பம்
சாற்ற வொண்ணா தேவ காவியம் – 2
போக்கிலும் வரத்தும் என்றென்றுமே
போர்த்தணைத்தே நீர் காப்பீரே

யாவே..

## 242. யுத்தம் செய்வோம் வாரும்

யுத்தம் செய்வோம் வாரும் கிறிஸ்து வீரரே
இயேசு சேனைக் கர்த்தர் பின்னே செல்வோமே
வெற்றி வேந்தராக முன்னே போகிறார்
ஜெயக்கொடியை ஏற்றி போர் நடத்துவார்
யுத்தம் செய்வோம் வாரும் கிறிஸ்து வீரரே
இயேசு சேனை கர்த்தர் பின்னே செல்வோமே

**01** கிறிஸ்து வீரரே நீர் வெல்ல முயலும்
பின்னிடாமல் நின்று ஆரவாரியும்
சாத்தான் கூட்டம் அந்த தொனிக் கதிரும்
நரகாஸ்திபாரம் அஞ்சி அசையும்
யுத்தம் செய்வோம்..

**02** கிறிஸ்து சபை வல்ல சேனை போன்றதாம்
சுத்தர் சென்ற பாதை செல்லுகிறோமே நாம்
கிறிஸ்து தாசர் யாரும் ஓர் சரீரமே
விசுவாசம் அன்பு நம்பிக்கை ஒன்றே
யுத்தம் செய்வோம்..

**03** க்ரீடம் ராஜ மேன்மை யாவும் சிதையும்
கிறிஸ்து சபை தானே நிற்கும் நித்யமும்
நரகத்தின் வாசல் ஜெயம் கொள்ளாதே
என்ற திவ்விய வாக்கு வீணாய்ப் போகாதே
யுத்தம் செய்வோம்..

**04** பக்தரே, ஒன்றாகக் கூட்டங்கூடுமேன்
எங்களோடு சேர்ந்து ஆர்ப்பரியுமேன்
விண்ணோர் மண்ணோர் கூட்டம் இயேசு ராயர்க்கே
கீர்த்தி, புகழ், மேன்மை என்றும் பாடுமே
யுத்தம் செய்வோம்..

## 243. யூபிலி ஆண்டு வந்தது

யூபிலி ஆண்டு வந்தது
கர்த்தாவின் தாசரே

01 கர்த்தாவின் தாசரே
எக்காளம் ஊதுங்கள்
சந்தோஷ செய்தியை
எங்கெங்கும் கூறுங்கள் – 2
சிறைப்பட்டோரின் மீட்புக்கு
யூபிலி ஆண்டு வந்தது – 2

02 சந்தேஷ செய்தியை
எல்லாரும் கேளுங்கள்
அன்போடு இயேசுவை
இப்போதே சேருங்கள் – 2
சிறைப்பட்டோரின் மீட்புக்கு
யூபிலி ஆண்டு வந்தது – 2

## 244. யெகோவாயீரே ஆராதனை

யெகோவாயீரே ஆராதனை
என் தெய்வம் நீரே ஆராதனை – 2
மறப்பேனோ உமது அன்பை – நான்
மறப்பேனோ உமது அன்பை
மண்டியிடுவேன் உம் பாதத்திலே – 2
யெகோவாயீரே..

01 எளியோனைக் கண்ணோக்கிப் பார்த்தீரையா
பெரிதான அழைப்பிற்கு அழைத்தீரையா – 2

உமைவிட்டு எங்கோ நான் சென்றபோதும் – 2
எனை மீட்க ஏசுவைத் தந்தீரையா – 2
மறப்பேனோ..

02 நீர் என்மேல் வைத்த உம் கிருபையினால்
நிர்மூலமாகாமல் காத்தீரையா – 2
கடுங்கோபத்தால் என்னை அழிக்காமலே – 2
கனிவாக என்னை நீர் காத்திரையா – 2
மறப்பேனோ..

03 இருள் என்னை சூழ்ந்திட்ட நேரத்திலும்
வழி ஒன்றும் அறியாமல் தவிக்கையிலே – 2
மறந்தீரோ என்று நான் அழுதேனையா – 2
மறப்பேனோ என்று சொல்லி அணைத்தீரையா – 2
மறப்பேனோ..

## 245. ராஜாதி ராஜனைப் பாரீரோ

ராஜாதி ராஜனைப் பாரீரோ
ராஜ்ய சுதந்தரன் வந்தாரே
காந்தையாம் சபையே சேரீரோ
கர்த்தன் காலமிதோ தந்தாரே
பாடி யானந்திப்போம்
பங்குறும் சங்கை அங்கமே – 2

01 நேசனார் பாசமும் வீசுதே
நித்தனார் சன்னிதி காணுதே
நேசலோகம் பாதை தேசுதே
நாதனார் நித்தியம் தோணுதே – பாடி

02 சாபந்தீரும் நேரமாகுதே
சத்துரு சக்தியும் போகுதே
பாருளோர் ராஜியம் வேகுதே
பக்தர் சங்கம் கூடியாகுதே – பாடி

03 பேரழைப்பானதும் தீருதே
பேர் விருந்து வந்து சேருதே
பேதையானோர்க் கருளாகுதே
பேசருமானந்தம் நேருதே – பாடி

04 சந்தோஷச் செய்தி யெங்கெங்குமே
சாஸ்வதங் கொண்டே விளங்குமே
சங்கடம் என்றுமாய் நீங்குமே
சாமி செயலன் பாலோங்குமே – பாடி

## 246. ராஜன் வந்த நேரம்

ராஜன் வந்த நேரம் நம் பாவம் பறந்தோடும்
கூட்டி சேர்த்திடும் நாள் சமீபம் – 2
அதைத் தெரிந்து கொண்டெழுந்து
முன்னேறியே ஓடிடுவோம்

தேவராஜ்யம் ப்ரசன்னமானதே
சந்தோஷம் பொங்குமே சமாதானம் என்றுமே – 2

01 தேவ தூய பர்வதமெங்கும்
தீங்கு கேடு செய்வார் எவருமில்லை – 2
ஆழி நீரினால் நிறைந்தாற்போல பூமி அனைத்தும் – 2
மெய் தேவனை அறியும் மெய் தேவனை வணங்கும் – 2
தேவராஜ்யம்..

**02** நீதி என்னும் பாதைதனிலே,
தேவன் நித்தம் நம்மை நடத்துகின்றார் – 2
எது வந்தபோதும் என்றும் மாறா புது வாழ்வினை – 2
எகோவா தருகின்றார் எந்நாளும் தருகின்றார் – 2
தேவராஜ்யம்..

**03** கிருபையினால் அழைத்தாரே
நம்மை சிறுமந்தைதனில் சேர்ப்பாரே – 2
நித்திய ராஜ்யந்தனை நமக்கவர் அளிப்பதினால் – 2
சத்ய வேத வழி செல்வோம் நித்ய வாழ்வினைப்
பெறுவோம் – 2
தேவராஜ்யம்..

## 247. லவோதிக்கேயா சபைக்கு

லவோதிக்கேயா சபைக்கு
தேவ எச்சரிப்பின் தூது
அனலாயிரு இல்லையே குளிராயிரு
வெதுவெதுப்பாயிருந்ததால் – உன்னை
வாந்தியே பண்ணிடுவார்

**01** ஜகவரியவானாக பொன் தருவேன்
உடுத்திட வெண் வஸ்திரம் தருவேன்
கண்ணுக்குக் கலிக்கம் இட்டுக் கொண்டு
ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு
அனலாயிரு இல்லை..

**02** வாசற்படியில் நின்று தட்டுகிறேன்
கதவைத் திறந்தால் வந்திடுவேன்
போஜனம் பண்ணியே மகிழ்ந்திடுவேன்
இப்போதே நீ திறந்திடுவாய்
அனலாயிரு இல்லை..

**03** ஆதியும் அந்தமுமானவர் நான்
அனைத்து கிரியையும் அறிந்திடுவேன்
ஆமென் என்பவர் சொல்லுகிறதை
காதுள்ளவனெவனும் கேட்கக்கடவன்
அனலாயிரு இல்லை..

## 248. வருவாய் தருணமிதுவே

வருவாய் தருணமிதுவே அழைக்கிறாரே
வல்ல ஆண்டவர் இயேசு உன்னை

**01** வாழ்நாளெல்லாம் வீண் நாளாய்
வருத்தத்தோடே கழிப்பது ஏன்?
வந்தவர் பாதம் சரணடைந்தால்
வாழ்வித்து உன்னைச் சேர்த்துக் கொள்வார்

**02** கட்டின வீடும், நிலம் பொருளும்
கண்டிடும் உற்றார் உறவினரும்
கூடுவிட்டு உன் ஆவி போனால்
கூட உன்னோடு வருவதில்லை

**03** அழகும் மாயை நிலைத்திடாதே
அதை நம்பாதே மயக்கிடுமே
மரணம் ஓர் நாள் சந்திக்குமே
மறவாதே உன் ஆண்டவரை

**04** வானத்தின் கீழே, பூமி மேலே
வானவர் இயேசு நாமமல்லால்
இரட்சிப்படைய வழி இல்லையே
இரட்சகர் இயேசு வழி அவரே

**05** தீராத பாவ ஆக்கினையும்
மாறாத உந்தன் பெலவீனமும்
கோரக் குருசில் சுமந்து தீர்த்தார்
காயங்களால் நீ குணமடைய

**06** சத்திய வாக்கை நம்பியே வா
நித்திய ஜீவன் உனக்களிப்பார்
உன் பேரை ஜீவ புஸ்தகத்தில்
உண்மையாய் இன்று எழுதிடுவார்

## 249. விசுவாசியின் காதில் பட

விசுவாசியின் காதில் பட,
யேசுவென்ற நாமம்
விருப்பாயவர் செவியில்
தொனி இனிப்பாகுது பாசம்

**01** பசித்த ஆத்துமாவைப்
பசியாற்று மன்னாவதுவே
இளைப்பாறுதல் இளைத்தோர்க்கெல்லாம்
முற்றும் அந்தப் பெயரே

**02** துயரையது நீக்கிக்
காயமாற்றிக் குணப்படுத்தும்
பயங்கள் யாவும் யேசுவென்றால்
பறந்தோடியே போகும்

**03** காயப்பட்ட இருதயத்தைக்
கழுவிச் சுத்தப்படுத்தும்
மாயைகொண்ட நெஞ்சையது
மயக்கமின்றி விடுக்கும்

**04** எல்லை இல்லாக் கிருபைத்திரள்
ஏற்றி நிறைந்திருக்கும்
எல்லா நாளும் மாறாச்செல்வம்
யேசுவென்ற பெயரே

**05** என்னாண்டவா, என் ஜீவனே,
என் மார்க்கமே, முடிவே
என்னால் வருந்துதியை நீரே
ஏற்றுக்கொள்ளும், தேவே

## 250. விசுவாச நாட்டை நோக்கி

விசுவாச நாட்டை நோக்கி வேகம் ஓடுவோம்
வேகம் ஓடுவோம் நாம் வேகம் ஓடுவோம்

**01** நமக்கு இங்கு நிலையான நகரம் இல்லையே
நமது வீடு நித்ய பாக்கிய வீடது
சுதந்தரவீடு நல் துதிகளின் வீடு
வான லோகத்தில்

விசுவாச நாட்டை..

**02** வியாதி உண்டு கஷ்டம் உண்டு இந்த லோகத்தில்
மரணம் உண்டு துக்கம் உண்டு இந்த பாரினில்
கண்ணீரில்லா நாடு கவலையில்லா நாடு
வான லோகத்தில்

விசுவாச நாட்டை..

**03** எமது அன்பர் வந்திட்டார் தூதரோடு
சிறப்புடனே சூரியனாய்ப் பிரகாசிக்கிறார்
பாக்கியமான நாடு பாவமில்லாத நாடு
வானலோகத்தில்

விசுவாச நாட்டை..

# 251. விந்தைக் கிறிஸ்தேசு ராஜா

விந்தைக் கிறிஸ்தேசு ராஜா
உந்தன் சிலுவை என் மேன்மை –2
சுந்தரம் மிகும் இந்தப் பூவில் – 2
எந்த மேன்மைகள் எனக்கிருப்பினும் – 2

**01** திரண்ட செல்வம் உயர்ந்த கல்வி
செல்வாக்குகள் மிகுவிருப்பினும்
குருசை நோக்கிப் பார்க்க எனக்கு – 2
உரிய பெருமை யாவும் அற்பமே – 2
விந்தைக் கிறிஸ்தேசு..

**02** உம் குருசே ஆசிக்கெல்லாம்
ஊற்றாம் வற்றா ஜீவ நதியாம்
துங்க இரத்த ஊற்றில் மூழ்கித் – 2
தூய்மையடைந்து மேன்மையானேன் – 2
விந்தைக் கிறிஸ்தேசு..

**03** சென்னி, விலா, கைகானின்று
சிந்துவதோ தூயரோடன்பு
மன்னா இதைப் போன்ற காட்சி – 2
எந்நாளிலுமே எங்கும் காணேன் – 2
விந்தைக் கிறிஸ்தேசு..

**04** இந்த விந்தை அன்புக்கீடாய்
என்ன காணிக்கை ஈந்திடுவேன்
எந்த அரும் பொருள் ஈடாகும் – 2
என்னை முற்றிலும் உமக்களிக்கிறேன் – 2
விந்தைக் கிறிஸ்தேசு..

# 252. விண்ணோர்கள் போற்றும்

விண்ணோர்கள் போற்றும் ஆண்டவா
உம் மேன்மை அற்புதம்
பளிங்கு போலத் தோன்றுமே
உம் கிருபாசனம்!

01 நித்தியானந்த தயாபரா
அல்பா ஓமேகாவே
மாதூயர் போற்றும் ஆண்டவா
ராஜாதி ராஜாவே

02 உம் ஞானம் தூய்மை வல்லமை
அளவிறந்ததே
நீர் தூயர் தூயர் உந்தனை
துதித்தல் இன்பமே

03 அன்பின் சொரூபி தேவரீர்
நான் பாவியாயினும்
என் நீச நெஞ்சைக் கேட்கிறீர்
உம் சொந்தமாகவும்

04 என் பாவமெல்லாம் மன்னித்தீர்
சுத்தாங்கம் நல்கினீர்
என் குற்றமெல்லாம் தாங்கினீர்
அன்பின் பிரவாகம் நீர்

05 மேலோக நித்திய பாக்கியத்தை
நான் பெற்று வாழுவேன்
உம் திவ்விய இன்ப முகத்தை
கண்ணூற்றுப் பூரிப்பேன்

# 253. வேத மாணாக்கர்களாக

வேத மாணாக்கர்களாக
வேதத்தோடியையவோம் – நாமும்
வேதத்தோடியையவோம்

**01** வந்த இயேசு குருவினையே
வழிமுறையாய்த் தொடர்ந்திடுவோம்
வாழ்வின் வாசலை நாம் பிடித்தே – அவ்
வாழ்வினை நாம் வென்றடைவோம்
வேத மாணாக்கர்களாக..

**02** இயேசுவின் கீழாக நின்று
இறுதிவரை கீழ்ப்படிவோம்
இன்னலாஞ் சிலுவை சுமந்தே நாம்
இறுதிவரையில் நிலைத்திடுவோம்
வேத மாணாக்கர்களாக..

**03** பார்க்கலாகா பரமபிதா
பரிவுடனே நம்மை மீட்க
பாசமுடனே தம் மகனையவர்
பரிந்தளித்தே நேசமிதே
வேத மாணாக்கர்களாக..

**04** வானில் மின்னும் தாரகையாய்
வாய்மையுமாய் சத்யமுமாய்
வாழ்வின் ஒளி தீபமுமாகி
வாழ்வோமே இயேசுபோல
வேத மாணாக்கர்களாக..

**05** சித்திர மாந் தையலாடை
சிலுவை வழி கிடைத்திடுமே
சத்திய நெறியில் நடந்தே நாம்
நித்திய ஜீவன் அடைந்திடுவோம்
வேத மாணாக்கர்களாக..

# ஞானஸ்நானப் பாடல்கள்

## 254. அர்ப்பணித்தேன் என்னை

அர்ப்பணித்தேன் என்னை முற்றிலுமாய்
அற்புத நாதா உம் கரத்தில்
அனைத்தும் உமக்கே சொந்தம் என்று
அன்பரே என்னையே தத்தம் செய்தேன்

அனைத்தும் கிறிஸ்துவுக்கே – எந்தன்
அனைத்தும் அர்ப்பணமே
என் முழு தன்மைகள் ஆவல்களும்
அனைத்தும் கிறிஸ்துவுக்கே – 2

**01** என் எண்ணம் போல நான் அலைந்தேனே
என்னைத் தடுத்திட்ட தாருமில்லை
உம் சிலுவை அன்பை சந்தித்தேனே
நொறுங்கி வீழ்ந்தேனே உம் பாதத்தில்
– அனைத்தும்

**02** என் வாழ்வில் இழந்த நன்மைக்கீடாய்
எஞ்சிய நாட்களில் உழைப்பேனே
நீர் தந்த ஈவு வரங்கள் யாவும்
உம் பணி சிறந்திட முற்றும் தந்தேன்
– அனைத்தும்

**03** ஐம்புலன்கள் யாவும் அடங்கிட
ஐம்பெருங் காயங்கள் ஏற்ற நாதா
வான் புவி அனைத்தும் ஆள்பவரே
என்னையும் ஆண்டிட நீரே வல்லோர்
– அனைத்தும்

# 255. என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன்

என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன்
ஏற்றுக்கொள்ளும் இயேசுவே
அன்னை தந்தை உந்தன் சன்னிதி முன்னின்று
சொன்ன வாக்குத்தத்த மல்லாது இப்போது
என்னை ஜீவபலியாய்..

**01** அந்தகாரத்தி னின்றும் பாவப் போய்
அடிமைத்தனத்தினின்றும்
சொந்த ரத்தக் கிரயத்தால் எனைமீட்ட
எந்தையே, உந்தனுக்கிதோ படைக்கிறேன்
என்னை ஜீவபலியாய்..

**02** ஆத்ம சரீரமதை உமக்கு
ஆதீன மாக்கி வைத்தேன்
பாத்ரமதாய் அதை பாவித்துக் கொள்ளக்
காத்திருக்கின்றேன், கருணைசெய், தேவா
என்னை ஜீவபலியாய்..

**03** நீதியி னாயுதமாய் அவயவம்
நேர்ந்தது விட்டேன் உமக்கு
ஜோதி பரிசுத்த ராலய மகாவே
சொந்தமாய்த் தந்தேன் என்றன் சரீரத்தை
என்னை ஜீவபலியாய்..

## 256. சிலுவை சுமந்தோனாக

(ராகம்: பாவ சஞ்சலத்தைப் போக்க)

சிலுவை சுமந்தோனாக
ஏசு உம்மைப் பற்றினேன்
ஏழைப் பரதேசியாக
தேவ ராஜ்யம் நாடுவேன்
உற்றார், மேன்மை, ஆஸ்தி, கல்வி,
ஞானம், லோகம் அனைத்தும்
அற்பக் குப்பை என்று எண்ணி
வெறுப்பேனே முற்றிலும்

**01** துஷ்டர் என்னைப் பகைத்தாலும்
நீரே தஞ்சம் ஆகுவீர்
கஷ்டம் என்ன நேரிட்டாலும்
இனி மேன்மை தருவீர்
உமதன்பு என்னைத் தேற்ற
துக்கம் பயம் இல்லையே
நாதா உம் பிரசன்னம் நீங்க
இன்பமெல்லாம் துன்பமே

**02** நெஞ்சமே கர்த்தரை நோக்கி
பயம் யாவும் அகற்று
எந்த கஷ்டத்தையும் தாங்கி
அவரைப் பின் பற்று
திவ்ய அன்பைச் சிந்தை செய்து
நித்ய மீட்பை அடைவேன்
ஆவியின் சகாயம் நம்பு
நெஞ்சமே கலக்கம் ஏன்?

## 257. நான் ஜீவ ஊற்றினில் மூழ்கி

நான் ஜீவ ஊற்றினில் மூழ்கி
என் பாவத்திற்கு மரித்தேன்
எண்ணிலடங்கா தேவ நற்கருணை
ஏசு என்னை மீட்டாரே

**01** என் வாழ்விலே புது ஜீவனை
இன்றன்றோ பெறுகின்றேன் நான்
மா சந்தோஷம் மனமகிழ்வாகி
மறு பிறப்படைந்தேனே

என் வாழ்விலே..

**02** நான் ஜலத்தினால் நல் ஆவியினால்
புது உடன்படிக்கை செய்தேன்
நல் மனசாட்சியின் ஏவுதலாலே
நல்ல விதையானேன்

என் வாழ்விலே..

**03** மேற்கு, கிழக்கு, துருவமாய்
மேவிய, என் பாவங்கள்
முற்றுமகற்றி சுத்திகரித்தே
முன்னருள் செய்தாரே

என் வாழ்விலே..

## 258. பாவச் சேற்றில் அமிழ்ந்திட்ட

பாவச் சேற்றில் அமிழ்ந்திட்ட எனையும் மீட்டெடுத்தீரே
ஜீவ ஊற்றின் தண்ணீரால் சுகமாக குளிப்பேனே

**01** கர்த்தரை நான் சதாகாலமும்
காணாமல் கவியில் பாடுவேன் என்றும் – 2
ஏழையெந்தன் குரலுக்கு
ஏனென்று கேட்டிட்டாரே – 2

பாவச் சேற்றில்..

**02** சிங்கங்களும் மெலிவாகலாம்
சின்னவனோ குறைவடையேனே – 2
கர்த்தர் அன்பை விட்டீடாரே
கண்மணி போல காப்பார் – 2

பாவச் சேற்றில்..

**03** என்னை எல்லா இடுக்கணுக்கும்
எட்டியே விலக்கிவிட்டாரென்னப்பன் – 2
சிறுமைப்பட்ட எல்லோரையும்
சீராக்கி ரட்சித்தாரே – 2

பாவச் சேற்றில்..

**04** கர்த்தர் அன்பை ருசித்தேனே நான்
கனமும் அவர் கைவிடாரே – 2
நொறுங்குண்டோர் நலமாகவே
நறுங்குண்டோர் மீட்படைவார் – 2

பாவச் சேற்றில்..

**05** நீதிமானின் எலும்புகளை
நொறுங்காமலே என்றும் காக்கின்றாரே – 2
நீதியின் கண் நோக்கமாகும்
நீதி செவி திறந்திருக்கும் – 2

பாவச் சேற்றில்..

## 259. மீட்பரே உம்மைப் பின் செல்ல

மீட்பரே உம்மைப் பின் செல்ல
சிலுவையை எடுத்தேன்
ஏழை நான் பெரியோனல்ல
நீரே எல்லாம் நான் வந்தேன்

**01** பெற்றார் உற்றார் ஆஸ்தி கல்வி
மேன்மை லோகம் அனைத்தும்
அற்பக் குப்பை என்று எண்ணி
வெறுத்தனே முற்றிலும்

மீட்பரே உம்மைப்..

**02** மெய்தான் லோகத்தார் பகைப்பார்
உம்மை முன் பகைத்தாரே
லோக ஞானிகள் நகைப்பார்
பயமேன் நீர் விடீரே

மீட்பரே உம்மைப்..

**03** சர்வ வல்ல தேவன் அன்பாய்
திடன் செய்வார் முன்செல்வேன்;
தேவ தூதர்கள் மா வம்பாய்
சீறினாலும் நான் வெல்வேன்

மீட்பரே உம்மைப்..

**04** மானிடர் துன்பம் மிகுந்து வந்தாலும்
நான் முன் செல்வேன்
கஷ்டப்பட்டுச் சாவை வென்று
நித்திய ஜீவன் பெறுவேன்

மீட்பரே உம்மைப்..

**05** உமதன்பை நான் ருசித்து
அதன் பலத்தால் நிற்பேன்
பாவத்தை என்றும் எதிர்த்து
சாமட்டும் போர் புரிவேன்

மீட்பரே உம்மைப் பின்..

# திருமணப் பாடல்கள்

## 260. ஆசீர்வதியும் கர்த்தரே ஆனந்தமிகவே

ஆசீர்வதியும் கர்த்தரே ஆனந்தமிகவே
நேசா உதியும் சுத்தரே நித்தம் மகிழவே

வீசீரோ வான ஜோதி கதிரிங்கே
மேசியா எம் மணவாளனே
ஆசாரியனாம் வான் ராஜனும் ஆசீர்வதித்திடும்

**01** இம்மணமக்களோடுமே என்றென்றும் தங்கிடும்
உம்மையே கண்டு, பின்சென்று ஓங்கச் செய்தருளும்
இந்நாள் வரையில் காத்த வல்லவரே
இன்பமோடிவர்கள் வாழவே
உம்மிலே தங்கித் தரிக்கவே, ஊக்கம் அளித்திடும்
வீசீரோ வான..

**02** ஒற்றுமை யாக்கும் இவரை ஊடாக நீர் நின்று
பற்றோடும் மீது சாய்ந்துமே பாரில் வசிக்கவே
வெற்றி பெற்றோங்கும் இவர் நெஞ்சத்திலே
வீற்றாளும் நீர் இயேசு ராஜனாய்
ஏற்றவான் ராயர் சேயர்க்கே ஒப்பாய் ஒழுகவே
வீசீரோ வான..

**03** மேலான ஆசீர்வாதத்தால் பூரணமாகவே
ஆதரித்தாளும் கர்த்தரே ஆசீர்வதித்திடும்
மா திரளாக இவர் சந்ததியார்
வந்துதித் தும்மைப் பிரஸ்தாபிக்க
ஆம் தேவ க்ருபை தீர்மானம் ஆம் போல் அருளுமே
வீசீரோ வான..

## 261. ஆதாம் என்னும் ஆதி மனிதனை

ஆதாம் என்னும் ஆதி மனிதனை
ஆசீர்வதித்த ஆண்டவரே
பாதாரம் எங்கள் ஆதாரம்
வேதவாக்கெங்கள் ஆகாரம்

**01** ஆபிரகாம் ஈசாக்கின் தேவனே
ஆண்டாண்டாய் இருக்கின்றவரே
தாபரமாய்த் தம் பாதம் தேடினோர்
தாங்குகின்ற மெய் எகோவாவே

**02** ஆதாமும் ஏவையும் இணைத்தவரே
ஏதெல்லா இந்த
நீர் இணைத்தீரே
பூமணம் பெற்று பூரிக்கவே

**03** முத்தான வேதத்தால் முழுகியே
முழுமன அன்பே பெருகிடவே
சத்தான உள்ளன்பு சாட்சியில்
சாஸ்வதமும் வாழ அருளீவீர்

## 262. இயேசுவின் பின்னே

**01** இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன் – 2
பின்னோக்கேன் நான் பின்னோக்கேன் நான் – 2

**02** உலகம் என் பின்னே சிலுவை என் முன்னே – 2
பின்னோக்கேன் நான் பின்னோக்கேன் நான் – 2

**03** கஷ்டங்கள் வந்தாலும் நஷ்டங்கள் வந்தாலும் – 2
பின்னோக்கேன் நான் பின்னோக்கேன் நான் – 2

**04** என் மீட்பர் பாதை என்றும் பின்செல்வேன் – 2
பின்னோக்கேன் நான் பின்னோக்கேன் நான் – 2

**05** இயேசு என் ஆசை சீயோன் என் வாஞ்சை – 2
பின்னோக்கேன் நான் பின்னோக்கேன் நான் – 2

**06** செல்வேன் நான் வேகம் வெல்வேன் என் கிரீடம் – 2
பின்னோக்கேன் நான் பின்னோக்கேன் நான் – 2
இயேசுவின் பின்னே..

## 263. ஏதேனில் ஆதிமணம்

ஏதேனில் ஆதிமணம்
உண்டான நாளிலே
பிறந்த ஆசீர்வாதம்
மாறாதிருக்குமே

**01** இப்போதும் பக்தியுள்ளோர்
மனமுந் தூய்மையாம்
தேவன் பிரசன்னமாவார்
மகத்வ வாழ்த்துண்டாம்

**02** ஆதாமுக்கு ஏவாளை
அளித்த தந்தையே
இம் மாப்பிள்ளைக்குப் பெண்ணை
அளிக்க வாருமே

**03** தேவா உம் ஆசீர்வாதம்
இவ்விருபேர் மீதும்
இருந்து சதாகாலம்
அன்பாக காத்திடும்

**04** நாதா இந்நாளில் வந்து
இவ்விருபேர் மீதும்
உம் செட்டையை விரித்து
அன்பாக காத்திடும்

**05** கிறிஸ்துவின் ஜோடியாக
எழும்பும் வரைக்கும்
எத்தீங்கில் நின்றுங் காத்து
பேர் வாழ்வு ஈந்திடும்

## 264. பயந்து கர்த்தரின் தூய வழியில்

பயந்து கர்த்தரின் தூய வழியில்
நடந்துவருவோன் பாக்கியவான் – 2
முயன்று உழைத்துப் பலனை உண்பான்
முடிவில் பாக்கிய மேன்மை காண்பான் – 3
பயந்து கர்த்தரின்..

**01** உண்ணுதற்கரிய கனிகளைத் தரும்
தன்னிழல் திராட்சைக் கொடி போல் வளரும் – 2
கண்ணிய மனைவி மகிழ்ந்து இருப்பாள்
எண்ணரும் நலங்கள் இல்லத்தில் புரிவாள் – 3
பயந்து கர்த்தரின்..

**02** ஒலிவ மரத்தைப் போன்று மேலே
உயரும் பச்சிளங் கன்றுகள் போல – 2
மெலிவில்லா நல்ல பாலருன்பாலே
மிகவும் களித்து வாழ்வா ரன்பாலே – 3
பயந்து கர்த்தரின்..

**03** கர்த்தருன் வீட்டைக் கட்டாராகில் அதைக்
கட்டுவோர் முயற்சி வீணாம் அறிநீ – 2
கர்த்தரால் வரும் சுதந்தரம் பிள்ளைகள்
கர்ப்பத்தின் கனியோ கர்த்தரின் கிருபை – 3
பயந்து கர்த்தரின்..

## 265. பிதாவே ஞானம் அன்பினால்

பிதாவே ஞானம் அன்பினால்
அனைத்தையும் படைத்தீர்
ஏதேனிலே விவாகத்தால்
ஆண் பெண்ணையும் இணைத்தீர்
அப்பூர்வ ஆசீர்வாதத்தை
இல்வாழ்க்கையின் நல்லின்பத்தை
இவர்களுக்கும் ஈவீர்

**01** தேவா இவ்வேளை தனிலே இங்கே பிரசன்னமாகும்
உந்தன் சம்பூரணத்தாலே குறைவை நிறைவாக்கும்
இவர்கள் இக இன்பமே பரத்தில் பாக்கியமாகவே
நீர் முற்றும்படி செய்யும்

**02** புனித ஆவியை நீரே இவர்கள் மேலே ஊற்றும்
உம் தூய்மை அன்பினாலும் நீர் இவர்களைத் தற்காரும்
எப்பாவத்துக்கும் நீக்கியே ஒரே சரீரம் போலவே
இவர்கள் வாழச் செய்யும்

**03** பிதாவே, நீர் காட்டாவிடில் ப்ரயாசம் வீணே ஆகும்
நீர் ஆசீர்வதிக்காவிடில் இன்பமும் துன்பமாகும்
உம்மால் இணைக்கப்பட்டோரை குன்றாத நேசமுள்ளோரை
யார் தான் பிரிக்கக்கூடும்?

## 266. மங்களம் செழிக்க கிருபையருளும்

மங்களம் செழிக்க கிருபையருளும்
மங்கள நாதனே

**01** மங்கள நித்திய மங்களன் நீ
மங்கள முத்தியும் நாதனும் நீ
எங்கள் புங்கவன் நீ
எங்கள் துங்கவன் நீ
உத்தம சத்திய, நித்திய தத்துவ, மெத்த
மகத்துவ அத்தனுக் கத்தனாம் ஆபிரகாம் தேவ நீ
மங்களம் செழிக்க..

**02** மங்கள மணமகன் ..................... க்கும்
மங்கள மணமகள் ..................... க்கும்
மானுயேலர்க்கும் மகனுபாவர்க்கும்
பக்தியுடன் புத்தி முக்தி
யளித்திடும் நித்தியனே உன்னை
துத்தியம் செய்திடும் சத்திய வேதர்க்கும்
மங்களம் செழிக்க..

## 267. வானம் பூமி ஆழி கடல்களும்

வானம் பூமி ஆழி கடல்களும்
ஆற்றலால் அமைத்த திருவருளே
பாதாரம் எங்கள் ஆதாரம்
வேத வாக்கெங்கள் ஆகாரம்
வானம் பூமி..

**01** ஆபிராம் ஈசாக்கின் தேவனே
ஆண்டாண்டாய் இருக்கின்றவரே
தாபரமாய்த் தம் பாதம் வேண்டினோர்
தாங்குகின்ற மெய் எகோவாவே

வானம் பூமி..

**02** ஆணையும் பெண்ணையும் இணைத்தவரே
ஆரருள் மங்கை
நீர் இணைத்தீரே
ஆனந்தமாய் என்றும் வாழியவே

வானம் பூமி..

**03** முத்தான வேதத்தால் முழுகியே
முழுமன அன்பே பெருகிடவே
சத்தான உள்ளன்பு சாட்சியிட
சாஸ்வதமும் வாழ அருள்வீர்

வானம் பூமி..

# நித்திரைப் பாடல்கள்

## 268. உயிர்த்தெழும் காலை தன்னில்

உயிர்த்தெழும் காலை தன்னில்
ஆவி தேகம் கூடும்
துக்கம் நீங்கும், ஓலம் ஓயும்
நோவும் போகும்

**01** ஈங்கவை சிறிது நீங்க நரர் இளைப்பாற
தூய அமைதியில் தங்கி தூங்கிவிடும்

**02** சேர்ந்த ஆவி தேகந் நம்மை அப்பால் பிரிக்காது
கிறிஸ்து சாயலை அணிந்து சந்தோஷிக்கும்

**03** உயிர்த்தெழும் நாளின் மாட்சி யாரால்
சொல்லக்கூடும்?
நித்திய காலம் மா சந்தோஷம் நிலைக்குமே

**04** அந்தப் பாக்கிய கர்த்தர் நாளில் செத்தோர் எழுவார்
பெற்றோர் மக்கள் சுற்றத்தாரும் கூடச் செய்வார்

**05** உம் சிலுவை பற்றும் நாட்கள் நியாயத்தீர்ப்பிலே
அக்கூட்டஞ் சேர ஏசுவே கிருபை செய்யும்

## 269. கடல் கொந்தளித்துப் பொங்க

கடல் கொந்தளித்துப் பொங்க
கப்பல் ஆடிச் செல்கையில்
புயல் காற்று சீறி வீச, பாய் கிழிந்து போகையில்
ஏசு எங்களிடம் வந்து, கப்பலோட்டியாயிரும்
காற்றடக்கி துணை நின்று, கரை சேரச் செய்திடும்

**01** கப்பல் ஏறிப்போவோருக்கும்,
கடும் மோசம் வரினும்
பாறை மின் முழக்கம் காற்று
உமக்கெல்லாம் அடங்கும்
இருளில் நீர் பரஞ்சோதி
வெய்யிலில் நீர் நிழலே
யாத்திரையில் திசை காட்டி
எங்கள் ஜீவன் உம்மிலே

**02** எங்கள் உள்ளம் உம்மை நோக்கும்
இன்ப துன்ப காலத்தில்
எங்கள் ஆவி உம்மில் தங்கும்
இகபர ஸ்தலத்தில்
ஏசு எங்களுடன் வந்து,
கப்பலோட்டியாய் இரும்
காற்றடக்கித் துணை நின்று
கரையேறச் செய்திடும்

## 270. சீர்கெட்ட லோகமே

சீர்கெட்ட லோகமே
உன் வாழ்வு எனக்கேன்
என் ரட்சகர் கதியே
யான் உன்னை சார்வதென்

**01** என் ஆஸ்தி ஏசுதான்
என் செல்வம் அவரே
உன் மேன்மை அற்ப குப்பைதான்
சீர்கெட்ட லோகமே

**02** என் ஏசுவைச் சார்வேன்
விண் நன்மை நிற்குமே
உன்னில் யாதொன்றையும் நம்பேன்
சீர்கெட்ட லோகமே

**03** ஓர் நிமிஷத்திலே
உன் வாழ்வு அழியும்
என் சாவு வரும் நாளிலே
மகிழ்ச்சி முடியும்

**04** ஆனாலும் வாழுவேன்
என் வாழ்வு ஏசுவே
உன் செல்வத்தை நான் வெறுப்பேன்
சீர்கெட்ட லோகமே

## 271. நெஞ்சமே தள்ளாடி நொந்து

நெஞ்சமே தள்ளாடி நொந்து
நீ கலங்காதே கிறிஸ்தேசுவே உனக்கு நல்ல
நேசத் துணையே

**01** நேசமான தோழர்களும் மோசமாகச் – சற்றும்
நேரறப் பகைஞராக நின்றபோதிலும் – நெஞ்சமே

**02** அன்னை தந்தை ஆனவரும் பின்ன பேதமாய் – உனை
அங்கலாய்க்க விட்டெளிஞன் ஆன போதிலும் – நெஞ்சமே

**03** ஜீவனம் இழந்து துன்பம் மேவினாலும் – மா
சிறுமையாய்ச் சகிக்கொனா வறுமை
கொண்டாலும் – நெஞ்சமே

**04** பஞ்சமும் பசியும் வந்து கெஞ்ச வைத்தாலும் – மிகு
பாரமாய்ச் சுமை உன் மேலே பற்றி
நின்றாலும் – நெஞ்சமே

**05** கெட்ட நோயிலும் நீ அகப் பட்டுழன்றாலும் – எந்தக்
கேடுகள் உன் மேலே வந்து மூடினாலும் – நெஞ்சமே

**06** ஆன வீடு தானும் கொள்ளை ஆனபோதிலும் – கிறிஸ்
தண்ணலே, உனக்கெல்லாம் என்றெண்ணி
நிறைவாய் – நெஞ்சமே

# நினைவுகூருதலின் நாள் பாடல்கள்

## 272. அந்தோ கல்வாரியில்

அந்தோ கல்வாரியில் அருமை இரட்சகரே
சிறுமை அடைந்தே தொங்கினார் – 2

**01** மகிமை மாட்சிமை மறந்திழந்தோராய்
கொடுமை குருசைத் தெரிந்தெடுத்தாரே – 2
மாயலோகத்தோடழியாதூயான்
தூய கல்வாரியின் அன்பை அண்டிடவே
– அந்தோ கல்வாரியில்

**02** அழகுமில்லை சௌந்தரியமில்லை
அந்தக் கேடுற்றார் எந்தனை மீட்க – 2
பல நிந்தைகள் சுமந்தாலுமே
பதினாயிரம் பேரிலும் சிறந்தவரே
– அந்தோ கல்வாரியில்

**03** முள்ளின் முடியும் செவ்வங்கி அணிந்தும்
கால் கரங்கள் ஆணிகள் பாய்ந்தும் – 2
குருதி வடிந்தவர் தொங்கினார்
வருந்தி மடிவோரையும் மீட்டிடவே
– அந்தோ கல்வாரியில்

**04** அதிசயம் இது இயேசுவின் தியாகம்
அதிலும் இன்பம் அன்பரின் தியானம் – 2
அதை எண்ணியே நிதம் வாழுவேன்
அவர் பாதையை நான் தொடர்ந்தேகிடுவேன்
– அந்தோ கல்வாரியில்

# 273. அன்பே கல்வாரி அன்பே

அன்பே கல்வாரி அன்பே
உம்மைப் பார்க்கையிலே
என் உள்ளம் உடையுதய்யா – 2

01 தாகம் தாகம் என்றீர்
எனக்காய் ஏங்கி நின்றீர் – 2
பாவங்கள் சுமந்தீர் – எங்கள்
பரிகார பலியானீர் – 2

அன்பே கல்வாரி

02 அணைக்கும் கரங்களிலே
ஆணிகளா சுவாமி – 2
நினைத்து பார்க்கையிலே
நெஞ்சம் நெகிழுதையா – 2

அன்பே கல்வாரி

03 நெஞ்சிலே ஓர் ஊற்று
நதியாய் பாயுதையா – 2
பாவத்தைக் கழுவிடுமே
பரிசுத்தமாக்கிடுமே – 2

அன்பே கல்வாரி

04 காயங்கள் பார்க்கின்றேன்
கண்ணீர் வடிக்கின்றேன் – 2
தூய திரு இரத்தமே
துடிக்கும் தாயுள்ளமே – 2

அன்பே கல்வாரி

# 274. ஆசரிப்போமே இன்று

ஆசரிப்போமே இன்று
அன்பர்கள் ஒன்றாய் சேர்ந்து
நேசர்நேமித்ததோர் நல்விருந்து

மோசேயைக் கொண்டு கர்த்தர்
மொழிந்த முறைக்கிசைந்து
மேசியாவான கிறிஸ்து நமக்காய்
மரித்த இந்நாளினை நினைவினில் வைத்தே
ஆசரிப்போமே..

**01** நீசான் மாதமாம் பதி நான்காம் தேதி இந்நாளில்
இஸ்ரவேலர் எகிப்தினின்று மீள
மாசற்ற ஆட்டின் ரத்தம் மனைதோறும் சிந்தியபின்
மரணத்துக்குத் தப்பின போல
இயேசுகிறிஸ்து தம்மைத் தாம் ஈடுபலியாய்த் தந்து
பேசர்க்கரிய மா நீசரான நம்மேல்
பாச மிகுந்துயிர் நாசனை வென்றதால்
ஆசரிப்போமே..

**02** ஆக்கினைக் குள்ளாவோமே அபாத்திரராய் வந்த பின்
அப்பத்தில் பங்கடைவோர் யாரும்
பாத்திரத்தைக் கைதொட்டு பானம் பண்ணும் முன் நன்றாய்
சோதித்தறிவோம் நம்மை நாமே
காட்டிக் கொடுக்கப்பட்ட ராத்திரியில் ஆண்டவர்
ஸ்தோத்திரம் பண்ணிப்பின் பாத்திரம் தந்தவர்
உரைத்ததை இன்று நம் நினைவினில் வைத்தே
ஆசரிப்போமே..

## 275. இயேசுவே உந்தன் மாசில்லா

இயேசுவே உந்தன் மாசில்லா இரத்தம்
எந்தனுக்காக சீந்தினீரே
கோரப்பாடுகள் யாவும் சகித்தீர்
அத்தனையும் எனக்காகவோ – 2

மா பாவியாம் என்னை நினைக்க
மண்ணான நான் எம்மாத்ரம் ஐயா – 2
தேவ தூதரிலும் அதிகமாய்
என்னை நேசித்த அன்பைத் துதிப்பேன் – 2

**01** எந்தன் பாவங்கள் பாரச்சுமை போல
தாங்கக்கூடாத மா பாரமே
மன்னிக்கும் தயை பெருத்த என் நாதா
மன்னித்தும் மறந்தும் தள்ளினீர் – 2

மா பாவியாம்

**02** எந்தன் பாதங்கள் சறுக்கிடும்போது
வலக்கரத்தாலே தாங்குகின்றீர்
மனபாரத்தால் சோர்ந்திடும்போது
ஜீவ வார்த்தையால் தேற்றுகின்றீர் – 2

மா பாவியாம்

**03** எனக்காக நீர் யாவும் முடித்தீர்
உமக்காக நான் என்ன செய்வேன்
எந்தன் ஜீவனுள்ள நாளெல்லாம் உம்
சிலுவை சுமந்து வருவேன் – 2

மா பாவியாம்

## 276. இயேசுவே கல்வாரியில் என்னை

இயேசுவே கல்வாரியில் என்னை
வைத்துக்கொள்ளும்
பாவம் போக்கும் இரத்தமாம்
திவ்விய ஊற்றைக் காட்டும்

மீட்பரே, மீட்பரே,
எந்தன் மேன்மை நீரே
விண்ணில் வாழுமளவும்
நன்மை செய்குவீரே!

**01** பாவியேன் கல்வாரியில்
இரட்சிப்பைப் பெற்றேனே
ஞானஜோதி தோன்றவும்
கண்டு பூரித்தேனே

மீட்பரே, மீட்பரே..

**02** இரட்சகா கல்வாரியின்
காட்சி கண்டோனாக
பக்தியோடு ஜீவிக்க
என்னை ஆள்வீராக

மீட்பரே, மீட்பரே..

## 277. என் பாவ பரிகாரியே

என் பாவ பரிகாரியே
என் ஜீவ உபகாரியே – 2

இறை இயேசுவே மறைமாமணியே
இறை ஆசிர் அருள்வீரையா – 2

**01** குறையாவும் போக்கி – என்
கறையாவும் நீக்கி
புதுவாழ்வு அளித்தீரையா எனக்கு
புதுவாழ்வு அளித்தீரையா

என் பாவ..

**02** உம் இரத்தத்தால் என்னை கழுவும் ஐயா
புது ஜீவன் தரும் இயேசுவே – 2
மனம்மார செய்து – நல்
குணம் யாவும் தந்து – 2
மறுரூபம் ஆக்கும் ஐயா – என்னை
மறுரூபம் ஆக்கும் ஐயா

என் பாவ..

**03** எனக்காகவே நீர் மரித்தீரையா
எனக்காக உயிர்த்தீரையா – 2
உமைப்போல நானும் – உம்
அன்பில் வளர – 2
புது ஆவி ஊற்றும் ஐயா – எனக்கு
புது ஆவி ஊற்றும் ஐயா

என் பாவ..

## 278. என் அருள் நாதா ஏசுவே

(ராகம்: நான் பாவிதான் ஆனாலும் நீர்)

என் அருள் நாதா ஏசுவே
சிலுவை காட்சி பார்க்கையில்
பூலோக மேன்மை நஷ்டமே
என்றறிவேன் உள் மனசில்

**01** ஆ அந்த மரத்தில் அல்லால்
வேறொன்றிலும் நான் மகிழேன்
சிற்றின்பம் யாவும் அதினால்
தகாததென்று தள்ளுவேன்

**02** கை தலை காலிலிருந்தும்
பேரன்பும் துன்பம் கலந்தே
பாய்ந்தோடப்பார் இக்காட்சியும்
முள்முடியும் ஒப்பற்றதே

**03** சராசரங்கள் அனைத்தும்
அவ்வன்புக்கு எம்மாத்திரம்
என் ஜீவன் செல்வம் சுகமும்
மா நேசருக்குப் பாத்தியம்

**04** மா கஸ்தியால் சம்பாதித்து
பேரருள் தந்த ஏசுவே
நெஞ்சார என்றும் உமக்கு
ஸ்தோத்திரம் உண்டாகவே

## 279. என்னது தியாகம் என் கல்வாரி

என்னத் தியாகம் என் கல்வாரி நாயகா
என்னையும் உம்மைப்போல் மாற்றிடவோ

**01** விண் தூதர் போற்றிடும் உம் – பிதாவையும்
விட்டிறங்கி வந்தீரே
மாட்டுக் கொட்டிலோ வாஞ்சித்தீரையா
மானிடர் மேல் அன்பினால்

**02** ஜெனித்த நாள் முதலாய் – கல்வாரியில்
ஜீவனை ஈயும் வரை
பாடுகள் உம் பங்காய்க் கண்டீரையா
பாவியை மீட்பதற்காய்

**03** தலையைச் சாய்த்திடவோ – உமக்கு ஓர்
தலமோ எங்குமில்லை
உம் அடிச்சுவட்டில் நான் செல்லவோ
முன் பாதை காட்டினீரே

**04** தாய் தந்தை வீடும் நாடும் – இன்னும்
தனக்குள்ளதெல்லாம் வெறுத்து
அனுதினம் குருசை சுமப்பவரல்லோ
அப்போஸ்தலர் என்றீரே

**05** பாடுகளல்லோ உம்மை – மகிமையில்
பூரணமாய்ச் சேர்த்ததே
உம்மோடு நானும் பாடு சகிப்பேன்
என் ஜீவனையும் வைத்தே

**06** இன்பம் எனக்கினியேன் – என் அருமை
இயேசுதான் என் பங்கல்லோ
நேசரின் பின்னே போகத்துணிந்தேன்
பாசம் என்னில் வைத்ததால்

# 280. என்னை நேசிக்கின்றாயா?

என்னை நேசிக்கின்றாயா – 2
கல்வாரிக் காட்சியை கண்ட பின்னும்
நேசியாமல் இருப்பாயா? – 2

**01** பாவத்தின் அகோரத்தைப் பார்
பாதகத்தின் முடிவினைப் பார் – 2
பரிகாசச் சின்னமாய் சிலுவையிலே
பலியானேன் பாவி உனக்காய் – 2

என்னை

**02** பாவம் பாரா பரிசுத்தர் நான்
பாவி உன்னை அழைக்கின்றேன் பார்
உன் பாவம் யாவும் சுமப்பேன் என்றேன்
பாதம் தன்னில் இளைப்பாற வா – 2

என்னை

**03** வானம் பூமி படைத்திருந்தும்
வாடினேன் உன்னை இழந்ததினால் – 2
தேடி இரட்சிக்க பிதா
என்னை அனுப்பிடவே
ஓடி வந்தேன் மானிடனாய் – 2

என்னை

உம்மை நேசிக்கின்றேன் நான் – 2
கல்வாரிக் காட்சியைக் கண்ட பின்னும்
நேசியாமல் இருப்பேனோ?

## 281. ஏறுகின்றார் தள்ளாடி தளர்ந்து

ஏறுகின்றார் தள்ளாடி தவழ்ந்து களைப்போடு
என் ஏசு குருசை சுமந்தே
என்நேசர் கொல்கதா மலையின் மேல்
நடந்தே ஏறுகின்றார்

ஏறுகின்றார்

**01** கன்னத்தில் அவன் ஓங்கி அறைய
சின்னப் பிள்ளைபோல் ஏங்கி நின்றார்
அந்தப் பிலாத்தும் கையைக் கழுவி
ஆண்டவரை அனுப்புகிறான் – 2

ஏறுகின்றார்

**02** மிஞ்சும் பெலத்தால் ஈட்டி எடுத்து
நெஞ்சைப் பிளந்தான் ஆ.. கொடுமை – 2
இரத்தமும் நீரும் ஓடி வருதே
இரட்சகரை நோக்கியே பார் – 2

ஏறுகின்றார்

**03** இந்தப் பாடுகள் உந்தன் வாழ்வுக்காய்
சொந்தப்படுத்தி ஏற்றுக் கொண்டார் – 2
நேசிக்கின்றாயோ இயேசுநாதரை
நேசித்து வா குருசெடுத்தே – 2

ஏறுகின்றார்

## 282. கல்வாரி சிநேகம் கரைத்திடும்

கல்வாரி சிநேகம் கரைத்திடும் என்னை
கல்மனம் மாற்றி கரைந்தோட செய்யும் – 2

01 காலங்கள் தோறும் காவலில் உள்ளோர்
காணட்டும் உம்மை களிப்போடு என்றும் – 2
குருசதின் இரத்தம் குரல் கொடுக்கட்டும் – 2
கும்பிடுவோரை குணமாக்கும் தேவன்
கல்வாரி சிநேகம்

02 இருண்டதோர் வாழ்வு இன்னமும் வாழ்வோர்
இனியாவது உம் திருமுகம் காண – 2
நாதா உம் சிநேகம் பெருகட்டும் என்னில் – 2
என்னை காணுவோர் உம்மைக் காணட்டும்
கல்வாரி சிநேகம்

03 அற்பமான வாழ்வு அற்புதமாய் மாற
அனைத்தையும் தந்தேன் ஆட்கொள்ளும் தேவா – 2
நான் சிறுகவும் நீர் பெருகவும் – 2
தீபத்தின் திரியாய் எடுத்தாட்கொள்ளும் – 2
கல்வாரி சிநேகம்

## 283. கல்வாரி அன்பை எண்ணிடும் வேளை

கல்வாரி அன்பை எண்ணிடும் வேளை
கண்கள் கலங்கிடுதே
கர்த்தா உம்பாடுகள் இப்போதும் நினைத்தால்
நெஞ்சம் நெகிழ்ந்திடுதே

**01** கெத்சமெனே பூங்காவினில்
கதறி அழும் ஓசை – 2
எத்திசையும் தொனிக்கின்றதே
எங்கள் மனம் திகைக்கின்றதே
கண்கள் கலங்கிடுதே

கல்வாரி அன்பை..

**02** என்னையும் உம்மைப்போல் மாற்றிடவே
உம் ஜீவன் தந்தீரன்றோ – 2
என் தலை தரை மட்டும் தாழ்த்துகின்றேன்
தந்துவிட்டேன் அன்பின் கரங்களிலே
ஏற்று என்றும் நடத்தும்

கல்வாரி அன்பை..

## 284. கல்வாரி அன்பை நான்

கல்வாரி அன்பை நான் தியானிக்கையில்
கல்மனமும் என்னில் உருகிடுதே – 2
நல் நேசர் இயேசுவே உம்முடன் யான்
சிலுவையில் அறைந்திட ஒப்புவித்தேன் – 2

**01** என் பாவ சாபமும் ரோகங்களும்
நின் திரு மேனியில் ஏற்றிடவோ – 2
கொலை மரமாம் அந்த சிலுவைதனில் – 2
கொலை செய்யப்பட்டோராய் தொங்கினீரே – 2

கல்வாரி..

**02** கள்வர்கள் மத்தியில் அறையப்பட்டும்
முள்முடி சூடியே துயரப்பட்டீர் – 2
முகந்தனில் உமிழ்ந்துமே அடிக்கப்பட்டீர் – 2
மூன்றாணி மீதினில் ஜீவனீந்தீர்– 2

கல்வாரி..

**03** பதினாயிரம் பேரில் சிறந்த நேசர்
பாதகனைப் போல ஆக்கப்பட்டீர் – 2
தழும்புகள் தோன்றவே காயப்பட்டீர் – 2
அழகையும் இழந்தீரே எனக்காகவோ! – 2

கல்வாரி..

**04** விலையேறப் பெற்ற உம் திரு இரத்தத்தை
விலாவினின்று நீர் வடித்தீரல்லோ – 2
விலையேறப்பெற்ற நல்சபை ஆக்கவே – 2
தலையானீர் ஜீவனை ஈந்ததாலோ – 2

கல்வாரி..

**05** குருசதில் பலியானீர் முற்றிலுமாய்
குரு இயேசுநாதா நீர் எனக்காகவோ – 2
குருசதில் மரித்து நான் பிழைத்திடுவேன் – 2
குருவே உம் சாயலை அடைந்திடுவேன் –2

கல்வாரி..

## 285. கல்வாரி மா மாலையோரம்

கல்வாரி மா மாலையோரம்
கொடுங்கோரக் காட்சி கண்டேன்
கண்ணில் நீர் வழிந்திடுதே
எந்தன் மீட்பர் இயேசு அதோ – 2

கல்வாரி மா

**01** எருசலேமின் வீதிகளில்
இரத்த வெள்ளம் கோலமிட – 2
திருக்கோலம் நிந்தனையால்
உருக்குலைந்து சென்றனரே – 3

கல்வாரி மா

**02** சிலுவை தன் தோளதிலே
சிதறும் தன் வேர்வையிலே – 2
சிறுமை அடைந்தவராய்
நிந்தனை பல சகித்தார் 3
நிந்தனை நமக்காய் சகித்தார்

கல்வாரி மா

## 286. கல்வாரி சிகரமதில்

கல்வாரி சிகரமதில்
கல்நெஞ்சக் கயவர்களால் – 2
கருணையின் உருவம்
கனிவான இதயம்
சிலுவையில் தொங்கும்
என் இயேசுவைப் பார் – 2

கல்வாரி சிகரமதில்

**01** தீர்ப்பிடா என்று சொன்ன
என் இயேசுவின் நிலைமையைப் பார்
குருதியில் நனைந்திருக்கும்
இயேசுவின் முகத்தினைப் பார் – 2
பிலாத்துவின் முன்னே அநீதியின் தீர்ப்பினில்
அமைதியில் நிற்பதைப் பார் – 2

கல்வாரி சிகரமதில்

**02** பிறருக்கு உதவி செய்த
என் இயேசுவின் கரங்களைப் பார்
ஆணிகள் துளைத்திடவே
ஆண்டவர் துடிப்பதைப் பார் – 2
தந்தையின் சித்தத்தை செய்து முடித்ததும்
ஆவியைத் துறப்பதைப் பார் – 2

கல்வாரி சிகரமதில்

# 287. கல்வாரி நேசரே மீட்பரே

கல்வாரி நேசரே மீட்பரே இயேசுவே
கருணை நாயகா உமதன்பை மறவேன் – 2
என் பாவம் சுமந்தீர் நொறுங்குண்டு மரித்தீர்
என் உள்ளம் உடையுதே – 2
ஆ இயேசுவின் அன்பு ஆ நேசரின் அன்பு
ஆ இயேசுவின் அன்பு கல் மனம் உருகுமே

**01** அக்ரமம் யாவையும் தயவாய் மன்னித்தீர்
நோய்களை நீக்கினீர் சாபங்கள் சுமந்தீர் – 2
ஜீவாதிபதியே ஜீவன் தந்த ரட்சகா
யாருண்டு உம்மைப் போல – 2

ஆ இயேசுவின்

**02** அழகான உம் முகம் சிதையுண்டு போனதோ
சௌந்தர்யம் இழந்தீர் அந்தக் கேடடைந்தீர் – 2
பரலோக பாசத்தை பாங்காக கொடுத்தீர்
பாதத்தை பணிகின்றேன் – 2

ஆ இயேசுவின்

**03** கல் மனம் நொறுங்கி நல் மனம் என்னிலே
தூய்மையாய் துதிக்க நீதிமானாய் மாற்றினீர் – 2
மன்னிப்பின் வஸ்திரம் துதியின் உடைகள்
வேண்டுமே நீர் எனக்கு – 2

ஆ இயேசுவின்

## 288. கல்வாரி சிலுவையில்

கல்வாரி சிலுவையில் கர்த்தர் ஜீவன் விட்டார்
மானிடரின் மனதில் நன் மாறுதல் செய்ய நீர்
மாசற்ற ஜீவ நதி பாவம் போக்கப் பிறந்தீர்
கல்வாரி சிலுவையில் எனக்காக மரித்தீரே

கல்வாரி அக்கல்வாரி எனக்காக மரித்தீரே
கல்வாரி சிலுவையில் எனக்காக மரித்தீரே

**01** இந்த அன்பின் பாசந்தான்
மீட்பருக்கு எந்தனை
முழு தத்தஞ் செய்யத்தான்
ஆவி தேகம் அனைத்தும்
சர்வாங்க பலியாக
கர்த்தரே படைக்கிறேன்
எனக்காக மரித்தீர்
கல்வாரி சிலுவையில்

கல்வாரி அக்கல்வாரி..

**02** நான் உமக்குச் சொந்தமே
என்னை ஏற்றுக்கொள்ளுமேன்
நேச மீட்பர் தயவால்
என்னில் வாசம் பண்ணுமேன்
பாவத்தை நீக்க ஜீவ
பாதையைக் காட்டிடுவீர்
எனக்காக மரித்தீர்
கல்வாரி சிலுவையில்

கல்வாரி அக்கல்வாரி..

## 289. கல்வாரியின் கருணையே

கல்வாரியின் கருணையிதே
காயங்களில் காணுதே
கர்த்தர் இயேசு பார் உனக்காய்
கஷ்டங்கள் சகித்தாரே – 2

விலையேறப் பெற்ற திருஇரத்தமே
அவர் விலாவினின்று பாயுதே – 2
விலையேறப் பெற்றோனாய் என்னை
மாற்றி விலையாக ஈந்தனரே – 2

விலையேறப் பெற்ற..

**01** பொன் வெள்ளியோ மண்ணின் வாழ்வோ
இவ்வன்புக்கிணையாகுமோ
அன்னையிலும் அன்புவைத்தே
தம் ஜீவனை ஈந்தாரே – 2

விலையேறப் பெற்ற..

**02** சிந்தையிலே பாரங்களும்
நிந்தைகள் ஏற்றவராய்
தொங்குகிறார் பாதகன்போல்
மாங்கா வாழ்வளிக்கவே – 2

விலையேறப் பெற்ற..

**03** எந்தனுக்காய் கல்வாரியில்
இந்தப் பாடுகள் பட்டீர்
அண்ணலே உம் அன்பினையே
சிந்தித்து சேவை செய்வேன் – 2

விலையேறப் பெற்ற..

**04** மனுஷனை நீர் நினைக்கவும்
அவனை விசாரிக்கவும்
மண்ணில் அவன் எம்மாத்திரம்
மன்னவா உம் தயவே – 2

விலையேறப் பெற்ற..

## 290. கல்வாரியில் தொங்குகின்றார்

கல்வாரியில் தொங்குகின்றார் – 2
உன் பாவம் போக்க தம்மை ஈந்தார்
பார சிலுவை ஏற்றனரே – 2
கல்வாரியில் தொங்குகின்றார்

**01** வேர்வையும் இரத்தமாக ஆத்துமா வியாகுலம் – 2
அடைந்தாரே இயேசு உனக்காக
தந்தையே உம் சித்தம்
என்று இயேசு கதறினாரே – 2
கல்வாரியில் தொங்குகின்றார்

**02** சிரசினில் முள்முடி சிவப்பங்கி தரித்தோராய் – 2
நிந்தை யாவும் உனக்காய் ஏற்றாரே
வாரினால் அடிபட்டு
கோரமான காட்சியானார் – 2
கல்வாரியில் தொங்குகின்றார்

**03** மாசற்ற தேவனே மகிமை யாவும் துறந்தோராய் – 2
நீச குருசில் இயேசு தொங்கினார்
பாவத்தை போக்கியே
நீதிக்கு பிழைக்க செய்தார் – 2
கல்வாரியில் தொங்குகின்றார்

**03** கைகளில் கால்களில் இரத்தமும் வடியுதே – 2
உந்தன் நோய்கள் யாவும் ஏற்றாரே
சுகமே அடைவாய்
தழும்பாலே குணமடைவாய் – 2
கல்வாரியில் தொங்குகின்றார்

**05** எத்தனை துன்பங்கள் உன்னையும் மீட்கவே – 2
தியாக பாதை இயேசு காட்டினார்
நித்தமும் அவரின் பின்னே
சென்று வாழ்ந்திடுவாய் – 2

கல்வாரியில் தொங்குகின்றார்

## 291. கல்மனம் உருகுதய்யா

கல்மனம் உருகுதையா
உம் கல்வாரி அன்பை நினைத்து
கண்ணீர் நிறையுதையா
உம் காயப்பட்ட கரம் நினைத்து – 2

**01** சிரசினில் முள்முடியும்
சிவப்பங்கி தரித்தவராய் – 2
நிந்தைகள் ஏற்றீரையா – நீர்
நிந்தைகள் ஏற்றீரையா

கல்மனம்

**02** கல்வாரியில் தொங்கினீர்
உம் இரத்தம் பாய்ந்திடுதே – 2
என் மனம் ஏங்குதையா – உமக்காய்
என் மனம் ஏங்குதையா

கல்மனம்

**03** மாண்டோரை மீட்டிடவே
தேவனிடம் சேர்க்கவே – 2
பரிகார பலியானீரே – நீர்
பரிகார பலியானீரே

கல்மனம்

## 292. கர்த்தரின் பந்தியில் வா

கர்த்தரின் பந்தியில் வா – சகோதரா
கர்த்தரின் பந்தியில் வா –2

கர்த்தர் அன்பாய்ச் சொந்த ரத்தத்தைச் சிந்தின
காரணத்தை மனப் பூரணமாய் எண்ணி
கர்த்தரின் பந்தியில்..

**01** ஜீவ அப்பம் அல்லோ? – கிறிஸ்துவின்
திருச் சரீரம் அல்லோ?
பாவ மன்னா கல்லோ? – உனக்காய்ப்
பகிரப்பட்ட தல்லோ?
தேவ குமாரனாம் ஜீவ அப்பத்தை நீ
தின்று அவருடன் என்றும் பிழைத்திட
கர்த்தரின் பந்தியில்..

**02** தேவ அன்பைப் பாரு – கிறிஸ்துவின்
சீஷர் குறை தீரு
பாவக் கேட்டைக் கூறு – இராப்போஜன
பந்தியில் சேரு
சாவுக்குரிய மா பாவமுள்ள லோகம்
தன்னில் மனம் வைத்து அன்னியன் ஆகாதே
கர்த்தரின் பந்தியில்..

**03** அன்பின் விருந்தாமே – கர்த்தருடன்
ஐக்யப் பந்தியாமே
துன்பம் துயர் போமே – இருதயம்
சுத்த திடனாமே
இன்பம் மிகும் தேவ அன்பின் விருந்துக்கு
ஏது தாமதம் இல்லாதிப்போதே நீ வா
கர்த்தரின் பந்தியில்..

## 293. கிருபாதார பலியாமே

கிருபாதார பலியாமே
திருக்குமாரன் கிறிஸ்தேசுதாமே – 2

**01** பிதாவானோர் அன்பினைச் சிந்திப்பாயே
ஒரே பேரானோரையே தந்தனரே – 2
பிழைத்திடவே இந்த மனுக்குலமே
பரன் நோக்கத்தை நிறைவேற்றினாரே – 2
கிருபாதார..

**02** இலவசமாய்த் தேவ கிருபையினால்
இயேசுவில் உள்ள மீட்பைப் பெற்றிடவே – 2
தேவ குமாரனைப் பலியாக்கினதால்
தேவ அன்பினை வெளிப்படுத்தினாரே – 2
கிருபாதார..

**03** சிரசினில் முள்முடி சூட்டியதால்
திருமுகம் குருதியால் நனைந்ததுவே – 2
கரம் கால்களில் ஆணி பாய்ந்ததினால்
இரத்த சாட்சியாய் இயேசு தொங்கினாரே – 2
கிருபாதார..

**04** சர்வலோகப் பாவ நிவாரணமாய்த்
தேவகுமாரன் இயேசு பலியானாரே – 2
காயங்களிலே ஓடும் இரத்தத்தினாலே
தூய்மையான ஜீவியம் பெற்றிடலாமே – 2
கிருபாதார..

**05** ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்தில்
பிரவேசித்தே தம்மைப் பிதாவிடத்தில் – 2
பழுதற்ற பலியாக ஒப்புவித்ததால்
பூரண சுத்தனாக்கவே சித்தம் கொண்டாரே – 2
கிருபாதார..

**06** புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராய்
புது சிருஷ்டியில் எம்மை உருவாக்கியே – 2
அழியாமை ஜீவன் அளித்ததினாலே
அழிவில்லாச் சுதந்தரம் அடைந்திடுவோம் – 2

கிருபாதார..

## 294. குருசினில் தொங்கியே குருதியும்

குருசினில் தொங்கியே குருதியும் வடிய
கொல்கதா மலைதனிலே – நம்
குருவேசு ஸ்வாமி கொடுந் துயர் பாவி
கொள்ளாய் கண் கொண்டு – 2

**01** சிரசினில் முள்முடி உறுத்திட அறைந்தே
சிலுவையில் சேர்த்ததையோ – தீயர்
திருக்கரங் கால்களில் ஆணிகளடித்தார்
சேனைத்திரள் சூழ – 2

**02** பாதகர் நடுவே பாவியினேசன்
பாதகன் போல் தொங்க – யூத
பாதகர் பரிகாசங்களைப் பண்ணி
படுத்திய கொடுமைதனை – 2

**03** சூரிய சந்திர சகல வான் சேனைகள்
சகியாமல் நாணுதையோ – தேவ
சுந்தர மைந்தர் உயிர் விடும் காட்சியால்
துடிக்கா நெஞ்சும் உண்டோ – 2

குருசினில்

## 295. குருசினில் தொங்கினீர் குருதியும்

குருசினில் தொங்கினீர் குருதியும் சிந்தினீர்
குரு இயேசு நாதா நீர் கொல்கதாவில் – 2

01 கால் கரங்களில் ஆணிகள் பாய்ந்தே
கண்கள் அயர்ந்த தாகத்தால் தொய்ந்தே – 2
ஏனோ இத்தனைப் பாடுகள் ஏற்றீர் – 2
என் பாவம் போக்கிட வந்ததாலோ – 2

குருசினில்..

02 தலை சாய்க்க உலகில் ஸ்தலம் இல்லை என்றே
திருவாய் மலர்ந்த தேவக்குமாரா – 2
சிலுவைதான் உமக்கு தலை சாய்க்க இடமோ – 2
பலியாகி மீட்டிட வந்ததாலோ – 2

குருசினில்..

03 கறையேதுமற்ற கன்னிகையாக
திருச்சபையை முன் நிறுத்துதற்காயோ – 2
நிந்தை சுமந்தீர் சந்தோஷத்தோடே – 2
நிர்மலா கொல்கதா ஏகினீரோ – 2

குருசினில்..

04 தேகமதிலே வாதையடைந்தே
பாதகரின் பாவம் ஏற்றவராக – 2
தேவனோடென்னையும் சேர்த்திடவொன்றாய்த் – 2
தேவாட்டுக்குட்டியாய் வந்தீரோ நீர் – 2

குருசினில்..

05 நிலையில்லா பொன் வெள்ளி இவையாவினாலல்ல
விலையேறப்பெற்ற உம் உதிரத்தால் மீட்டே – 2
விலையேறும் சீயோனின் சுடராக நீரே – 2
அலைந்தோரை அணைத்திட வந்ததாலோ – 2

குருசினில்..

## 296. சிலுவை மீதே தொங்கிய இயேசு

சிலுவை மீதே தொங்கிய இயேசு
என்னில் அன்பு கூர்ந்தார் – 2
நேசரின் அன்பு எந்தன் உள்ளத்தை
நெருக்கி ஏவிடுதே – 2

சிலுவை மீதே..

**01** சுகந்த வாசனை பலியாய் தம்மை
உவந்து ஜீவன் தந்தார் – 2
என்னில் அன்பு கூர்ந்ததாலே
என்னை அவருக்கே அர்ப்பணித்தேன் – 2

சிலுவை மீதே..

**02** என்னில் அன்பு கூர்ந்ததாலே
தம்மை தியாகம் செய்தார் – 2
அவருடன் நான் அறையுண்டேனே
அவரே என்னில் ஜீவிக்கிறார் – 2

சிலுவை மீதே..

**03** முடிவு வரையில் அன்பு கூர்ந்தார்
அடிமை வாழ்வடைய – 2
பகையாய் நின்ற பாவம் தகர்த்தார்
சபையில் மகிமை செலுத்திடுவோம் – 2

சிலுவை மீதே..

## 297. சிலுவை சுமந்த உருவம்

சிலுவை சுமந்த உருவம்
சிந்தின இரத்தம் புரண்டோடியே – 2
நதிபோலவே பாய்கின்றதே
நம்பி இயேசுவண்டை வா – 2

**01** பொல்லா உலக சிற்றின்பங்கள்
எல்லாம் அழியும் மாயை – 2
காணாய் நிலையான சந்தோஷம் பூவில்
கர்த்தாவின் அன்பண்டை வா – 2

சிலுவை சுமந்த

**02** பாவ மனித ஜாதியினை
பாசமாய் மீட்க வந்தார் – 2
பாவப் பரிகாரி கர்த்தர் இயேசு நாதர்
பாவமெல்லாம் சுமந்தார் – 2

சிலுவை சுமந்த

**03** தாகமடைந்தோர் எல்லோருமே
தாகத்தைத் தீர்க்க வாரும் – 2
ஜீவ தண்ணீரானக் கர்த்தர் இயேசு நாதர்
ஜீவன் உனக்களிப்பார் – 2

சிலுவை சுமந்த

## 298. சொற்பக்காலம் பிரிந்தாலும்

சொற்பக்காலம் பிரிந்தாலும்
பார் பின்பு ஏக சபையாக
கூடுவோம் ஆனந்தமாக
அதுகாரும் தேவன் தாங்குவார்

கூடுவோம் கூடுவோம்
ஏசுவோடு வாழுவோம்
கூடுவோம் கூடுவோம்
அதுகாரும் தேவன் தாங்குவார்

கூடுவோம்..

**01** அதுகாரும் தேவன் தாங்குவார்
மிக்க ஞானத்தால் நடத்தி
மோசமின்றியும் காப்பாற்றி
அதுகாரும் தேவன் தாங்குவார்

கூடுவோம்..

**02** அதுகாரும் தேவன் தாங்குவார்
சிறகாலே மூடிவைத்து
மன்னா தந்து போஷிப்பித்து
அதுகாரும் தேவன் தாங்குவார்

கூடுவோம்..

**03** அதுகாரும் தேவன் தாங்குவார்
நாச மோசம் நேரிட்டாலே
கையில் ஏந்தி அன்பினாலே
அதுகாரும் தேவன் தாங்குவார்

கூடுவோம்..

**04** அதுகாரும் தேவன் தாங்குவார்
ஜெயக் கொடி பறந்தாடும்
சாவும் தோற்றுப் பறந்தோடும்
அதுகாரும் தேவன் தாங்குவார்

கூடுவோம்..

## 299. தீர்ப்பினை சுகமாய் ஏற்றீரே

தீர்ப்பினை சுகமாய் ஏற்றீரே பணிவாய் பழி சுமந்து நின்றீரே – 2
உணர வேண்டுமே உம்மைத் தொடர வேண்டுமே
உம்மை நான் தொடர வேண்டுமே
இயேசுவே உம் சிலுவையை சுமக்க வேண்டுமே

உலகின் பாவங்கள் போக்கவே சிலுவை சுமந்தீர்
தோளிலே – 2

உணர வேண்டுமே..

தாங்கிட முடியா சுமையினால் தரையில் தடுமாறி
வீழ்ந்தீரே – 2

உணர வேண்டுமே..

இடர்படும் சுதனைக் கண்டதும் அன்னை மரியாளும்
கலங்கினார் – 2

உணர வேண்டுமே..

உம்திரு தோள்கள் ஓய்ந்திட சீமோன் மனம் கொண்டு
உதவினான் – 2

உணர வேண்டுமே..

உயிரின் வடிவமாய் உதிரத்தால் உன் முகம் பதிந்தீர்
துணியிலே – 2

உணர வேண்டுமே..

கால்கள் நடுங்கியே சாய்ந்திட மீண்டும் விழுந்தீர்
மண்ணிலே – 2

உணர வேண்டுமே..

உனக்காய் கலங்கிய மகளிரை அன்பாய் தேற்றினீர்
தெய்வமே – 2

உணர வேண்டுமே..

நாடியும் நரம்பும் தளர்ந்ததே மூன்றாம் முறையாக
வீழ்ந்தீரே – 2

உணர வேண்டுமே..

அதிசயம் புரியும் ஆடையும் அகன்றிட நலிந்தே
வாடினீர் – 2

உணர வேண்டுமே..

கரங்களை ஆணிகள் துளைத்திட சிலுவையில்
தொங்கினீர் இயேசுவே – 2

உணர வேண்டுமே..

பாவியின் வாழ்வை மீட்டிட உயிரையும் தந்தீர்
இயேசுவே – 2

உணர வேண்டுமே..

உணவாய் வந்த நல் உடலிதே அன்னை மடி மீது
தவழுதே – 2

உணர வேண்டுமே..

விண்ணக அரசின் மன்னரே கல்லறை தனிலே
அடங்கினீர் – 2

உணர வேண்டுமே..

## 300. பாடுகள் நீர் பட்ட போது பாய்ந்து

பாடுகள் நீர் பட்ட போது
பாய்ந்து ஓடிய இரத்தம்
கோடி பாவம் தீர்த்து மோட்சம்
கொள்ளுவிக்க வல்லதே

கெட்டுப் போனோம்..
பாவியானோம்..
கிருபை செய்யும் நாதனே
மட்டிலாக் கருணை என் மேல்
வைத்திரங்கும் இயேசுவே

**01** துஷ்ட்ட யூதர் தூணினோடு
தூய கைகள் கட்டியே
கஷ்டமாய் அடித்தபோது
காய்ந்த செந்நீர் எத்துணை

கெட்டுப் போனோம்..

**02** சென்னிமேல் கொடிய யூதர்
சேர்த்து வைத்த முள்முடி
தன்னால் வடிந்த இரத்தத்தாலே
சர்வ பாவம் நீங்குமே

கெட்டுப் போனோம்..

## 301. பாரீர் கெத்சமனே பூங்காவில்

பாரீர் கெத்சமனே
பூங்காவில் என் நேசரையே
பாவியெனக்காய் வேண்டுதல்
செய்திடும் சத்தம் தொனித்திடுதே – 2

**01** தேகமெல்லாம் வருந்தி
சோகமடைந்தவராய் – 2
தேவாதி தேவனின் ஏக சுதன்
படும் பாடுகள் எனக்காயே – 2

பாரீர் கெத்சமெனே..

**02** இரத்தத்தின் வேர்வையாலே
மெத்தவுமே நனைந்தே – 2
இம்மானுவேலன் உள்ளமுருகியே
வேண்டுதல் செய்தனரே – 2

பாரீர் கெத்சமெனே..

**03** அப்பா இப்பாத்திரமே
நீக்கும் நின் சித்தமானால் – 2
எப்படியும் உம் சித்தம் செய்ய
என்னைத் தத்தம் செய்தேன் என்றாரே – 2
பாரீர் கெத்சமெனே..

## 302. பாவிக்கு புகலிடம் இயேசு

பாவிக்கு புகலிடம் இயேசு இரட்சகர்
பாரினில் பலியாக மாண்டாரே – 2
தூய்மையானவர் பாவம் ஏற்றாரே
பாரமான சிலுவை சுமந்தாரே
பாவிக்கு புகலிடம்..

**01** கால்கள் கைகளில் ஆணி பாய்ந்திட
கிரீடம் முட்களில் பின்னி சூடிட – 2
இரத்த வெள்ளத்தில் கர்த்தர் தொங்கினார்
இதை காணும் உள்ளம் தாங்குமோ – 2
பாவிக்கு புகலிடம்..

**02** உலகத்தின் இரட்சகர் இயேசுவே
உயிர் கொடுத்தார் உயிர்த்தும் எழுந்தார் – 2
தம்மை நம்பினால் உன்னைக் கைவிடார்
தளராமல் நம்பி ஓடி வா – 2
பாவிக்கு புகலிடம்..

**03** பாவ சாபங்கள் தீரா வியாதிகள்
பல தோல்விகள் உந்தன் வாழ்க்கையில் – 2
அதை எண்ணியே கலங்குவதேன்?
கர்த்தர் இயேசுவண்டை ஓடிவா – 2
பாவிக்கு புகலிடம்..

# உயிர்த்தெழுதல் பாடல்கள்

## 303. உயிரோடு எழுந்தவரே

உயிரோடு எழுந்தவரே
உம்மை ஆராதனை செய்கிறோம்
ஜீவனின் அதிபதியே
உம்மை ஆராதனை செய்கிறோம் – 2
அல்லேலூயா ஓசன்னா – 8

**01** மரணத்தை ஜெயித்தவரே
உம்மை ஆராதனை செய்கிறோம்
பாதாளம் வென்றவரே
உம்மை ஆராதனை செய்கிறோம் – 2
அல்லேலூயா ஓசன்னா – 8

**02** பரிசுத்தமானவரே
உம்மை ஆராதனை செய்கிறோம்
பரலோகம் சென்றவரே
உம்மை ஆராதனை செய்கிறோம் – 2
அல்லேலூயா ஓசன்னா – 8

**03** ஆவியில் எழுந்தவரே
உம்மை ஆராதனை செய்கிறோம்
அழியாமை வென்றவரே
உம்மை ஆராதனை செய்கிறோம் – 2
அல்லேலூயா ஓசன்னா – 8

## 304. உயிர்தெழுந்தாரே அல்லேலூயா

உயிர்தெழுந்தாரே அல்லேலூயா
ஜெயித்தெழுந்தாரே
உயிருடன் எழுந்த மீட்பர் இயேசு
என் சொந்தமானாரே – 2

**01** கல்லறை திறந்திடவே
கடும் சேவகர் பயந்திடவே – 2
வல்லவர் இயேசு உயிர்த்தெழுந்தாரே
வல்ல பிதாவின் செயலிதுவே – 2
உயிர்தெழுந்தாரே

**02** மரித்தவர் மத்தியிலே
ஜீவ தேவனைத் தேடுவாரோ – 2
நீதியின் அதிபதி உயிர்த்தெழுந்தாரே
நித்திய நம்பிக்கை பெருகிடுதே – 2
உயிர்தெழுந்தாரே

**03** மரணம் உன் கூர் எங்கே
பாதாளம் உன் ஜெயம் எங்கே – 2
சாவையும் நோயையும் பேயையும் ஜெயித்தார்
சபையோரே துதி சாற்றிடுவோம் – 2
உயிர்தெழுந்தாரே

## வரவேற்புப் பாடல்

### 305. வாருங்கள் வேத மாணவரே

வாருங்கள் வேதமாணவரே
கிறிஸ்துவின் பள்ளி மாணவரே – 2
அன்பாக நாமும் ஒன்றாக, இன்று
ஆவிக்குரிய மாநாட்டிலே
நாம் தேவனை புகழ்ந்து பாடுவோம்

**01** எத்தனை துன்பங்கள் எத்தனை இன்னல்கள் – 2
எத்தனை எத்தனை வந்தாலுமே
எப்போதும் தேவனை போற்றிடுவோம்
வாருங்கள்..

**02** இராஜாதி ராஜனை கர்த்தாதி கர்த்தரை – 2
சேராத ஒளியின் வாசகரை
சேர்ந்தே நாம் அவரை ஆராதிப்போம்
வாருங்கள்..

**03** வேதத்தை தியானிப்போம் வேகமாய் முன் செல்வோம் – 2
தேவ குமாரனின் ஆட்சியிதே
சீயோனில் மகிழ்ந்து களிக்கிறோம்
வாருங்கள்..

**04** உன்னத தேவனின் ஒப்பற்ற ஆட்சியை – 2
உயர்ந்த மலையில் கூறிடுவோம்
பயந்திடாமல் எப்போதுமே

வாருங்கள் வேதமாணவரே
தேவனால் வேதம் ஆனவரே
அன்பாக நாமும் ஒன்றாக, இன்று
ஆவிக்குரிய மாநாட்டிலே
நாம் தேவனைப் புகழ்ந்து பாடுவோம்
நம் தேவனைப் புகழ்ந்து பாடுவோம் – 2

# ஆங்கிலப் பாடல்கள்

## 306. God be with you till we meet again

(ராகம்: சொற்பக்காலம் பிரிந்தாலும் பார்)

God be with you till we meet again
By His counsels guide uphold you !
with His sheep securely fold you
God be with you till we meet again ...

Till we meet till we meet
Till we meet at Jesus feet
Till we meet Till we meet
God be with you till we meet again

01 God be with you till we meet again
Neath his wings securely hide you
Daily manna still provide you
God be with you till we meet again

02 God be with you till we meet again
When lif's perils thick confound you
Put His arms unfailing round you
God be with you till we meet again

03 God be with you till we meet again
Keep love's banner floating o'er you
Smite death's threat'ning wave before you
GOD BE WITH YOU TILL WE MEET AGAIN ...

## 307. He leadeth me, O blessed

(ராகம்: நடத்துவார் ஆ, இன்பெண்ணம்)

He leadeth me, O blessed thought
O words with heavenly comfort fraught!
Whate'er I do, where' er I be
Still'ti God's hand that leadeth me...
He leadeth me! He leadeth me!
By His own hand he leadeth me
His faithful follower I would be
For by His hand He leadeth me...

**01** Sometimes mid scences of deepest gloom
Sometimes where Eden's bowers bloom
By waters still, o'er troubled sea
Still'tis his hand that leadeth me...

**02** Lord, I would clasp thy hand in mine
Nor ever murmur or repine
Content whatever lot I See
Since 'tis my God that leadeth me...

## 308. I will sing of my Redeemer

(ராகம்: போற்றுவேன் என் மீட்பர் அன்பை)

I will sing of my Redeemer
And His wondrous love to me
On the cruel cross he suffered
From the curse to set me free
Sing O Song my Redeemer
With His blood he purchased me on the cross
He sealed my pardon
Paid the debt & made me free

**01** I will tell wondrous story
How my lost estake to save
In his boundless love & mercy
He the ransom freely gave...

**02** I will praise my dear Redeemer
His triumphant power to save
Hoe the victory he giveth
Over sin & death & grave...

## 309. MINE eyes can see the glory

(ராகம்: என் கண்கள் கர்த்தர் இயேசுவின்)

MINE eyes can see the glory
of the presence of the Lord;
He is trampling out the wine press
where his grapes of wrath are stored
I SEE the flaming tempest of
his swift descending sword
Our king is marching on

Glory glory hallelujah! - 3
Our king is marching on

**01** I can see his coming judjements
as they circle all the earth
The signs and groanings promised
to precede a second birth;
I read his righteous sentence in the
crumbling thrones of earth
Our king is marching on

02 The Gentiles times have ended, for
their kings have had their day;
And with them sin and sorrow
will forever pass away
The tribe of judah's Lion now
has come to hold the sway
Our king is marching on

03 The seventh trump is sounding, and
our King knows no defeat,
He will sift out the hearts of men
before his judjement seat
Be swift, my soul, to welcome him
be jubilant, my feet;
Our king is marching on.

## 310. Onward Christian Soldiers

(ராகம்: இயேசுவுக்காக நில்லும்)

Onward Christian soldiers
Marching on to war,
With the cross of Jesus
Going on before
Christ the royal Master,
Leads against the foe;
Forward into battle,
See His banners go...
Onward Christian soldiers
Marching on to war;
With the cross of Jesus
Going on before

**01** At the sign triumph
Satan's host doth flee
On, then Christian soldiers
On to victory
Hell's foundation quiver
At the shout of praise
Brothers. lift your voices
Laud your anthems raise.

**02** Like a mighty army
Moves the Church of God
Brothers, we are treading
Where the saints had trod;
We are not divided
All one body we,
One in hope and doctrine
One in charity

**03** Onward, then, ye people
Join our happy throng
Blend with ours your voices
In the triumph song
Glory laud and honor
Unto Christ, the king
This through countless ages
Men and angles sing.

## 311. SING them over again

(ராகம் : காது குளிரப்பாடுங்கள்)

SING them over again to me
Wonderful words of life !
Let me more of your beauty see ,
Wonderful words of life !
Words of life & beauty
Teach me faith duty
Beautyful Words , wonderful words !
Wonderful words of life !

01 Christ Blessed one gives to all
Wonderful words of life
Brother , list to his loving call
Wonderful words of life !
Also freely given
Blessed boon from heaven
Beautyful Words , wonderful words !
Wonderful words of life !

02 Sweetly echoes the gospel call
Wonderful words of life !
Off ring pardon & peace to all
Wonderful words of life !
Praise the Lord for ever
For these words of favour
Beautyful Words , wonderful words !
Wonderful words of life !